# என்றும் புதியவர்



சிருங்கேரி ஜகத்குரு
ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள்

# என்றும் புதியவர்

*(சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள்)*

Dr. வா. ந. முத்துக்குமார்

Centre for Brahmavidya

Chennai 600 032


Book Title:
*Enrum Puthiyavar*

Published by:
Centre for Brahmavidya
SVK Towers, 8th Floor
A25 Industrial Estate, Guindy
Chennai 600032
centreforbrahmavidya@gmail.com

© Centre for Brahmavidya
All rights reserved

First Edition: 2019
Price: Rs. 80

Printed in India at:
Sudarsan Graphics Pvt. Ltd., Chennai
Email: info@sudarsan.com



(ஜகத்குரு ஶ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள்)

அடியர் வழுத்தி வாழ்வுறும்
அபிநவ பத்ம பாதமு மறவேனே



சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தை 36வது பீடாதிபதியாகத் தற்போது அலங்கரித்துவரும் ஜகத்குரு ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளும் அவரது ஸன்னிதியில் ஜகத்குரு ஸ்ரீ விதுசேகரபாரதீ ஸ்வாமிகளும்

# பதிப்புரை

சங்கர பகவத்பாதாளால் ஸ்தாபிக்கப்பட்ட சிருங்கேரி ஸ்ரீ சாரதாபீடத்தை 35வது ஜகத்குருவாக அலங்கரித்த ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் ஒரு தலைசிறந்த ஸந்யாஸியும், யோகியும், ஜீவன்முக்தரும் ஆவார்கள். 1917ம் ஆண்டு, நவம்பர் மாதம், 13ம் தேதியன்று அவர்கள் அவதரித்தார்கள். மிகுந்த வைராக்ய சீலராகவும், ஜீவன்முக்தராகவும் விளங்கிய ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளின் திருக்கரங்களால் 1931ம் ஆண்டு, மே மாதம், 22ம் தேதியன்று அவர்களுக்கு ஸந்யாஸம் அளிக்கப்பட்டது. ஸந்யாஸம் பெற்றுக்கொண்ட நாள் முதல், பகவான் மற்றும் தமது குருநாதருடைய நேரடியான வழிகாட்டுதலுடன் ஆசார்யாள் ஆன்மிக ஸாதனைகளைத் தீவிரமாகப் பயிற்சித்து வந்தார்கள். அவை 1935ம் வருடம், டிசம்பர் மாதம் ஞானத்திலும், பரம்பொருளில் நிஷ்டையிலும் உச்சநிலையை அடைந்தன.

மடத்தின் மேன்மைக்காகவும், பக்தர்களின் நலனிற்காகவும் குருநாதர் ஆற்றிய காரியங்கள் பற்பல. பாரதம் முழுவதும் ஆசார்யாள் பல விஜய யாத்திரைகளை மேற்கொண்டு, ஜனங்களுக்குத் தர்ம நெறி மற்றும் உபநிஷத்துக்களில் அடங்கியுள்ள பல நுட்பமான அத்வைத வேதாந்தக் கருத்துக்களை மக்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் உபதேசித்து பல்வேறு விதங்களில் அவர்களை அனுக்ரஹித்து, சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தை 35 ஆண்டுகள் (1954-1989) சிறப்பாக அலங்கரித்தார்கள்.

தற்போது சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தை 36வது ஜகத்குருவாக அலங்கரித்துவரும் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் தமது குருவான ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் குறித்துக் கீழ்க்காணும் தியான சுலோகத்தை இயற்றியுள்ளார்.

**"விவேகினம் மஹாப்ரக்ஞம் தைர்யௌதார்யக்ஷமாநிதிம்**
**ஸதா அபிநவபூர்வம் தம் வித்யாதீர்த்தகுரும் பஜே"**

இந்த சுலோகத்தில் கூறப்பட்டுள்ள விவேகம், பேரறிவு, தைர்யம், பெருந்தன்மை, பொறுமை ஆகிய குணநலன்கள் யாவும் வெவ்வேறு அர்த்தங்களில் எவ்வாறு பன்முகத்தன்மை வாய்ந்த ஆசார்யாள் ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளை அற்புதமாக விவரிக்கின்றன என்று இந்நூலின் ஆசிரியர் Dr.வா.ந.முத்துக்குமார் இப்புத்தகத்தில் விளக்கியுள்ளார்.

ஒவ்வொரு முறையும் ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளின் வரலாற்றைப் படிக்கும்போதோ அல்லது அதில் பதிவு செய்யப்பட்டிருக்கும் ஒரு நிகழ்வைப் பற்றிப் பேசும்போதோ ஏதாவது ஒரு புதிய கூறு மனதில் படுகிறது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. இந்த நூலில் ஆசார்யாளின் ஆளுமை

(personality) இவற்றுள் முக்கியமான காரணமாகக் காட்டப்பட்டுள்ளது. அதாவது, ஆசார்யாள் எப்பொழுதும் புதிதாய்த் தோன்றுவதற்கு முக்கிய காரணம் அவருடைய ஆளுமையின் அகத்திறல் (potential) என்று கூறுகிறார் நூலாசிரியர். ஆசார்யாளுடைய வாழ்க்கையில் நடந்த பல நிகழ்வுகள், அவரது அரிய உபதேசங்கள், சாஸ்திர வாக்கியங்கள் மற்றும் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் இச்சுலோகம் குறித்து ஆற்றிய உரைகள் ஆகியவற்றை மேற்கோள் காட்டி தனது கருத்தை "**என்றும் புதியவர்**" எனப் பெயர் கொண்ட இந்நூலில் விளக்குகிறார் அதன் ஆசிரியர்.

"ப்ரம்ஹவித்யா மையம்" (Centre for Brahmavidya) என்னும் இந்த அறக்-கட்டளை 2019 அக்டோபர் 24ம் நாள் ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளின் ஜயந்தித் திருநாள் அன்று துவங்கப் பெற்றது. மையத்தின் முதல் வெளியீடாக ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளைப் பற்றிய "என்றும் புதியவர்" எனும் இந்தப் புத்தகம் அமைந்திருப்பது எங்களுக்குக் கிடைத்த ஒரு அனுக்கிரகமாகவே நாங்கள் கருதுகிறோம். இன்னொரு அனுக்கிரகம் என்னவென்றால் இப்புத்தகத்தின் அடிப்படையே ஜகத்குரு ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் இயற்றிய சுலோகம் தான்.

நூலாசிரியர் Dr.வா.ந.முத்துக்குமார் பல தலைமுறைகளாகச் சிருங்கேரி ஜகத்-குருக்களின் அனுக்கிரகத்திற்குப் பாத்திரமான ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் இயற்பியல் துறையில் டாக்டர் பட்டம் பெற்றவர். மேலும் அவர் கலிபோஃர்னியா பல்கலைக்கழகத்தில் சங்கத்தமிழ் இலக்கியத்தில் டாக்டர் பட்டம் வென்றவர். ஒரு சிஷ்யர் என்ற வகையில் மட்டும் அல்லாது ஓர் ஆராய்ச்சியாளரின் பார்வையிலும் இப்புத்தகத்தை அவர் எழுதியிருக்கிறார் என்று சொன்னால் அது மிகையாகாது. அவருக்கு எங்களது பாராட்டுகள்.

இந்தப் புத்தகத்தை வடிவமைக்க உதவிய திரு.வி.ராஜேஷ்குமார், அட்டையை அழகுற வடிவமைக்க உதவிய திரு.கோ.பார்த்தசாரதி மற்றும் புத்தகத்தை மிகவும் குறுகிய காலத்தில் நேர்த்தியாக அச்சிட்ட சுதர்ஷன் கிராபிக்ஸ் அச்சக நிறுவனத்தின் திரு. சுப்ரமணியன் ஆகியோருக்கு எங்களது மனமார்ந்த நன்றி.

இவண்,

Vidyashankar Krishnan
Suresh Chandar
Dr. H.N.Shankar
Dr. Meenakshi Lakshmanan

Trustees
**Centre for Brahmavidya**

# பொருளடக்கம்


முன்னுரை ........................................................ 1

1. பகுத்தறிவு (விவேகம்) .................................... 13

எது சரி, எது தவறு என்று பகுத்தறிவது விவேகம் ...................... 13

விவேகம் – சாஸ்திரத்தில் சிரத்தை ............................................. 16

விவேகத்தின் செயல்பாடு ........................................................... 19

விவேகம் - வேதாந்த சாஸ்திரத்தின்படி விளக்கம் ...................... 21

பிரம்ம ஞானமே முழுமையான விவேகம் ................................... 27

2. பேரறிவு (மஹாப்ரக்ஞை) ................................ 31

மஹாப்ரக்ஞை – கல்விசார் அறிவாற்றல் ................................... 34

மஹாப்ரக்ஞை – கற்றறிந்த பண்டிதர் ......................................... 40

மஹாப்ரக்ஞை – கல்வியறிவும் ஆன்மிக நெறியும் ..................... 50

மஹாப்ரக்ஞை – கல்விசார் அறிவாற்றலுக்கு அப்பால் ............. 55

மஹாப்ரக்ஞை – தர்க்கம் சார்ந்த அறிவாற்றல் ........................... 60

மஹாப்ரக்ஞை – மொழிசார் அறிவாற்றல் .................................. 60

மஹாப்ரக்ஞை–உடல்சார் இயக்கவின் அறிவாற்றல் ................ 67

மஹாப்ரக்ஞை – செயல்பாட்டுத் திறன் ...................................... 74

மஹாப்ரக்ஞை – பிறர்சார்ந்த அறிவாற்றல் ................................ 87

வேதாந்த சாஸ்திரத்தின்படி 'மஹாப்ரக்ஞை' ............................ 94

3. துணிவு, மனத்திட்பம் (தைர்யம்) .................. 107

தைர்யம் - மனத்திட்பம் ............ 108

உடல் வலிமையும் மன வலிமையும் ............ 110

கல்வியறிவும் தைர்யமும் ............ 113

தீரன் யார்? ............ 115

அத்வைதமே தைர்யம் ............ 125

4. தாராள குணம், பெருந்தன்மை, பரந்த மனம் (ஔதார்யம்) ............ 131

ஈகை ............ 131

ஔதார்யம் - பிறருக்கு உதவி ............ 136

ஔதார்யம் - மேன்மை ............ 151

ஔதார்யம் - பரந்த மனப்பான்மை ............ 157

வாழ்க்கையே ஔதார்யம் ............ 172

5. பொறுமை, சகிப்புத்தன்மை, மன்னிக்கும் தன்மை (க்ஷமை) ............ 175

பொறுமை ............ 178

மன்னிக்கும் தன்மை ............ 186

திதிக்ஷை ............ 188

திதிக்ஷையும் யோகமும் ............ 195

6. என்றும் புதியவர் ............ 199

# *முன்னுரை*

*கடுவனிள வெயினனார் என்ற புலவர் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பரிபாடலில் திருமாலைப் பாட முற்படும் போது இப்படிக் கூறுகிறார்:* [1]

ஐந்திருள் அறநீக்கி நான்கினுள் துடைத்துத்தம்
ஒன்றாற்றுப் படுத்தநின் ஆர்வலர் தொழுதேத்தி
நின்புகழ் விரித்தனர் கிளக்குங்கால் அவைநினக்
கிறும்பூ தன்மைநற் கறிந்தே மாயினும்
நகுதலுந் தகுதியீங் கூங்குநிற் கிளப்ப …

*(செவி முதலிய ஐம்புலன்களால் உண்டாகும் மயக்க இருளை நீக்கி மைத்திரி, கருணை, முதிதை, உபேக்ஷை என்ற நான்கு குணங்களினால் மனதில் உள்ள மாசைத் துடைத்து ஸமாதி என்ற ஒரு நெறியில் தம் மனதைச் செலுத்திய உன் அன்பர்கள், உன்னைத் தொழுதேத்தி உன் புகழை விரித்துக் கூறினர். அப்புகழெல்லாம் உனக்கு இயல்பே; வியக்கத்தக்கது அல்ல. இதை நாங்கள் அறிந்திருந்தாலும் அத்தன்மை இல்லாத நாங்கள் அதில் சிலவற்றை அங்குமிங்குமாகப் பிறழக் கூறுகிறோம். அதைக் கண்டு நீ நகைத்தலும் எங்களுக்கு ஒரு தகுதியே. அதனால் நாங்கள் உன் புகழைக் கூறாமல் இருக்கப் போவதில்லை.)*

*ஸ்ரீ சிருங்கேரி சாரதா பீடத்தின் 35வது பீடாதிபதிகளாக விளங்கிய ஆசார்யாள் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளின் மேன்மையை நாம் பேச முற்படுவதும் இவ்வாறே. ஆசார்யாளின் வரலாறு, அவருடைய மேன்மை முதலியன குறித்துப் பல நூல்கள் இதுவரை வெளிவந்துள்ளன. இவையெல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற் போல் 2017ம் ஆண்டு ஆசார்யாளின் நூறாவது ஜயந்தி மஹோத்ஸவத்தை முன்னிட்டு* "The Multifaceted Jivanmukta" *என்ற அரிய பெருநூல் ஒன்றை சிருங்கேரி சாரதா பீடத்தின் தற்போதைய ஜகத்குருவான மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் வெளியிட்டார்.*

[1] பரிபாடல் 4:1-5; பொருள் பரிமேலழகர் உரையை ஒட்டி எழுதப் பட்டது.

அவ்வாறிருக்கையில், நாம் இன்னும் சொல்ல வேண்டியது என்ன இருக்கிறது என்ற கேள்வி எழுவது இயல்பே. இதற்கு விடையாகப் பல காரணங்கள் கூறலாம். இரண்டை மட்டும் சொல்வோம்.

முதலாவது, ஆசார்யாளைப் பற்றிப் பேசுவதற்கு எந்தக் காரணமும் தேவையில்லை. உலகத்தில் ஒரு அழகிய காட்சியைப் பார்த்து நமது மனம் சற்று நேரத்திற்காவது அதில் ஒன்றிவிடுகிறது. அந்த அனுபவத்-தைச் சிலர் இசையாக வெளிப்படுத்துகிறார்கள்; இன்னும் சிலர் கவிதை எழுதுகின்றனர்; பலர் அந்த அனுபவத்தை ஒரு தாமியின் (selfie) வாயிலாகப் புனைகிறார்கள். சாதாரணமான ஒரு காட்சியே சராசரி மனிதனை ஒரு பாடகனாகவோ கவிஞனாகவோ மாற்றும் போது, தனிச்சிறப்பு மிகுந்த ஆசார்யாளின் வரலாற்றைக் கேட்பவர்கள் அதைப் பற்றிச் சற்று சிந்தித்தும் வியந்தும் தமக்குத் தோன்றியவற்றைக் கடுவனிள வெயினனார் சொன்னது போல் “ஈங்கூங்கு கிளப்ப” முற்படுவதில் வியப்பேதும் இல்லை.

இரண்டாவது காரணம் இந்நூலின் தலைப்பிலேயே இருக்கிறது - ஆசார்யாள் “என்றும் புதியவர்”. ஒவ்வொரு முறையும் அவருடைய வரலாற்றைப் படிக்கும் போதோ அல்லது அதில் பதிவு செய்யப் பட்டிருக்கும் ஒரு நிகழ்வைப் பற்றிப் பேசும் போதோ ஏதாவது ஒரு புதிய கூறு மனதில் படுகிறது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. இவற்றுள் இந்த நூலில் ஆசார்யாளின் ஆளுமையை (personality) நாம் முக்கியமான காரணமாகக் காட்டவுள்ளோம். அதாவது, ஆசார்யாள் எப்பொழுதும் புதிதாய்த் தோன்றுவதற்கு முக்கிய காரணம் அவருடைய ஆளுமையின் அகத்திறல் (potential). பார்ப்பவரின் மனப்பாங்கினால் அல்லது அறிவுத்திறனால் மட்டும் அவர் புதிதாகத் தோன்றுவதில்லை; பல பண்புக் கூறுகள் பல்வேறு விதமாக அவரிடம் அமைந்திருந்ததால் அவருடைய ஆளுமையும் பன்முகத் தன்மையுடன் விளங்கியது. இதுவே அவர் என்றும் புதியவராக இருப்பதற்கான காரணம் என்பதை அவருடைய வாழ்க்கையில் நடந்த பல நிகழ்வுகளின் வாயிலாகக் காட்டுவோம்.

முதலில் ஆசார்யாளின் ஆளுமையைப் பற்றிச் சுருக்கமாகக் கூறி அதன் பின் இந்நூலில் இதை எப்படி விவரிக்கப் போகிறோம் என்பதைக் கூறுவோம். ஆசார்யாளின் சிஷ்யரான ஜகத்குரு ஸ்ரீமத்

பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், ஆசார்யாளின் பெருமையைப் போற்றும் அஷ்டோத்தர சத நாமாவளி ஒன்றை எழுதியிருப்பது பலரும் அறிந்திருக்கலாம். அதில் அவர் ஆசார்யாளை "अतिमानुषचारित्रः" என்று குறிப்பிடுகிறார்; ஆசார்யாளின் சரித்திரம் மனிதர்களுக்கு அப்பாற்பட்டது என்று இதற்குப் பொருள். ஒவ்வொரு முறையும் நாம் ஆசார்யாளின் சரித்திரத்தைப் படிக்கும் போது இக்கூற்று எவ்வளவு உண்மை என்று உணர்கிறோம். பொதுவாக உலகில் ஒருவர் ஓரிரண்டு விஷயங்களில் மட்டுமே வல்லவராக இருப்பார். ஆனால் ஆசார்யாளோ எந்தத் துறையில் ஈடுபட்டாலும் அதில் வல்லவராகவும், அத்துறையில் ஈடுபடும் மற்றவருக்கு வழிகாட்டியாகவும் இருந்தார். பதினான்கு வயது நிரம்பும் முன்னரே துறவறம் பூண்டார். பதினெட்டு வயதில் ஜீவன்முக்தராகிப் பிறவிப் பயனைத் துய்த்தார். இதைத் தவிர பல்வேறு சாஸ்திரங்களில் புலமை, எண்ணற்ற சிஷ்யர்களுக்கு அவரவர் தகுதிக்கேற்றவாறு உபதேசித்தல், வரலாற்றுச் சிறப்பு மிகுந்த ஒரு பீடத்தின் தலைமை, என்றவாறு அவருடைய ஆளுமை பன்முகத் தன்மை வாய்ந்ததாக உள்ளது. இந்த காரணத்தினால் தான் மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் தாம் புனைந்த நாமாவளியில் ஆசார்யாளை "पारावारातिगम्भीरः" – கடலைப் போல் மிக ஆழமானவர் – என்று குறிப்பிடுகிறார்.

ஆசார்யாளின் ஆளுமையில் உள்ள பன்முகத்தன்மையினால் பல்வேறு மக்கள் ஆசார்யாளைப் பல்வேறு விதமாகக் காண்கின்றனர் என்று கூறினோம். அதைச் சற்று விரிவாகப் பார்ப்போம். முதலில், இந்நூலில் விரவி வரும் "ஆசார்யாள்" என்ற சொல்லையே எடுத்துக் கொள்வோம். இச்சொல்லிற்கு விசேஷமான பொருள் உண்டு. இச்சொல்லின் வேர்ச்சொல் ஸம்ஸ்க்ருத மொழியில் "चर्" என்பது. இதன் பொருள் "நடத்தல்" என்பதாகும். ஆசாரம், ஆசார்யர், ஆசரணம் என்கிற சொற்கள் இச்சொல்லிலிருந்தே பிறக்கின்றன. "ஆசாரம்" என்றால் "நன்னடத்தை". ஒருவரது நடத்தை நல்லதா என்பதைத் தீர்மானிப்பது சாஸ்திரமே. அதன்படி, ஆசார்யர் என்பவர் சாஸ்திரம் நன்னடத்தையாக எதைக் கூறுகிறது என்பதை அறிந்து மற்றவரையும் அவ்வழியில் நடத்துபவர். அதை விட முக்கியமாகத் தாமும் அதை நடைமுறையில் வாழ்ந்து காட்டுபவர். "ஊருக்கு உபதேசம்" என்று வழக்கில் உள்ளபடி ஊருக்கெல்லாம் உபதேசம் செய்து அதைத் தாம்

கடைபிடிக்காதிருப்பவர் ஆசார்யர் என்று அழைக்கத் தகுதியற்றவர். எனவே தான் "ஆசார்யர்" என்ற சொல்லிற்குப் பொருளாக:

आचिनोति हि शास्त्रार्थमाचारे स्थापयत्यपि ।
स्वयमाचरते यस्मादाचार्यः स निगद्यते ॥

என்று வாயு புராணம் கூறுகிறது. (எவர் சாஸ்திரத்தின் உட்பொருளை அறிந்து, தாம் அதை செயல்படுத்திப் பிறரையும் அதில் நிலைநிறுத்து-கிறாரோ அவரே 'ஆசார்யர்' என்று அறியப்படுகிறார்.)

இனி, ஆசார்யாளின் வரலாற்றை மனதில் வைத்துக் கொண்டு இந்த சுலோகத்தைப் பார்த்தோமானால் முதலில் (சுலோகத்தில் உள்ள) "சாஸ்திரம்" என்ற சொல்லிற்கு முக்கியமாக "வேதாந்த சாஸ்திரம்" என்று பொருள் சொல்லலாம். அவ்வாறு எடுத்துக் கொண்டால் "ஆசார்யர்" என்ற சொல்லிற்கு மேலே கண்ட சுலோகத்தின் அடிப்படையில், "எவர் வேதாந்த சாஸ்திரத்தின் தாத்பர்யத்தை அதாவது, பரம்பொருளை அறிந்து அதில் தாம் நிலைபெற்று, மற்றவரையும் நிலைபெறச் செய்கிறாரோ, அவரே ஆசார்யர் என்று அறியப்படுகிறார்" என்று பொருள் கொள்வோம். இங்கே ஒரு விஷயத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும். மற்ற சாஸ்திரங்களிற்கும் வேதாந்த சாஸ்திரத்திற்கும் சில முக்கியமான வேறுபாடுகள் உள்ளன. முதலாவதாக, வேதாந்த சாஸ்திரத்தைக் கற்பதற்கு அந்த சாஸ்திரம் சில தகுதிகளைக் குறிப்பிட்டிருக்கிறது. ஆனால், மற்ற சாஸ்திரங்-களைப் போல் அல்லாமல், இத்தகுதிகள் பயில்பவரின் மனத்தூய்மை குறித்துக் கூறப்பட்டுள்ளன. இவை இருந்தால் தான் வேதாந்த தத்துவம் மனதில் ஒளிரும். எனவே வேதாந்த ஆசார்யர் என்பவரின் மனம் மிகத் தூய்மையாகவும் உள்திரும்பியதாகவும் இருத்தல் வேண்டும். அடுத்த-தாகப், பரம்பொருளை அறிந்த ஒருவரால் மட்டுமே இன்னொருவரைப் பரம்பொருளில் நிலைநிறுத்தமுடியும். இதை வேதமே கூறுகிறது: [2]

न नरेणावरेण प्रोक्त एष सुविज्ञेयो बहुधा चिन्त्यमानः ।
अनन्यप्रोक्ते गतिरत्र नास्ति ...

(ஆத்மாவை அறியாத இன்னொருவரால் உபதேசிக்கப்பட்டவன்

[2] கடோபநிஷத் 1.2.8

எவ்வளவு தீவிரமாக விசாரம் செய்தாலும், அவன் ஆத்ம தத்துவத்தை அறிவதில்லை. ஆத்ம தத்துவத்தை அறிந்தவரால் உபதேசிகப்பட்டவன் மோக்ஷம் அடைகிறான்.) சுருக்கமாகச் சொன்னால், ஆசார்யர் என்பவர் பரம்பொருளை உணர்ந்த ஞானியாக இருக்க வேண்டும்.

ஆசார்யாளின் வரலாற்றைப் படித்தால், வேதாந்த தத்துவத்தை அறிவதற்கான தகுதிகள் எல்லாம் சிறு வயதிலேயே அவரிடம் அமைந்திருந்தன என்பது தெரிகிறது. மேலும், தமது குரு ஶ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் செய்த உபதேசம், மற்றும் சாஸ்திரம் இவற்றின் அடிப்படையிலேயே ஆத்ம தத்துவத்தை விசாரம் செய்துத் தம் மனதை உள்ளே திருப்பிப் பரம்பொருளை உணர்ந்து, அதில் நிலைபெற்றார். தகுதியுள்ள சிஷ்யர்களைப் பரம்பொருளில் நிலைத்திருக்கச் செய்தார். இவை எல்லாம் அவருடைய வரலாற்றில் விவரமாக எழுதப்பட்டிருக்கின்றன. எனவே இந்த விஷயத்தில் “ஆசார்யாள்” என்று இவரைக் குறிப்பது மிகச் சரியே. இது தொடர்பாக ஶ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் தாம் இயற்றிய நாமாவளியில் “शास्त्रतात्पर्यसंवेदी” (சாஸ்திரத்தின் தாத்பர்யத்தை நன்கு அறிந்தவர்) “योगमार्गविशारदः” (யோக மார்க்கத்தில் வல்லவர்) “ब्रह्मतत्त्वानुसन्धाता” (பரம்பொருளை மனதில் நிறுத்தியவர்) “ब्रह्मविद्योपदेशकः” (பிரம்ம தத்துவத்தைப் பிறருக்கு உபதேசிப்பவர்) முதலான பெயர்களில் அழகாகத் தொடுத்திருப்பது இங்கே நினைக்கற்பாலது.

அடுத்ததாக தர்ம சாஸ்திரத்தை எடுத்துக் கொண்டாலும் “ஆசார்யர்” என்ற சொல் ஆசார்யாள் விஷயத்தில் மிகப் பொருத்தமானதே. ஒரு ஸந்யாஸிக்கு உரிய குணங்கள் என்ன என்பதை ஆசார்யாள் வாழ்ந்து காட்டினார். இதைத் தவிர சிருங்கேரி சாரதா பீடாதிபதிக்குப் பல்வேறு நியமங்கள் உண்டு. அவை எல்லாவற்றையும் ஆசார்யாள் விடாமல் கடைப்பிடித்தார். நாடெங்கிலும் யாத்திரை செய்து ஆயிரக்கணக்கான சிஷ்யர்களுக்கு அவரவருக்கு ஏற்ற தர்மத்தை உபதேசித்து அவர்களை அறநெறியில் நிலைபெறச் செய்தார். இவற்றையும் ஆசார்யாளுடைய வரலாற்றில் விவரமாகக் காணலாம். இந்த விஷயத்தை மஹா-ஸந்நிதானம் ஶ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், தாம் இயற்றிய அபிநவ வித்யாதீர்த்த வர்ணமாலா ஸ்தோத்திரத்தில்,

र्थमपूर्वं श्रुतेर्यस्तु यथावद्वबोधयन् ।
शिष्यान्धर्मपथासक्तान्कुरुते तमहं श्रये ॥

என்று கூறுகிறார் (எவர் வேதத்தின் பொருளை அதில் உள்ளபடி கற்பித்து சிஷ்யர்களை தர்மத்தின் வழியில் பற்றுள்ளவர்களாகச் செய்கிறாரோ, அவரைச் சரணடைகிறேன்). ஆசார்யாள் தர்ம மார்க்கத்தைப் போதிப்பவராகத் திகழ்ந்தார் என்பதை மஹாஸந்நிதானம் இயற்றிய நாமாவளியில் "धर्माधर्मविभागज्ञः" (தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் உள்ள பாகுபாட்டை அறிந்தவர்), "नियमाचरणोत्सुकः" (நியமங்களைக் கடைபிடிப்பதில் உற்சாகமுள்ளவர்) "धर्मप्रचारनिरतः" (தர்மத்தைப் பரப்புவதில் ஈடுபட்டவர்) முதலான பெயர்களிலும் காணலாம்.

மேலும் இங்கே தர்மம் என்பது விசேஷமாக வைதிக தர்மத்தைக் குறித்தாலும், அந்த தர்மத்தில் சிரத்தை இல்லாத நாத்திகர்கள், அவைதிக மதத்தைச் சார்ந்தவர்கள் ஆகியோர் போற்றும் நற்குணங்களும் ஆசார்யாளிடம் அமைந்திருந்தன. இதற்கு உதாரணமாகக் கருணை, பொறுமை, செய்நன்றி அறிதல், எல்லோரையும் ஒன்றாகப் பார்க்கும் தன்மை போன்ற பலவற்றைக் கூறலாம். இந்த குணங்களால் நாத்திகர்கள் உள்ளிட்ட பலதரப் பட்டவர்களும் ஆசார்யாள் பால் ஈர்க்கப்பட்டார்கள். இந்நூலிலும் நாம் ஆசார்யாளின் குணங்களாக விவரிக்கப் போவதில் பலவும், உலகில் உள்ள எல்லோரும் பின்பற்றத் தக்கவை என்பதைப் பார்ப்போம்.

ஆசார்யாள் தமது அருளுரை ஒன்றில் ஸ்ரீ ராமரைப் பற்றி, "ராமரை மனிதாகவும் பார்க்கலாம்; கடவுளாகவும் பார்க்கலாம். மனிதனாகப் பார்த்தால் அவர் நடந்து கொண்டபடி நடந்து நம் வாழ்க்கையை மேம்படுத்தலாம். நம்மைப் போல் அவருக்கும் பல கஷ்ட நஷ்டங்கள் நேர்ந்தன. எல்லாவற்றையும் எதிர்கொண்டு இறுதியில் அவர் வெற்றி பெற்றார். அதே ராமரைக் கடவுளாகத் தியானம் செய்தால் நமக்கு மோக்ஷம் கிட்டும்" என்று கூறியுள்ளார். இது ஆசார்யாளின் விஷயத்தில் முற்றிலும் பொருந்துகிறது. ஏனென்றால் ஆசார்யாளைப் பரம்பொருளாக உபாஸித்தும், மனிதன் மோக்ஷம் அடைவது எப்படி என்பது பற்றி அவர் செய்த உபதேசங்களையும், அவர் காட்டிய வழியையும் பின்பற்றுபவர்கள் மோக்ஷம் அடைகின்றனர். அதில் சிரத்தையோ

நம்பிக்கையோ இல்லாதவர்கள் ஆசார்யாளிடம் அமைந்திருந்த நற்குணங்களைத் தம் வாழ்வில் பயின்றால் உலகில் சிறந்த மனிதர்– களாக வாழலாம். இவ்வாறு ஆசார்யாள் முக்தி நெறி, அற நெறி என்ற இரண்டிற்கும் வழிகாட்டியாகவும், அதில் எப்படி நிலைபெற வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாகவும் விளங்கியதால் அவருடைய சிஷ்யர்களும் பிறரும் தத்தம் தகுதிக்கும் மனப்பாங்கிற்கும் ஏற்ப ஆசார்யாளின் பல பரிமாணங்களைக் காண்கின்றனர்.

இனி, "சிருங்கேரி சாரதா பீடாதிபதி" என்ற கண்ணோட்டத்துடன் ஆசார்யாளைப் பார்த்தால் அவருடைய ஆளுமையில் மேலும் சில பரிமாணங்கள் தெரிகின்றன. அவற்றுள் முக்கியமானது ஆசார்யா- ளுடைய நிர்வாகத் திறன். 1954ம் ஆண்டு ஆசார்யாள் பீடாதிபத்- தியத்தை ஏற்றுக்கொண்ட போது மடத்தின் நிர்வாகம் அரசாங்கத்தின் வசம் இருந்தது. ஒரு ஹிந்து சமய நிறுவனத்தின் நிர்வாகத்தை (அதிலும் வைதிக தர்மத்தை முன்னிறுத்தும் நிறுவனம்) அரசிடமிருந்து மீட்டது ஒன்றை மட்டுமே ஆசார்யாளுடைய நிர்வாகத் திறனுக்குச் சான்றாகக் கூறுதல் போதுமானது. இன்றைக்கு சிருங்கேரி சாரதா பீடம் இந்தியாவிலுள்ள சமயம் சார்ந்த நிறுவனங்களில் தனிச்சிறப்புடன் விளங்குகிறது என்றால், அதற்கான அடிப்படை ஆசார்யாளின் முப்பத்தைந்து வருட நிர்வாகத்தில் அமைக்கப்பட்டது.

மேலும், இந்திய வரலாற்றில் ஒரு முக்கியமான காலகட்டத்தில் (நாடு தன்னாட்சி பெற்று ஒரு சில ஆண்டுகளுக்குள்) ஆசார்யாள் பீடாதிபதியாகப் பொறுப்பேற்றார். நவீனமயமாகும் நாட்டிற்கேற்ப சாரதா பீடத்தையும் பல வழிகளில் நவீனமயம் ஆக்கினார். அறிவியல், தொழில்நுட்பம், மேலாணியல் (நிர்வாக இயல்), வேளாணியல் ஆகிய துறைகளை முறைப்படிப் பயிலாவிட்டாலும் தமது அறிவுத் திறனாலும், அவ்வந்தத் துறையில் வல்லவர்களுடன் பேசியும், புத்தகங்கள் படித்தும் அவருடைய அறிவுப் பரப்பை நீட்டித்தார். தமது யாத்தி- ரைகளின் போது அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களுக்குச் சென்று அங்குள்ள புதியன பற்றிக் கேள்விகள் கேட்டுத் தெரிந்து கொண்டும், பின்னர் அவற்றை சிருங்கேரியில் உள்ள சூழ்நிலைக்கும் தேவைகளுக்கும் ஏற்றவாறு மாற்றியமைத்ததையும் ஆசார்யாளின் வரலாற்றிலிருந்து அறிகிறோம். இவையாவும் ஆசார்யாளின் ஆளுமை-

யில் பல நவீன பரிமாணங்களைச் சேர்த்தன. இதனால் பலர், பழம்பெருமை வாய்ந்த பீடத்தின் தலைமையை இந்திய வரலாற்றின் முக்கியமானதொரு காலக்கட்டத்தில் ஏற்று, இக்காலத்திற்கேற்ப வழிநடத்திய சிறந்த பீடாதிபதியாக ஆசார்யாளைக் காண்கிறனர்.

இனி, ஆசார்யாளின் பன்முகத் தன்மை கூடிய ஆளுமையை விவரிப்பது எப்படி என்று யோசித்தால் இரண்டு வழிகள் கூறலாம். முதலாவது, நாம் மேலே கூறியவாறு ஆசார்யாளை ஒரு சிறந்த துறவியாக, யோகியாக, ஜீவன்முக்தராக, பீடாதிபதியாக, இப்படி வரிசைக்கிரமாக விவரிக்கலாம். பொதுவாக இந்த உத்தி காலவரிசைப் படுத்தப்பட்ட விவரிப்பாக (chronological account) அமையும்; அல்லது மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் ஆசார்யாளைப் பற்றி இயற்றிய நாமாவளியைப் போல் ஆசார்யாளின் ஆளுமையின் வெவ்வேறு கூறுகளை ஒவ்வொன்றாகக் கூறலாம். இரண்டாவது வழி, ஆசார்யாளின் ஆளுமையில் வெளிப்படும் பண்புக் கூறுகளை (character traits) விவரித்து அதன் வாயிலாக அவருடைய ஆளுமையைப் பற்றிப் பேசுவது. பண்புக் கூறுகளுக்கும் ஆளுமைக் கூறுகளுக்கும் (personality traits) உள்ள தொடர்பு பற்றி உளவியலில் இரண்டு வேறுபட்ட கோட்பாடுகள் உள்ளன; ஒன்று, ஆளுமைக் கூறுகளுக்கும் பண்புக் கூறுகளுக்கும் காரண காரிய தொடர்பு உள்ளது என்ற கோட்பாடு. இரண்டு, காரண காரிய தொடர்பு அவசியம் இல்லை; பண்புக் கூறுகள் சந்தர்ப்ப சூழ்நிலைகள் போன்றவற்றுடன் சம்பந்தப்பட்டு ஆளுமைக் கூறுகளாக வெளிப்படுவன; எனவே பண்புக் கூறுகளை ஆளுமைக் கூறுகளின் விவரிப்பாக எடுத்துக் கொள்ளலாம் என்ற கோட்பாடு. இந்நூலில் நாம் இந்த இரண்டாவது கருத்தை உத்தியாகப் பயன்படுத்துவோம். ஆசார்யாளிடம் அமைந்திருந்த பண்புகளுள் எவற்றைத் தேர்ந்தெடுப்பது என்றும் அப்பண்புகள் அவரது ஆளுமையில் வெளிப்பட்ட விதத்தை எவ்வாறு விவரிப்பது என்பதை இனி கூறுவோம்.

ஆசார்யாளைப் பற்றி மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் எழுதிய நாமாவளி பற்றிச் சொன்னோம். ஆசார்யாளின் மீது மஹாஸந்நிதானம் ஒரு தியான சுலோகத்தையும் எழுதியிருக்கிறார். அந்த சுலோகம் பின்வருமாறு:

विवेकिनं महाप्रज्ञं धैर्यौदार्यक्षमानिधिम् ।
सदाऽभिनवपूर्वं तं विद्यातीर्थगुरुं भजे ॥

*(விவேகமுள்ளவரும், பேரறிவு உடையவரும், தைர்யம், ஔதார்யம், பொறுமை ஆகிய குணங்களின் நிதியாக இருக்கும் அபிநவ வித்யாதீர்த்த குருவை எப்பொழுதும் வழிபடுகிறேன்.)*

*2017-ம் ஆண்டில் நடந்த ஆசார்யாளின் நூறாவது ஜயந்தி விழா நிகழ்ச்சி ஒன்றில் மஹாஸந்நிதானம் இந்த சுலோகத்தைப் பற்றிப் பின்வருமாறு கூறினார்:*

"**...** ஆசார்யாளைப் பற்றி, அவருடைய குணாதிசயங்கள், அவருடைய ஸ்வபாவம் எல்லாவற்றையும் சேர்த்துத் தான் இந்த ஒரு வரி அமைந்திருக்கிறது:

विवेकिनं महाप्रज्ञं धैर्यौदार्यक्षमानिधिम् ।

*இந்தப் பாதி சுலோகத்திலேயே அவருடைய எல்லா குணங்களும் அடங்கிவிடும். ... ஆசார்யாள் ஸித்தியடைந்த பிறகு இந்த சுலோகம் எனக்கு அவருடைய பிரேரணையாக (அதாவது, ஆசார்யாளின் உந்துதலால்) வந்தது. ...*"

*இந்த சுலோகம் குறிப்பிடும் பண்புகளையும் அவற்றின் பல்வேறு கூறுகளையும் ஆராய்ந்து, ஆசார்யாளின் ஆளுமைக்கும் இவற்றுக்கும் உள்ள தொடர்பை, அவருடைய வாழ்கையில் நடந்த சில சம்பவங்களின் வாயிலாக இந்நூலில் கூறவுள்ளோம். இந்த சுலோகத்திற்கு ஒரு தனிச்சிறப்பு இருக்கிறது. அது என்னவென்றால், ஆசார்யாளைக் குறிக்கும் ஒவ்வொரு சொல்லும் பல விதமாகப் பொருள் தந்து, ஆசார்யாளிடம் அமைந்திருந்த (விவேகம் முதலிய) குணங்கள் அவருடைய வயது, ஆச்ரமம், மற்றும் அவர் வகித்த பொறுப்புகள் போன்றவற்றிற்கேற்ப வெவ்வேறு கூறுகளாக வெளிவந்த வகையைச் சிந்திப்பவர்க்கு நன்கு புலப்படுத்துகிறது. இதனால், இந்த சுலோகம் ஆசார்யாளின் ஆளுமையின் பரிமாணங்கள் மட்டுமன்றி அவற்றின் பரிணாமத்தையும் காட்டுகிறது. சுலோகத்தின் இந்த சிறப்பு அம்சத்தின் மூலமாக ஆசார்யாளின் பன்முகத்தன்மை கொண்ட ஆளுமையை இந்நூலில் நாம் விரித்துரைப்போம்.*

இரண்டு விஷயங்களை நாம் இங்கே கூற வேண்டும். முதலாவது, இந்நூலில் நாம் ஆசார்யாளின் வாழ்வில் நடந்தவற்றைக் காலவரிசைப்படுத்தவில்லை. சுலோகத்தில் இருந்து நாம் எடுத்த சொல்லின் பொருளுக்கு ஏற்றவாறு ஆசார்யாளின் வரலாற்றில் நடந்த நிகழ்வுகளை உதாரணங்களாகக் காட்டியிருக்கிறோம். சில சமயங்களில் அவை காலவரிசைப்படி அமையலாம்; பல சமயங்களில் அவ்வாறு அமையாமலும் இருக்கலாம். இரண்டாவது, ஆசார்யாளின் குணங்களை விவரிக்கும் சொற்கள் பலவாறாகப் பொருள் தருகின்றன. உதாரணமாக, ‘‘தைர்யம்’’ என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம்; இதற்குப் பொதுவாகத் ‘‘துணிச்சல்’’ என்று பொருள் கூறலாம். ஆனால், இச்சொல்லிற்கு ‘‘மனவுறுதி’’ என்ற பொருளும் உண்டு. யோகம், மற்றும் வேதாந்த சாஸ்திரங்களில் மனவடக்கமும் புலனடக்கமும் உள்ளவன் ‘‘தீரன்’’ (தைர்யம் உள்ளவன்) என்று கூறப்படுகிறான். இதைத் தவிர வேதாந்த சாஸ்திரத்தில் பரம்பொருளைத் தம்மினும் வேறுபடாததாகப் பார்ப்பதே அச்சமின்மையாகக் (தைர்யமாகக்) குறிப்பிடப்படுகிறது. இவற்றுள் எந்தப் பொருள் சொன்னாலும், ‘‘தைர்யம்’’ என்கிற இக்குணம் சமயத்திற்குத் தக்கவாறு ஆசார்யாளிடம் வெளிப்பட்டதை அவருடைய வரலாற்றில் பார்க்கிறோம். இந்த அம்சத்தையும் இந்த சுலோகத்தின் வாயிலாக அறியலாம்.

நூலின் இயல் வரிசை சுலோகத்தை ஒட்டியே அமைந்துள்ளது. முதல் இயலில் ‘‘விவேகம்’’ என்ற குணம் ஆசார்யாளிடம் எப்படி அமைந்திருந்தது என்பதைக் கூறுவோம். முதலில் இச்சொல்லிற்கு ‘‘எது சரி, எது தவறு என்பதைப் பகுத்தறியும் திறன்’’ என்று பொருள் கூறுவோம். இது ஆசார்யாளிடம் எப்படி வெளிப்பட்டது, இதற்கும் சாஸ்திரத்தின் விஷயத்தில் அவருக்கு இருந்த சிரத்தைக்கும் உள்ள தொடர்பு ஆகியவற்றை விவரிப்போம். அதன் பின், ‘‘விவேகம்’’ என்ற சொல்லிற்கு வேதாந்த சாஸ்திரம் கூறும் பொருளை எடுத்துக் கொள்வோம். இறுதியாக முழுமையான விவேகம் என்பது ஒரு ஜீவன்முக்தரிடமே வெளிப்படுகிறது என்பதைக் கூறுவோம்.

இரண்டாவது இயலில் ‘‘மஹாப்ரக்ஞை’’ அதாவது ‘‘பேரறிவு’’ என்ற பண்பை ஆராய்வோம். முதலில் இதற்குக் கல்வியறிவு என்று பொருள் கொண்டு ஆசார்யாளின் கல்வித் திறன், கற்பிக்கும் திறன் ஆகிய

இரண்டைப் பற்றியும் பேசுவோம். இரண்டாவதாக, ஆசார்யாளின் அறிவுத் திறன் அவர் முறையாகப் பயிலாத துறைகளிலும் சிறப்பாக விளங்கியது பற்றிப் பேசுவோம். ஆசார்யாளின் ஆளுமையில் தனிச்சிறப்புள்ள இந்தக் கூற்றை ஆராய்வதற்குக் கல்வி உளவி-யலாளர்களிடையே பிரபலமாக இருக்கும் இரண்டு கோட்பாடுகளை அறிமுகம் செய்வோம். ‘‘பல அறிவுத் திறன்கள் கோட்பாடு’’ (Theory of Multiple Intelligences) ‘‘முப்படி நிலை அறிவுத்திறன் கோட்பாடு’’ (Triarchic Theory of Intelligence) என்கிற இவ்விரண்டையும் ஆசார்யாளின் அறிவுத்திறனை விவரிப்பதற்குப் பகுப்பாய்வுக் கட்டமைப்புகளாகப் பயன்படுத்துவோம். மூன்றாவதாக, ‘‘மஹாப்-ரக்ஞை’’ என்ற சொல்லிற்கு வேதாந்த சாஸ்திரத்தை ஒட்டிப் ‘‘பரம்-பொருளில் நிலைத்திருக்கும் அறிவு’’ என்று பொருள் கொண்டு ஆசார்-யாளின் ஜீவன்முக்த நிலையைப் பற்றிப் பேசுவோம்.

மூன்றாவது இயல் ‘‘தைர்யம்’’ என்ற குணத்தைப் பற்றியது. இச்சொல்-லிற்கு முதலில் பொதுவான பொருளான ‘‘துணிவு’’ என்பதை எடுத்துக் கொள்வோம். துணிவிற்கும் மன உறுதிக்கும் உள்ள தொடர்பைப் பற்றி முதலில் பேசுவோம். அதன் பின் ‘‘தைர்யம்’’ என்ற சொல்லிற்கு ‘‘மன உறுதி’’ என்று பொருள் கொண்டு யோகம் மற்றும் வேதாந்த சாஸ்திரத்தில் மன உறுதிக்கும் மனவடக்கம், புலனடக்கம் ஆகியவற்-றிற்கும் கூறப்பட்டுள்ள தொடர்பை விவரிப்போம். இக்கூறுகள் ஆசார்யாளின் ஆளுமையில் எப்படி வெளிவந்தன என்பதைச் சொல்-வோம். இறுதியாகப் பரம்பொருளை இரண்டற்றதாக அறிவதே அச்சமின்மை என்ற உபநிஷத் கருத்தை அடிப்படையாகக் கொண்டு ஜீவன்முக்தரே உண்மையான தைர்யம் கொண்டவர் என்பதைச் சொல்வோம்.

நான்காவது இயலில் ‘‘ஔதார்யம்’’ என்ற சொல்லிற்குத் ‘‘தாராள குணம்’’, ‘‘பெருந்தன்மை’’, ‘‘மேன்மை’’, ‘‘பரந்த மனம்’’ என்று பொருள் கூறுவோம். முதலில் தாராள குணம் என்று பொருள் கொண்டு, தகுந்தவர்களுக்குத் தகுந்த சமயத்தில் ஆசார்யாள் செய்த பொருளுதவி, உடலினால் செய்த உதவி ஆகியவற்றைப் பற்றிப் பேசுவோம். அதன் பின், கொடுக்கும் போது தம்மை முன்னிறுத்தாமல் கொடுப்பதே பெருந்தன்மை என்பதைக் கூறி ஆசார்யாளின்

பெருந்தன்மையை எடுத்துக்காட்டும் சில நிகழ்வுகளைக் கூறுவோம். “நான்” என்ற எண்ணம் ஒடுங்கியுள்ளவர்களுக்கு இயல்பாகவே பெருந்-தன்மை இருக்கும் என்பதையும் இங்கே விவரிப்போம். கடைசியாக இந்த இயலில் ஆசார்யாளின் பரந்த மனப்பான்மை பற்றிக் கூறுவோம். ஔதார்யத்திற்கும் உதாரவாதத்திற்கும் (Liberalism) உள்ள வேறு-பாட்டை இது எப்படி எடுத்துக்காட்டுகிறது என்பதையும் இங்கே கூறுவோம்.

ஐந்தாவது இயலில் “க்ஷமை” என்ற சொல்லிற்குப் “பொறுமை”, “மன்னிக்கும் தன்மை”, “சகிப்புத் தன்மை” ஆகிய வெவ்வேறு பொருள் கூறுவோம். தமது சொந்த விஷயத்தில் மற்றவர் செய்த இடர்ப்-பாடுகளைப் பொருட்படுத்தாமல், ஆசார்யாள் பொறுமையையே வெளிப்படுத்தினார் என்பதையும், அதற்கு மாறாக ஒரு மடாதிபதியாக, அந்நிறுவனத்தின் பணிகளைச் சரியாகச் செய்யாதவர் விஷயத்தில் கண்டிப்பையும் மன்னிக்கும் தன்மையையும் வெளிப்படுத்தினார் என்பதை இந்த இயலில் பார்ப்போம். இறுதியாக, வேதாந்த சாஸ்திரத்தில் “க்ஷமை”, “திதிக்ஷா” ஆகிய குணங்களைப் பற்றி என்ன கூறுகிறது என்பதையும் ஆசார்யாளின் ஆளுமையில் இவை எப்படி வெளிப்பட்டன என்பதைக் கூறுவோம்.

கடைசி இயலில் ஆசார்யாளுக்கு இடப்பட்ட பெயர் அவருக்கு எப்படிப் பொருந்துகிறது என்பதைப் பார்ப்போம். மேலும், நாம் இந்நூலில் கருதுதலுக்காக எடுத்துள்ள சுலோகத்தின் இரண்டாவது அடியில், அதாவது,

सदाऽभिनवपूर्वं तं विद्यातीर्थगुरुं भजे

என்ற வரியில், இந்நூலின் மையக் கருத்து பொதிந்துள்ளதைப் பற்றிக் கூறுவோம்.

# *1. பகுத்தறிவு* (*விவேகம்*)

சுலோகத்தில் முதலாவதாகக் கூறப்படும் குணம் ''விவேகம்''. ''விவேகம்'' என்ற சொல் சில சமயங்களில் ''அறிவு'' என்ற பொருள்பட வந்தாலும், அச்சொல்லிற்கு ''ஒன்றை மற்றொன்றுடன் பாகுபடுத்தி அறிவது'' என்பதே முழுமையான பொருள். உதாரணமாகத் தருணம் தெரியாமல் ஒரு செயலைச் செய்பவனை ''என்ன விவேகம் இல்லாமல் நடந்து கொள்கிறாயே'' என்ற நாம் கடிந்து கூறுகிறோம்; அதாவது, இவனுக்கு எந்த சமயத்தில் எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக்கூடாது என்பது தெரியவில்லை என்ற பொருள் இங்கே தொனிக்கிறது. இதைப் போலவே ''இது சரி, அது தவறு''; ''இது செய்யத் தக்கது, அது செய்யத் தகாதது''; ''இது உண்மை, அது பொய்'' என்று பாகுபடுத்தி, அதாவது பகுத்து அறிவதே, விவேகம் என்று கூறப்படுகிறது. இதையே ''பகுத்தறிவு'' என்றும் கூறுகிறோம். இக்காலத்தில் நாத்திகர்கள் தம்மைப் ''பகுத்தறிவுவாதிகள்'' என்று கூறிக்கொள்கிறார்கள். ஆனால், உண்மையில் நாமும் பகுத்தறிவு-வாதிகள் தாம். நமக்கும் அவர்களுக்கும் ஒரே ஒரு வித்தியாசம் தான் இருக்கிறது. நாம் எதை உண்மை என்கிறோமோ அதை அவர்கள் பொய் என்கிறார்கள்; அதே போல், பொய் என்று நாம் எதைக் கூறுவோமோ, அதை அவர்கள் மெய் என்கிறார்கள். இந்த வேறுபாடு எப்படியிருந்தாலும், பகுத்தறிவு என்ற குணத்தை இரு தரப்பினரும் போற்றுகின்றனர்.

## எது சரி, எது தவறு என்று பகுத்தறிவது விவேகம்

முதலில், விவேகம் என்பதற்கு 'இது சரி, அது தவறு' என்று பகுத்தறியும் திறன் என்று பொருள் கொண்டு, இக்குணம் ஆசார்-யாளிடம் எப்படி அமைந்திருந்தது என்பதைப் பார்ப்போம். ஆசார்யாள் துறவறம் பெறுவதற்கு ஒரு நாள் முன்னர் நடந்த சம்பவம் இது:

''... ஆச்ரம ஸ்வீகாரத்திற்கு முந்திய இரவும் இப்படி மற்றொரு நிகழ்ச்சி நடந்தது. இரவு வெகு நேரம் ஆகியும் ஒருவரும் தூங்கவில்லை. ஸ்வாமிகளாகப் போகும் ஸ்ரீனிவாஸன் தங்கியிருக்கும் அறையிலேயே எல்லோரும் கூடியிருந்தார்கள். அப்போது ஸ்ரீமடம் ஸர்வாதிகாரி

ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் அங்கு வந்து, ‘‘சிஷ்ய ஸ்வாமிகளின் அறையில் இருப்பவர்கள் எல்லோரும் தயவு செய்து வெளியே வரவேண்டும். அவருக்கு முக்யமான வேலைகள் இருக்கின்றன. அதிகாலையில் அவர் எழுந்திருக்க வேண்டும்’’ என்றார். ஒரு வார்த்தை மட்டும் சேர்த்தார். ‘நெருங்கிய உறவினர்கள் மாத்திரம் வேண்டுமென்றால் இன்னும் ஐந்து அல்லது பத்து நிமிஷம் தங்கியிருக்கலாம்’ என்றார். ... எல்லோரும் அறையை விட்டு வெளியே வந்துவிட்டார்கள். ஐந்து ஆறு பேர்கள் மட்டும் உள்ளேயே உட்கார்ந்து இருந்தார்கள். ஏனெனில், ‘நெருங்கிய உறவினர்கள்’ என்ற கோஷ்டியில் அவர்கள் சேர்ந்து இருந்தார்கள். ... (அதில் ஒரு) உறவினர், ஸ்ரீனிவாஸா, நாளை முதல் இந்த மாதிரி ஸஹஜமாக உன்னிடம் பேச முடியாது. ஆகையால், என்னிடமும் இங்கு இருக்கும் உன் நெருங்கிய உறவினர்களிடமும் இதுவரை இருந்தது போல் ப்ரியமாகவே இருக்க வேண்டும்’’ என்றார்... நிதானமாகவும் தீர்மானமாகவும் (ஸ்ரீனிவாஸரின்) பதில் வெளிவந்தது: ‘உங்களைப் போல் பெரியவர்கள் இம்மாதிரி பேசுவது சரியல்ல’...’’[3]

*மறு நாள் துறவறம் பூணப்போகிறவர், சுற்றத்தவர்க்கும் மற்றவர்க்கும் வேறுபாடு காண்பது சரியல்ல, அது தவறு என்பதை நன்கு அறிந்திருந்தார். அது மட்டுமன்றி, இதில் நாம் இன்னொரு விஷயத்-தையும் காணலாம். ஸந்யாஸ ஸ்வீகாரம் செய்யவுள்ளவர், பின்னாளில் ஒரு உயர்ந்த பீடத்தின் அதிபதியாகப் போகிறவர். ஒரு பெரிய நிறுவ-னத்தின் தலைவர் தம் உறவினர் என்பதற்காகச் சிலருக்குச் சலுகைகள் வழங்குவது அந்நிறுவனத்தின் செயல்பாட்டிற்கு ஊறே விளைவிக்கும். இவ்வுண்மையை ஆசார்யாள் அச்சிறு வயதிலேயே அறிந்திருந்தார் என்பதையும் இந்நிகழ்வு காட்டுகிறது. பிற்காலத்தில் ஆசார்யாள் பீடாதி-பதியாக இருந்த போது இந்த விஷயத்தில் அவருடைய நிலைப்பாடு எப்படி இருந்தது என்பதை இரு நிகழ்வுகளின் வாயிலாகப் பார்ப்போம்:*

‘‘... ஒரு சமயம், மடத்திலிருந்து ஏதோ ஒரு சலுகையைப் பெற விரும்பிய ஒருவர் ஆசார்யாளின் இளைய சகோதரர் ராமநாத சாஸ்திரியை அணுகித், தமக்குச் சாதகமாக ஆசார்யாளிடம் பரிந்துரை

---

[3] ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த விஜயம், அகிலபாரத சங்கர ஸேவா ஸமிதி வெளியீடு, 1975; ப. 56-57; ஸ்ரீனிவாஸர் என்பது ஆசார்யாளின் பெற்றோர் அவருக்கு இட்ட பெயர்.

செய்யுமாறு வேண்டினார். இந்த விஷயத்தில் ஆசார்யாளின் நிலைப்பாட்டை நன்கு அறிந்திருந்த ராமநாத சாஸ்திரி வந்தவரிடம், ‘என்னிடமிருந்து பரிந்துரை பெறுவதினால் உங்களுக்கு எதுவும் ஆகப் போவதில்லை. வேண்டுமானால், ஆசார்யாளை நீங்கள் இது விஷயமாகப் பார்க்கச் செல்லும் போது நான் உடன்வருகிறேன். உங்களுக்கு அதிர்ஷ்டம் இருந்தால், ஆசார்யாள் நீங்கள் விரும்புவதைச் செய்வார்; இல்லையாயின், அது நடக்காது’ என்று கூறினார் ...’’

‘‘... ராமநாத சாஸ்திரிகளுக்கு ஒரு சமயம் பணக் கஷ்டம் ஏற்பட்டது. அப்போது, ஆசார்யாளின் பால்ய நண்பர் நாகேஸ்வர சாஸ்திரி ஆசார்யாளை அணுகி, ராமநாத சாஸ்திரிகளுக்கு விசேஷமாக உதவுமாறு வேண்டினார். அதற்கு ஆசார்யாள், ‘இந்த மடத்தில் இருப்பது எதுவுமே என்னுடையதல்ல. அவை யாவும் சாரதாம்பாளுக்கே சொந்தம். ராமநாதன் எனது பூர்வாசிரமத் தம்பி என்பதற்காக நான் அவனுக்கு விசேஷமாக உதவ முடியாது. என்னால் செய்ய முடிந்தது பாரபட்சமின்றி இருப்பது மட்டுமே’ என்றார் ...’’ [4]

*சிறு வயதிலேயே ஆசார்யாள் தமது கனவில் கூட எந்தத் தவறும் நிகழக் கூடாது என்பதில் தீர்மானமாக இருந்தார். இந்த விஷயத்தில் அவருடைய மனம் அவ்வளவு உறுதியாக இருந்தது. அது தொடர்பான இன்னொரு நிகழ்வை இங்கே நினைவு கூர்வோம். ஆசார்யாள் ஸந்யாஸம் மேற்கொண்ட போது அவருக்குப் பதினான்கு வயது கூடப் பூர்த்தியாகவில்லை. ஸந்யாஸம் பெற்றுக் கொண்ட இரவிலிருந்து தொடங்கித் தொடர்ந்து ஏழு இரவுகளில் சிவ பெருமான் ஆசார்யாளின் கனவில் தோன்றி யோகத்தை உபதேசித்த விதத்தை ஆசார்யாள் விவரமாகக் கூறியுள்ளார்.[5] அதில், ஒரு விஷயத்தை மட்டும் இங்கே நாம் எடுத்துக் கொள்வோம்.*

‘‘**ஆசார்யாள்:** ஸந்யாஸம் தரப்பட்ட நாளன்று, இரவு படுக்கச் செல்லும் போது எனக்கு அசதியாக இருந்தது. வழக்கம் போல், கண்ணை மூடிய

[4] “The Multifaceted Jivanmukta” என்ற நூலிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது, ஸ்ரீ வித்யாதீர்த்த ஃபவுண்டேஷன், 2017 ப. 282-283.

[5] யோகமும் ஞானமும் ஜீவன்முக்தியும், ஸ்ரீ வித்யாதீர்த்த ஃபவுண்டேஷன் 2004, ப. 60-80

அடுத்த கணம், நான் தூங்கி விட்டேன். அந்த இரவில் எனக்கு வந்த கனவு எனக்கு இப்பொது கூடத் தெளிவாக ஞாபகத்தில் உள்ளது ...

**நான் :** கனவின் போது ஆசார்யாள் எந்த மாதிரி உடையில் இருந்தார்கள்?

**ஆசார்யாள் :** இப்போது நான் உடுத்திக் கொண்டிருப்பது போன்ற காவி நிற வேஷ்டியும், காவி நிற மேல் வஸ்திரமும் தான் அணிந்து கொண்டிருந்தேன். ... ஸந்யாஸம் பெற்றுக் கொள்வதற்கு இரு நாட்–களுக்கு முன்னதாக இம்மாதிரி எண்ணம் வந்தது: 'கனவுகள் எனது கட்டுப்பாட்டில் இல்லை. அவற்றில் ஏதேனும் தவறுகள் ஏற்பட்டாலும் அவை பாவத்தை ஏற்படுத்துவதில்லை. ஆனாலும், என் ஸந்யாஸம் எவ்வளவு சிரத்தையுடனும், உறுதியுடனும் இருக்க வேண்டுமென்றால், ஸந்யாஸத்திற்குப் பிறகு எந்த ஒரு கனவிலும் நான் என்னை இப்போதுள்ள வெள்ளை வஸ்திரம் அணிந்துகொண்டாற்போல் பார்க்கக் கூடாது. காயத்ரி மந்திரத்தை ஜபிப்பது எனக்கு மிகவும் விருப்பமானது. ஆனாலும், பரமஹம்ஸ ஸந்யாஸிகளுக்கு காயத்ரி ஜபம் தடை செய்யப்பட்டிருப்பதால், நான் கனவுகளின் போது கூட, நாளை மறு நாளிலிருந்து, காயத்ரி ஜபம் செய்வதில் ஈடுபடக் கூடாது' என்று எண்ணினேன். ஈச்வரனின் கிருபையால் இந்நாள் வரை நான் நினைத்தவாறே எனக்கு அமைந்திருக்கிறது. ..."[6]

*சாதாரணமாகப் பதினான்கு வயதுச் சிறுவர்களுக்கு, 'இது சரி, அது தவறு' என்பதிலோ, 'இது செய்யத் தக்கது, அதைச் செய்யலாகாது' என்பதிலோ மனவுறுதி இருக்காது. அவ்வந்த நேரத்தில் தம் மனதில் தோன்றியவற்றையே சிறுவர்கள் செய்வார்கள். ஆனால், ஆசார்யா-ளுக்கு, அந்தச் சிறு வயதிலேயே 'இது சரி, செய்யத் தகுந்தது; அது தவறு, செய்யக் கூடாது' என்று பாகுபடுத்தும் திறன் அமைந்திருந்தது. மேலே கூறியது போல், அந்த விவேகத்தை நனவு நிலையில் மட்டுமல்லாமல், கனவிலும் காட்டினார்.*

## விவேகம் – சாஸ்திரத்தில் சிரத்தை

*ஆசார்யாளின் வாழ்க்கை வரலாற்றைப் படித்தால், அவருக்குச் சிறு வயதிலேயே 'இது சரி, அது தவறு' என்ற விவேகம் எப்படி ஏற்பட்டது*

[6] மேலது ப. 60-61

*என்பதை ஊகிக்கலாம். எதைச் செய்யலாம், எதைச் செய்யக் கூடாது என்கிற விஷயத்தில் சாஸ்திரம் தான் நமக்குப் பிரமாணம் என்பதை ஆசார்யாள் தமது உபன்யாஸங்களில் அடிக்கடி கூறுவதுண்டு.*[7] *சாஸ்திரங்கள், மற்றும் அவற்றின் தாத்பர்யத்தின் விஷயத்தில் ஆசார்யாளுக்குச் சிறு வயதிலேயே மிகுந்த சிரத்தை இருந்ததாக அறிகிறோம்:*

‘‘**...** விளையாட்டு முடிந்த பின்பு சில சமயங்களில் பையன்கள் ஓர் இடத்தில் கூடி, பாயை விரித்து அதில் உட்கார்ந்துகொண்டு, ஒவ்வொருவரும் ஒரு கதை சொல்வதுண்டு**.** ஸ்ரீனிவாஸன் சொல்லும் கதைகள் எல்லாம் பாகவதம், மஹாபாரதம், நீதி சிந்தாமணி – இவை–களைத் தழுவியே இருக்கும்**.** ஸ்ரீனிவாஸன் சொன்ன ஜடபரதர், ப்ரஹ்லாதன், ஹரிச்சந்திரன் முதலிய கதைகளை வெகுநாள் அவரது நண்பர்கள் மறக்கவில்லை**. (**இப்போதும் தன் பால்ய ஸ்நேஹிதர்களில் யாரையாவது ஸ்ரீஸ்வாமிகள் சந்தித்தால், ‘அந்த ஸாயங்காலக் கதைகள் ஞாபகத்தில் இருக்கிறதா**?**’ என்று வேடிக்கையாகக் கேட்பது வழக்கம்**.)** கதை சொல்லி முடித்தவுடன் அதன் நீதியை ஒவ்வொருவரும் சொல்லவேண்டும் என்பது வழக்கம்**.**’’[8]

*இதிலிருந்து, சாஸ்திரத்தின் விஷயத்திலும் அவை கூறும் பொதுவான நீதிகளின் விஷயத்திலும் ஆசார்யாளுக்குச் சிறு வயதில் இருந்த இந்த சிரத்தையே அவருடைய விவேகத்துக்கு அடிப்படையாக அமைந்தது என்று கூறலாம். இதை உறுதி செய்யும் வேறொரு சம்பவம் ஒன்றையும் இங்கே கூறுவோம். ஒரு சமயம், ஸ்ரீனிவாஸருக்கும் இன்னொரு பையனுக்கும் ‘இறைவன் இருக்கிறானா இல்லையா’ என்கிற விஷயத்-தைப் பற்றி ஒரு விவாதம் நேர்ந்தது:*

‘‘**சிறுவன் :** கடவுள் இருக்கிறார் என்று நீ எப்படித் தெரிந்து கொள்வாய்**?** நீ கடவுளைக் கண்டிருக்கிறாயா**?** அல்லது, கடவுளைக் கண்டவர்–களையாவது நீ பார்த்திருக்கிறாயா**?**

**ஸ்ரீனிவாஸன் :** நீ கடவுள் இல்லை என்று சொல்ல முடியுமா**?** நீ பார்க்காவிடில் அது இல்லை என்று சொல்வதா**?** நீ பம்பாயைப்

---

[7] *பகவத் கீதை 16.24*

[8] *ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த விஜயம், ப. 44*

பார்த்திருக்கிறாயா**?** இல்லையே**!** அப்படியானால் பம்பாய் இல்லை என்று ஆகிவிடுமா**?**

**சிறுவன் :** நான் பம்பாயைப் பார்த்ததில்லை**.** ஆனால் பம்பாயைப் பார்த்த பலரை நான் பார்த்திருக்கிறேன்**.** அதனால் பம்பாய் உண்டு என்று நம்புகிறேன்**.**

**ஸ்ரீனிவாஸன் :** ரொம்ப சரி**.** அப்படியே தான் இங்கும்**.** நம் முன்னோர்கள், ரிஷிகள் ஆகியவர்கள் கடவுளைக் கண்டிருக்கிறார்கள்**.** அதை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்**.** அதை உறுதியாய்க் கொண்டு நாம் நம்புவதில் என்ன ஆக்ஷேபணை இருக்கிறது**?** அதைத் தள்ள முடியாதே, ஆகையால் கடவுள் உண்டு என்று தான் சொல்ல வேண்டும்**. ...**'' [9]

*இவ்வாறாகச் சிறு வயதிலேயே 'இது சரி, அது தவறு' என்பதை நிச்சயிப்பதில் ஸ்ரீனிவாஸருக்கு சாஸ்திரத்தின் விஷயத்தில் பிரமாண புத்தி இருந்தது என்று அறிகிறோம். பின்னாளில், இவர் ஆசார்யர் ஆன பின்பு, இதைப் பற்றி என்ன கூறுகிறார் என்பதைப் பார்ப்போம்:*

''**...** ஒரு வழக்கறிஞர் இப்படி வாதிட்டாராம்: 'மாண்புமிகு நீதிபதி அவர்களே**!** என் கட்சிக்காரரை நிரபராதியாகவே பார்க்க வேண்டும்**.** இவர் திருடியது என்னவோ உண்மை தான், ஆனால் அதற்கு ஒரு காரணம் இருக்கிறது**.** இவருடைய குடும்பம் வறுமையில் வாடுகிறது**.** திருடின பணத்தை வைத்துக் கொண்டு அவர் தனக்கு மட்டும் அல்லாமல் தன் சுற்றத்தினருக்கும் உதவி புரிந்தார்**.** மேலும் களவாடும் போது, எவருடைய உடைமைகளையும் நாசம் செய்யவில்லை**.** சொல்லப் போனால், வேறு சாவியைக் கொண்டு பூட்டைத் திறந்ததால், பூட்டைக் கூட உடைக்கவில்லை**.** களவாடப்பட்டவர் சேர்த்து வைத்துள்ள கறுப்பு பணத்தில் இவர் திருடியது ஒரு சிறு பகுதியே**.** இவருடைய செயலால் கறுப்பு பணமும் வெளியில் வந்தது; இது என் கட்சிக்காரர் அரசாங்–கத்துக்குச் செய்த சேவை என்று கருத வேண்டும்**.** மேலும், களவாடப்–பட்டவர் பெருஞ்செல்வந்தர்**.** என் கட்சிக்காரர் திருடியதோ கொஞ்சமே**.** இதனால், அப்பணக்காரரின் செல்வம் எவ்விதத்திலும் குறையாது**.**'

இந்த வாதத்திற்கு நீதிபதி எப்படி பதில் கூறியிருப்பார்**?** 'இந்நாட்டின்

[9] மேலது ப. 44-45

சட்டத்தை மீறும் வாதங்களை நான் கேட்க விரும்பவில்லை. இந்தியக் குற்றவியல் சட்டப்படி திருடுவது ஒரு குற்றம். உங்கள் கட்சிக்காரர் திருடியதை நீங்களே ஒப்புக்கொள்கிறீர்கள். எனவே, அவரைத் தண்–டிப்பது என் கடமை' என்றல்லவா கூறுவார்?

ஒரு செயல் குற்றமா இல்லையா என்பதை நிர்ணயிக்க நீதிபதிகள் குற்றவியல் சட்டத்தையே பிரமாணமாகக் கொள்கிறார்கள்; இந்தச் சட்டத்தை மீறும் முரண்புனைவான வாதங்களை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அதே போல், எது தர்மம், எது அதர்மம் என்பதைத் தீர்மானிக்க ஒருவன் வேதத்தையே பிரமாணமாகக் கொள்ள வேண்டும்; வேதத்திற்குப் புறம்பான வாதங்களை அல்ல ..." [10]

## விவேகத்தின் செயல்பாடு

*இங்கே, ஆசார்யாள் உதாரணமாகக் காட்டுவதை நன்கு கவனிக்க வேண்டும். மனம் போன போக்கில் செயல்படக் கூடாது, "சரி", "தவறு" என்று தீர்மானிக்கும் அதிகாரம் சாஸ்திரத்திற்கு மட்டுமே உண்டு. மேலும், உலகத்திற்கு (புலன்களுக்கு) அப்பாற்பட்ட விஷயத்தில் வேதமே பிரமாணம் என்பதற்கு உலக விஷயத்தில் மனிதரால் இயற்றப்பட்ட சட்டம் பிரமாணமாக இருக்க வேண்டும் என்பதையே ஆசார்யாள் உதாரணமாகக் காட்டினார். எனவே, உலகத்து விஷயங்-களில் சட்டத்திற்குப் புறம்பாக எதுவும் செய்யக் கூடாது என்பதை ஆசார்யாள் விவாதத்திற்கு அப்பாற்பட்டதாகவே கருதினார். இதை அவர் தமது செயலிலும் காட்டினார். சிருங்கேரி சாரதா பீடாதிபதியாக இருந்த ஆசார்யாள், அப்பீடத்தின் மேன்மைக்காகப் பலவற்றைச் செய்தார். ஆனால், மடத்தின் அபிவிருத்திக்காகச் செய்யப்படும் எதுவும் சட்டத்திற்குப் புறம்பாக இருக்கக் கூடாது என்று தீவிரமாக நம்பினார். அப்படியே, செய்யத் தகாததைத் தவிர்த்தும் செய்யத்தக்கது மட்டுமே செய்தார் என்று மடத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி திரு.கிரிதர சாஸ்திரி கூறுகிறார்:*

"... ஒருவர் தமக்கு உரிமையான ஒரு நிலப்பகுதியை மடத்திற்கு நன்கொடையாகக் கொடுத்தார். காலப்போக்கில் அவர் கொடுத்த

---

[10] "The Multifaceted Jivanmukta" என்ற நூலிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது; ப. 476

நிலத்தை ஒட்டியுள்ள பகுதிகளும் மடத்தின் நிர்வாகத்தின் கீழ் வந்துவிட்டன. இவ்வாறு இருக்கும் போது, நிலத்தை மடத்திற்குக் கொடுத்தவரின் வாரிசு, கொடையாகக் கொடுக்கப்படாத பகுதியை மீட்க விரும்பினார். அக்காலத்தில் மடத்தின் நிர்வாக அதிகாரியாக இருந்தவர் இதற்கு உடன்படவில்லை. எனவே இந்த விஷயம் நீதி மன்றத்திற்குச் சென்றது. சர்ச்சைக்கு உரிய நிலம் பல நாள் மடத்தின் நிர்வாகத்தின் கீழ் இருந்ததால், வழக்கில் மடமே வெல்லும் என்பதே சட்ட வல்லுனர்களின் கருத்தாக இருந்தது. இச்சமயத்தில், வழக்கு தொடர்ந்தவர் ஆசார்யாளுக்கு ஒரு கடிதம் எழுதி ஆசார்யாளை இந்த விஷயத்தில் நேரடியாக இடையிடுமாறு வேண்டிக்கொண்டார். விஷயத்தை ஆராய்ந்த ஆசார்யாள், மடத்து அதிகாரியிடம், ‘வழக்கைத் திரும்பப் பெறுங்கள். மடத்திற்குக் கொடுக்கப்படாத நிலப்பகுதியை அவருக்குத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள்’ என்று கட்டளையிட்டார். இந்த வழக்கிற்காக மடம் ஏற்கனவே ஆயிரக்கணக்கில் பணம் செலவழித்திருந்தது; தீர்ப்பும் மடத்திற்குச் சாதகமாக வரும் சாத்தியக்கூறே அதிகம் போன்றவையெல்லாம் ஆசார்யாளின் முடிவை மாற்ற இயலவில்லை. இதற்கிடையில், வழக்கு தொடர்ந்தவர் தாம் மடத்திற்கு ரூ.12,000 கொடுத்து, இந்த விஷயத்தைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளத் தயாராக இருந்தார். மடத்தின் சார்பாக ஆஜரான வழக்கறிஞரும் இதற்கு உடன்பட்டார். ஆசார்யாளோ மடம் அந்நபரிடமிருந்து ஒரு பைசா கூட வாங்கக் கூடாது என்றும், சர்ச்சைக்குரிய நிலப்பகுதி அவருக்குத் திருப்பித் தரப்பட வேண்டும் என்றும் கட்டளையிட்டார். மடத்தின் அதிகாரிகளும் அவ்வாறே செய்தனர் ...’’

“... பெங்களூரில் ஒரு சமயம் நீதிமன்ற வழக்கு ஒன்றில் மடத்தின் சார்பாக அதிகாரிகள் ஆஜராக வேண்டியிருந்தது. மடத்தின் தலைமை அதிகாரி இதைப் பற்றி ஆசார்யாளிடம் கூறும் போது, நிகழ்பாட்டை மடத்திற்குச் சாதகமாக நீதிமன்றத்தில் எடுத்துரைத்தால் மடத்திற்கு ஆதாயமாக இருக்கும் என்றார். ஆசார்யாள் அவரிடம், “நீதிமன்றத்தில் இன்று சொல்வதை நாளை நாம் செய்ய முடியுமா’’ என்று வினவினார். அதிகாரி, ‘இல்லை. இப்படி நாம் சொல்வதைச் செயல்படுத்துவது சிரமமே’ என்று உண்மையை ஒப்புக்கொண்டார். ஆசார்யாள் உடனே, ‘அப்படியானால், விஷயத்தை இந்த மாதிரி நீதிமன்றத்தில்

உரைக்காமல், உள்ளதை உள்ளவாறே கூறுங்கள்' என்றார் ...''[11]

*சில சமயங்களில், நாம் ''இதுவே சரியான நிலைப்பாடு'' என்று தீர்மானமாக இருக்கும் விஷயங்கள் அவ்வாறு நடப்பதில்லை. சாதாரணமாக, நாம் இது போன்ற சமயங்களில் மிரட்டல், போராட்டம் போன்ற எதிர்நிலைப்பாடுகளை நாடுகிறோம். இவை வெறுப்பை அடிப்படையாகக் கொண்டவை. ஆசார்யாள் இவ்வழிமுறைகளை என்றும் ஆதரித்ததில்லை. ஏனென்றால், அப்படிச் செய்யும் போது நாம் விரைவிலேயே சட்டத்திற்குப் புறம்பான நிலையை மேற்கொள்ளத் தள்ளப்படுகிறோம். எனவே, ''இது சரி'', ''அது தவறு'' என்ற பாகுபாடு நாம் அடைய விரும்பும் விஷயத்தில் மட்டுமல்லாமல் அதற்காக நாம் மேற்கொள்ளும் வழிமுறையிலும் இருக்க வேண்டும் என்பதை ஆசார்யாள் உறுதியாகக் கடைபிடித்தார். இதனாலேயே ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், தாம் புனைந்த நாமாவளியில் ஆசார்யாளை* ''धर्माधर्मविभागज्ञः'' *(எது தர்மம், எது அதர்மம் என்ற வேறுபாட்டை அறிந்தவர்) என்பதோடு நிற்காமல் அவரை* ''न्यायमार्गानुसारी'' *(நியாய வழியில் நடப்பவர்) என்றும் துதிக்கிறார். இது குறித்து இங்கே மேலும் ஒரு சம்பவத்தைக் கூறி இப்பகுதியை நிறைவு செய்வோம்:*

''... 1976ம் ஆண்டு, (ஆசார்யாள் சென்னையில் முகாமிட்டிருந்த போது) தில்லியிலிருந்து வந்திருந்த சிஷ்யர் ஒருவர், ஆசார்யாள் தில்லியில் முகாமிடும் போது கோ ஸம்ரக்ஷண ஆதரவுப் போராட்டம் ஒன்று பெரிய அளவில் நடக்கவுள்ளது, அது தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பப்படும், அதில் ஆசார்யாள் கலந்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினார். அதற்க்கு, ஆசார்யாள் தம் குரலை உயர்த்தி, 'கோ ஸம்ரக்ஷண ஆதரவுப் போராட்டத்தில் கலந்து கொள்வதோ, தொலைக்காட்சியில் வருவதோ எனக்கு ஒவ்வாதவை. ஆனால், எனக்கு கோ ஸம்ரக்ஷண—ர்த்தில் மிகுந்த ஈடுபாடு உண்டு. சிருங்கேரியில் நாங்கள் பல பசுக்களைப் பாதுகாத்து வருகிறோம். யார் சிருங்கேரிக்கு வந்தாலும் இதைப் பார்க்கலாம்' என்றார் ...''[12]

## விவேகம் - வேதாந்த சாஸ்திரத்தின்படி விளக்கம்

*இது வரை, ''விவேகம்'' என்ற சொல்லிற்கு ''எது சரி, எது தவறு'', ''எது*

---

[11] மேலது ப. 275-276

[12] மேலது ப. 296

செய்யத் தகுந்தது, எது செய்யத் தகாதது'' என்று பொருள் கொண்டு இக்குணம் ஆசார்யாளிடம் எப்படி சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு வெளிவந்தது என்பதை அவரது வாழ்வில் நடந்த சில சம்பவங்களின் வாயிலாகக் கூறினோம். இனி, ''விவேகம்'' என்ற சொல்லிற்கு வேதாந்த சாஸ்திரம் கூறும் பொருளைப் பார்ப்போம்.

வேதாந்த சாஸ்திரத்தில் ''விவேகம்'' என்ற சொல்லிற்குக் குறிப்பான பொருள் உண்டு. நித்யத்திற்கும் அநித்யத்திற்கும் உள்ள வேறுபாடே ''விவேகம்'' என்று வேதாந்தம் கூறுகிறது. ''நித்யம்'' என்பதற்கு எப்பொழுதும் உள்ளது'' என்று பொருள்; அதற்கு மாறாக ''அநித்யம்'' என்பது அழியக்கூடியதைக் குறிக்கிறது. இதுவரை ''விவேகம்'' என்றால் ''இது சரி'', ''அது தவறு'' என்ற பாகுபாடு என்று கூறினோம். ஆனால் வேதாந்த சாஸ்திரமோ ''இது நித்யம்'', ''அது அநித்யம்'' என்ற பாகுபாட்டை ''விவேகம்'' என்று கூறுகிறது. இந்த இரு விளக்கங்களுக்கும் இடையே உள்ள தொடர்பு என்ன என்ற கேள்வி எழலாம். இந்த கேள்விக்கு விடை சங்கர பகவத்பாதரால் இயற்றப்பட்ட ''விவேக சூடாமணி'' என்ற நூலில் உள்ளது:[13]

ब्रह्म सत्यं जगन्मिथ्येत्येवंरूपो विनिश्चयः ।
सोऽयं नित्यानित्यवस्तुविवेकः समुदाहृतः ॥

('பிரம்மம் ஸத்யம், ஜகத் (உலகம்) தவறான தோற்றமே' என்ற உறுதிப்பாடு 'நித்ய-அநித்ய வஸ்து விவேகம்' - நித்யமான வஸ்துவையும் அநித்யத்தையும் பகுத்தறிதல்- என்று கூறப்படுகிறது.)

இந்நூலிற்கு உரை எழுதிய ஜகத்குரு ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்,

''பிரம்மம் ஸத்யம், ஜகத் தவறான தோற்றம் (மித்யை) என்ற அறிவே நித்ய—அநித்ய வஸ்து விவேகம் என்று பகவத்பாதர் பொருள் கூறுகிறார். ஏனென்றால், ஒருவனுக்கு பிரம்மம் நித்யம், ஜகத் (உலகம்) அநித்யம் என்ற திடமான அறிவு இருந்தாலும் பரிபூரணமான வைராக்யம் ஏற்படுவதில்லை; (அவன்) தாற்காலிகமான சுகங்களை நாடுகிறான். உலகத்தை மித்யை (தவறான தோற்றம்) என்று

[13] விவேக சூடாமணி சுலோகம். 20

வலியுறுத்திக் கூறுவதன் காரணம், தவறான தோற்றத்தை ஒருவரும் நாடுவதில்லை என்பதே. ராஜ்யத்தை விரும்பும் எவரும் கனவில் தோன்றும் ராஜ்யத்தினால் திருப்தி அடைவதில்லை ...''

*என்று இந்த சுலோகத்தின் பொருளை விளக்குகிறார். எனவே, தவறான தோற்றமான உலகத்தையும் அதில் உள்ள தாற்காலிகமான இன்பங்-களையும், உண்மையானதும் நித்யமானதுமான பரம்பொருளையும் பகுத்தறிவதே விவேகம் எனப்படும். இப்படிப்பட்ட விவேகம் ஆசார்யாளிடம் சிறு வயதிலேயே அமைந்திருந்தது என்பது தெரிய வருகிறது:*

''... ராமா சாஸ்திரிகளின் வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள தெருவிலோ, அல்லது 'சிக்கலால்பாக்' என்ற முனிஸிபல் உல்லாச இடத்திலோ, மூன்று தெருக்களின் குழந்தைகளும் ஸாதாரணமாக விளையாடுவது வழக்கம். விளையாட்டு முடிந்ததும், குழந்தைகள் ஓரிடத்தில் உட்கார்ந்துகொண்டு பேசுவது வழக்கம். அப்போது ஸ்ரீனிவாஸர் தன் மனதில் ஆழப்பதிந்திருந்த எண்ணமான 'நான் ஸந்யாஸியாகப் போகிறேன்' என்பதை வெளியிட்டார். இது விளையாட்டு என்று மற்ற பையன்கள் எண்ணினார்கள். ... அவர்களில் சிலர், 'ஸந்யாஸியாக ஆவதனால் என்ன ப்ரயோஜனம் உண்டு! மஹாராஜாவாக ஆனாலும் மேன்மை உண்டு' என்றனர். அதற்கு ஸ்ரீனிவாஸர், 'அப்படி எண்ண வேண்டாம்; மஹாராஜாவாக ஆவதனால் சாச்வத ப்ரயோஜனம் என்ன ஏற்படும்? அரசன், அரசாங்கத்தின் தலைமையில் இருக்கும் வரை தான் ஸுகத்தை அனுபவிக்க முடியும். இதற்கு முடிவு உண்டு. ஆனால் ஸந்யாஸியானால் முடிவில்லாமல் த்யானம் செய்து கொன்டு இருக்கலாம். கவலையே இருக்காது. ஈச்வரனைக் காணும் வரை தடையின்றி த்யானம் செய்ய ஸந்தர்ப்பம் கிடைக்கும். நான் என்றைக்கும் காப்பாற்றப்பட்டவனாவேன்' என்றார். இதுமுதல் ப்ரதி தினமும் இந்த விஷயமே சிறுவர்களின் பேச்சுக்குத் தலைப்பு விஷயமாக ஆகிவிட்டது. ஸ்ரீனிவாஸரின் எண்ணத்தில், 'மனிதனுக்கு அதிக ஆசை கூடாது' என்பதும், 'தன்னுடையதல்லாததில் விருப்பம் கொள்வது தவறு' என்பதும் தான் மேலோங்கி இருந்தது ...'' [14]

[14] *ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த விஜயம்*, ப. 41-42,

*மேலே நாம் கூறிய சுலோகத்தின் (விவேக சூடாமணி சு. 20) பொருளை நன்கு சிந்தித்தால், நித்ய-அநித்ய வஸ்து விவேகத்துக்கும் புலனடக்க-த்திற்கும் உள்ள தொடர்பு விளங்குகிறது. புலன் நுகர்ச்சியால் கிடைக்கும் இன்பம் நிலைத்து நிற்பதில்லை; மனிதனுக்கு ஒரு சமயத்தில் இன்பம் விளைவிக்கும் பொருளை வேறொரு சமயம் அதே மனிதன் வெறுக்கிறான். இன்னமும் சொல்லப் போனால், உலகம் என்ற தவறான அடிப்படையைக் கொண்டு நுகரப்படும் இன்பம், உண்மையில் துன்பத்தையே விளைவிக்கிறது என்றும் தீர்மானம் செய்யலாம். எனவே தான், பகவத்பாதர் தாம் எழுதிய பகவத் கீதா பாஷ்யத்தில் புலனடக்கம் உள்ளவனை "விவேகி" என்றும் அது இல்லாதவனைப் பசு போன்ற பிராணிகளுக்குச் சமமானவன் என்றும் கூறுகிறார்:*

ये हि संस्पर्शजा भोगा दुःखयोनय एव ते ।
आद्यन्तवन्तः कौन्तेय न तेषु रमते बुधः ॥[15]

(புலன்களுக்கு விஷயமாகும்) பொருட்களை நுகர்வதால் பிறக்கும் இன்பம் உண்மையில் துன்பமே. குந்தியின் மைந்தனே! அவற்றுக்குத் துவக்கமும் முடிவும் உண்டு. விவேகம் உள்ளவன் இவற்றில் இன்பம் துய்க்க மாட்டான்.

பகவத்பாதரின் பாஷ்யம்: புலன்களுக்கும் அவற்றுக்கு விஷயமாகும் பொருட்களுக்கும் உள்ள தொடர்பினால் பிறக்கும் இன்பங்கள், அவித்யையினால் ஏற்படுவதால், துன்பத்தையே விளைவிக்கின்றன ... இந்த ஸம்ஸாரத்தில் (பிறப்பு—இறப்பு சுழற்சியில்) உண்மையான இன்பம் ஒரு துளியும் கிடையாது என்பதை அறிந்து, ஒருவன் புலன்களைக் கானல் நீரான பொருட்களிலிருந்து விலக்க வேண்டும்.[16] (இவ்வின்—பங்கள்) துன்பத்தை விளைவிக்கின்றன; தவிரவும், அவற்றுக்குத் துவக்கமும் முடிவும் உண்டு. புலன்களுக்கும் பொருட்களுக்கும் இடையே ஏற்படும் தொடர்பு 'துவக்கம்'. அத்தொடர்பின் நீக்கமே

[15] ஸ்ரீமத் பகவத் கீதை 5.22; இச்சுலோகத்திற்கு ஸ்ரீ மதுஸூதன ஸரஸ்வதி மிகவும் விரிவான உரை எழுதியுள்ளார். அவருடைய உரை, "விவேகமுள்ளவனுக்குப் புலன் நுகர்ச்சி எல்லாம் துன்பமே" என்ற பொருளில் வரும் யோக சூத்திரம் (யோக சூத்திரம் 2.15) ஒன்றை அடிப்படையாகக் கொண்டது.

[16] உலகம் தவறான தோற்றமாதலால் "கானல் நீர்" என்றார்.

'முடிவு'. எனவே, அவை அநித்யமானவை ... குந்தியின் மைந்தனே! விவேகம் உள்ளவன் – பரம்பொருளின் தத்துவத்தை அறிந்தவன் – இந்த இன்பங்களைத் துய்க்க மாட்டான். (உலகில்) கடைந்தெடுத்த மூடர்களே பசு முதலான பிராணிகளைப் போல் இவ்வின்பங்களைத் துய்ப்பது காணப்படுகிறது.

*இப்படிப்பட்ட புலனடக்கம் ஆசார்யாளுக்குச் சிறு வயதிலேயே அமைந்திருந்தது. ஆசார்யாள் சிருங்கேரியில் மாணவராகச் சேர்ந்த போது அவருக்கு வயது பதின்மூன்று. அவருக்குக் கல்விப் பயிற்சி சிருங்கேரியில் உள்ள நரசிம்ம வனத்தில் நடைபெற்றது. அப்போது அவருடைய சமவயதில் உள்ள மாணவர்கள் சிலரும் அவருடன் கல்வி பயின்றனர். ஆசார்யாளின் விவேகமும் புலனடக்கமும் எம்மாதிரி இருக்கிறது என்பதை ஜகத்குரு ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹா-ஸ்வாமிகள் அவ்வப்போது சோதிப்பார்கள் என்று அச்சமயம் அம்மாணவர்களுக்குக் கல்வி கற்பித்த ஸ்ரீ வைத்யநாத சாஸ்திரிகள் (ஸ்ரீ பாஷ்ய ஸ்வாமிகள்) கூறுகிறார்:*

"... சில சமயத்தில் ஸந்நிதானம் (ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்) பையன்களிடம் குசலப் ப்ரச்னம் பண்ணுவார்கள். ஸாதாரணமாகக் கேட்பது போல், 'இன்று சமையலெல்லாம் நன்றா–யிருந்ததா? என்ன சமையல் செய்திருந்தார்கள்? வாய்க்கு ருசியாக இருந்ததா? உப்பு ஜாஸ்தியா? உறைப்பு ஜாஸ்தியா?' என்றெல்லாம் பாமர ஜனங்கள் கேட்பது போல் கேட்டு விடை தெரிந்து கொள்வார்கள். அவரது அந்தரங்க நோக்கம் இன்னது என்று தெரியாத வெகுளிகளான மற்ற பையன்களெல்லாம் வாயில் வந்ததை உளறிவிடுவார்கள். ஸ்ரீனிவாஸன் மட்டும் பேசாமல் இருப்பான். 'சாப்பாட்டு விசாரத்தைப் பற்றிக் கேட்டால் நீங்கள் எல்லோரும் நன்றாகப் பதில் அளிக்கிறிர்களே. ஸ்ரீனிவாஸன் ஏன் வாயைத் திறக்கவே இல்லை?' என்று கேட்பார்கள். ஸ்ரீனிவாஸனோ, 'எல்லாம் குருப்ரஸாதம் தான். குருப்ரஸாதம் எப்போதுமே நன்றாகத் தான் இருக்கும்' என்று பதிலளிப்பான். ... 14 வயதுச் சிறுவனுடைய விவேகமும் வைராக்கியமும் இவ்விதம் எல்லோரும் பார்த்து அதிசயிக்கும்படி அஸாதரணமாகவே அமைந்–திருந்ததை இதனால் வாசகர்கள் தெரிந்துகொள்வார்கள் என்பதில்

ஸந்தேஹம் இல்லை...'' [17]

*ஆசார்யாள் துறவறம் மேற்கொண்ட பின், புலனடக்கமும் வைராக்கியமும் அவரிடத்தில் எப்படி பரிமளித்தன என்பதை இக்கட்டுரையில் பின்னர் பார்ப்போம். மேலே கூறியதன் தொடர்ச்சியாக, ஒரு நிகழ்வை மட்டும் இப்பொழுது கூறுவோம்:*

''... ஆசார்யாள் தாம் உண்ணும் போது, உணவாகப் பரிமாறப்பட்ட எல்லாவற்றையும் கலந்து ஒன்றாக உண்ணுவார். நாச்சுவைக்கு அடிமையாகக் கூடாது என்பதற்காக அவர் இப்படி உண்ணுவது வழக்கம். ஒரு சமயம் அவருடைய குரு இதைக் கவனித்து அவ்வாறு செய்ய வேண்டிய அவசியமில்லை என்றும் எல்லோரும் உண்ணுவதைப் போலவே ஆசார்யாளும் உண்ணலாம் என்றும் கட்டளையிட்டார் ...'' [18]

*'பிரம்மம் ஸத்யம், ஜகத் (உலகம்) தவறான தோற்றமே' என்ற உறுதிப்பாடே விவேகம் என்பதைப் பார்த்தோம். பரம்பொருளை அறிய விரும்புவன் இப்படிப்பட்ட விவேகத்தை மனதில் வளர்க்க வேண்டும். ஆனால் ஆசார்யாளுக்கோ சிறு வயதிலேயே மனதில் ''பிரபஞ்சம் அஸத்யம்'' என்ற உண்மை மிக உறுதியாக இருந்தது. அதைக் காட்டும் நிகழ்வு ஒன்றைக் கூறுவோம்.*

*துறவறம் பெறும் சமயத்தில் அவர் ஒரு சிறு பையனாக இருந்ததால் ஆசார்யாளின் இளைய தோற்றத்தைக் கண்டு சில அறிவீனர்கள் அவருடைய மதிநுட்பத்தை உணரவில்லை போலும். சிஷ்ய ஸ்வீகார நிகழ்ச்சி முடிந்த சில நேரத்தில் ஒருவர் ஆசார்யாளை அணுகி, 'ஆசார்யாள் இப்பொழுது தன்னுடைய மோக்ஷத்தை நிச்சயித்துவிட்டார். ஆனால் உலகில் உள்ள மற்றோருக்கு என்ன ஆவது?' என்று கேட்டார். ஆசார்யாள் ஒரு கணமும் தாமதிக்காமல் பதிலுக்கு, 'ஓஹோ! உண்மை அல்லாத உலகிற்கு உண்மை அல்லாத மோக்ஷத்தைத் தேடுகிறீர் போலும்' என்றாராம்.''*

---

[17] ஸ்ரீ குருகிருபா விலாஸம், ஸ்ரீ சந்த்ரசேகர பாரதீ ப்ரஹ்ம வித்யா டிரஸ்ட், சென்னை, 2011; முதல் பாகம், ப. 40

[18] "The Multifaceted Jivanmukta" என்ற நூலிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது; ப. 182

*இனி, விவேகம் பற்றி ஆசார்யாள் தமது அருளுரை ஒன்றில் கொடுத்த விளக்கத்தைப் பார்ப்போம்:*

"... முதலில் விவேகம் என்றால் என்ன என்று பார்ப்போம். நாம் சுகம் துக்கம் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். சாச்வதமான வஸ்து எது, அசாச்வதமான வஸ்து எது என்ற விசாரம் செய்யும் போது தர்க்க சாஸ்திரத்தில் சொல்லப்படுவது போல் 'ஆகாசம் நித்யம்; பிருத்வீ (பூமி) போன்றவை அநித்யம்' என்ற விசாரம் நாம் செய்ய வேண்டியதில்லை. 'என்னுடைய ஸ்வரூபத்தைப் பற்றி ஆராய முனைந்தேனா?' என்ற விசாரத்தை நாம் செய்ய வேண்டும். ஆத்மா என்பது தான் நித்யமான வஸ்து. ஆத்மா நிலையானது என்பது சாஸ்திரங்களில் சிறந்த யுக்திகளினால் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால் பிரபஞ்சம் நிலையற்ற ஒன்று. பிரபஞ்சத்தில் தற்போது நாம் பார்க்கும் உருவம் இன்னும் சிறிது நேரத்தில் மறைந்து விடலாம். மேகம் எப்படி தன்னுடைய ரூபத்தை மாற்றிக் கொண்டிருக்குமோ அதே மாதிரி பிரபஞ்சமும் மாறிக் கொண்டிருக்கும். என்றாவது ஒரு நாள் பிரபஞ்சம் முழுவதும் இல்லாமல் போய் விடலாம். மற்றவர்கள் பிரபஞ்சம் இருக்கிறது என்று தெரிந்து கொண்டாலும் கூட ஒரு ஞானியின் பார்வையில் பிரபஞ்சம் இல்லை என்று தான் தீர்மானம். அதனால் நித்யமாயிருக்கப்பட்ட பொருள் ஒன்று உண்டு என்று நமக்குத் தெரிந்ததேயானால் அப்பொழுது நாம் உலகத்தில், அது வேண்டும்; 'இது வேண்டாம்' என்ற விருப்பு வெறுப்புகளை விட்டுவிட்டு அந்த நித்யமான பொருளை அடைவதற்காக முயற்சி செய்ய முடியும். அவ்வாறில்லாமல் இருந்தால், நாம் இந்த அநித்யமான பொருள்களிலேயே மூழ்கி நித்யமான பொருளை மறந்து விடுவோம். ..." [19]

## பிரம்ம ஞானமே முழுமையான விவேகம்

*பரம்பொருளை நாடுபவன் புலன்களைக் கட்டுபடுத்தித் தன் மனதில் வளர்க்கும் நித்ய-அநித்ய வஸ்து விவேகம் எப்பொழுது உறுதியுறுகிறதோ, அப்பொழுது அவன் ஆத்மாவை அறிகிறான். இதை பகவத்பாதர் என்று கூறுகிறார்.[20];*

---

[19] *முத்தி நெறி, ஶ்ரீ வித்யாதீர்த்த ஃபவுண்டேஷன்* 2001; ப. 223

[20] விவேக சூடாமணி சுலோகம் 162

देहोऽहमित्येव जडस्य बुद्धिर्देहे च जीवे विदुषस्त्वहंधीः ।
विवेकविज्ञानवतो महात्मनो ब्रह्माहमित्येव मतिः सदात्मनः ॥

*('இந்த உடலே நான்' என்று முட்டாள் எண்ணுகிறான். சாஸ்திரத்தைக் கற்றவனுக்கு உடலிலும் ஜீவனிலும் 'நான்' என்கிற புத்தி இருக்கிறது. விவேகத்தினால் விளையும் ஆத்ம ஞானத்தை அடைந்த மஹாத்-மாவுக்கு எப்பொழுதும் 'நான் பிரம்மம்' என்று அறிவே இருக்கிறது.)*

*இந்த சுலோகத்தில் உள்ள "*विवेकविज्ञानवतः*" என்ற சொற்றொடருக்கு ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்,*

"... ஆத்மாவிற்கும் ஆத்மா அல்லாததற்கும் உள்ள வேற்றுமையைப் பகுத்தறிந்தவனுக்கு; எந்த ஞானம் ஆத்மா அல்லாததை ஆத்மா–விலிருந்து முழுமையாக அகற்றுவதால் விளைகிறதோ, அந்த ஞானத்தை நேரடியாக உணர்ந்தவனுக்கு ..."

*என்று உரையெழுதுகிறார்.*

*மேலே கூறிய சுலோகத்திற்கு ஆசார்யாள் தமது அருளுரை ஒன்றில் மிக விரிவாகப் பொருள் கூறியுள்ளார். அதிலிருந்து சில பகுதிகளைக் கீழே தருகிறோம்:*

"... நாமும் ஆத்மாவைப் பற்றித் தெரிந்து கொண்டிருக்கிறோம். எவ்வாறு தெரிந்து கொண்டிருக்கிறோம்? முட்டாளானவன் 'நான் உடல் தான்' என்று எண்ணுகிறான். சாஸ்திரம் கற்றவன் உடலிலும் ஜீவனிலும் சேர்த்து 'நான்' என்ற பாவனையைக் கொண்டுள்ளான் என்று விவேக சூடாமணியில் கூறப்பட்டுள்ளது. சிலர் 'தேஹமே நான்' என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். 'தேஹமே நான்' என்று நினைத்து விட்டால் நாம் செய்யும் ஸந்த்யாவந்தனம் போன்றவை எதற்காக? ஸந்த்யாவந்தனம், தேவ பூஜை இவையெல்லாம் இந்த தேஹம் இருக்கும் பொழுதே பலன்களைக் கொடுத்துவிடும் என்று கூறமுடியாது. அப்படி–யிருக்கையில் நாம் செய்யும் தேவ பூஜைக்கும் ஸந்த்யாவந்தனத்–திற்கும் என்ன பயன்? நாம் செய்யும் யக்ஞங்களுக்கெல்லாம் என்ன பயன்? ஆகவே 'தேஹமே நான்' என்று கூறிவிட்டால் இவைகளுக்–கெல்லாம் பயனே இல்லாமல் போய்விடும்.

சிலரோ இந்த உடலிலும் ஜீவனிலும் சேர்த்து 'நான்' என்ற பாவனையை

வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தர்க்க சாஸ்திரத்திலும் அறிவு இருக்கலாம். மீமாம்ஸா சாஸ்திரத்திலும் அறிவு இருக்கலாம். அவர்கள் இந்த தேஹத்திலும், சைதன்யத்திலும் சேர்த்து 'நான்' என்ற பாவனையை வைத்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள், தேஹத்துடன் சைதன்யம் கலந்து ஏதாவது வேலை செய்ய முடியுமே தவிர வெறும் தேஹம் ஏதாவது செய்ய முடியுமோ" அது ஒன்றும் வேலை செய்ய முடியாது. குணங்களும் உருவமுமற்ற சைதன்யம் தனியே ஏதாவது செய்ய முடியுமோ? மேலும் சைதன்யத்திற்கு எதுவும் செய்தாக வேண்டியதில்லை. இப்படியிருக்கும் பொழுது, பயன்களை எல்லாம் அனுபவிப்பது 'தேஹத்தில் அபிமானம் வைத்துள்ள சைதன்யமே ஆகும்' என்று கூறுவர். ...

விவேகத்தினால் ஏற்பட்ட அறிவுள்ள மஹாத்மாவானவர் தன்னை எப்போதுமே 'நான் பரம்பொருள்' என்று சிந்தித்துக் கொள்கிறார். ... முதலில் சொல்லப்பட்டது போல இந்த உடல் தான் 'நான்' என்றால் அதுவும் தவறான அறிவு. அவ்வாறில்லாமல், இந்த உடலும் சைதன்யமும் சேர்ந்தது தான் 'நான்' என்றால் அதுவும் முழுமையாகச் சரியானது அல்ல. சச்சிதானந்த ஸ்வரூபமானவனே நான் என்பதே சரியான அறிவு. ... ஆனால் விவேக விக்ஞானம் (பகுத்தறிவு) ஏற்பட்டுள்ள மனிதனுக்கு எவ்வாறு இருக்கும் என்றால், நிலையான ஆத்மாவினிடத்தில் 'நான் தான் பரம்பொருள்', அதாவது 'நான் பரம்பொருள்' என்று தன்னைப் பற்றியே எப்போதும் கருதுவது என்று கூறப்பட்டுள்ளது. ... [21]

*இதிலிருந்து, "விவேகி" என்ற சொல்லின் உயர்ந்த பொருள், "ஆத்மாவை அறிந்தவர்" என்று புரிகிறது. அதாவது, ஆத்ம ஞானம் பெற விரும்புவன் முதலில் "உலகம் அநித்யம்; ஆத்மாவாகிய பிரம்மம் மட்டுமே நித்யம்" என்ற உண்மையை முயற்சி செய்து மனதில் நிறுத்துகிறான். இதன் காரணமாக அவன் புலன்கள் அடங்கி, மனமும் ஆத்மாவை நோக்கி உள்வாங்குகிறது. "நான் ஆத்மா/பிரம்மம்" என்பதை அவன் தெளிவுற உணர்ந்த பின், எந்த விவேகத்தை அவன் மனதில் முன்னர் முயற்சியின் துணையுடன் நிறுத்தினானோ, அது*

---

[21] *முத்தி நெறி*, ப. 28-32

*முழுமை அடைந்து அவனுடைய இயல்பு ஆகிறது. இதை பகவத்பாதர், "முழுமையான விவேகம்" (***सम्यग्विवेकः***) என்று விவேக சூடாமணியில் குறிப்பிடுகிறார்:*[22]

**सम्यग्विवेकः स्फुटबोधजन्यो विभज्य दृग्दृश्यपदार्थतत्त्वम् ।**
**छिनत्ति मायाकृतमोहबन्धं यस्माद्विमुक्तस्य पुनर्न संसृतिः ॥**

*(தெளிவான ஞானத்தினின்று பிறக்கும் முழுமையான விவேகம் பார்ப்பவனுக்கும் (ஆத்மா) பார்க்கப் படுபவைக்கும் (ஆத்மா அல்லாதவை) உள்ள வேறுபாட்டை நன்கு பாகுபடுத்தி, மாயையினால் உண்டான மோஹம் எனும் பந்தத்தை அறுக்கிறது; இதனால் ஞானி பிறப்பிறப்புச் சுழற்சியிலிருந்து விடுபடுகிறான்.)*

*இதில் "***सम्यग्विवेकःस्फुटबोधजन्यः***" என்ற சொற்றொடரை ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் எப்படி விளக்கியுள்ளார் என்பதைப் பார்ப்போம்:*

"**...** தெளிவான – ஐயமற்ற, முரண்பாடில்லாத; ஞானம் – வேதம் மற்றும் குருவின் அருளினால் உதித்த மஹாவாக்கியப் பொருளின் அனுபவம்; அதனின்று பிறந்த முழுமையான விவேகம் – 'பிரம்மம் ஸத்யம்; பிரபஞ்சம் தவறான தோற்றம்' என்ற இயல்பை உடையது **...**"

*இங்கே ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் புனைந்த நாமாவளியை நினைவுக்குக் கொணர்வோம். அதில் ஒரு நாமாவில் அவர் ஆசார்-யாளை, "***महावाक्यविवेकज्ञः***" என்று போற்றுகிறார். மேலே நாம் பார்த்த உரையிலிருந்து இதற்கு "மஹாவாக்கியத்தின் பொருளின் அனுப-வத்தால் அமையும் முழுமையான விவேகத்தை அறிந்தவர்" என்ற சிறப்பான பொருள் தெரிகிறது. இப்படிப்பட்ட முழுமையான விவேக-முள்ள ஞானி எப்படி இருப்பார் என்பதை அறிவதற்கு ஆசார்யாளின் வாழ்க்கையே சிறந்த உதாரணமாக அமைகிறது. இது பற்றி இக்கட்டு-ரையில் எஞ்சியுள்ள பகுதிகளிலும், விசேஷமாக "மஹாப்ரக்ஞை" என்ற சொல்லிற்குப் பொருள் கூறும்பொழுதும் பேசவுள்ளோம்.*

---

[22] விவேக சூடாமணி சுலோகம் 346

# உ. பேரறிவு (மஹாப்ரக்ஞை)

*முந்தைய இயலில் "விவேகம்" என்ற சொல் ஆசார்யாளை எவ்வெந்த விதங்களில் குறிக்கிறது என்பதை ஆராய்ந்தோம். இனி இந்த இயலில், நாம் எடுத்துக் கொண்ட சுலோகத்தில் அடுத்து வரும் "மஹாப்ரக்ஞை" என்கிற சொல்லைப் பார்ப்போம். அதற்கு முன்னோடியாக சிருங்கேரிக் காட்சிகள் நான்கைக் கீழே பதிவு செய்வோம்:*

"... 1976ம் ஆண்டு மே மாதம், ஒரு நாள் பிற்பகல், ஸச்சிதானந்த விலாஸத்திலிருந்து ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் மற்றும் ஸ்ரீமத் ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ஹபாரதீ மஹாஸ்வாமிகளின் அதிஷ்டானங்களை நோக்கி நான் நடந்து செல்லும் போது, ஆசார்யாள் அந்த அதிஷ்டானங்களுக்கு முன் உள்ள தோட்டத்தில் தனியாக வேலை செய்வதை வியப்புடன் பார்த்தேன். அவர் கையுறைகள் அணிந்திருந்தார்; அவர் கையில் ஒரு தோட்டக் கத்திரி இருந்தது; அருகில் ஒரு கத்தியும், வாளியில் நீரும், வார்ப்பட்டையும் பார்த்தேன். ஆசார்யாள் நான் அருகில் இருப்பதைக் கவனித்துத் தம்மருகில் வருமாறு சைகை செய்தார். ரோஜாச் செடி ஒன்றில் ஒட்டுக் கிளை வைக்கவிருப்பதாகவும், அதற்கு அவர் "T-BUD" என்ற நடைமுறை ஒன்றைப் பின்பற்றப் போவதாகவும் கூறினார் ... அவ்வாறு செய்யும் போது, அவர் அந்த நடைமுறையையும் படிப்படியாக எனக்கு விளக்கினார்... விரைவாகவும் அதே சமயம் மென்னயமாகவும் செயலாற்றினார்; அந்த வேலை விரைவில் முடிந்தது."[23]

"... சிருங்கேரியில் அச்சமயம் அவ்வளவு கூட்டம் இல்லை. அப்பொழுது சிருங்கேரிக்கு வந்திருந்தவர்களில் ஒரு இளம் பிரம்மசாரியைக் கவனித்தேன். யாருடனும் பேசமாட்டான், பூஜை சமயத்தில் தனியாகவும் எவரது பார்வையை மறைக்காதவாறும் அமர்வான்; ஆசார்யாளிடம் தீர்த்தம் பெறும் சமயத்தில், மிகப் பொறுமையாக வாங்கிக் கொள்வான். விசாரித்ததில், அவன் இந்திய அறிவியல் கழகத்தில் முதுகலைப் படிப்பு

---

[23] "The Multifaceted Jivanmukta" *என்ற நூலிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது*; ப. 249-250

படித்து வருவதாகவும், சிருங்கேரிக்கு முதல் தடவையாக வந்திருக்கிறான் என்பதையும் அறிந்தேன். ஒரு நாள் காலை, பாத பூஜை எதுவும் இல்லையென்றும் ஆசார்யாள் தீர்த்தம் மட்டும் வழங்குவார் என்றும் அறிவிக்கப் பட்டது. எல்லோரும் ஆசார்யாளுக்–காகக் காத்திருந்தோம் ... ஆசார்யாள் அங்கு வந்தவுடன் அந்த இளம் பிரம்மசாரியைப் பார்த்து கன்னடத்தில், “ஓ! நீ வந்திருக்கிறாயா? இங்கே வா, இதை வாங்கிக் கொள்” என்று அவனைத் தம்மருகில் வருமாறு பணித்தார். அவன் ஆசார்யாள் அருகில் சென்று இரு கைகளையும் நீட்டினான். ஆசார்யாளும் அவர் உள்ளங்கையில் உள்ள பொருள் ஒன்றை அவனுக்குக் கொடுத்தார். அவனும் அதை வாங்கித் தன் கண்களில் ஒற்றிக் கொண்டான். ... அச்சமயம், ஸச்சிதானந்த விலாஸத்தின் வாசலில் ஒரு கார் வண்டி வந்து நின்றது. அதிலிருந்து மேலை நாட்டவர் ஒருவர் இறங்கினார். ஆசார்யாளைப் பார்ப்பதற்கு உள்ளே வந்து இரு கரம் கூப்பி நின்றார். ஆசார்யாள் அவரைக் கண்டவுடன் ஹிந்தியில், “लेगेट! आओ! आओ!” என்று உற்சாகத்துடன் வரவேற்றார். வந்தவர் மலர்ந்த முகத்துடன் ஆசார்யாளை வணங்கினார். அதன் பின், ஆசார்யாள் ... அந்த மேனாட்டவருடன் தம் அறைக்குச் சென்றுவிட்டார். என் அருகே நின்ற இளம் பிரம்மசாரி நான் எல்லாவற்றையும் கவனிப்பதைப் பார்த்து என்னிடம், “நேற்று ஆசார்யாள் என்னிடம் நான் சிருங்கேரிக்கு வந்ததற்குக் குறிப்பான காரணம் ஏதாவது உண்டா என்று கேட்டார். பூஜை செய்வதற்கு ஒரு சாளக்ராமம் வேண்டும் என்று ஆசார்யாளிடம் வேண்டினேன். என் விருப்பத்தை ஆசார்யாள் இன்று நிறைவேற்றிவிட்டார்” என்று கூறித் தன் கையில் உள்ள சாளக்ராமத்தை என்னிடம் காட்டினான். அதில் புதிதாக சந்தனம் இடப்பட்டிருந்தது. அதிலிருந்து, ஆசார்யாள் முதலில் அதற்குப் பூஜை செய்திருக்க வேண்டும் என்று ஊகித்தேன் ...”[24]

“... ஆசார்யாள் அடிக்கடி நரஸிம்ம வனத்தில் உள்ள வயற்பரப்புக்குச் சென்று அங்கே நடக்கும் பணிகளை மேற்பார்வையிடுவது வழக்கம். அவருடைய கண்களிலிருந்து எதுவும் தப்பாது! ஒரு நாள் நான் அந்த பக்கம் நடந்து செல்லும் போது, எதிர்ப்பக்கம் ஒரு சிறிய டிராக்டர் வண்டி வந்தது. அந்த வண்டியின் பின்சக்கரத்திற்கு அருகில் ஒருவர்

---

[24] *ஆசார்யாளின் சிஷ்யர் ஸ்ரீ நாராயணஸ்வாமி அய்யர் எழுதியது*

வசதியாக நிற்குமாறு மேடை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அதில் ஆசார்யாள் நின்றிருந்தார். அதைக் கண்டு நான் வியப்படைந்தேன். என்னைப் பார்த்தவுடன், ஆசார்யாள் வண்டியை நிறுத்துமாறு கூறி என்னை அருகில் கூப்பிட்டார். நான் அவர் அருகில் சென்றவுடன், அவர் நின்றிருந்த மேடையில் குவித்திருந்த பழங்களிலிருந்து இரண்டு சப்போட்டா பழங்களை எனக்குத் தந்து, "இதைச் சாப்பிடு. நம் தோட்டத்தில் விளைந்தவை, சுவையாக இருக்கும்" என்றார். என்னுடன் பேசும் சமயத்தில் அவர் கண்கள் எல்லாத் திசைகளையும் கவனித்தன. திடீரென அவர் ஒரு பக்கம் பார்த்து, "டேய், யாரடா அங்கே" என்று சத்தம் போட்டார். உடனே, சற்றுத் தொலைவிலிருந்த மரம் ஒன்றிலிருந்து ஒருவன் கீழே குதித்து ஒரே ஓட்டமாக ஓடிவிட்டான்..."[25]

*மேலே கூறிய நான்கு நிகழ்வுகளில் ஆசார்யாளின் வெவ்வேறு பரிமாணங்களைக் காண்கிறோம். முதல் சம்பவம் ஆசார்யாள் தோட்டக்கலையை நன்கு அறிந்தவர் என்று கூறுகிறது. இரண்டாவதில் இளம் பிரம்மசாரி ஒருவனுக்கு ஆன்மிக நெறியைக் காட்டும் குருவாக ஆசார்யாளைப் பார்க்கிறோம். மூன்றாவது நிகழ்வில் குறிப்பிடப்படும் லெக்கெட் என்ற மேனாட்டவர் வேதாந்த சாஸ்திரம் கற்றவர். சங்கர பகவத்பாதரால் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் அத்யாத்ம படல உரை (ஆபஸ்தம்ப சூத்திரத்தில் காணப்படும் அத்யாயம் ஒன்றின் உரை), மற்றும் யோக சூத்திர விவரணம் என்ற நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டவர்; இவற்றின் முகவுரையில் அவர் ஆசார்யாளுக்கு நன்றி கூறுகிறார் (புத்தகங்களின் முதற் பக்கத்தில் ஆசார்யாளின் நிழற்படம் ஒன்றும் இடம் பெறுகிறது). அவர் நூலாராய்ச்சி சம்பந்தமாக ஆசார்யாளிடம் பலமுறை உரையாடியிருக்கிறார் என்று தெரிய வருகிறது. இப்படிப்பட்டவரை ஆசார்யாள் வரவேற்று உரையாட அழைத்துச் செல்லும் போது, ஆசார்யாளை நாம் சாஸ்திரப் புலமை வாய்ந்தவராகக் காண்கிறோம். நான்காவது நிகழ்வில் ஆசார்யாளைக் கவனம் தப்பாத பணி மேலாளராகக் காண்கிறோம். இம்மாதிரியான பல பரிமாணங்கள் கொண்ட ஆசார்யாளின் ஆளுமையையே நாம் இக்கட்டுரையின் துவக்கத்தில்*

---

[25] ஆசார்யாளின் சிஷ்யரும் சில வருஷங்கள் ஆசார்யாளின் ஓட்டுனராக இருக்கும் பேறு பெற்றிருந்தவருமான ஸ்ரீ நிரஞ்சன் குமார் எழுதியது

பன்முகத் தன்மை கொண்டது என்று கூறினோம். இந்த இயலில், ஆசார்யாளின் பன்முகத் தன்மை கொண்ட ஆளுமைக்கும் “महाप्रज्ञम्” என்ற சொற்றொடருக்கும் என்ன தொடர்பு என்பதை விரிவாகக் கூறுவோம். சுலோகத்தில் “प्रज्ञा” என்ற சொல்லிற்கு வழக்கில் “அறிவாற்றல்” என்று பொருள். “महा” என்பது மேன்மை குறித்து வரும் சிறப்பு அடைமொழி. “महाप्रज्ञः” என்பது ஆகுபெயராய் “பேரறிவாற்றல் கொண்டவர்” என்று பொருள் தருகிறது (“महाप्रज्ञम्” என்பது இரண்டாம் வேற்றுமை).

## மஹாப்ரக்ஞை – கல்விசார் அறிவாற்றல்

மனிதர்களின் அறிவாற்றல் பல விதங்களில் வெளிப்பட்டாலும், கல்வியறிவினால் வரும் ஆற்றல் இதில் முக்கியமாகக் கருதப்படுகிறது. பாரத கலாசாரம் மட்டுமின்றி உலகத்தின் பல்வேறு கலாசாரங்களிலும் கல்வியறிவு மிகவும் போற்றப்படுகிறது. எனவே கல்வியறிவு சார்ந்த அறிவாற்றல் ஆசார்யாளிடம் எவ்வெந்த விதங்களில் வெளிப்பட்டது என்பதை முதலில் பார்ப்போம்.

பொதுவாகக், கல்வியறிவு இரண்டு விதங்களில் வெளிப்படுகிறது. முதலாவது, தமக்கு ஒத்த கல்வியறிவு கொண்டவரால் அவர்களுக்கு நிகரானவராகவோ அல்லது சிறந்தவராகவோ ஏற்கப்படுவது; இரண்டாவது, தாம் கற்றதைப் பிறருக்குக் கற்பிப்பது. பாரதம் உள்ளிட்ட எல்லாப் பண்டைய கலாசாரங்களிலும் ஒருவரின் கல்வியறிவு இந்த இரண்டைக் கொண்டே தீர்மானிக்கப்படுகிறது. ஏனென்றால், தாம் கற்றதை மற்றோருக்கு விரித்துரைக்கும் போது அதைச் செவி-கொடுத்துக் கேட்போர் பல கேள்விகளை எழுப்புவர். அதற்கு விடையளிக்க முற்படும் போது, நாம் கற்றது முன்னை விடச் சிறப்பாக நம் மனதில் விளங்குகிறது. மேலும் ஒரு சில சமயங்களில், அக்கேள்விகள் இதுவரை அறியப்படாத புதிய கருத்துகளும் கொள்கைகளும் உருவாக வழிவகுத்து, நம் அறிவை மேம்-படுத்துகின்றன. இதனாலேயே வள்ளுவரும் கற்பிப்பது, கற்றார் முன் விரித்துரைப்பது என்ற இவ்விரண்டு கூறுகளையும் திருக்குறளில் சிறப்பித்துக் கூறுகிறார்: [26]

[26] குறள் 394

உவப்பத் தலைகூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்

*(பரிமேலழகர் உரை: உவப்பத் தலைகூடி உள்ளப் பிரிதல் அனைத்தே – யாவரையும் அவர் உவக்குமாறு தலைப்பெய்து[27] 'இனி இவரை யாம் எங்ஙனம் கூடுதும்' என நினையுமாறு நீங்குதலாகிய அத்தன்மைத்து, புலவர் தொழில் – கற்றறிந்தார் தொழில்) அதாவது, கற்பிப்பவர் விஷயத்தில், 'இனி இவரை மீண்டும் எப்பொழுது பார்ப்போம்' என்று அவரிடம் கற்பவர் மனதில் தோன்றுமாம். 'புலவர் தொழில்' என்று கூறியதால் கற்பிப்பதன் இன்றியமையாமை தெரிகிறது.*

*கற்றார் அவையின் முன் தாம் கற்றதை உரைப்பதன் பெருமையைக் கீழ்க்காணும் குறள்கள் கூறுகின்றன:*

கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொல்தெரிதல் வல்லார கத்து

*(பரிமேலழகர் உரை: கசடறச் சொல்தெரிதல் வல்லாரகத்து – வழுப்படாமல் சொற்களை ஆராய்தல் வல்லார் அவைக்கண் சொல்லின், கற்று அறிந்தார் கல்வி விளங்கும் – பல நூல்களையும் கற்று அவற்றின் ஆய பயனை அறிந்தாரது கல்வி யாவர்க்கும் விளங்கித் தோன்றும்.[28])*

கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்கக் கொளல்

*(பரிமேலழகர் உரை: கற்றார்முன் கற்ற செலச் சொல்லி – பல நூல்களையும் கற்றார் அவைக்கண் தாம் கற்றவற்றை அவர்மனம் கொள்ளுமாற்றாற் சொல்லி, தாம் கற்ற மிக்காருள் மிக்க கொளல் – அவற்றின் மிக்க பொருள்களை அம்மிகக் கற்றாரிடத்து அறிந்து கொள்க. எல்லாம் ஒருவற்குக் கற்றல் கூடாமையின், வேறுவேறாய கல்வியுடையார் பலர் இருந்த அவைக்கண் தாம் கற்றவற்றை அவர்க்கு ஏற்பச் சொல்லுக; சொல்லவே, அவரும் அவையெல்லாஞ் சொல்லுவர்.*

---

[27] தலைப்பெய்தல் – ஒன்று கூடுதல்
[28] குறள் 717

*ஆதலான், ஏனை கற்கப்பெறாதன கேட்டறியலாம் என்பதாயிற்று.[29])*

*இனி, கல்வியறிவு சார்ந்த அறிவாற்றல் தாம் கற்றவற்றைப் பிறருக்கு விரித்துரைக்கும் போது வெளிப்படுகிறது என்று முதலில் கூறிவிட்டு, இப்போது பிறருக்கு விரித்துரைப்பதால் ஒருவரின் அறிவாற்றல் மேம்படுகிறது என்று கூறுவது முரணாகாதா என்ற கேள்வி எழக்கூடும். இது முரணல்ல; ஏனெனின், அறிந்ததிலிருந்து அறியாததைச் சிந்தித்து புது அறிவைச் சேர்ப்பதே அறிவாற்றல் ஆகும். இது கல்விசார் அறிவாற்றல் மட்டுமன்றி அறிவாற்றலின் பொதுவான வரையறை என்பது இன்னாளைய ஆய்வாளர்களின் கருத்து. இதை இவ்வியலின் அடுத்த பகுதியில் விரித்துக் கூறவுள்ளோம்.*

*இதுவரை கல்விசார் அறிவாற்றலின் கூறுகளையும் அவற்றின் வெளிப்பாடு பற்றியும் பார்த்தோம். இனி, இவை எந்த வகைகளில் ஆசார்யாளின் ஆளுமையாக வெளிப்பட்டன என்பதை ஆராய்வோம். ஆசார்யாளின் கல்விப் பயிற்சி மூன்று காலக் கட்டங்களில் அமைந்தது என்பது அவருடைய சரித்திரத்திலிருந்து தெரிகிறது. சிறு வயதில் பெங்களூரில் பள்ளிக் கல்வி, பின் சிருங்கேரியில் பிரம்மசாரியாகக் கல்வி கற்றது, துறவறம் மேற்கொண்ட பின் தமது குருவிடமும் பண்டிதர்கள் சிலரிடமும் கற்றது என்று மூன்று கூறுகளாகப் பிரிக்கலாம். ஆசார்யாளின் பள்ளிக்கூடக் கல்வி எட்டாம் வகுப்புடன் நின்றது. அவர் சிருங்கேரிக்கு வருவதற்கு முன் பெங்களூரில் எட்டாவது வகுப்பு வரையில் படித்தார் என்பதையும் அவருடைய தந்தையார் ஸ்ரீ கைபு ராமா சாஸ்திரிகள் ஒரு முனிசிபல் பள்ளிக்-கூடத்தில் ஆசிரியராகப் பணியாற்றினார் என்பதையும் அறிகிறோம்:*

“ஸ்ரீனிவாஸர் ஆரம்பத்தில் பூர்ணையா சத்திரத்தில் உள்ள முனிசிபல் ப்ரைமரி மாணவர் பள்ளிக்கூடத்தில் வாசித்தார். பின்பு பளே பேட்டையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஆர்ய வித்யாசாலையில் சேர்ந்தார். இங்கு 8–வது வகுப்பு வரையில் படித்தார் ...”[30]

*ஆசார்யாள் தம்முடன் படித்தவர்கள் சிலருக்குக் கல்வி கற்பித்து உதவுவது அக்காலத்திலேயே அவர் வழக்கமாக இருந்தது:*

---

[29] குறள் 724

[30] “ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த விஜயம்” ப. 40

“... கைபு ராமா சாஸ்திரிகள் (ஆசார்யாளின் தந்தையார்) முனிசிபல் சிறுவர் பள்ளியில் உபாத்யாயர். பையன்கள் வீட்டு வேலை (வீட்டுப்பாடம்) செய்யாமல் இருந்தாலும் அல்லது வகுப்பில் கேள்விக்குச் சரியான பதில் சொல்லாவிட்டாலும் அவர்களைத் தடியால் அடித்துக் கண்டிப்பார். அப்படிப்பட்டவர்களில் பலர் ஸ்ரீனிவாஸரின் விளையாட்டுத் தோழர்களாகவும் இருப்பார்கள். அவர்களுக்குத் தண்டனை விழக்–கூடாது என்பதற்காக, எந்தெந்தப் பாடங்களில் அவர்களுக்குப் புத்தி குறைவு இருந்ததோ அந்தப் பாடங்களைத் தனியாக அவர்களுக்கு ஸ்ரீனிவாஸர் சொல்லிக்கொடுப்பதுண்டு (குறிப்பாகக் கணிதமும் இங்கிலீஷ் எழுத்துகளும்). வயது வந்த பையன்களை விட ஸ்ரீனிவாஸரின் போதனா முறை விசேஷமானதாக இருந்தது என்பார்கள். இச்சிறு ஸேவைக்கு அவருடைய ஸ்னேஹிதர்களும், அவர்களின் பெற்றோர்களும் ஸ்ரீனிவாஸரிடம் நன்றி உள்ளவர்களாக இருந்தார்கள். எந்த வீட்டுக்குப் போனாலும் ஸ்ரீனிவாஸருக்கு நல்வரவு உண்டு ...”[31]

*ஆசார்யாள் துறவியான பின்னரும், அவர் தமது சிஷ்யர்களுக்கு மிகுந்த ஊக்கத்துடன் கல்வி கற்பித்தார் என்பது ஆசார்யாளின் வரலாற்றில் பதிவாகியுள்ளது:*

“... தாம் கற்றதைத் தாமே வைத்துக் கொள்வது என்பதில் ஆசார்யாளுக்கு ஒருபொழுதும் உடன்பாடில்லை. தர்க்க சாஸ்திர நூல்களை அவர் பலமுறை பல மாணவர்களுக்குக் கற்பித்தார். இதன் மூலம் அவர் தமது மாணவர்களைப் பண்டிதர்கள் ஆக்கினார். அவர்களும் தாம் கற்றது அனைத்தையும் ஏனையோருக்குக் கற்பிக்கும் தகுதியையும் பெற்றனர்.[32]

*ஆசார்யாள் பாடம் சொல்லும் பொழுது பாடத்தின் துவக்கத்தில் சில பொதுவான கருத்துகளைக் கூறுவார். பின்னர், எடுத்துக்கொண்ட நூற்பகுதியைப் படிப்பார். அதற்கு விரிவாகப் பொருள் கூறிய பின், மீண்டும் அதே நூற்பகுதியை ஒரு தடவை படித்து, அடுத்த பகுதிக்குச்*

[31] மேலது ப. 51

[32] “The Multifaceted Jivanmukta” என்ற நூலிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது; ப. 337-338

*செல்வார். வினாக்களை வரவேற்பார். ஐயங்களைத் தீர்ப்பதில் பெரும் உற்சாகம் காட்டுவது வழக்கம். ஒரு ஐயத்தை நன்கு தீர்க்கவேண்டும் என்பதற்காகப் பல மேற்கோள் நூல்களை நாடுவார். சில சமயங்களில் தான் கொடுத்த விளக்கம் தனக்கே திருப்தியளிக்காதது போல், அதைப் பற்றி மேலும் சிந்தித்து, பல நூல்களை ஆராய்ந்து அடுத்த நாள் அதை வகுப்பில் மீண்டும் விளக்குவார்.*

*கல்வியிற் சிறந்த ஆசிரியர் மேலும் கற்பதில் ஊக்கமாக இருப்பார் என்பதைக் கல்வி பயில்விப்பவர் எல்லோரும் அறிவர். இந்த இயல்பை நாம் ஆசார்யாளிடம் முழுமையாகக் காண்கிறோம். எப்படிக் கிணற்றில் தோண்டிய அளவில் நீர் ஊற்று எடுக்கிறதோ, அதே போல் அறிவும் மேன்மேலும் கல்வி கற்பதனால் வளர்ச்சி அடைகிறது என்று குறள் கூறுகிறது:*[33]

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு

*(பரிமேலழகர் உரை: மணற்கேணி தொட்ட அனைத்து ஊறும் – மணலின்கண் கேணி தோண்டிய அளவிற்றாக ஊறும்; மாந்தர்க்கு அறிவு கற்றனைத்து ஊறும் – அது போல மக்கட்கு அறிவு கற்ற அளவிற்றாக ஊறும். ஈண்டு 'கேணி' என்றது அதன்கண் நீரை. 'அளவிற்றாக' என்றது அதன் அளவும் செல்ல என்றவாறு. சிறிது கற்றுணையான் அமையாது, மேன்மேல் கற்றல் வேண்டும் என்பதாம்.)*

*ஒரு பீடாதிபதியாக இருந்ததால் ஆசார்யாளுக்குப் பலவித காரியங்களைச் செய்விக்கவும் செய்யவும் வேண்டியிருந்தது. அப்படியிருப்பினும் படிப்பதற்கு நேரம் ஒதுக்குவதில் அவர் குறிப்பாக இருந்தார். சில சமயங்களில் அவர் முன்னிலையில் பாத பூஜை போன்றன நடக்கும் போதும் புத்தகம் ஏதாவது ஒன்று அவர் கைகளில் இருக்கும். படிப்பிற்கு அவர் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார் என்பதை இந்நிகழ்ச்சியில் பார்க்கிறோம்:*

"**…** கூடலூர் கிருஷ்ண சாஸ்திரிகள் ஒரு முறை சிருங்கேரிக்கு வந்த போது நரஸிம்ஹ வனத்தில் தங்கியிருந்தார்**.** ஒரு நாள் காலை அவர்

[33] குறள் 396

ஆசார்யாளைத் தரிசனம் செய்யும் போது, ‘நேற்று நள்ளிரவிற்குப் பின்னும் ஆசார்யாளின் அறையில் விளக்கு எரிவதைப் பார்த்தேன். ஆசார்யாள் நேற்றுத் தூங்கவில்லையா?’ என்று கேட்டார். அதற்கு ஆசார்யாள், தமக்கு முந்தைய தினம் உடல் நலம் சற்று குன்றியிருந்தது என்றும், காய்ச்சல் இருந்ததால் உறக்கம் வரவில்லை, எனவே நேரத்தை வீணாக்காமல் வேதாந்த நூல் ஒன்றைப் படித்ததாகவும் கூறினார்.” [34]

*ஆசார்யாளின் கல்வியறிவு மிகவும் ஆழமாக இருந்த போதும் அவருக்குத் தற்பெருமை சிறிதும் இருக்கவில்லை என்பதைக் கீழ்க்காணும் நிகழ்ச்சி காட்டுகிறது:*

“… பெங்களூரில் நடந்த வித்வத் சபை ஒன்றில் பண்டிதர்கள், சங்கர பகவத்பாதர் ‘மூல அவித்யை’ என்ற கோட்பாட்டை ஏற்றாரா என்பது பற்றி விவாதித்தனர்; ‘மூல அவித்யை’ என்பது பரம்பொருளை நிலையிடமாகக் கொண்டு ஆத்மாவைப் பற்றிய சரியான அறிவை மறைக்கிறது. பத்மபாத ஆசார்யர் முதற்கொண்டு சம்பிரதாயத்தை அனுசரித்துப் பொருள் கூறிய வேதாந்திகள் பலரும், பகவத்பாதர் இந்தக் கோட்பாட்டை ஏற்றார் என்றே கூறினர். ஆனால் ஹொளே–நரஸிபுர மடாதிபதி ஸ்ரீ ஸச்சிதானந்தேந்திர ஸரஸ்வதீ ஸ்வாமிகளும் அவருடைய சீடர்களும் பகவத்பாதர் ‘மூல அவித்யை’ கொள்கையை ஏற்கவில்லை என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். அவர்–களுடைய கருத்தின்படி, ஆழ்ந்த உறக்கத்தில் அவித்யையின் திரை இல்லை; மோக்ஷத்திற்கும் ஆழ்ந்த உறக்கத்திற்கும் உள்ள ஒரே வேறுபாடு, பின்னுள்ளது தற்காலிகமானது என்பதே. இந்த இரண்டு கட்சிகளும் வாதம் செய்து ஒரு முடிவிற்கு வரவேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த வித்வத் சபை ஏற்பாடு செய்யப் பட்டது. அவையில் நடந்த வாதப் பிரதிவாதங்களை ஆசார்யாள் மிகவும் ஊக்கத்துடன் கேட்டார். அங்குள்ள ஒருவர் ஆசார்யாளைப் பார்த்து, ‘ஜகத்குரு என்ற ஸ்தானத்தில் இருக்கும் ஆசார்யாள் இதற்குத் தீர்ப்பளிக்கலாமே’ என்றார். அதற்கு ஆசார்யாள் அளித்த பதில் மனதைத் தொடும் விதத்தில் இருந்தது. ‘நான் இங்கே ஜகத்குருவாக

---

[34] “The Multifaceted Jivanmukta” *என்ற நூலிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது; ப.* 337

அமரவில்லை. மாறாக, சாஸ்திரங்களைக் கற்பிக்கும் ஆசிரியன் என்ற முறையில் 'நான் சரியாகக் கற்றுள்ளேனா' என்று பார்த்துக் கொள்வதற்காக இங்கே அமர்ந்திருக்கிறேன்' என்றார் ஆசார்யாள். தர்க்க சாஸ்திரத்திலும் வேதாந்த சாஸ்திரத்திலும் அவருக்கு நிகரானவர் யாருமில்லை என்று ஆசார்யாள் அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அவரிடத்தில் பாரபட்சமோ தற்பெருமையோ சற்றும் இல்லை. (அந்த அவையில் நடந்த வாதத்தில் சம்பிரதாயத்தை ஒட்டிப் பொருள் கூறிய வேதாந்திகள் பக்கமே வென்றது.)..." [35]

## மஹாப்ரக்ஞை – கற்றறிந்த பண்டிதர்

*கல்விசார் அறிவாற்றல் ஆசார்யாளிடத்தில் "சாஸ்திரங்களைப் பயில்விப்பவர்" என்ற ஆளுமையாக எப்படி விளங்கியது என்பதை இதுவரை பார்த்தோம். இனி, இவ்வாற்றல் அவரிடத்தில் "கற்றறிந்த பண்டிதர்" என்ற ஆளுமையில் எப்படி விளங்கியது என்பதைக் காண்போம். சிருங்கேரி மடத்தின் வரலாற்றைப் பார்க்கும் போது, இந்த பீடத்தின் அதிபதியாக இருந்தவர்கள் சாஸ்திர அறிவிற்கும் புலமைக்கும் மிகவும் முக்கியத்துவம் கொடுத்தனர் என்பது புலனாகிறது. பொதுவாக, சிருங்கேரி சங்கராச்சார்யார்கள் பண்டிதர்களாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் எல்லாத் தரப்பு மக்களுக்கும் இருந்தது என்பதையும் சாரதா பீடத்தின் வரலாற்றிலிருந்து ஒருவாறு ஊகிக்கலாம்.[36,37] சமீப காலத்து வரலாற்றில், சாரதா பீடத்தின் 33-வது பீடாதிபதியாக விளங்கிய ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகள் "மஹாகணபதி வாக்யார்த்த சபை" என்ற அமைப்பை நிறுவினார். ஆண்டிற்கு ஒரு முறை கூடும் இந்த அவை, சிருங்கேரி ஆசார்யார்கள் முன்னிலையில் நடக்கும். நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் அறிஞர்கள் கலந்து கொள்கின்றனர். இது தவிர, ஆசார்யர்கள் யாத்திரை செல்லும் போது, சில இடங்களில் பண்டிதர்களைக் கூட்டி வித்வத் சபை நடக்கும் வழக்கமும் உண்டு.*

---

[35] மேலது, ப. 338-339

[36] "*ஸ்ரீ சாரதா பீடம்*", ரா. கிருஷ்ணஸ்வாமி ஐயர், ஸ்ரீ வாணி விலாஸ் பிரஸ், ஸ்ரீரங்கம் 1959

[37] "உணர்வரிய மெய்ஞ்ஞானம் ஓங்குபெரு பீடம்", ஸ்ரீ வாணி விலாஸ் பிரஸ், ஸ்ரீரங்கம் 1966

இம்மாதிரியான சபைகளில் வ்யாகரணம் (இலக்கணம்) தர்க்கம் (ந்யாயம்), பூர்வ மீமாம்ஸா, வேதாந்தம் ஆகிய தரிசனங்களில் உள்ள நுணுக்கங்களைப் பண்டிதர்கள் சர்ச்சை செய்வார்கள். சர்ச்சைக்கு ஒரு விஷயத்தை எடுத்துக் கொண்டு பண்டிதர் ஒருவர் தமது வாதங்களையோ ஆட்சேபங்களையோ கூறுவார். இதற்குப் பதில்-களையோ வேறு ஆட்சேபங்களையோ கூடியிருக்கும் அறிஞர்கள் ஒவ்வொருவராகக் கூறுவர். இப்படி ஒரு விஷயத்தை நன்கு ஆராய்ந்து சபை ஒரு முடிவிற்கு வரும். அவைக்குத் தலைமை தாங்கும் ஆசார்யர் சில சமயங்களில் ஆட்சேபங்களைக் கூறுவார்; அல்லது வேறொருவர் கூறிய ஆட்சேபங்களுக்கு சமாதானம் சொல்லுவார். சில சமயங்களில் அவையில் கூடியுள்ள பண்டிதர்களுக்கு இடையே நடக்கும் சர்ச்சையில் இறுதியான முடிவை ஆசார்யர் கூற வேண்டியிருக்கும். இதைத் தவிர ஒரு பண்டிதருக்கும் இன்னொருவருக்கும் ஏற்படும் இயல்பான உராய்வையும் ஆசார்யர் மிகுந்த நயத்துடன் கையாள வேண்டி-யிருக்கும். எனவே, இம்மாதிரியான அவைகளுக்குத் தலைமை வகிக்கும் ஆசார்யர் சாஸ்திரங்களில் புலமை, விவாதங்களில் உடனடியாகப் பதில் கூறும் ஆற்றல், கற்றோர் நயம் பாராட்டுதல், இப்படி பல்வேறு விதங்களில் தமது திறமையைக் காட்ட வேண்டும். இதற்கான “பயிற்சியும்” பீடத்தில் உள்ள ஆசார்யர் தமது சிஷ்யருக்குப் பல்வேறு வழிகளில் தருவதும் வழக்கமாக இருக்கிறது.

இது தொடர்பாக, ஆசார்யாள் பிரம்மசாரியாக இருந்த போது ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவருடைய அறிவுத்திறனை எப்படி பல வகைகளில் சோதித்தார் என்பதையும் ஆசார்யாளின் அறிவாற்றல் அந்த சமயங்களில் எப்படி வெளிப்பட்டது என்பதையும் பாஷ்ய ஸ்வாமிகள் விவரமாக எழுதியுள்ளார்.[38] அதிலிருந்து ஒரு சில பகுதிகளை இங்கே நினைவு கூர்வது பொருத்தமாக இருக்கும். முதலாவதாக பாஷ்ய ஸ்வாமிகள் ஆசார்யாளுக்கு அளிக்கப்பட்ட பயிற்சியைப் பற்றி,

“**...** இன்று ஆயிரக்கணக்கான மஹா ரஸிகர்களும் வித்வான்களும் பிரபுக்களும் நிறைந்த மஹா ஸபைகளில் தம் உபதேச அம்ருத—வர்ஷத்தால் எல்லோரையும் மெய்சிலிர்க்கும்படி செய்யக்கூடிய ஓர்

---

[38] ஸ்ரீ குருகிருபா விலாஸம், முதல் பாகம்

அபூர்வ மஹிமை அவர் (ஆசார்யாள்) பிரம்மசர்யம் முதல் பழகி வந்த தபோ பலத்தால் தான்; கற்றுணர்ந்த கல்வியினால் தான். அதுவும் நம் குருநாதாள் (ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வமிகள்) ஏற்படுத்திய கல்வி முறையினால் தான் ... இந்தக் கல்வி முறை தான் அன்று மான்களுடனும் மயில்களுடனும் விளையாடி ரிஷிகுமாரன் போல் விளங்கிவந்த அந்த மூர்த்தியை (ஆசார்யாளை) இன்று ராஜாக்களுடனும் மந்திரிகளுடனும் ராஷ்ட்ரபதிகளுடனும் உறவாடச் செய்கிறது ...''[39]

*என்று கூறுகிறார். நாம் முன்னர் கூறியது போல், கற்றவர் குழுமிய அவையில் பொருள் சொல்லும் போது கல்வியை நன்கு கற்றிருத்தல் மட்டும் போதாது. அதைத் தவிர ஒரு கேள்விக்கோ அல்லது ஆட்சேபணைக்கோ உடனடியாக விடை கூறும் ஆற்றல், தான் அறிந்ததை கற்றோர் முன் அஞ்சாது கூறுதல்,[40] சமயோசித புத்தி முதலியவையும் அவசியமாகின்றன. இத்திறன்கள் வெளிப்பட வேண்டு-மானால் அதற்கான பயிற்சியும் வேண்டும். இதையே பாஷ்ய ஸ்வாமிகள் ''... குருநாதாள் ஏற்படுத்திய கல்விமுறை'' என்கிறார். அது எத்தகையது என்பதைச் சுருக்கமாகச் சொல்வோம்.*

*ஆசார்யாள் பிரம்மசாரியாக இருந்த காலத்தில், ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் மாலை வேளைகளில் ஸ்ரீனிவாஸர், மற்றும் அவருடன் கல்வி பயிலும் மாணவர்கள், அவர்களுக்குக் கல்வி பயில்வித்த வைத்யநாத சாஸ்திரிகள் (பாஷ்ய ஸ்வாமிகளின் பூர்வாசிரமப் பெயர்) ஆகியோருடன் காலபைரவர் ஆலயம் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். சில சமயங்களில் மடத்தில் உள்ள மற்ற பண்டிதர்கள் சிலரும் உடன்செல்வது உண்டு. அந்த சமயத்தில் அவர் மாணவர்களை சுலோகங்கள் கூற வைத்து அவற்றின் பொருளையும் விளக்கச் சொல்வார். அல்லது அவர் தாமே சில சுலோகங்களைக் கூறிப் பொருள் வினவுவார். இப்படிப் பலர் முன்னிலையில் பொருள் விரித்துக் கூறும் பயிற்சியை அவர் ஆசார்யாளுக்குச் சிறு வயதிலேயே அளித்ததை விவரிக்கும் பல நிகழ்வுகள் பலவற்றை பாஷ்ய ஸ்வாமிகள்*

---

[39] மேலது ப. 32-33

[40] அவையஞ்சாமை பற்றி அடுத்த இயலில் பேசுவோம்.

*பதிவு செய்துள்ளார். அதில் ஒன்றை மட்டும் இங்கே கூறுவோம்:*

“... ஸ்ரீ ஸந்நிதானம் (ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்) ... ஒரு சுலோகத்தை மட்டும் குறிப்பிட்டு ‘நாளைக்கு இதற்குப் பொருள் கூற வேண்டும்’ என்று உத்தரவிட்டார். (அந்த சுலோகம் பின்வருமாறு)

अवचनचिन्मुद्राभ्यां अद्वैतं बोधरूपमात्मानम् ।
ब्रूते तत्र च मानं पुस्तकभुजगाग्निभिर्महादेवः ॥

(மஹேச்வரன் (தக்ஷிணாமூர்த்தி வடிவத்தில்) மௌனம், சின்முத்திரை இவைகளால் ஆத்மா அத்விதீயமென்றும், ஞானவடிவமென்றும், எங்கும் நிறைந்தது என்றும் உபதேசிக்கிறார். (தன்னிடமுள்ள) புஸ்தகம், ஸர்ப்பம், அக்னி இவைகளால் அதற்குப் பிரமாணத்தையும் கூறுகிறார்.)

மறு நாள் மடத்து வித்வான்களும் வந்திருந்தார்கள். எல்லோரும் வெளிப்படையான அர்த்தத்தைச் சொன்னார்களே தவிர அதன் கூடமான தாத்பர்யத்தை யாரும் சொல்லவில்லை. இந்த லேககரைப் பார்த்து, ‘உன் அபிப்ராயம் என்ன?’ என்று கேட்கவே, இவர் சொன்னார்: ‘பரமேச்வரன் தக்ஷிணாமூர்த்தி வடிவத்தில் மௌனம், சின்முத்திரை இவைகளாலேயே ஆத்ம தத்துவத்தைப் போதிக்கிறார். அந்த ஆத்மாவோ அத்விதீயமாக ஒரே வஸ்துவாகவும், கேவல ஞானவடிவமாகவும், ஸர்வவியாபகமாகவும் இருக்கிறது. இதில் ‘அத்வைதம்’ என்பதற்கு புஸ்தக திருஷ்டாந்தமும், ‘போதரூபம்’ என்பதற்கு பாம்பு திருஷ்டாந்தமும் ‘வியாபகம்’ என்பதற்கு அக்னி திருஷ்டாந்தமும் கிரமமாக எடுத்துக் கொள்ளலாம். புத்தகத்தில் ஏடுகள் வெவ்வேறாயிருந்த போதிலும் புத்தகரூபத்தில் ஐக்யம் இருப்பது போல பிரபஞ்ச ரூபத்தில் பேதமும் பிரம்ம ரூபத்தில் அபேதமும் கிடைக்கும். அப்படியே ரஜ்ஜு—ஸர்ப்ப திருஷ்டாந்தத்தால் அதிஷ்டானம் ஸத்யம் என்ற அம்சம் கிடைப்பதால், சைதன்யாம்சமே ஸத்யமாகையால் சைதன்ய ரூபமென்று கிடைக்கிறது. அக்னி திருஷ்டாந்தத்தால் ஸர்வவியாபகத்வம் கிடைக்கிறது. பூமியில் எங்குமே தேஜஸ் வியாபித்திருப்பது போல் ஆத்மா ஸர்வ வியாபி என்ற அர்த்தம் கிடைக்கிறது’ என்று தன் மனதில் தோன்றியதைச் சொல்லவே அதை குருநாதாள் பூர்ணமாக அங்கீகரிக்கவில்லை. மற்ற வித்வான்களாலும் ஒன்றும் சொல்ல முடியவில்லை. உடனே ஸ்ரீனிவாஸன் எழுந்து நின்று

'புஸ்தகம், பாம்பு, நெருப்பு இந்த திருஷ்டாந்தங்களால் ச்ருதி—யுக்தி—அநுபவங்கள் என்றும் அர்த்தம் கொள்ளலாம்' என்று சொல்லவே எல்லோரும் ஆச்சரியமடைந்தோம். ...'' [41]

*இந்த நிகழ்வு குறித்து மேலும் சில நுணுக்கங்களைக் கூறலாம்:*

''... அத்வைதமான ஸத்யத்தை அறிவதற்கு சாஸ்திரமே சரியான பிரமாணமாதலால், புஸ்தகம் என்பது இங்கே தெளிவாக சாஸ்திரத்தைக் குறிக்கிறது. சாஸ்திரத்திலிருந்து அத்வைதமான ஸத்யம் மட்டுமே இருக்கிறது என்பதை அறிந்த போதிலும், பிரபஞ்சத்தில் த்வைதம் தெரிவதால் இது எப்படி இருக்கமுடியும் என்ற ஐயம் எழலாம். (சுலோகத்தில் உள்ள) பாம்பு, சாஸ்திரத்தில் பிரபலமாக உள்ள கயிறு—பாம்பு உதாரணத்தைக் குறிக்கிறது. எவ்வாறு கயிற்றின் இடத்தில் தவறாகப் பார்க்கப்பட்ட பாம்பு கயிற்றின் இரண்டற்ற தன்மையையும் அதன் உண்மை இயல்பையும் பாதிப்பதில்லையோ, அவ்வாறே, த்வைதமாகப் பார்க்கப்படும் பிரபஞ்சம், உதாரணத்தில் காட்டப்பட்ட பாம்பைப் போல், அத்வைதமான ஸத்யத்தை பாதிப்—பதில்லை. எனவே, தக்ஷிணாமூர்த்தி கையில் இருக்கும் பாம்பு, சாஸ்திரப் பிரமாணத்திற்கு முரணல்லாததும், ஐயங்களை நீக்க—வல்லதுமான யுக்தியைக் குறிக்கிறது.

மேலும், பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கீதையில், 'அர்ஜுனா! எவ்வாறு நன்கு மூட்டப்பட்ட நெருப்பு விறகுக் கட்டைகளைச் சாம்பல் ஆக்குகிறதோ, அவ்வாறே ஞானம் என்ற அக்னி எல்லா கர்மங்களையும் சாம்பல் ஆக்குகிறது' என்கிறார். இதைப் போல் இன்னும் பல இடங்களிலும் அக்னி, பரம்பொருளைப் பற்றிய அபரோக்ஷ ஞானத்திற்கு உவமையாகக் கூறப்படுகிறது. எனவே இறைவனது கையில் உள்ள அக்னி அபரோக்ஷ அனுபவத்தைக் குறிப்பதாக எடுத்துக் கொள்ளலாம். ... ஸ்ரீ ஸ்ரீனிவாஸ சாஸ்திரி கொடுத்த இந்த ஆழமான விளக்கத்திற்கு பரமாசார்யாளோ, அங்கேயிருந்த மற்ற பண்டிதர்களோ எந்த ஆட்சேபமும் எழுப்பவில்லை. பதின்மூன்று வயதே ஆன சிறுவர் இந்த விளக்கத்தை ஒரு கணத்தில், (கற்றோர் கூடியிருந்த) அந்த இடத்தில் கொடுத்தார்; வேதாந்தத்தை

[41] மேலது ப. 65-66

அவர் அதற்கு முன் முறையாகக் கற்றிருக்கவுமில்லை ...'' [42]

*இச்சிறு வயதில் ஆசார்யாளிடம் அமைந்திருந்த ஆற்றல் காலப் போக்கில் முழுமையடைந்தது. அதை விவரிக்கும் நிகழ்வுகள் சிலவற்றை இங்கே கூறுவோம். 1936ல் இருந்து 1940 வரை ஆசார்யாள் தமது குருவை விட்டுப் பிரிந்திருக்க வேண்டி இருந்தது. அச்சமயத்தில் ஆசார்யாளுக்கும் அவர் குருவிற்கும் இடையே நடந்த கடிதப் போக்குவரத்தில் ஆசார்யாளின் கல்வித் திறன் பற்றியும் வித்வத் சபைகளில் அவர் காட்டிய அறிவாற்றல் பற்றியும் சில தகவல்கள் கிடைக்கின்றன. உதாரணமாக, 1937ம் ஆண்டு ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் ஆசார்யாளுக்கு எழுதிய கடிதம் ஒன்றில்,*

''... (உங்கள் கடிதத்திலிருந்து) நீங்கள் வித்வத் சதஸில், 'சதகோடி' நூலின் உட்பொருளை விளக்கியது பற்றியும், உங்கள் மாணவனை 'அவச்சேதகதா''' (என்ற கோட்பாட்டைப்) பற்றி அவையில் பேச வைத்–தையும் அறிந்து மிகவும் அகமகிழ்ந்தேன். இவ்வாண்டு வித்வத் சதஸ் நல்ல முறையில் நடைபெறும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. பல பண்டிதர்கள் ஓரிடத்தில் கூடுவதினால் சாஸ்திரக் கல்வியில் ஆர்வம் பெருகும். பொதுவாகப், பல அறிஞர்கள் இந்த சதஸில் பங்கேற்பர். அங்கே குழுமியுள்ள பண்டிதர்கள் எல்லோரும் உங்கள் விரிவுரை–களினால் அளவற்ற ஆனந்தம் பெறுமாறு ஸ்ரீ சாரதா சந்த்ரமௌலீச்வரர் அனுக்ரஹம் செய்யட்டும் என்று ஆசீர்வதிக்கிறேன். ...''[43]

*என்று கூறுகிறார். மேலும் சில கடிதங்களிலிருந்து, ஆசார்யாள் தர்க்க சாஸ்திரத்தில் பண்டிதர்கள் போற்றும் புலமையைப் பெற்றார் என்றும் அறிகிறோம். ஆசார்யாளின் கல்வியாற்றல் பற்றி அவருடைய குருவிற்கு இருந்த பற்றுறுதியைக் கீழ்க்காணும் நிகழ்வு பதிவு செய்கிறது:*

''... ஆசார்யாளின் தர்க்க சாஸ்திரக் கல்வி முழுமையாக நிறைவேறாத சமயம், வட இந்தியாவிலிருந்து ஒரு பண்டிதர் சிருங்கேரிக்கு வந்தார்; தமக்கு அந்த சாஸ்திரத்தில் இருந்த சில ஐயங்களை ஸ்ரீமத் சந்த்ரசேகர

[42] "The Multifaceted Jivanmukta" என்ற நூலிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது; ப. 46-47

[43] மேலது ப.200

பாரதீ மஹாஸ்வாமிகளிடம் தெரிவித்து அவற்றுக்கு விடை காண வேண்டும் என்பது அவர் நோக்கம். ஆனால் அவரோ, இந்த ஐயங்களை ஆசார்யாள் தீர்த்து வைப்பார் என்று அப்பண்டிதரிடம் கூறினார். இதைக் கேட்ட பண்டிதர் (தம்முடைய ஐயங்களைத் தீர்க்கும் அளவிற்கு ஆசார்யாளுக்குப் புலமை இருக்குமா என்று ஐயுற்று) சற்றே தயங்கி ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளே தமது கேள்விகளுக்கு விடையளித்தால் நன்றாக இருக்கும் என்று கூறினார். அதற்கு ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவரிடம், 'முதலில் அவர் (ஆசார்யாள்) உங்களுக்கு விடை கூறட்டும். அதற்குப் பின்னும் உங்களுக்கு சந்தேகம் தெளியவில்லை என்றால் நான் விடையளிக்கிறேன்' என்று கூறினார். இதற்கு மேலும் அந்த பண்டிதரால் ஏதும் சொல்ல முடியவில்லையாதலால், 'சரி, இந்த கற்றுக் குட்டி நமக்கு என்ன சொல்லப் போகிறார், பார்ப்போம்' என்ற மனோபாவத்துடன் ஆசார்யாளிடம் சென்றார். ஆசார்யாள் அவருடைய ஐயங்களைக் கேட்டு, அதற்கு விடையாகப் பல நுட்பமான விஷயங்களைத் தங்குதடையின்றி மிகவும் எளிதாகக் கூறினார். பண்டிதரும் தம் பிழையுணர்ந்து ஆசார்யர்களிடம் மன்னிப்பு கோரிய பின் தம் வீடு திரும்பினார் …'' [44]

*பிற்காலத்தில், அதாவது 1960களில் ஆசார்யாள் தமது யாத்திரைகளில் பல இடங்களில் வித்வத் சபைகளுக்குத் தலைமை தாங்கித் தமது புலமையை வெளிப்படுத்தியது பற்றிப் பல குறிப்புகள் கிடைக்கின்றன. ''புலமிக் கவரைப் புலமை தெரிதல் புலமிக் கவர்க்கே புலனாம்'' என்ற சொற்படி,[45] இந்த சபைகளில் இந்தியாவில் பல பாகங்களிலிருந்தும் பண்டிதர்கள் பங்கெடுத்தனர் என்றும் இந்த குறிப்புகளிலிருந்து அறிகிறோம். விரிவஞ்சி எல்லாவற்றையும் கூறாது, அதில் ஓரிரண்டை மட்டும் பதிவு செய்வோம். முதலாவதாக 1966ம் ஆண்டு உஜ்ஜயினி நகரத்தில் நடந்த வித்வத் சபையைப் பற்றி ''ஸ்ரீ சங்கர க்ருபா'' பத்திரிகையில் வெளிவந்த குறிப்பு:*

''… (செப்டம்பர் 19ம் தேதி) அன்றும் மறுநாளும் ஸ்ரீ மஹாஸந்நிதானம் (ஆசார்யாள்) அவர்கள் நிகழ்த்திய அருளுரையில் பொதுவாக

---

[44] மேலது ப. 208

[45] *பழமொழி நானூறு* 8

சாஸ்திரங்களைப் பற்றியும், சிறப்பாக இரு கண்கள் போன்ற நியாய – வியாகரண சாஸ்திரங்களைப் பற்றியும் மிக விரிவாக உபதேசித்தார்கள். 20ம் தேதி ஸ்ரீ மஹாஸந்நிதானம் அவர்கள் ஸத்ப்ரதிபக்ஷ லக்ஷணத்தில் பூர்வபக்ஷம் சொல்ல கொல்லப்புடி கோபால கிருஷ்ண மூர்த்தி அவர்கள் ஸித்தாந்தம் சொன்னார்கள். 21ம் தேதி வித்வான் கோபால கிருஷ்ண மூர்த்தி அவர்களும் பங்களூர் சங்கர மடம் பாடசாலை ப்ரின்ஸிபால் போளூர் ராமபட்டரும் இதே விஷயத்தைத் தொடர்ந்து பேசினார்கள். ஸ்ரீ மஹாஸந்நிதானம் அவர்கள் இதில் நுட்பமான பல விஷயங்களை விளக்கினார்கள். இவ்வாறே பிரதிதினமும் ந்யாயம், வியாகரணம், பூர்வ மீமாம்ஸா, வேதாந்தம் முதலான சாஸ்திரங்களில் வாக்யார்த்த விசாரம் நடைபெற்றது.

ஹைதராபாத் ஸ்ரீ வீரேசுவர சாஸ்திரி, பம்பாய் ஸ்ரீ T.S. ஸ்ரீநிவாஸ சாஸ்திரி, பங்களூர் ஸ்ரீ P. K. சங்கர சாஸ்திரி, கொச்சி ஸ்ரீ ராமன் வாரியர், உஜ்ஜயினி ஸ்ரீ அநந்தராம சாஸ்திரி, திருப்பூணித்துரை ஸ்ரீ ராமன் நம்பியார், பங்களூர் ஸ்ரீ M. லக்ஷ்மீ நரஸிம்ம சாஸ்திரி, டெல்லி ஸ்ரீ அனந்தகிருஷ்ண சாஸ்திரி, பங்களூர் ஸ்ரீ அனந்த மூர்த்தி சாஸ்திரி, தும்கூர் விசுவநாத சாஸ்திரிகள், பங்களூர் ஸ்ரீ கிருஷ்ண ஜோய்ஸ், கொச்சி அச்யுத பொதுவாள், விநாயக சாஸ்திரிகள், தயாசங்கர வாஜபேயி, குந்தாபட்டர், காசி கமலகாந்த மிச்ரா, ராமப்ரசாத் த்ரிபாடி, காசி ஹிந்து யுனிவர்சிடி கஜாநந சாஸ்திரி, கல்கத்தா யுனிவர்சிடி ஸ்ரீவத்ஸலாஞ்சந பட்டாசார்யர், மதுஸூதன பட்டாசார்யர், விச்வபந்து பட்டாசார்யர், காசி ராமதேவ் த்ரிபாடி, சிருகுமணி ஸ்ரீ S. V. சுப்ரமண்ய சாஸ்திரிகள், மைசூர் ஸ்ரீ K. ராமசந்த்ர ஸோமயாஜி, காசி ஸ்ரீ V. S. ராமசந்த்ர சாஸ்திரிகள் முதலான பண்டிதர்கள் ஒவ்வொருவரும் அந்தந்த சாஸ்திரங்களில் பூர்வபக்ஷ சித்தாந்த விசாரம் செய்தார்கள்.... ... ஒவ்வொரு நாளும் ஸ்ரீ மஹாஸந்நிதானம் அத்யக்ஷராயிருந்து சீரிய முறையில் சபையை நிர்வஹித்து நடத்தியதும் பல சமயங்களில் விசாரிக்கப்படும் விஷயங்களை மிகத்தெளிவாக விளக்கியதும் பண்டி–தர்களுக்கு உத்ஸாகத்தையும் பரமாநந்தத்தையும் கொடுத்தது ...'' [46]

*1966ம் ஆண்டு டிசம்பர் மாதம் புதுதில்லியில் நடந்த வித்வத் ஸபையைப் பற்றி ஸ்ரீ சங்கர க்ருபா இதழில் கீழ்க்காணும் குறிப்பு*

---

[46] *ஸ்ரீ சங்கர க்ருபா மலர்* 8, *இதழ்* 5 (நவம்பர் – டிசம்பர் 1966) ப. iv-v

*உள்ளது:*

"... ஸ்ரீ சங்கர வித்யா கேந்திரத்தின் ஆதரவில் புதுதில்லியில் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ராவ் மாளிகையில் பெரிய வித்வத் ஸதஸ் சிருங்கேரி ஜகத்குரு அவர்கள் ஆசியால் டிஸம்பர் 14 முதல் மூன்று நாட்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தில்லியிலுள்ள முப்பது வித்வான்களும் நாட்டின் மற்ற இடங்களிலிருந்து வந்த பதினேழு வித்வான்களும் இதில் பங்கு எடுத்துக் கொண்டனர், பிரமுகர்களாகத் திகழ்ந்தவர்களில் தில்லி மஹாமஹோபாத்யாய பரமேச்வராநந்த சாஸ்திரி, பஞ்சாபிலிருந்து வந்த சாருதேவ சாஸ்திரி, மைஸூர் ராமசந்திரார்யார், அஸ்ஸாம் V. C. கோஸ்வாமி, உதயபுரி Dr. R. C. த்விவேதி, அயோத்யா ருத்ரப்ரஸாத் அவஸ்தி, தில்லி Dr. R. C. பாண்டே, பீஹார் பண்டித மணிநாத ஜா முதலியோர்களைக் குறிப்பிடலாம். ... 'உண்மை நன்கு வெளிப்படும் ரீதியில் விவாதம் அமையவேண்டும். பிறரை ஜயிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு மட்டும் வியவஹாரம் செய்வது உசிதமில்லை' என்று ஸம்ஸ்க்ருதத்தில் உபதேசித்து ஸ்ரீ ஜகத்குரு ஸதஸைத் துவக்கி வைத்தார்கள். நியாயம், வியாகரணம், மீமாம்ஸை, வேதாந்தம், ஆகிய சாஸ்திரங்களில் சர்ச்சைகள் நடந்தன. 'வேதம் அபௌருஷேயம்', 'ஆத்மா ஒன்றே' என்ற விஷயங்கள் நன்கு விசாரிக்கப் பட்டன. ..." [47]

*1967ம் ஆண்டு தில்லியில் சங்கர ஜயந்தியை முன்னிட்டு நடந்த ஸபையைப் பற்றிய குறிப்பு கீழே:*

"... (புதுதில்லியில்) மாபெரும் நிகழ்ச்சிகள் இரண்டு. அவை மே 10 முதல் 14 வரை வெற்றிகரமாக நடந்த சங்கர ஜயந்தியும் வித்வத்ஸதஸ்ஸும். நாட்டின் பல பகுதிகளிலிருந்து கூடிய வ்யுத்பன்னர்கள் அவர்கள் உத்ஸாகத்தில் தில்லி உஷ்ணத்தையா லக்ஷியம் செய்வார்கள்! தினம் ஒருவர் ஊக்கத்துடன் பூர்வபக்ஷம் சொல்ல, மற்றும் சிலர் சாதுர்யமாகச் சர்ச்சை செய்து ஸித்தாந்தத்தை ஸ்தாபித்தார்கள். சர்ச்சையின் இறுதியில், அது வியாகரணமோ, அத்வைத ஸித்தாந்தமோ, வேதம் அல்லது உபநிஷத் பாஷ்யமோ எல்லாவற்றையும் ரசமாக உபஸம்ஹாரம் செய்தார்கள் ஜகத்குரு. ..." [48]

[47] *ஸ்ரீ சங்கர க்ருபா, மலர்* 8, *இதழ்* 7 (ஜனவரி – பிப்ரவரி, 1967)

[48] *ஸ்ரீ சங்கர க்ருபா, மலர்* 8, *இதழ்* 12 (ஜூன் – ஜூலை, 1967)

*வித்வத் ஸபை முதலிய அவைகளில் பண்டிதர்கள் வாதப் பிரதிவாதங்களில் உற்சாகம் காட்டுவது இயல்பாயினும், ஒரு சர்ச்சையின் முக்கிய குறிக்கோள் அறிவை மேம்படுத்துவது தான் என்பதில் ஆசார்யாள் மிகவும் கவனமாக இருந்தார். தில்லியில் நடந்த ஸபையில், ‘‘உண்மை நன்கு வெளிப்படும் ரீதியில் விவாதம் அமைய வேண்டும். பிறரை ஜயிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு மட்டும் வியவஹாரம் செய்வது உசிதமில்லை’’ என்று அவர் கூறியதை நினைவில் கொள்ள வேண்டும். இந்த விஷயத்தைக் கீழே பதிவு செய்யபடும் நிகழ்விலிருந்தும் அறிகிறோம்:*

‘‘... நியாய சாஸ்திரத்தில் வல்லவரான கொச்சி மஹாராஜாவுக்கு ஒரு சமயம், அந்த சாஸ்திரத்தில் ஒரு ஐயம் எழுந்தது. அவருடைய ஐயத்தை ஒரு கடிதத்தில் எழுதி ஒரு பண்டிதர் மூலமாக ஆசார்யாளிடம் தெரிவித்தார். அச்சமயம் ஆசார்யாள் தலைமையில் ஒரு வித்வத் சபை நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆசார்யாள் மஹாராஜாவின் கடிதத்தை பார்த்து, அங்கே குழுமியிருந்த பண்டிதர்களில் ஒருவரை அக்–கேள்வியைப் படிக்கச் சொல்லி, அந்த விஷயம் சம்பந்தமாக வாதத்தைத் துவக்கினார். ஒருவர் பின் ஒருவராக அங்கே இருந்த அறிஞர்கள் தத்தம் விளக்கங்களைக் கூறினர். ஆனால், எவருடைய விளக்கமும் ஏற்புடையதாக இல்லை; மாத்தூர் ஸ்ரீ வேங்கடேச்வர சாஸ்திரிகள் (இவர் ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளிடம் தர்க்கம் பயின்று மைசூர் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றியவர்), கல்கத்தா–விலிருந்து வந்திருந்த சிறந்த பண்டிதர் ஸ்ரீ மதுஸூதன பட்டாசார்யர் முதலியவர்களின் விளக்கங்களும் மற்ற பண்டிதர்களின் ஆட்சே–பணைகளினால் நிராகரிக்கப்பட்டன. இப்படி இந்த விவாதம் முடிவுக்கு வராமல் வெகு நேரம் நடைபெற்றது. அந்த சமயத்தில் ஆசார்யாள், பண்டிதர்கள் எல்லோரும் இதைப் பற்றி யோசித்து அடுத்த நாள் (அது சபை நிறைவுறும் நாள்) இந்த கேள்விக்குத் தங்கள் விடைகளுடன் வந்து மஹாராஜா எழுப்பிய ஐயத்துக்குத் தீர்வு காணவேண்டும் என்று கூறினார்.

மறு நாள் சபை கூடிய பின், பண்டிதர்கள் பலர் தாம் யோசித்து வைத்த விளக்கங்களைக் கூறினர். ஆனால் ஒரு விளக்கமாவது அவையில் உள்ள அறிஞர்களின் முழு உடன்பாட்டைப் பெறவில்லை. இந்த சமயத்–

தில், ஸ்ரீ மஹாஸந்நிதானம் குறுக்கிட்டுத் தமக்கே உரித்தான பாணியில் ஒரு பொருத்தமான விடையைக் கூறினார். ஆசார்யாளின் சிறப்பான விடையைக் கேட்ட பண்டிதர்கள் மிகுந்த வியப்படைந்தனர். மாத்தூர் ஸ்ரீ வேங்கடேச்வர சாஸ்திரிகள் அவையில், 'ஆசார்யாளால் மட்டுமே இப்படி விடையளிக்க முடியும். அவர் சாரதாம்பளின் மனித வடிவமல்–லவா?' என்று வியந்து கூறினார். அந்த சபையில் கூடியிருந்த பண்டி–தர்களுக்கு இது ஒரு மறக்க முடியாத சம்பவமாக அமைந்தது. ..." [49]

*இதில் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்று உண்டு. சர்ச்சை நடந்த முதல் நாள் அன்றே, ஆசார்யாள் தனது அறிவாற்றலை உபயோகித்து சரியான விடை கூறியிருக்கலாம். ஆனால் ஆசார்யாள் அவ்வாறு செய்யவில்லை. இரண்டாவது நாளன்றும், அவை மீண்டும் கூடிய பின், முதலில் எல்லோருக்கும் வாய்ப்பு கொடுத்த பின்னரே தான் தமது விளக்கத்தை அளித்தார். இதுவும் அவரது பெருந்தன்மையைக் காட்டுகிறது.*

## மஹாப்ரக்ஞை – கல்வியறிவும் ஆன்மிக நெறியும்

*இதுவரை, ஆசார்யாளின் கல்விசார் அறிவாற்றல், அவருடைய ஆளுமையில் "பெரும்பண்டிதர்", "ஆசிரியர்" என்ற கூறுகளாக எப்படி வெளிபட்டது என்பதை மட்டும் பார்த்தோம். இங்கே நாம் இந்த இயலின் முன்னுரையாகப் பதிவு செய்த நிகழ்வுகளை நினைவுகூர வேண்டும். லெக்கெட் என்ற மேலை நாட்டு அறிஞருடன் சாஸ்திரம் தொடர்பாக உரையாடச் சென்ற ஆசார்யாள், அதற்குச் சற்று முன்னர் ஒரு இளம் பிரம்மசாரிக்கு ஆன்மிகப் பாதையில் வழியெடுக்கச் செய்ததைப் பார்த்தோம். சாஸ்திரங்களைக் கற்பிக்கும் ஆசிரியர், அவற்றின் பொருளைக் கற்றோர் முன் விரித்துக் கூறும் ஆற்றல் பெற்ற பண்டிதர் என்பது மட்டுமல்லாமல் ஆசார்யாள் ஒரு ஆன்மிக குருவாகவும் இருந்தார். இம்மூன்று கூறுகளும் ஆசார்யாளின் ஆளுமையில் எப்படி ஒன்றோடொன்று பிணைந்திருந்தன என்பதைச் சில உதாரணங்களின் துணை கொண்டு பார்ப்போம்.*

*வேதாந்தம் கற்பதன் பயன் மோக்ஷத்தை அடைவதே; அதை விடுத்து*

---

[49] "The Multifaceted Jivanmukta" என்ற நூலிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது; ப. 339-340

*வேதாந்தம் கற்பிப்பது அல்லது உரையாற்றுவது முதலியவற்றை மட்டும் செய்வதால் பெரிய பயன் ஒன்றும் இல்லை என்பதை ஆசார்யாள் உறுதியாகக் கருதினார். இது தொடர்பாக ஆசார்யாள் தமது உபன்யாஸம் ஒன்றில் கூறியதைப் பார்ப்போம்:*

"**...** மனத் தூய்மையில்லாமலும், சாஸ்திரத்தில் கூறப்பட்டவற்றை நடைமுறைக்குக் கொண்டு வராமலும் இருக்கும் ஒருவன் சாஸ்திரத்திற்கு விளக்கம் கொடுத்தால் அவனுடைய விளக்கம் செய்யும் திறமை மோக்ஷத்தைத் தராமல் அவனுடைய வயிற்றுப் பிழைப்புக்காக மட்டும் பயன்படுகிறது**.** ஒருவனுக்கு சாஸ்திரத்தில் நல்ல ஞானம் இருந்தாலும், 'அமரகோசம்' முதலியவற்றை அவன் நன்கு கற்றிருந்–தாலும், இராமாயணத்தைப் படிக்கும் முறையை வைத்துக்கொண்டு அதே வகையில் மஹாபாரதத்திற்கு விளக்கம் அளிக்கும் சாமர்த்தியமும், மஹாபாரதத்தைப் படிக்கும் வகையில் இராமாயணத்–திற்கு விளக்கம் தரும் திறமையும் இருப்பினும் இவையெல்லாம் தனக்குப் புகழை உண்டாக்குவதற்குப் பயன்படுமே தவிர ஆத்ம ஞானத்திற்குப் பயன்படாது**. ...**" [50]

*அதே போல்,*

"**...** 'நான் பரப்பிரம்மம்' என்ற உண்மையை எவனொருவன் தன்னுடைய அனுபவத்தில் உணர்கிறானோ அவன் தான் உண்மையான அத்வைதி**.** அத்வைத தத்துவம் சரியானது என்று கொள்கையளவில் நிற்பவரும் அத்வைதிகள் என்றே கூறப்படுகிறார்கள்**.** ஆனால் இங்கே 'அத்வைதி' என்ற சொல் ஆகுபெயர் அளவிலேயே **(**அத்வைத தத்துவத்தை ஏற்றுக் கொள்பவன் அத்வைதி**)** நின்றுவிடுகிறது **...**"

*என்றும் ஆசார்யாள் வேறோரிடத்தில் கூறியுள்ளார்.[51] மேலே குறிப்பிடப்பட்டவர்களைப் போல் இல்லாமல், ஆசார்யாள் ஒரு ஜீவன்முக்தராகவும், பண்டிதராகவும் விளங்கினார். இதனுடன் அவரது இயல்பான கருணையும் சேர்ந்திருந்த காரணத்தால், தம்மை அணுகு-வோரை முக்தி நெறியில் வழிநடத்தவேண்டும் என்பதில் உறுதியாக*

[50] *"முத்தி நெறி", ப.* 107

[51] *"மெய்ஞான விளக்கவுரைகள்", ஸ்ரீ வித்யாதீர்த்த ஃபவுண்டேஷன் சென்னை,* 2013, *ப.* 34

*இருந்தார். இந்த உறுதி அவர் பாடம் கற்பிப்பதில் எப்படி வெளிபட்டது என்பதை இப்பொழுது பார்ப்போம்:*

"... பண்டிதர்களைப் போல் தர்க்க சாஸ்திரமே குறிக்கோள் என்று இல்லாமல், மனிதர்களின் ஆன்மிக முன்னேற்றமே முக்கியம் என்று ஆசார்யாள் கருதினார். எனவே, அவருடைய சிஷ்யர்களுக்காக அவர் நடத்திய பிரத்யேகமான வகுப்புகளிலும், பொது இடங்களில் அவருடைய அனுக்ரஹ பாஷணங்களிலும் வேதாந்த சாஸ்திரத்தை விரித்துரைப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். 1970களின் பிற்பகுதியில் அவர் கீழ்க்கண்ட நூல்களைத் தமது வகுப்புகளில் விரிவாகக் கற்பித்தார்: பகவத் கீதை, அதற்கு சங்கர பகவத்பாதர் எழுதிய உரை, ஆனந்தகிரி எழுதிய விளக்கவுரை; தைத்திரீய உபநிஷத் – பகவத்–பாதரின் பாஷ்யமும், அச்யுத க்ருஷ்ணானந்த தீர்த்தரின் 'வனமாலா' என்ற விளக்கவுரையும்; பிரம்ம சூத்திரம் – பகவத்பாதரின் பாஷ்யம், மற்றும் ராமானந்த ஸரஸ்வதியின் 'ரத்னப்ரபா' என்ற விளக்கவுரையும், பூர்ணானந்தர் இந்த விளக்கவுரைக்கெழுதிய உரை. இவ்வகுப்புகள் அவருடைய சிஷ்யரும் இன்னாளைய மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளுக்காகவே நடத்தப்பட்டாலும், துறவிகளும் பண்டிதர்களும் உள்ளிட்ட பலர் இவ்வகுப்புகளில் அமரும் பேறு பெற்றனர். என்னுடைய நல்லூழினால் இணையற்றனவும், அமிழ்தனை–யவையுமான இவ்வகுப்புகளில் நானும் கலந்து கொண்டேன். ஆசார்யாளின் விளக்கங்கள் மிகத் தெளிவாக இருக்கும். தேவையற்ற சொல் ஒன்று கூட இருக்காது என்பதை நிச்சயமாகக் கூறுவேன். விளக்கம் கூறும் போது பல இடங்களில் அவருடைய ஆன்மிக சாதனையும் நிஷ்டையும் அந்த விளக்கங்களுக்குப் பின்புலமாக அமைந்திருப்பது நன்கு விளங்கும். ..." [52]

*ஆசார்யாளின் ஆன்மிகப் பயிற்சி அவருடைய விளக்கங்களில் எதிரொலிப்பதை அவரே ஓரிடத்தில் கூறியுள்ளார். "ஜகத்குரு பதிலளிக்கிறார்" என்ற தொகுப்பில் ஆசார்யாள் பல விஷயங்கள் குறித்து விடையளித்துள்ளார். அந்த தொகுப்பில் 'நிர்விகல்ப ஸமாதி'*

[52] "The Multifaceted Jivanmukta" *என்ற நூலிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது*; ப. 337-338

*என்ற தலைப்பில் ஆசார்யாள் சுமார் இருபது கேள்விகளுக்கு விடை கூறியுள்ளர். அந்த உரையாடலின் இறுதியில் சிஷ்யர் கேட்கும் கேள்வியையும் ஆசார்யாளின் விடையையும் கீழே காணலாம்:*

**சிஷ்யர்:** "ஆசார்யாள் தமது சொந்த அனுபவத்திலிருந்து நிர்விகல்ப ஸமாதி பற்றி ஏதாவது கூறுவார்களா**?**"

**ஆசார்யாள் (**சிரித்துக்கொண்டே**):** "இவ்வளவு நேரமும், சாஸ்திரத்தில் கூறப்பட்டவற்றை மட்டும் கிளி போல் ஒப்பித்துக் கொண்டிருந்தேன் என்றா நீ நினைக்கிறாய்**?**" [53]

*கற்கும் போது கசடறக் கற்றல் வேண்டும்; அதன் பின், அதற்குத் தக்கவாறு நடக்க வேண்டும் என்பது பொதுவிதி. ஆனால், ஆசார்யாளின் ஆன்மிகப் பயிற்சியில் இந்த வரிசை முறை மாறியிருந்தது. ஆசார்யாளுக்கு தர்க்கம்/ நியாய சாஸ்திரத்தில் பாடம் 1935ம் ஆண்டு துவங்கி 1940ம் ஆண்டு நிறைவுற்றது. அதன் பின்னரே அவர் தமது குருவிடம் முறையாக வேதாந்த பாடம் கேட்கத் தொடங்கினார். ஆனால் அவர் ஸமாதி யோகத்தின் உச்சியை எட்டிப் பரம்பொருளில் நிலைபெற்றதோ 1935ம் ஆண்டில்! இது இவ்வாறி-ருந்தாலும் ஆசார்யாளின் ஸமாதி அப்பியாசம் சாஸ்திரத்தை ஒட்டியே இருந்தது என்று அவரே தெளிவுபடுத்தியுள்ளார். உதாரணமாக, தைத்திரீய உபநிஷத்தில் உள்ள வாக்கியம் ஒன்றன் அடிப்படையில் ஆத்ம விசாரம் செய்ததைப் பற்றிக் கூறும் போது,*

"**...** அப்பொழுது நான் ஸம்ஸ்க்ருதம் அறிந்திருந்தாலும், இறைவனின் அருளினாலேயே உபநிஷத் வாக்கியங்களின் உட்கருத்தும் அவை உணர்த்துபவையும் எனக்குச் சரியாகப் புரிந்தன**.** ஆசார்யாள் (ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்) எனக்கு தைத்திரீய உபநிஷத் பாஷ்யம் கற்பிக்கும் போது தான், நான் முன்னர் புரிந்து கொண்டதற்கும் பாஷ்யத்திற்கும் எந்த முரண்பாடும் இல்லை, என்பதை அறிந்தேன்"

---

[53] *ஜகத்குரு பதிலளிக்கிறார், ஸ்ரீ வித்யாதீர்த்த ஃபவுண்டேஷன்,* சென்னை 1981;2003, ப. 112

*என்று கூறியுள்ளார்.*[54] *அதே போல், ''த்ருக் த்ருச்ய விவேகம்'', ''ஸரஸ்வதி ரஹஸ்ய உபநிஷத்'' முதலிய நூல்களில் கூறப்படும் ஸமாதிப் பயிற்சியை ஆசார்யாள் அந்நூல்களைப் படிக்கும் முன்னரே செய்திருந்தார். இதைப் பற்றி அவரே,*

''**...** (இந்த ஸமாதி பற்றிய) சுலோகங்களை ஸரஸ்வதி ரஹஸ்ய உபநிஷத்திலும், த்ருக்–த்ருச்ய விவேகத்திலும் பல காலம் கழித்தே படித்தேன். அப்படிப் படிக்கும் போது தான், ஸவிகல்ப ஸமாதியில் இத்தனை வகைகள் உள்ளன என்பதையும் அவை எல்லாவற்றையும் நான் முறையாகப் பயிற்சி செய்திருந்தேன் என்பதையும் அறிந்தேன்''

*என்று கூறியுள்ளார்.*[55]

*ஆன்மிக நெறியில் செல்பவர்களுக்குப் பாடம் சொல்வதில் ஆசார்யாள் மிகவும் ஊக்கம் கொண்டிருந்தார். அவர்களுக்குப் பாடம் சொல்லும் போது தர்க்க வாதங்களுக்கு அவ்வளவு முக்கியத்துவம் தரமாட்டார். அந்த வகுப்புகளில் வேதாந்த மதத்தின் ஸித்தாந்தத்தைக் கற்பிப்பதே அவரது முக்கிய நோக்கமாக இருக்கும் என்று ஆசார்யாளின் சிஷ்யர் ஸ்ரீ வேங்கடஸுப்பா ராவ் தமது அனுபவமாகப் பதிவு செய்துள்ளார்:*

''**...** ஆசார்யாளிடம் சம்பிரதாயமான முறையில் வேதாந்த பாடம் கேட்க வேண்டும் என்ற அவா ஒரு முறை என்னுள் எழுந்தது. நான் சிருங்கேரி சென்று என்னுடைய இந்த ஆசையை ஆசார்யாளிடம் தெரிவித்தேன். ஆசார்யாளும் உடனடியாகச் சம்மதித்து பிற்பகல் மூன்று மணிக்குப் பாடம் துவங்கும் என்று கூறினார். வகுப்பில் என்னுடன் சில ஸந்யாஸிகளும், சில பண்டிதர்களும் சகமாணவர்களாக இருந்தனர். ஆசார்யாள், சங்கர பகவத்பாதர் இயற்றிய ''ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம்'' என்ற நூலைப் பாடம் சொல்லத் துவங்கினார். முதல் சுலோகத்திற்கு அன்று மிகத் தெளிவாக விளக்கம் அளித்து, இரண்டாவது சுலோகத்தை அடுத்த நாள் கற்பிப்பதாகக் கூறினார். மறு நாள், அவருடைய தொண்டை கட்டியிருந்தது. அப்படி இருந்தாலும், 'நீ இதற்காக பெங்களூரிலிருந்து வந்திருக்கிறாய். அதனால், கட்டாயம்

---

[54] "Yoga, Enlightenment and Perfection" *என்ற நூலிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது;* ப. 156

[55] மேலது ப. 166

பாடம் சொல்லுவேன்’ என்று பாடத்தைத் துவக்கினார். வகுப்பு நடக்கும் போது, ஒரு முதிய ஸந்யாஸி தர்க்க சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்ட சில கேள்விகளை எழுப்பினார். அதற்கு ஆசார்யாள், ‘இந்த வகுப்பை வேங்கடஸுப்பாராவிற்காக நடத்துகிறேன். எனவே, அவருக்கு எது பலன் தருமோ அதை மட்டும் பாடம் சொல்கிறேன். தர்க்கம் அவருக்கு முக்கியம் இல்லை. தர்க்க சாஸ்திரத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு பாடம் கேட்க உங்களுக்கு விருப்பமானால் இந்த ஒரு கேள்விக்கு மட்டும் பல விதமான பதில்கள் கூறிப் பல நாட்களுக்குப் பாடம் சொல்லலாம்’ என்று கூறிவிட்டார். மூன்றாம் நாளன்று, ஆசார்யாள் என்னிடம், ‘உனக்கு இது போதும். இன்னும் சொல்லப் போனால், முதல் நாள் சொன்னதே உனக்குப் போதுமானது. ஆனால் ‘இரண்டாம் நாள் பாடம் தடைபடுவது நல்ல அறிகுறியல்ல’ என்ற எண்ணம் உனக்கு வரக்கூடாதே என்பதற்காக நேற்று பாடம் சொன்னேன்’ என்று கூறினார்.” [56]

## மஹாப்ரக்ஞை – கல்விசார் அறிவாற்றலுக்கு அப்பால்

*இதுவரை ஆசார்யாளிடத்தில் “மஹாப்ரக்ஞை” என்கிற குணம் கல்வியறிவு, கற்றோர் அவையில் விரித்துரைக்கும் ஆற்றல், கற்பித்தல் என்ற மூன்று பரிமாணங்களாக வெளிப்பட்ட விதத்தைக் கூறினோம். இனி, ஒரு பீடாதிபதி என்ற முறையில் ஆசார்யாள் செய்தவை பல. உதாரணமாக, அவர் பீடாதிபதியாகப் பொறுப்பேற்ற பொழுது மடத்தின் நிதி நிலைமை மோசமாக இருந்தது. சிருங்கேரிக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கான வசதிகள் பல வேண்டியிருந்தன. மடத்தின் நிர்வாகம் அச்சமயம் மைசூர் அரசாங்கத்திடம் இருந்ததால் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டிய கட்டாயமும் இருந்தது. இவை எல்லாவற்றையும் ஆசார்யாள் தாம் பீடாதிபதியான ஒரு சில ஆண்டுகளுக்குள் சீர்திருத்தினார் என்று தெரிகிறது. மேலும், திட்டம் போடுவதிலிருந்து செய்து முடிப்பது வரை இந்த சீர்திருத்தங்களைச் செயல்படுத்தியதில் ஆசார்யாள் பெரும் பங்கு வகித்தார். நிர்வாகச்*

---

[56] “The Multifaceted Jivanmukta” *என்ற நூலிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது; ப.* 340

சீர்திருத்தம், புதிய கட்டுமானப் பணிகள், வேளாண்மை முறைகளில் மாற்றங்கள் என்று தாம் முறையாகப் பயிலாத பல விஷயங்களில் அவருடைய அறிவைச் செலுத்தினார். அப்படியாயின் அவருடைய அறிவாற்றலைப் பற்றி நாம் அர்த்தமுள்ள வகையில் பேச வேண்டுமென்றால் கல்வியறிவு என்ற பரிமாணத்திற்கு அப்பால் செல்ல வேண்டும். அதை இப்பொழுது செய்ய விழைவோம்.

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன், ‘‘அறிவாற்றல் என்றால் என்ன?’’ ‘‘அதை அறிவது எப்படி?’’ என்ற கேள்விகளுக்கு விடை ‘‘அறிவாற்றல் குறீயீடு’’ (Intelligence Quotient or IQ) என்பதே. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக உளவியலாளர் பலரும் இந்த சோதனையைக் கடுமையாக விமர்சித்துள்ளனர். அவர்களுடைய வாதங்களின் அடிப்படை, அறிவாற்றல் குறியீட்டுச் சோதனை மட்டும் ஒருவரின் அறிவாற்றலைக் குறிக்குமா என்ற கேள்வியே. மனிதர்களின் அறிவாற்றல் பல விதங்களில் வெளிப்படுகிறது. ஆனால், இந்தச் சோதனை முறை தொடக்கக் கணிதம் மற்றும் தர்க்கம் இவற்றை அடிப்படையாகக் கொண்டது; அதாவது இச்சோதனை முறை ஒரு குறிப்பிட்ட கல்வி கலாசாரத்தைச் சார்ந்தே இருக்கிறது. இந்த கலாசாரத்தை ‘‘முறைசார் கல்வி’’ என்று கூறலாம் (சாஸ்திரங்களைப் பயில்வதும் இந்த கலாசாரத்தைச் சேர்ந்தது தான்). எனவே இந்தச் சோதனையை மட்டும் அடிப்படையாக வைத்து எல்லா மனிதர்களின் அறிவாற்றலையும் மதிப்பீடு செய்ய முடியாது என்பதே இவர்களுடைய வாதம். உதாரணமாக, அறிவியலில் பட்டப் படிப்பு படித்த மாணவரோ தர்க்க சாஸ்திரம் பயின்றவரோ இச்சோதனையில் உயர்ந்த குறியீட்டைப் பெற முடியும். ஆனால், பல ஆண்டுகள் இசை பயின்று அதன் நுணுக்கங்களை அறிவதோடு மட்டுமின்றி அழகுணர்ச்சியுடன் வெளிப்படுத்தும் கலைஞர் ஒருவர் இதில் தேர்ச்சி பெறாமல் இருக்க வாய்ப்பு அதிகம். அதே போல், தோட்டக் கலையில் வல்லவர் ஒருவரும் இச்சோதனையில் தேர்ச்சி பெறாமல் இருக்கலாம். இப்படிப்பட்டவர்களுக்கு அறிவாற்றல் (intelligence) இருக்கிறதா இல்லையா என்பதே கேள்வி. நன்கு கல்வி கற்றவரை நாம் ‘‘அறிவாளி’’ என்கிறோம். ஆனால், பொதுவாக நல்ல தோட்டக்-காரனையோ, நல்ல பாடகனையோ அவ்விதம் குறிப்பதில்லை. ‘‘நல்ல திறமைசாலி’’ என்றே கூறுகிறோம் (இக்காலத்துச் செவ்விய தமிழில்

கூறவேண்டுமாயின், "நல்ல டேலண்ட் சார்"). திறமை அல்லது தகவு (competence) என்பது அறிவின் வெளிப்பாடா, அல்லது வேறொன்றா? "அறிவு" என்று பொதுவாக ஏதாவது உண்டா? அல்லது பல்வேறு திறமைகளுக்கு அடிப்படையாக நூற்றுக் கணக்கான அறிவுகள் உண்டா?" இது போன்ற பல கேள்விகளைக் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக உளவியலாளரும் (psychologists), புலப்பாட்டியலாளரும் (cognition scientists) ஆராய்ச்சி செய்து வருகின்றனர். இந்த விஷயம் சம்பந்தமான எல்லா வாதப் பிரதிவாதங்களை நாம் இங்கே கூற இயலாது; கூற வேண்டிய அவசியமும் இல்லை. எனவே நாம் கையாளும் விஷயம் – ஆசார்யாளின் பன்முக ஆளுமைக்கும் அவரத அறிவாற்றலுக்கும் உள்ள தொடர்பு – மட்டும் நன்கு விளங்கச் சில முக்கியமான கருத்துகளை முன்வைப்போம்.

முதலில் அறிவாற்றலுக்கும் தகவிற்கும் என்ன தொடர்பு என்பதைப் பார்ப்போம். இதைப் பற்றிக் கல்விசார் உளவியலில் பிரபல ஆராய்ச்சியாளரான பேராசிரியர் ஹௌவர்ட் கார்ட்னரின் கோட்-பாட்டைச் சுருக்கமாகச் சொல்வோம்.[57] அறிவாற்றல் என்றால் என்ன என்ற கேள்விக்கு கார்ட்னர் விடையாகக் கூறுவது இது: "அறிவாற்றல் என்பது புதிர் / சிக்கல் / பிரச்னை ஆகியவற்றுக்கு ஒரு (அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட) கலாசாரக் கட்டமைப்பில் உயர்வாக மதிக்கப்படும் விடையைக் காணும் திறன்; அல்லது ஒரு (அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட) கலாசாரக் கட்டமைப்பில் உயர்வாக மதிக்கப்படும் புது விளைபொருள் ஒன்றை உருவாக்கும் திறன்." [58] இந்த விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால் ந்யாய சாஸ்திரத்தில் உள்ள சிக்கலான வினாக்களுக்கு அவையில் பதிலளிப்பது அறிவாற்றலின் வெளிப்பாடு; அதே போல் ஒரு கணிணியின் துணை கொண்டு புதிய இசை வடிவங்களை உருவாக்குவதும் அறிவாற்றலின் வெளிப்பாடு தான். முதல் உதாரணம் ஒரு குறிப்பிட்ட கலாசாரக் கட்டமைப்பில் (பாரதீய சாஸ்திரங்களை உயர்வாக மதிப்பிடும் கட்டமைப்பில்)

[57] Howard Gardner, "Frames of Mind – The Theory of Multiple Intelligences"; Basic Books, New York 1983 (2011)

[58] மேலது ப. xxvii

உயர்வாகக் கருதப்படுகிறது. இரண்டாவது உதாரணம் வேறு விதமான கலாசாரத்தில் மதிக்கப் படுகிறது. ஆனால் இரண்டும் அறிவாற்றலின் வெளிப்பாடு தான் என்பது கார்ட்னரின் கோட்பாடு. அப்படியானால் பல நூறு அல்லது பல ஆயிரம் விதமான அறிவாற்றல்கள் உண்டா என்று கேட்டால் கர்ட்னரின் பதில் “இல்லை” என்பதே. அவருடைய கோட்பாட்டின் படி, மனித இனத்திற்குப் பொதுவான அறிவாற்றல்கள் ஏழு; மற்றவற்றை இவற்றினுள்ளோ இவற்றின் சேர்க்கையினுள்ளோ அடக்கிவிடலாம் என்பது அவருடைய வாதம் (இந்த ஏழுடன் ஓரிரண்டு சேர்க்கப்படலாம் என்றும் கூறுகிறார். அது நமக்கு முக்கியமல்ல.) கார்ட்னரின் ஏழு அறிவாற்றல்கள் பின்வருமாறு: மொழிசார் அறிவாற்றல் (linguistic intelligence), இசைசார் அறிவாற்றல் (musical intelligence), தர்க்கம் – கணிதம் சார்ந்த அறிவாற்றல் (logical-mathematical intelligence), வெளிசார் அல்லது பார்வை சார்ந்த (spatial or visual intelligence) அறிவாற்றல் , உடல்சார் இயக்கவின் அறிவாற்றல் (bodily kinesthetic intelligence) தன்சார்ந்த மற்றும் பிறர்சார்ந்த அறிவாற்றல் (intra and inter personal intelligences). இந்தப் பாகுபாட்டை உறுதி செய்ய கார்ட்னர் நரம்பியல் மற்றும் உளவியல் ஆய்வுகள், தனி நிகழ் ஆய்வுகள் (case studies) ஆகியவற்றை ஆங்காங்கே மேற்கோள்களாகக் காட்டுகிறார். அவற்றின் விவரங்களை கார்ட்னரின் நூல்களில் பார்க்கலாம். இங்கே கார்ட்னர் கூறும் சில விஷயங்களை மட்டும் நாம் கருத்தில் கொண்டு அதன் பின்னர் ஆசார்யாளின் அறிவாற்றலைப் பற்றி அவற்றின் அடிப்படையில் பேச முற்படுவோம்.

முதலாவதாக, எதற்கு இந்த பாகுபாடு என்றால் மனிதர்களின் தகவுகளைப் பாகுபடுத்த வேண்டிய அவசியம் (கல்விமுறைச் சீர்திருத்தம் முதலிய காரணங்களினால்) உள்ளது. மேலும், சில மனிதர்கள் ஒரு விஷயத்தில் சிறந்து விளங்குகின்றனர்; இன்னும் அரியவர் சிலர், ஒன்றுக்கு மேற்பட்டவற்றில் சிறப்பாகச் செயலாற்றுகின்றனர். ஆசார்யாளே இதற்கு உதாரணம் என்று முன்னால் சொன்னோம். கார்ட்னரின் கருத்தில் இது “அறிவாற்றலின் அறிகுறி”. இதுவும் அறிவாற்றலின் பாகுபாட்டை வலியுறுத்துகிறது.

இரண்டாவதாக, மனிதர்களின் எல்லாத் தகவுகளையும் இந்த ஏழு

அறிவாற்றல்களுக்குள் அடக்கலாமா என்ற கேள்வி. ஏழா, எட்டா என்பது அவ்வளவு முக்கியமல்ல என்பது கார்ட்னரின் கருத்து (நூறோ ஆயிரமோ இல்லை; ஒன்றே என்பது நிச்சயமாக இல்லை). ஒரு மனிதனின் அறிவிற்குக் கணிணியை உவமையாகக் கூறுவது இப்பொழுது இயல்பாகி விட்டது. "அவருக்கு கம்ப்யூட்டர் மூளை" என்று வழக்கிலும் சொல்கிறோம். ஆனால் கார்ட்னரின் கருத்துப்படி, அறிவு என்பது ஒன்றுக்கு மேற்பட்ட கணிணிகளின் (ஓரளவிற்கு) சுயேச்சையான செயல்பாடு. பொதுவாக இந்தக் கணிணிகள் (அறிவாற்றால்கள்) ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்டே செயல்படுகின்றன. அதனால் ஒவ்வொன்றின் தன்னியக்கம் தெரிவதில்லை. ஆனால் சரியான ஆய்வுமுறைகளைக் கொண்டு நோக்கினால் இவற்றின் தனித்துவத்தை உணராலாம் என்பதே கார்ட்னரின் முடிவு. (நாம் முன்னர் கூறியது போல் கார்ட்னரின் ஆராய்ச்சி உளவியல், நரம்பியல் மற்றும் புலப்பாட்டியல் ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டது.)

மூன்றாவதாக, எந்த ஒரு குறிப்பிட்ட அறிவாற்றலின் வளர்ச்சியும் அடையாளம் காட்டக் கூடியதாக இருக்க வேண்டும். எல்லா மனிதர்களும் (இதில் அசாதாரணமானவர்களும் அடக்கம்) அந்த ஆற்றலின் பிறப்பிலிருந்து முழுமை வரை ஒரு வளர்ச்சிப் பாதையில் செல்கின்றனர். ஆதலால், அந்த ஆற்றலின் வல்லமை ஒருவருள் எப்படிப் படிப்படியாக வளர்கிறது என்பதைக் காணமுடியும். மேலும், எந்த அறிவாற்றலும் பொதுவாகத் தனிமையில் வளர்வதில்லை. எனவே அறிவாற்றல் எந்தச் சூழ்நிலையில் எந்த விதமாக வெளிப்படுகிறது என்பதையும் கூற இயலும். தவிரவும் அறிவாற்றல் என்பது ஒரு திறல் (potential) மட்டுமே. அது எல்லா நேரங்களிலும் வெளிப்பட வேண்டும் என்ற அவசியம் இல்லை.

இனி, பல அறிவாற்றல்களுக்கும் பன்முகத் தன்மை கொண்ட ஆளுமைக்கும் தொடர்பு என்ன என்பதைப் பார்ப்போம். பொதுவாக ஒருவருடைய அறிவாற்றலின் தாக்கம் அவரது ஆளுமையில் வெளிப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட அறிவாற்றல்கள் இருப்பின் அந்த ஆற்றல்கள் ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்டு வெளிப்படும் போது ஆளுமையில் வேறு பரிமாணங்கள் தோன்றுகின்றன. உதாரணமாக,

கணிதத்தில் வல்லவர் நல்ல பேச்சாளராகவோ எழுத்தாளராகவோ இருந்தால் அவருடைய ஆளுமையில் "கணித ஆராய்ச்சியாளர்" என்ற பரிமாணத்துடன் "கணிதத்தைச் சாதாரண மக்களுக்கு எடுத்துச் சென்றவர்" என்ற பரிமாணமும் உண்டாக வாய்ப்பு இருக்கிறது. கார்ட்னரின் கோட்பாட்டின் படி, கணிதத்தில் வல்லமை என்பது தர்க்கம்-கணிதம் சார்ந்த அறிவாற்றலின் அறிகுறி. ஆனால் அதைப் பலருக்கும் விளங்குமாறு உரையாற்றுவதோ அல்லது புத்தகங்கள் எழுதுவதோ மொழி சார்ந்த அறிவாற்றலின் அறிகுறி. முதலாவது ஆற்றல் மட்டும் இருந்தால் இரண்டாவதும் இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனால் ஒருவருக்கு இப்படி ஒன்றுக்கு மேற்பட்ட அறிவாற்றல்கள் இருந்தால் அவருடைய ஆளுமை பன்முகத் தன்மையாக இருப்பதற்கு வாய்ப்புகள் அதிகம் என்பதைப் புரிந்து கொள்ளலாம். இதுவே ஆளுமைக்கும் அறிவாற்றலுக்கும் உள்ள தொடர்பு. இனி, இதை ஒட்டி ஆசார்யாளின் அறிவாற்றல்(களைப்) பற்றிப் பேசுவோம்.

## மஹாப்ரக்ஞை – தர்க்கம் சார்ந்த அறிவாற்றல்

முதலில் தர்க்கம் – கணிதம் சார்ந்த அறிவாற்றலை எடுத்துக் கொள்வோம். இதில் முக்கியமான கூறுகள் நுண்மையாக்கம் (abstraction) மற்றும் காரண ஆய்வு (reasoning). ந்யாய (தர்க்க) சாஸ்திரத்திலும் இக்கூறுகள் முக்கியமானவை. ந்யாய (தர்க்க) சாஸ்திரத்தில் இந்த இரண்டு கூறுகளைக் கொண்டு நீண்ட வாதப் பிரதிவாதங்கள் தொடுக்கப் படுகின்றன. ந்யாய சாஸ்திரத்தில் ஆசார்யாளுக்கு இருந்த வல்லமை பற்றி அவருடைய கல்வியறிவைப் பற்றிப் பேசும் போது விவரமாகக் கூறினோம். அதனால் இந்த அறிவாற்றல் பற்றி இங்கே மீண்டும் பேச வேண்டிய அவசியம் இல்லை. தவிரவும், சாஸ்திர சர்ச்சைகளில் தர்க்கம் – கணிதம் சார்ந்த அறிவாற்றல் என்பது தனியாக வெளிப்படாது, மொழிசார் அறிவாற்றலுடன் சம்பந்தப்பட்டே வெளிவருகிறது. எனவே, நமது கவனத்தை மொழிசார் அறிவாற்றல் பக்கம் திருப்புவோம்.

## மஹாப்ரக்ஞை – மொழிசார் அறிவாற்றல்

மனித இனத்தில் பரவலாகக் காணப்படும் அறிவாற்றல் மொழிசார் அறிவாற்றலே. கார்ட்னர், இந்த அறிவாற்றலின் அடிப்படைக் கூறுகளாக ஒலியியல் (phonology), இலக்கண விதிகள் (syntax), சொற்-

பொருளியல் (semantics) மற்றும் வழக்கு (pragmatics) என்ற நான்கினைக் கூறுகிறார்.[59] பொதுவாக உலகில் உள்ள எந்த மனிதரும் இந்த நான்கும் சற்றும் இல்லாமல் திறம்படச் செயல்பட முடியாது. ஒரு சிறந்த புலவருக்கோ பேச்சாளருக்கோ இவை சிறப்பாக அமையும் என்பது வெளிப்படை. ஆனால் நம் போன்றவருக்கும் இவை ஓரளவு இருப்பதனாலேயே ஒரு நல்ல செய்யுளையோ ஒருவர் நன்றாக உரையாற்றுவதையோ ரசிக்க முடிகிறது. ஒரு சாதாரண மனிதருக்கே இந்த ஆற்றல் தேவையென்றால் மற்றவருக்கு உபதேசம் செய்யும் பொறுப்பு உள்ளவருக்கு இது தேவை மட்டுமல்ல, முக்கியமும் ஆகிறது. மேலும் பல்வேறு மொழிகள் பேசும் சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்ய வேண்டும் என்றால் இந்த ஆற்றல் ஒரு மொழியில் மட்டுமல்லாமல் ஒரு சில மொழிகளில் இருக்க வேண்டும்.

பொதுவாக, மொழிசார் அறிவாற்றல் நான்கு விதங்களில் பயன்படுகிறது. ஆசார்யாளின் விஷயத்தில் இந்த நான்கில் இரண்டு மிகவும் முக்கியமாகிறதால் அவற்றைப் பற்றி மட்டும் பேசுவோம். அந்த இரண்டும் சொல்லாட்சி (rhetoric) மற்றும் விளக்கவுரை (explication) என்பன. சொல்லாட்சி மிகுந்த உரை என்பதன் அடையாளங்கள் இரண்டு - அவை, உரையைக் கேட்பவர்கள் மனதில் ‘‘இப்படிச் செய்ய வேண்டும்’’ என்ற எண்ணத்தை உண்டாக்குவதும் அதற்கேற்ற செயல்பாட்டைத் தூண்டுவதும் என்பன. (இந்த ஆற்றல் ஒரு சில அரசியல் தலைவர்களிடமும் உள்ளது அறிந்ததே; ஆனால் அவர்களுடைய உரை நம்மை எந்த மார்க்கத்தில் வழிப்படுத்துகிறது என்பது வேறு விஷயம்.) சொல்ல வந்த கருத்தைத் தெளிவாக உரைத்தல் விளக்கவுரை ஆகும். இவை இரண்டும் ஆசார்யாள் தமது வாழ்நாளில் செய்த ஆயிரக்கணக்கான அருளுரைகளிலும் அவர் எழுதிய சில கட்டுரைகளிலும் வெளிப்படுவதைப் பார்க்கிறோம்.

ஆசார்யாளின் அருளுரைகளைப் பற்றி ஸ்ரீ வித்யாதீர்த்த ஃபவுண்டேஷன் நிர்வாகிகள் ஒரு நூலின் பதிப்புரையில் கூறுவதைப் பார்ப்போம்:

‘‘**...** அவை **(**ஆசார்யாளின் உபந்யாஸங்கள்**)** மிகவும் பயனுள்ளதாகவும், ஆழ்ந்த கருத்துகளால் நிரம்பியதாகவும், முற்றிலும் எளிமையான**–**

[59] மேலது ப. 82

தாகவும், முழுதும் நடைமுறைக்கு ஒத்துள்ளதாகவும், இடையிடையே விலாப் புடைக்கச் சிரிக்க வைத்திடும் நகைச்சுவை கொண்டதாகவும், கருத்துகளை ஆணித்தரமாகச் சொல்வதாகவும், தேவையில்லாத இடத்திலோ, தேவைக்கு அதிகமாகவோ எந்த ஒரு வார்த்தையோ வாக்கியமோ பிரயோகிக்கப்படாமல், தங்கு தடையற்று அருவி போன்று விளங்குவதாகவும் அமைந்துள்ளன. ...''[60]

*இங்கே சில விஷயங்களைக் கவனிக்க வேண்டும். முதலாவது, ஒரு உரையில் கருத்தாழமும் எளிமையும் ஒருங்கே விளங்க வேண்டுமானால் உரையாற்றுபவருக்குக் கல்வி அறிவு மட்டும் இருந்தால் போதாது. ஒருவர், தாம் கற்றதை எல்லோருக்கும் எளிதில் புரியுமாறு கூறுகிறார் என்றால் அவருள் மொழிசார் அறிவாற்றல் நன்கு விளங்குகிறது என்று முடிவு செய்யலாம்.*

*இரண்டாவது, தாம் கற்றதை மனதில் தக்க வைத்துக் கொள்ளும் திறன் இருக்க வேண்டும். அவ்வாறு தக்க வைத்துக் கொண்டவற்றைத் தமது தேவைக்கு ஏற்றவாறு பொருத்தமாகக் கோர்த்துச் சொல்ல வேண்டும். ஆசார்யாளின் அருளுரைகளைக் கேட்கும் போது (அல்லது அவர் எழுதிய கட்டுரைகளைப் படிக்கும் பொழுது) அவர் எவ்வளவு நூல்களில் உள்ள கருத்துக்களைத் தாம் பேசும் விஷயத்துடன் தொடுத்துக் கொடுக்கிறார் என்பது உடனே தெரிவதில்லை. பல இடங்களிலிருந்து பல கருத்துகளைக் கொடுத்திருக்கிறார் என்பது அதைப் பற்றி மீண்டும் சிந்திக்கும் பொழுதே தெரிகிறது. உதாரணமாக ஆசார்யாள் கொடுத்த பதினாறு அருளுரைகளடங்கிய ''முத்தி நெறி'' என்ற தொகுப்பில் முந்நூற்றுக்கும் மேற்பட்ட மேற்கோள்கள் (சுலோகங்கள், பாஷ்யங்கள் முதலிய நூல்களிலிருந்து மேற்கோள்-களாக எடுக்கப்பட்ட வாக்கியங்கள் முதலியன) உள்ளன. இப்படிப் பல விஷயங்களைப் பல்வேறு இடங்களிலிருந்து எடுத்து அவற்றைக் கோர்வையாகத் தொடுப்பதும் மொழிசார் அறிவாற்றலின் வெளிப்-பாடே.[61] இதில் மேலும் ஒரு விசேஷம் இருக்கிறது. பொதுவாக ஆசார்யாள் பேசும் பொழுது அந்த உரையின் மையக் கருத்து என்ன*

---

[60] "எனது குருநாதர் என்ற நூலின் பதிப்புரையிலிருந்து எடுக்கப்பட்டது; ஸ்ரீ வித்யாதீர்த்த ஃபவுண்டேஷன், சென்னை, 2000

[61] Howard Gardner, "Frames of Mind – The Theory of Multiple Intelligences" p. 97

*என்பதைப் பேசுவதற்கு ஓரிரு நிமிடங்கள் முன்னரே முடிவெடுப்பார். எனவே, ஒவ்வொரு உரைக்கோர்வையும் அந்த இடத்தில் அந்த நேரத்தில் தொடுக்கப்பட்டது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.*

*மூன்றாவதாக, ஆசார்யாளின் நகைச்சுவை உணர்வு பற்றிய குறிப்பு. இது தொடர்பாக அதே பதிப்புரையில்,*

"**...** கேட்பவர்களையும் தொற்றிக் கொள்ளும் ஆசார்யாளின் இயற்கையான சிரிப்பு, அவரது தேனினும் இனிமையான குரல், ஒலியை ஏற்றி இறக்கிப் பாவனைகளைப் பலவாறு வெளிப்படுத்தும் விதம், பேசாமல் பேசும் (வார்த்தைகளின் இடையே) அவர் தரும் நிறுத்தங்கள் இவையெல்லாவற்றையும் அச்சடிக்கப்பட்ட புத்தகத்தில் எவ்வாறு நம்மால் வெளிக்கொணர முடியும்**? ...**"[62]

*என்று பார்க்கிறோம். மேலே கூறப்படுபவை ஒரு சிறந்த பேச்சாளரிடம் நாம் காணும் பண்புகள். எனினும் இவை நடிகர்கள், நடனக் கலைஞர்கள் முதலியவர்களுக்கும் மிக முக்கியமானவை. கார்ட்னரின் கோட்பாட்டின் அடிப்படையில் இவை உடலியக்கம் சார்ந்த அறிவாற்றலின் வெளிப்பாடுகள் ஆகும் (இந்த அறிவாற்றலைப் பற்றி அடுத்து பேசவுள்ளோம்). இரண்டு விதமான அறிவாற்றல்கள் சம்பந்தப்பட்டு வெளிப்படும் போது அது ஆளுமைக்கு மேலும் மெருகு சேர்க்கிறது என்பதை இது காட்டுகிறது.*

*ஆசார்யாளின் உபன்யாஸங்கள் (அருளுரைகள்) பற்றிக் கூறினோம். இதே போல் அவர் எழுதிய விளக்கவுரைகளிலும் மொழிசார் அறிவாற்றல் வெளிப்பட்டது என்பதைக் காணலாம். ஆசார்யாளின் விளக்கவுரைகளைப் பற்றி வேறொரு நூலின் பதிப்புரையில் கூறுவது:*

"**...** (இந்நூலில் ஆசார்யாள் எழுதிய) எந்த சொற்றொடரும் அனாவசியமாகவோ தவறாகவோ, நிரூபிக்க முடியாதவாறோ, கருத்தா–ழமின்றியோ அமையவில்லை**.** ஒவ்வொரு கட்டுரையும் கருத்துச்–செறிவுடன் விளங்குகிறது; அவற்றில் காணப்படும் வாதங்கள் கூர்த்தனவாகவும் முடிவாகவும் உள்ளன**.** சாஸ்திரங்களில் இருக்கும் நுணுக்கமான கருத்துகள் பல இவற்றுள் சற்றும் செறிவு குறையாதவாறு

[62] இதுவுமது

**பொதிந்துள்ளன என்பதைப் படிப்பவர் அறியாதவாறு மிக எளிதில் புரிந்து கொள்ளும் விதத்தில் இக்கட்டுரைகள் அமைந்துள்ளன. இது ஆசார்யாளின் தனிப்பட்ட நடை என்று சொல்லலாம். …**''[63]

*இனி, அறிவாற்றல் என்றால் என்ன என்பதைப் பற்றிப் பேசும் பொழுது ஒரு குறிப்பிட்ட அறிவாற்றலின் வளர்ச்சியை ஒருவர் விஷயத்தில் பார்க்க முடியும் என்று கூறினோம். மொழிசார் அறிவாற்றல் இதற்கு விதிவிலக்கல்ல. சாதாரணமாக, எல்லாக் குழந்தைகளும் இந்த அறிவாற்றலை ஏதேனும் ஒரு விதத்தில் வெளிப்படுத்துகின்றனர் என்று கார்ட்னர் கூறுகிறார்.[64] ஆனால் இந்த அறிவாற்றல் வயதிற்கு மிஞ்சிய வகையில் ஒரு குழந்தையின் எழுத்திலோ பேச்சிலோ தெரிந்தால் அக்குழந்தை பிற்காலத்தில் மொழிசார் அறிவாற்றல் உள்ளவராகத் திகழ்வார் என்றும் பல நிகழ்வு ஆய்வுகளின் துணை கொண்டு கூறுகிறார். இதற்கு உதாரணமாக கார்ட்னர், பிரபல பிரெஞ்சு எழுத்தாளர் ஸார்த்ரேயைக் காட்டுகிறார். ஸார்த்ரே ஐந்து வயதிலேயே மிகச் சரளமாகவும், வயதில் பெரியவர்களைப் போல் பேசிக் காட்டியும் மற்றவரை வியப்படையச் செய்தார் என்றும், சிறு வயது முதற்கொண்டே புதிதாக ஏதாவது எழுதுவதில் மிகவும் ஈடுபட்டிருந்தார் என்று கார்ட்னர் கூறுகிறார். இதே போல், ஆசார்யாளின் மொழிசார் அறிவாற்றல் அவருடைய சிறு வயதிலேயே வெளிப்பட்டதைக் காணலாம். மாலை விளையாட்டு முடிந்த பின் தமது நண்பர்களுக்குப் பல நீதிக் கதைகளைக் கூறுவார் என்பதைச் சென்ற இயலில் பார்த்தோம். இங்கே, சிருங்கேரியில் அவருடைய உபநயனம் முடிந்த பின் நடந்த சம்பவம் ஒன்றைக் கூறுவோம். உபநயனம் முடிந்தவுடன் ஆசார்யாளும் அவருடைய பெற்றோரும் ஜகத்குரு ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளைத் தரிசிக்கச் சென்றனர். அப்பொழுது ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளுக்கும் உபநயனம் ஆகியிருந்த ஸ்ரீநிவாஸருக்கும் நடந்த உரையாடலின் ஒரு பகுதியைக் கீழே தருகிறோம்: (இதில் ''வடு'' என்பது ஆசார்யாளையும் ''ஸ்ரீ ஸ்வாமிகள்'' என்பது அவரது குருவையும் குறிக்கும்.)*

---

[63] "Didactic Treatises" என்ற நூலின் பதிப்புரையிலிருந்து தமிழாக்கப்பட்டது; Vidyatheertha Foundation, Chennai 1996;2011

[64] இதுவுமது ப. 85

**ஸ்ரீ ஸ்வாமிகள்:** (வடுவைப் பார்த்து) நீ பள்ளிக்கூடத்தில் வாசிக்கிறாயே, என்ன பாடம் படிக்கிறாய்**?** சொல்ல முடியுமா**?**

**வடு:** நள சரிதம் படிக்கிறேன்**.** மனப்பாடமாகச் சொல்லுவேன்**.**

**ஸ்வாமிகள்:** அப்படியானால் சொல்லு பார்க்கலாம்**.**

**வடு:** நள சரிதத்தின் சில பாட்டுகளை **(**கன்னடத்தில்**)** சொன்னார்**.**

**ஸ்வாமிகள்:** இதற்கு அர்த்தம் சொல்லுவாயா**?**

**வடு:** சொல்லச் சொன்னால் சொல்லுவேன்**.**

உடனே ஸ்ரீ ஸ்வாமிகள் தன் கையை வடு ஸ்ரீனிவாஸ சாஸ்திரியின் தலை மேல் வைத்து, 'சொல்லு' என்றார்**.** வடு ஸ்ரீனிவாஸ சாஸ்திரி மிகவும் கம்பீரமாகவும் தெளிவாகவும் பாட்டுக்கு அர்த்தம் சொன்னார்**.** ஸ்ரீ ஸ்வாமிகள் மிகுந்த ஸந்தோஷம் அடைந்தார்**.** எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள்**.** ஸ்ரீ ராமா சாஸ்திரிகள் 'என் பையன் தானா இவ்வளவு அர்த்தம் சொல்லுகிறான்' என்று திகைத்து நின்றார் **...**[65]

*இந்த நிகழ்வில் ஆசார்யாளின் மொழிசார் அறிவாற்றல் தெளிவாக வெளிப்படுகிறது. தமது குரு "இதற்குப் பொருள் சொல்" என்று கூறிய பின், "ஸ்ரீனிவாஸர் சற்று யோசித்தார், ஒருவாறாகத் தமக்குத் தெரிந்தவற்றை மனதில் ஒன்று திரட்டிக் கூறலானார்" என்று இவ்வரலாறு கூறவில்லை. தாம் கற்றதை எடுத்துக் கூறும் ஆற்றல் ஆசார்யாளுக்குச் சிறு வயதிலேயே அமைந்திருந்தது என்பதை இது காட்டுகிறது. இதே போல் ஆசார்யாள் சிருங்கேரியில் பிரம்மசாரியாகக் கல்வி கற்கும் போது ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவ்வப்போது கேட்கும் கேள்விகளுக்குத் தமது விடைகளையும் விளக்கங்களையும் அளித்த விதம் பற்றி ஆசார்யாளின் ஆசிரியராக இருந்த ஸ்ரீ பாஷ்ய ஸ்வாமிகள் விவரமாக எழுதியிருக்கிறார். அவற்றை "ஸ்ரீ குரு கிருபா விலாஸம்" என்ற நூலில் காணலாம். அந்நூலில் ஸ்ரீனிவாஸருடைய (ஆசார்யாள்) அறிவாற்றல் ஒரு சமயம் வெளிப்பட்டதைக் கூறி முடித்து பாஷ்ய ஸ்வாமிகள், "...<u>மேதாவிலாஸத்துடன் இவ்விதமான பேச்சுத் திறமையும் பால்யம் முதற்கொண்டே தொடர்ந்து</u>*

---

[65] "ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த விஜயம்" ப. 33

*வந்ததை இந்த லேககர் பலமுறை அனுபவித்திருக்கிறார்'' என்கிறார்.*[66] *(அடிக்கோட்டுக்குறி நம்முடையது) இதுவும் மொழிசார் அறிவாற்றலின் வெளிப்பாட்டையே காட்டுகிறது.*

*இது போல் இன்னொரு சம்பவம் ஒன்றும் ஆசார்யாளுக்குச் சிறு வயதில் அமைந்திருந்த மொழிசார் அறிவாற்றலைக் கோடிட்டுக் காட்டுகிறது. ஒரு நாள் மாலைப் பொழுதில் பரமாசார்யாள் சில சிஷ்யர்களுடன் சிருங்கேரியில் காலபைரவர் ஆலயத்தில் அமர்ந்திருந்தார். அச்சமயம் அங்கே ஒரு குரங்கு வந்தது. பரமாசார்யாள் அக்குரங்கிற்கு திராக்ஷைப் பழக் கொத்து ஒன்றைக் கொடுத்தார். குரங்கு அதைத் தின்னாமல், ஒவ்வொரு பழமாகப் பிய்த்து நசுக்கிக் கீழே எறிந்தது. இதைப் பார்த்த பாஷ்ய ஸ்வாமிகள், ''குரங்கின் கையில் கொடுத்த பூமாலை போல் ஆகிவிட்டது'' என்று கூறினார். உடனே ஸ்ரீனிவாஸர் (ஆசார்யாள்) ''ஆஞ்சனேய ஸ்வாமியிடம் கிடைத்த முத்து மாலை போல்'' என்று திருத்தினார். ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் ஸ்ரீனிவாஸரிடம், ''ஆஞ்சனேயருக்கும் முத்து மாலைக்கும் என்ன சம்பந்தம்? ஏதோ புதிர் போடுகிறாயே'' என்று கூறவும், ஸ்ரீனிவாஸர் அதை விளக்கும் வகையில் ஒரு கதை கூறி முடித்தார். கதையைக் கேட்டவர்கள் அது சொல்லப்பட்ட விதத்தை மிகவும் ரசித்தனர் என்று பாஷ்ய ஸ்வாமிகள் கூறுகிறார்:* [67]

''**...** இந்தச் சிறு பையனுடைய வெகு அழகாகக் கதை சொல்லும் திறமையை ஸந்நிதானம் மனதிற்குள் புகழ்ந்துகொண்ட போதிலும் அதை வெளிக்காட்டாமல் 'சரி, இதை எதற்காகச் சொன்னாய்**?**' என்று கேட்கவே, அச்சிறுவன் சொல்லலுற்றான்: 'குரங்கின் கையில் கிடைத்த பூமாலை போல் என்று சாஸ்திரிகள் சொன்னதைக் கொஞ்சம் மாற்றிச் சொன்னேன்**.**' **...** அவன் சொல்லும் அழகை நாங்கள் மெச்சாமல் இருக்க முடியவில்லை**. ...**'' **(அடிக்கோட்டுக் குறி நம்முடையது)**

*ஆசார்யாளின் சிறு வயதிலேயே மொழிசார் அறிவாற்றல் பிறர் வியக்கத் தக்க வகையில் இருந்தது இந்த நிகழ்வுகளிலிருந்து தெரிகிறது. இந்த அறிவாற்றல் பிற்காலத்தில் ஆசார்யாளிடத்தில் முழுமை அடைந்திருந்ததைக் குறிக்கும் வண்ணம் ஸ்ரீ பாரதீ தீர்த்த*

---

[66] *ஸ்ரீ குருகிருபா விலாஸம், முதல் பாகம்* ப. 38

[67] *ஸ்ரீ குருகிருபா விலாஸம், முதல் பாகம்* ப. 55-56

*மஹாஸ்வாமிகள் தாம் இயற்றிய நாமாவளியில் ஆசார்யாளை* "**मधुरालापचतुरः**"*(இனிமையாகப் பேசுவதில் வல்லவர்) என்று போற்றி-யிருப்பதையும் இங்கே கருத்தில் கொள்ள வேண்டும்.*

## மஹாப்ரக்ஞை–உடல்சார் இயக்கவின் அறிவாற்றல்

*அடுத்ததாக "உடல்சார் இயக்கவின் அறிவாற்றல்" என்பதைப் பற்றியும் இந்த அறிவாற்றல் ஆசார்யாளிடம் எப்படி அமைந்திருந்தது என்பதைப் பற்றியும் பேசுவோம். "உடல்சார் இயக்கவின் அறிவாற்றல்" என்று நாம் இங்கே கூறவுள்ளதை ஆங்கிலத்தில்* "bodily kinesthetic intelligence" *என்று கூறுகிறார்கள். இதில்* "kinesthetic" *என்ற சொல் இரண்டு வேறுபட்ட சொற்களின் கூட்டு;* "kinetic" *என்ற சொல் – அதாவது "இயக்கம்";* "aesthetic" *என்ற சொல் - "அழகுணர்ச்சி". இந்த இரண்டு சொற்களையும் சேர்த்து* "kinesthetic" *என்ற சொல் ஆக்கப்பட்டுள்ளது. தமிழில் இதற்கு நாம் "இயக்கவின்" ("இயக்கம்"+"கவின்") என்று பெயர் சூட்டுவோம். ஆசார்யாள் காட்டிய இயக்கவின் அறிவாற்றலைப் பற்றிப் பேசுவதற்கு முன்னுரையாக ஆசார்யாளின் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டவை ஒரிரண்டைப் பார்ப்போம். முதலாவதாக, ஹட யோகத்தில் உள்ள கடினமான ஆஸனம் ஒன்றை ஆசார்யாள் செய்து காட்டியது:*

"**...** (ஆசார்யாள்) தமது மேல் வஸ்திரத்தைக் களைந்து, இடுப்பில் கட்டியிருந்த வேஷ்டியைத் தரையில் விரித்தார்**.** இடுப்பில் ஒரு காவி நிற கௌபீனம் மட்டுமே அவரது ஆடையாக இருந்தது**.** தலை கீழாக உள்ள நிலையில் மிகக் கடினமான ஆஸனம் ஒன்றை ஆசார்யாள் படிப்படியாக மேற்கொள்வதை, நான் மந்திரத்தால் கட்டுண்டவன் போல் பார்த்தேன்**.** அவருடைய உடல் ஒரு இறுக்கமான முடிச்சால் கட்டிப் போட்டது போல் தோன்றியது; எலும்புகள் ஏதுமின்றி நன்கு வளைந்து கொடுக்கும் ரப்பரால் ஆன உடலோ என்று வியக்குமாறு இருந்தது**.** ஆஸனத்தின் இறுதி நிலையில் சுமார் ஒரு நிமிடம் இருந்து விட்டு, ஆசார்யாள் தாம் போட்டிருந்த முடிச்சைப் படிப்படியாக அவிழ்த்து, இயல்பாக நிற்கும் நிலைக்கு வந்த பின் தமது வஸ்திரத்தை அணிந்து கொண்டார்**. ...**" [68]

*இரண்டாவதாக இயந்திரம் போல் நாம் செய்யும் செயல்களிலும் ஆசார்யாள் செய்வது சிறப்பாக இருக்கும் என்று கீழ்க்காணும் பதிவு*

---

[68] "Yoga, Enlightenment and Perfection" என்ற நூலிலிருந்து தமிழாக்கப்பட்டது; ப. 57-58

*கூறுகிறது:*[69]

“... ஆப்பிள் பழமொன்றின் தோலை ஆசார்யாள் கத்தியால் சீவிடும்போது சரியாகத் தோல் பகுதி மட்டும் வெளியேறுமே தவிர, சதைப்பகுதியின் ஒரு சிறிதும் வெட்டப்பட்டு வெளியேறாது! இத்தனைக்கும் பழத்தோலைப் பெரும் கவனத்துடன் சீவிடும் போது தான் இப்படி நடக்கும் என்பதில்லை. சர்வ சாதாரணமாகவே ஆசார்யாள் இக்காரியத்தைச் செய்வார். ஆயினும் அது மிக நேர்த்தியாகவே அமையும். சில சமயம் ஆசார்யாள் ஆப்பிள் பழத்தைத் துண்டுகளாக வெட்டித் தமது சிப்பந்திகளுக்கு விநியோகிப்பது உண்டு. அனைத்துத் துண்டுகளும் சம அளவு கொண்டதாகவே இருக்கும்! ...”

*ஆஸனம் செய்வதற்கும், ஆப்பிள் பழம் வெட்டுவதற்கும் என்ன அறிவாற்றல் வேண்டியிருக்கிறது என்ற கேள்வி இங்கு எழுவது நியாயமே. கார்ட்னரின் கோட்பாட்டின் படி, உடல்சார் இயக்கவின் அறிவாற்றல் இரண்டு அடிப்படைக் கூறுகளைக் கொண்டது. ஒன்று, தனது உடலின் இயக்கத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றல்; இரண்டு, தமது உடலைக் கொண்டு மற்ற பொருட்களைக் கையாள்வதில் ஆற்றல். முதலாவதற்கு உதாரணமாக கார்ட்னர் நடனக் கலைஞர்கள், நீச்சல் வீரர்கள் முதலியவரைக் குறிப்பிடுகிறார். இரண்டாவதற்கு உதாரணமாக பந்தாட்ட வீரர்கள், அறுவை சிகிச்சை நிபுணர்கள் ஆகியோர் குறிக்கப்படுகிறார்கள். மனிதர்களுள் பொதுவாக இந்த இரண்டு அடிப்படைக் கூறுகளும் சேர்ந்தே தென்படுகின்றன. தவிரவும், நடிகர்கள் போன்றவர்களிடம் இந்த ஆற்றல் மொழிசார் அறிவாற்றல் போன்ற மற்ற அறிவாற்றல்களுடன் தொடர்பு கொண்டு வெளிப்படுகின்றன என்றும் கார்ட்னர் வாதிடுகிறார்.*

*இனி, உடல் இயக்கத்திற்கும் அறிவிற்கும் என்ன தொடர்பு என்பதைப் பார்ப்போம். சமீப காலமாக உளவியலாளர், உடலின் இயக்கத்திற்கும் மற்ற புலப்பாட்டுத் திறன்களுக்கும் உள்ள தொடர்பை வலியுறுத்தி வருகின்றனர். இந்த விஷயத்தில் பிரெடரிக் பார்ட்லெட் என்ற பிரபல உளவியலாளரின் ஆராய்ச்சியை கார்ட்னர் மேற்கோளாகக் காட்டு-*

---

[69] *நெஞ்சில் நிறைந்த ஜகத்குரு, ஸ்ரீ வித்யாதீர்த்த ஃபவுண்டேஷன்,* சென்னை 2005, ப. 64

கிறார்.[70] அதை இங்கே சுருக்கமாகச் சொல்வோம். ஒரு பந்தாட்ட வீரர், தொழிற்சாலையில் இயந்திரத்தைச் செலுத்துபவர், ஒரு அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர் - இவர்களின் செயல்பாட்டில் ஒரு விஷயம் பொதுவாக உள்ளது. அதை நாம் பொதுவாக "இயல்புணர்ச்சி" (instinct) என்று கூறுகிறோம். இது எப்படி இயங்குகிறது என்பதை பார்ட்லெட் விளக்குகிறார்: நாம் உதாரணமாகக் கூறிய மூவரும் தங்களுடைய உடலியக்கத்தின் போது வெளியுல-கிலிருந்து வரும் குறிகளை (signals) உள்வாங்கி அவற்றை ஆராய்ந்து தமது இயக்கத்தை அதற்கேற்ப உடனுக்குடன் மாற்றிக் கொள்கிறார்கள். "இப்படி இருந்தால் இம்மாதிரி இயங்க வேண்டும், அப்படி இருந்தால் வேறு மாதிரி" என்று அவர்கள் உடனே தீர்மானம் செய்து அதற்கேற்றவாறு உடலை இயக்குகிறார்கள். கார்ட்னர் கூறுவது போல் இவர்களுள் திறன் வாய்ந்தவர்கள் உள்நோக்கத்தைச் செயலாக்கப் பல செயல்முறைகளை வளர்த்து வைத்திருக்கின்றனர்.

எந்த சமயத்தில் உடலை எப்படி இயக்க வேண்டும் என்பது இவர்களுக்கு இயல்பாகவே இருப்பதாலேயே இவர்களது செயல்பாடு பிறழாமலும் அழகாகவும் தோன்றுகிறது. ஆசார்யாள் ஆப்பிள் சீவுவதைப் பற்றி நாம் மேலே கூறியதும் இது போன்றதே. அதாவது, ஆசார்யாள் ஆப்பிளைச் சீவும் போது, அதன் பருமன், வடிவம், எந்தப் பகுதி சீவப்படுகிறது போன்ற குறிகளை உள்வாங்கி உடனுக்குடன் கையை அதற்கேற்ப இயக்குவதால் தான் அதைப் பதிவு செய்தவர், அச்செயல் "நேர்த்தியாக இருக்கும்" என்று கூறுகிறார். மேன்ஃப்ரெட் க்ளைன்ஸ் என்ற நரம்பியல் விஞ்ஞானி, இசை விற்பன்னர்கள் எப்படிச் செயலாற்றுகின்றனர் என்று கூறும் போது,

"... ஒருவர் தமது விரலை ஒரு அங்குலமோ இரண்டு அங்குலமோ நகர்த்த வேண்டும் என்று முடிவெடுக்கலாம்; அல்லது கண்களை இடது பக்கம் இருபது டிகிரி திருப்ப வேண்டும் என்று முடிவெடுக்கலாம். இதில் ஒவ்வொன்றிலும், தசைகள் தம் பணியை நொடிப்பொழுதில் செயல்படுத்தி முடிக்கின்றன. ...செயல் துவங்கும் முன்னரே மூளை இதை நிரல்படுத்துகிறது ...அம்முடிவு செயல்படுத்தப்படுகிறது ..."

---

[70] இதுவுமது ப. 220

*என்று கூறுகிறார்.[71] விரலை (அல்லது கண்களை) எவ்வளவு தூரம் நகர்த்த வேண்டும் என்ற உள்நோக்கம் அனுபவத்தினால்/பயிற்சி-யினால் வருவது என்பதைக் கவனிக்க வேண்டும். அதாவது, உடலியக்கத்தினால் செய்யப்படும் பயிற்சி, மூளையில் அனுபவமாக இருத்தப்படுகிறது. அச்செயல் மீண்டும் செய்யப்படும் போது இந்த அனுபவம் உடலியக்கம் எப்படி இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானம் செய்கிறது. இப்படி இந்த இரண்டின் சம்பந்தத்துடன் பிறக்கும் திறனையே நாம் உடல்சார் அறிவாற்றல் என்று கூறுகிறோம். உடலைக் கட்டுப்படுத்தும் ஆற்றலுக்கும் பிற பொருட்களைக் கையாள்வதில் இருக்கும் ஆற்றலுக்கும் என்ன தொடர்பு என்பதும் இந்த இரண்டு ஆற்றல்களும் பொதுவாக ஒருவரிடம் சேர்ந்தே காணப்படுகிறது என்பதும் இதிலிருந்து புரிகிறது.*

*உடலைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் ஆசார்யாளிடம் இருந்தது என்பதை ஹட யோக ஆஸனம் பற்றிய நிகழ்வில் பார்த்தோம். இது தொடர்பாகச் சில விஷயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். முதலாவதாக உடலில் பல மூட்டுக்களும் தசைகளும் உள்ளன. அவற்றை நீட்டியும் குறுக்கியும் வளைத்தும் பல நூறு ஆஸனங்கள் பழக்கத்தில் உள்ளதாக நிபுணர்கள் கூறுகிறார்கள். இவற்றைச் செய்யும் போது உடல் மட்டுமல்ல, மூச்சையும் கட்டுப்படுத்த வேண்டியிருக்கிறது. இது உடல்சார் அறிவாற்றலுக்கு இன்னொரு பரிமாணத்தைச் சேர்க்கிறது. ஆசார்யாள் கடினமான ஆஸனம் ஒன்றைச் செய்து காட்டியதைக் கூறினோம். அதைப் பற்றி அவரே,*

“... நான் இந்த ஆஸனத்தைச் செய்ய முயற்சித்த போது இரண்டு தடவை தோல்வி அடைந்தேன். மூன்றாவது முறை, முழுதும் சரியாக வரவில்லை; ஓரளவிற்குச் செய்ய முடிந்தது. அதற்கு அடுத்த முறை, ஆஸனத்தின் இறுதி நிலை வரையில் சென்று விட்டேன். ஆனால் அதிலிருந்து மீண்டும் வெளிவர முடியவில்லை. கைகளையும் கால்களையும் கட்டியிருந்த முடிச்சிலிருந்து என்னை விடுவித்துக் கொள்ள முடியவில்லை. அப்பொழுது நான் பகவான் இதை எப்படிச் செய்தார் என்பதை நினைவு படுத்திக் கொண்டேன். அவர் செய்தது

[71] மேலது ப. 223-224

போல், சுவாசப் பைகளிலிருந்து காற்றை முற்றிலும் வெளியேற்றி, நடு விரல்களைப் பயன்படுத்தி என்னைக் கொஞ்சம் விடுவித்துக் கொண்டேன். அதற்குப் பின் படிப்படியாக இயல்பு நிலைக்கு வர முடிந்தது. ஐந்தாவது முறையிலிருந்து இந்த ஆஸனம் செய்வதில் எனக்கு எந்த கஷ்டமும் இருக்கவில்லை. ....''[72]

*என்று கூறுகிறார். இங்கே மூச்சுக் கட்டுப்பாடு என்கிற பரிமாணம் தெரிகிறது. மேலும் உடலில் உள்ள ஒரு சில பாகங்களை (இந்த உதாரணத்தில் நடு விரல்கள்) மட்டும் தேவைக்கேற்ப நுணுக்கமாக அசைக்கவோ வளைக்கவோ வேண்டியுள்ளது. இதைத் தவிர இன்னொன்றையும் நாம் கருத வேண்டும். அது (உடல்சார்) அறிவாற்றலின் வளர்ச்சியைப் பற்றியது. ஆசார்யாளுக்கு சிவ பெருமான் ஏழு கனவுகளில் தோன்றி ஹட யோகம் கற்பித்தது ஆசார்யாளின் வரலாற்றில் பதிவாகியுள்ளது. அதிலிருந்து ஆசார்யாள் யோக ஆஸனங்கள் மற்றும் கிரியைகள் ஆகியவற்றை எப்படிப் பயின்றார் என்பது தெரிகிறது. முதலில் இறைவன் தமது கனவில் தோன்றி ஆஸனங்கள் முதலியவற்றைக் காண்பித்தார் என்றும் அதற்கு ஓரிரு ஆண்டுகளுக்குப் பின் (காசி ஸ்வாமிகள் என்கிற) ஸ்வாமி ஈச்வரானந்த ஸரஸ்வதீ, மற்றும் சிருங்கேரிக்கு அவ்வப்பொழுது வரும் பைராகிகள் ஆஸனங்களையும் கிரியைகளையும் செய்வதைப் பார்த்துத் தாம் கற்றுக் கொண்டதாகவும் ஆசார்யாள் கூறுகிறார். எனவே, பிறர் ஆஸனங்கள் செய்வதைப் பார்த்தே ஆசார்யாள் இக்கலையைப் பயின்றார் என்று கூறலாம். இப்படிப் பிறரைப் பார்த்து கற்றுக் கொள்வது பற்றி கார்ட்னர் என்ன கூறுகிறார் என்பதைச் சொல்லுவோம்.*

*ஒருவரின் செயல்பாட்டைக் கவனித்து உடனே அதே போல் தாமும் செய்யும் ஆற்றல் நம்முள் சிலருக்கு இருக்கிறது. பொதுவாகச் சிறந்த உடல்சார் அறிவாற்றல் கொண்டவர்களுள் இத்திறன் காணப்படுகிறது*

---

[72] "Yoga, Enlightenment and Perfection" என்ற நூலிலிருந்து தமிழாக்கப்பட்டது; ப. 58. "பகவான்" என்றது சிவபெருமானை. இறைவன் ஆசார்யாள் கனவில் தோன்றி யோக ஆஸனங்கள் கற்பித்த முழு வரலாற்றை இந்நூலின் நான்காம் இயலில் காணலாம்.

*என்று கார்ட்னர் கூறுகிறார்.*[73] *மேலும் இவர்கள் எதைப் பார்க்கிறார்களோ அதை மிகவும் உன்னிப்பாகக் கவனிக்கிறார்கள். பார்வையிலும் மனதிலும் மட்டுமல்லாது உடலின் வெவ்வேறு கூறுகளிலும் இவர்கள் கவனிப்புச் சக்தியை வளர்க்கிறார்கள். இதை "உடல் நினைவாற்றல்"* (Body Memory) *என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். சிறப்பான உடல்சார் இயக்கவின் அறிவாற்றல் கொண்டவர்களுக்கு இத்திறனும் இயல்பாக அமைகிறது. இதை ஆசார்யாள் விஷயத்திலும் பார்க்கலாம். 1980-களில் ஆசார்யாளுக்கு இருதயக் கோளாறினால் படிகள் ஏறுவதில் சிரமம் ஏற்பட்டது. அவர் படியேறுவதற்கு வசதியாக இருக்க மின்–காற்றழுத்தக் கருவி* (electro-pneumatic device) *ஒன்றை ஒரு சிஷ்யர் உருவாக்க எண்ணினார். அதன் மேல் ஏறி நிற்பவரை அந்தக் கருவி வேண்டிய உயரத்திற்குத் தூக்கிவிடும். இதற்காக சிருங்கேரியில் உள்ள ஆலயங்களில் இருக்கும் படிகளுள் எது மிகவும் உயரமானது என்ற தகவல் தேவைப்பட்டது. எனவே அவர் சிருங்கேரியில் உள்ள ஆலயப் படிகள் எல்லாவற்றின் உயரத்தையும் அளந்து ஒரு காகிதத்தில் குறித்து ஆசார்யாளிடம் இதைப் பற்றிப் பேசுவதற்காகச் சென்றார்:*

"... இதை நான் ஆசார்யாளிடம் தெரிவித்த போது அவர், 'எல்லாக் கோயில் படிகளின் உயரத்தையும் நீ கஷ்டப்பட்டு அளந்திருக்க வேண்டாம். இருப்பதிலேயே உயரமான படி வித்யாசங்கரர் ஆலயத்தில் உள்ள முதலாம் படி. பிரதக்ஷிணம் செய்யும் தரையிலிருந்து அளந்தால் அதன் உயரம் பன்னிரெண்டே முக்கால் அங்குலம் இருக்கும். கடைசி படி பத்தே முக்கால் அங்குலம் இருக்கும்' என்றார். அதன் பின் ஆசார்யாள் தமது குருவின் அதிஷ்டானத்தின் முன் உள்ள படியின் உயரத்தையும் ஸச்சிதானந்த விலாஸத்தின் முன் உள்ள படியின் உயரத்தையும் சொன்னார். நான் என் கையில் இருக்கும் காகித்தைப் பார்த்தால் அவர் சொன்னது அனைத்தும் சரியாக இருந்தது. இதை நம்பவே முடியவில்லை! வித்யாசங்கரர் ஆலயத்தில் உள்ள படிகளின் உயரத்தை அளப்பதற்கு ஆசார்யாள் யாரையும் பணித்ததில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். படிகளின் மீது ஏறிச்செல்லும் போது அவற்றின் உயரத்தை அவர் கணித்திருக்க வேண்டும். இதைப்

[73] இதுவுமது ப. 240

போலவே மற்ற படிகளின் உயரமும். ...'' [74]

*இப்படிப்பட்ட நினைவாற்றலே உடல் நினைவற்றல் என்று கூறப்படுகிறது. இதைப் போல் உடல்சார் இயக்கவின் அறிவாற்றல் சில சமயங்களில் இன்னொரு விதமாகவும் வெளிப்படுகிறது. அதை ''ஒருங்கிணைந்த இயக்கம்''* (coordinated action) *என்று கூறலாம். இது விளையாட்டு வீரர்களிடம் காணப்படும் ஒன்று. உதாரணமாகச், சரியான சமயத்தில், சரியான திசையில், சரியான அளவில் விசை* (force) *அளிப்பது; இதைச் சிறந்த பந்தாட்ட வீரர்கள் செய்வதைப் பார்க்கிறோம். இம்மாதிரியான திறன் உடல்சார் அறிவாற்றல் பிற அறிவாற்றல்களுடன் (தர்க்கம்-கணிதம் சார்ந்தது, பார்வை சார்ந்தது) சம்பந்தப்பட்டு வெளிப்படுகிறது. அது போல் ஒன்றை ஆசார்யாள் செய்து காட்டியதை ஆசார்யாளின் சிஷ்யர்களுள் ஒருவரான ஸ்ரீ ராஜகோபால சர்மா கூறுகிறார்:*

''... ராஜா வேங்கடராவ் லிம்பேகர் ஆசார்யாளிடம் மிகவும் பக்தி கொண்டிருந்தார். அவரது வேண்டுகோளிற்கு இணங்கி ஆசார்யாள் ஸெகந்தராபாதில் உள்ள ராஜாவின் பங்களாவில் 1960ம் ஆண்டு மே மாதம் சில நாட்கள் தங்கினார். ஆசார்யாள் தங்கிய அறையில் அவரது உபயோகத்திற்காக ஒரு தண்ணீர்க் கூஜாவும் கோப்பையும் வைக்கப் பட்டிருந்தன. சில சமயங்களில் வேடிக்கைக்காக ஆசார்யாள் அந்த கூஜாவின் கழுத்தில் ஒரு துணியைக் கட்டி ஜன்னலில் கூஜாவைத் தொங்கவிட்டு கோப்பையால் கூஜாவை மூடுவார். தண்ணீர் வேண்டியிருக்கும் போது கூஜாவின் அடிப்பாகத்தை ஒரு தட்டு தட்டுவார். கூஜா ஊசலாடிச் சற்று கவிழத் துவங்கி அதன் மேல் கவிழ்க்கப்பட்டிருந்த கோப்பையில் நீர் விழும். கோப்பை விழுவதற்கு முன் அதை ஆசார்யாள் 'டக்' கென்று பிடிப்பார். தண்ணீர் கூடுதலாகத் தேவைபட்டால் கூஜாவை அதற்கேற்ப ஓங்கித் தட்டுவார். குறைவாகத் தேவைப்பட்டால் லேசாகத் தட்டுவார். கூஜாவின் இயக்கத்தையும் அதிலிருந்து கொட்டும் நீரின் பாய்வையும் ஆசார்யாள் சரியாகக் கணித்திருந்ததால் ஒரே தட்டில் தமக்கு வேண்டிய அளவு நீரை, ஒரு

[74] The Multifaceted Jivanmukta *என்ற நூலிலிருந்து தமிழாக்கப்பட்டது; ப.* 285-286

சொட்டும் தரையில் விழாதவாறு, சேகரிப்பார். ...'' [75]

இது போல் இன்னும் சில விதங்களில் ஆசார்யாளின் உடல்சார் இயக்கவின் அறிவாற்றல் வெளிப்பட்டதை அவருடைய வரலாற்றில் பார்க்கலாம். விரிவஞ்சி எல்லாவற்றையும் நாம் இங்கே கூறவில்லை.

## மஹாப்ரக்ஞை – செயல்பாட்டுத் திறன்

ஆசார்யாள் பீடாதிபதியான பின்னர், சிருங்கேரியில் பல வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தினார் என்று முன்னர் கூறினோம். இத்திட்டங்களை வரையறுப்பது, நடைமுறைப்படுத்துவது, சீர்செய்வது இவை எல்லாவற்றிலும் ஆசார்யாள் பெரும் பங்கு வகித்தார் என்றும் அவருடைய வரலாற்றிலிருந்து தெரிகிறது. "The Multifaceted Jivanmukta'' என்ற நூலில் ஆசார்யாளுடைய தொழில்நுட்ப அறிவைப் (Technical Acumen) பற்றி ஒரு முழு இயல் ஒதுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஆசார்யாளின் அறிவாற்றல் பற்றி என்ன கூற முடியும் என்பதைப் பார்ப்போம். கார்ட்னரின் பல அறிவாற்றல்கள் கோட்பாட்டின் அடிப்படையில், தொழில்நுட்ப அறிவும் திறனும் அக்கோட்பாட்டின் கூறுகளாகிய ஏழு அறிவாற்றல்களுள் ஒரு சில ஒன்றுடன் ஒன்று தொடர்புற்று வெளிப்படுகின்றன. ஏற்கனவே உள்ள இயந்திரம் ஒன்றைப் புரிந்து கொள்வதோ, புதிதாக ஏதாவது ஒன்றைக் கண்டுபிடிக்கும் போதோ அல்லது கட்டும் போதோ "பல அறிவாற்றல்களின் சேர்க்கை விரும்பத்தக்கது'' என்று கார்ட்னர் கூறுகிறார்.[76] உதாரணமாக, ஒரு கருவியின் செயல்பாட்டைப் புரிந்து கொள்ளத் தர்க்கம் சார்ந்த அறிவாற்றலும் பார்வை சார்ந்த அறிவாற்றலும் ("கருவியின் இக்கூறு இந்த இடத்தில் இப்படிப் பொருத்தப்பட்டிருக்கிறது; அது இப்படி நகர்கிறது'' போன்றவற்றைப் புரிந்து கொள்ளுதல் இந்த அறிவாற்றலின் வெளிப்பாடு) தேவைப்படுகின்றன. இதற்கு உதாரணமாக ஆசார்யாளின் வாழ்வில் நடந்த சம்பவம் ஒன்றைக் கூறுவோம். இச்சம்பவம், அறிவாற்றலைப் பற்றி நாம் இதுவரை கூறியவற்றையும், இனி கூறவுள்ளவற்றையும் மிக நன்றாக எடுத்துக்காட்டுகிறது:

---

[75] மேலது; ப. 257

[76] இதுவுமது ப. 246

"... தமது இளம் பருவத்திலிருந்தே ஆசார்யாளுக்குப் பொறியியல் சாதனங்கள் எப்படி வேலை செய்கின்றன என்பதை அறிவதில் ஆர்வமும், அவற்றைப் பரிசோதனை செய்வதில் ஊக்கமும் இருந்தன. அவர் துறவறம் மேற்கொண்ட இரு வாரங்களுக்குப் பின், ஒரு பக்தர் தங்கத்தால் ஆன அழகிய வேலைப்பாடு கொண்ட கடிகாரம் ஒன்றை ஆசார்யாளிடம் சமர்ப்பித்தார். ஆசார்யாளும் கடிகாரத்தை ஏற்றுக்–கொண்டு அதைத் திருப்பி அந்த பக்தரிடமே கொடுத்து கடிகாரத்தை அவருடைய உபயோகத்திற்காக வைத்துக் கொள்ளுமாறு கூறினார். அந்த பக்தர், ஆசார்யாளின் உபயோகத்திற்காக அந்த கடிகாரத்திற்குப் பதிலாக ஏதாவது ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும் என்று மிகவும் வேண்டிக் கொண்டதால் ஆசார்யாள், 'சரி, நீங்கள் அப்படி விருப்பப்–பட்டால் எனக்கு ஒரு கைக்கருவிப் பெட்டி (tool kit) கொடுக்கலாம்' என்றார். பக்தருக்கு ஒன்றும் புரியவில்லை; இருப்பினும் 'சரி, ஆகட்டும்'" என்று கூறி ஆறு மாதங்கள் கழித்து மறுபடியும் சிருங்கேரி வந்த பொழுது ஒரு கைக்கருவிப் பெட்டியை ஆசார்யாளுக்கு சமர்ப்பித்தார். அன்று பிற்பகல், சுவர்க் கடிகாரம் ஒன்றை ஆசார்யாள் தமது அறைக்கு எடுத்துச் சென்றார். கடிகாரத்திற்கு அவ்வப்பொழுது சாவி கொடுக்க வேண்டியிருப்பதால் கடிகாரம் ஓடுவதற்கு அதனுள் ஒரு ஸ்ப்ரிங்க் காரணமாக இருக்க வேண்டும் என்று ஊகித்தார். தம்மிடம் சமர்ப்பிக்கப்பட்ட கைக்கருவிகளின் துணை கொண்டு அந்த கடிகாரத்தைத் திறந்தார். கடிகாரத்தில் உள்ள முக்கியமான ஸ்ப்ரிங்க் எது என்பதை முதலில் கண்டு கொண்டு, சுருட்டப்பட்ட ஸ்ப்ரிங்க் உடனே இயல்பு நிலைக்கு வருவதை எது தடுக்கிறது என்பதையும் கண்டு கொண்டார். ஒன்றிணைக்கப்பட்ட பற்சக்கரங்கள், நிமிட முள், மணி முள் இவற்றின் வழியாக எப்படி சுருட்டப்பட்ட ஸ்ப்ரிங்க் மெதுவாக நகர்ந்து விரிகிறது என்பது அவருக்கு ஒருவாறு புரிந்தது. உள்ளே இருக்கும் பாகங்களை நன்றாகப் பார்க்க வேண்டும் என்ற நோக்கத்–துடன் கடிகாரத்தைக் கவனமாக அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்தார். முக்கியமான ஸ்ப்ரிங்கை எடுத்தால் கடிகாரம் வீணாகி விடும் என்று சரியாக ஊகித்து ஸ்ப்ரிங்கை மட்டும் பிரிக்கவில்லை. பின்னர், கடிகாரத்தை எப்படிப் பிரித்தோம் என்பதை நினைவு கூர்ந்து கடிகாரத்தின் பாகங்களை அவற்றிற்குரிய இடத்தில் பொருத்திவிட்டு,

கடிகாரத்தை மீண்டும் அது இருந்த இடத்தில் வைத்தார். ...”[77]

மேலே கூறியதை நன்கு கவனித்தால் கார்ட்னர் கூறும் பல அறிவாற்றல்கள் இங்கே ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு வெளிப்படுவதைப் பார்க்கலாம். முதலாவதாக, கடிகாரத்தின் உள்ளே ஒரு ஸ்ப்ரிங்க் இருக்க வேண்டும்; அதுவே கடிகாரத்திற்கு ஆற்றலைத் (energy) தருகிறது என்றும், அதை எடுத்துவிட்டால் கடிகாரம் வீணாகிவிடும் என்றும் ஆசார்யாள் ஊகித்தது தர்க்கம் சார்ந்த அறிவாற்றலின் வெளிப்பாடு. கருவிப்பெட்டியில் உள்ள சாதனங்களைப் பயன்படுத்துவதில் பார்வை சார்ந்த அறிவாற்றலும் உடல்சார் அறிவாற்றலும் வெளிப்படுகிறது. பிரிக்கப்பட்ட கடிகாரத்தை மீண்டும் ஒன்று சேர்க்கப் பார்வை சார்ந்த அறிவாற்றலும், தர்க்கம் சார்ந்த அறிவாற்றலும் வெளிப்படுகின்றன. இப்படிப் பொறியியல், தொழில்-நுட்பம், புதிய இயந்திரங்களை வடிவமைப்பது போன்றவற்றில் வெளிப்படும் திறனை கார்ட்னர் பல அறிவாற்றல்களின் சேர்க்கையாகக் கூறுகிறார்.

இதே போல், ஆசார்யாளின் தொழில் நுட்ப அறிவிற்கு உதாரணமாக அவருடைய வரலாற்றில் குறிக்கப்படுபவை ஒவ்வொன்றையும் அந்தந்த உதாரணத்திற்குப் பொருத்தமான சில-பல அறிவாற்றல்களின் சேர்க்கையாகப் புரிந்து கொள்ளலாம். இருப்பினும், தாம் முறையாகப் பயிலாத தொழில்நுட்பம், தோட்டக் கலை, வேளாண்மை போன்ற துறைகளில் ஆசார்யாள் பல திட்டங்களை உருவாக்கியதும் செயல்படுத்தியதும் எப்படி என்ற கேள்விக்குப் பொதுப்படையாக ஏதாவது கூற முடியுமா என்பதை நாம் கருத விரும்புகிறோம். “ஆசார்யாள் பல இடங்களுக்குச் சென்றார், பலருடன் பேசினார், அந்த அனுபவங்கள் அவருக்கு உதவியாக இருந்தன” என்று சொல்லலாம். ஆனால் பல இடங்களுக்குப் போகிறவர்கள் எல்லோரும் இம்மாதிரி இருப்பதில்லை; அனுபவத்தில் பார்ப்பதையும் கேட்பதையும் மனதில் உள்வாங்கி அதைத் தேவைக்கும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கும் ஏற்றபடி செயல்படுத்தும் ஆற்றல் நம் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக அமைவதில்லை அல்லவா? இதில் என்ன வேறுபாடு போன்ற

---

[77] The Multifaceted Jivanmukta என்ற நூலிலிருந்து தமிழாக்கப்பட்டது; ப. 236

கேள்விகளைப் பொதுப்படையாக விவரிக்கும் நோக்கத்துடன் இங்கே வேறொரு அறிவாற்றல் கோட்பாட்டை அறிமுகப்படுத்துவோம்.

பிரபல உளவியல் ஆராய்ச்சியாளர் ராபர்ட் ஸ்டெர்ன்பெர்க், அறிவாற்றலைப் பொதுவாக மூன்று வகைகளாகப் பிரிக்கலாம் என்று கூறுகிறார். அவையாவன, பகுப்பாய்வுத் திறன் (Analytical Intelligence), படைப்புத் திறன் (Creative Intelligence), செயல்பாட்டுத் திறன் (Practical Intelligence).[78] ‘‘பகுப்பாய்வுத் திறன்’’ என்பது ஒரு கேள்வி அல்லது பிரச்னையைப் பல கூறுகளாக பிரித்துப் புரிந்து கொள்ளும் ஆற்றல். படைப்புத் திறன் என்பது முன்னர் பார்க்காத ஒன்றை எதிர்நோக்கும் போது புதிதாக ஒரு வழிமுறை அல்லது விடையைப் படைக்கும் திறன். செயல்முறைத் திறன் என்பது மேலே சொன்ன இரண்டையும் பயன்படுத்தி உலகில் நாம் எதிர்கொள்ளும் பிரச்னைகள், புதிர்கள் ஆகியவற்றைத் தீர்க்கும் ஆற்றல். உலகில் ஒவ்வொருவருக்கும் இம்மூன்று ஆற்றல்களும் வெவ்வேறு அளவுகளில் உள்ளன. (அறிவாற்றல் குறியீட்டுத் தேர்வுகள் இம்மூன்றுள் முதலாவதை மட்டுமே பரிசோதிக்கின்றன என்பது ஸ்டெர்ன்பெர்க்கின் வாதம்.) இந்த மூன்று விதமான திறன்கள் ஒரு மனிதனுள் எப்படி வெளிப்படுகின்றன என்பதை விவரிப்பதற்கு ஸ்டெர்ன்பெர்க், மனதின் செயல்பாட்டைப் பல மேற்கூறுகளாகப் (metacomponents) பிரிக்கிறார்.[79] அவற்றை நாம் இங்கே விவரிக்கவில்லை. ஆசார்யாளின் வரலாற்றில் நடந்த சிலவற்றை உதாரணமாகக் காட்டும் போது ஆங்காங்கே கூறுவோம்.

ஸ்டெர்ன்பெர்க்கின் கோட்பாட்டை அவர் நகைச்சுவையாகக் கூறும் ஒரு கதை மூலமாகப் புரிந்து கொள்ளலாம்.[80] இரு மாணவர்கள்: அதில் முதலாமவன் எல்லாத் தேர்வுகளிலும் முதலில் வருபவன்; பள்ளியில் உள்ள ஆசிரியர்களும் ஏனையோரும் இவனை ‘அறிவாளி’ என்று கூறுகிறார்கள். இரண்டாமவன் தேர்வுகளில் ஓரளவிற்கு நன்றாகச்

---

[78] மேலும் விவரங்களை இந்நூலில் பார்க்கலாம்: “A Triarchic View of Giftedness: Theory and Practice” by Robert J. Sternberg in “Handbook of Gifted Education” Ed. Nicholas Colangelo and Gary A. Davis, Allyn and Bacon 1991;1997, pp. 43-53

[79] மேலது ப. 45-49

[80] Robert J. Sternberg, “Successful Intelligence – How Practical and Creative Intelligence determine success in life” Plume Book NY 1997, p. 126

செய்கிறான். ஆனால் பள்ளியில் இவனை 'அறிவாளி' என்று யாரும் குறிப்பதில்லை. இருவரும் ஒரு நாள் காட்டுப் பகுதியில் உலாவச் செல்கின்றனர். அப்பொழுது அங்கே ஒரு மலைக் கரடி இவர்களை எதிர்கொள்கிறது. முதலாம் மாணவன் மலைக்கரடிகளைப் பற்றி தனக்குத் தெரிந்தவற்றை எல்லாம் உடனே நினைவு கூர்ந்து மனதில் விரைவாகக் கணக்குப் போட்டு "நாம் இப்பொழுது ஓடத் துவங்கினால், கரடி நம்மைத் துரத்தும். அது பதினேழு வினாடிகளுக்குள் நம்மைப் பிடித்துவிடும்" என்ற முடிவிற்கு வந்து கைகளைப் பிசைந்து நிற்கிறான். அவனுடைய நண்பன் தன் கால்களில் அணிந்திருக்கும் காலணிகளைக் கழற்றி, ஓட்டப் பந்தயங்களில் பயன்படுத்தப்படும் காலணிகளை அணிகிறான். முதலாமவன் இவனைப் பார்த்து, "டேய்! நீ என்ன கரடியை விட வேகமாக ஓடுவாய் என்று நினைக்கிறாயா?" என்கிறான். அதற்கு இரண்டாமவன் சிரித்துக் கொண்டே, "கரடியை விட வேகமாக ஓட வேண்டிய அவசியம் இல்லை. உன்னை விட வேகமாக ஓடினால் போதுமே" என்றானாம்.

இங்கே ஸ்டெர்ன்பெர்க் கூறுவது என்னவென்றால் இரண்டு மாணவர்களுமே புத்திசாலிகள் தான். ஆனால் இந்த இருவரும் வெவ்வேறு விதங்களில் புத்திசாலிகளாக இருக்கிறார்கள். முதலாமவன் தனக்குக் கரடிகளைப் பற்றித் தெரிந்ததை வைத்துக் கொண்டு ஒரு முடிவிற்கு வந்தான். ஆனால் அந்த சந்தர்ப்பத்திற்கு அது போதவில்லை. இரண்டாமவன், அந்த சந்தர்ப்பத்திற்கு ஏற்றதும் செயல்படுத்தக் கூடிய ஒன்றையும் புதிதாக யோசித்து வெற்றி பெற்றான். ஸ்டெர்ன்பெர்க்கின் கோட்பாட்டின் படி, இது தான் பகுப்பாய்வுத் திறனுக்கும் (முதலாம் மாணவன் காட்டியது) படைப்புத் திறன், செயல்பாட்டுத் திறனுக்கும் (இரண்டாவது மாணவன் காட்டியது) உள்ள வேறுபாடு. இம்மூன்று திறன்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டவை. புதிய முயற்சிகள் முதலியவற்றைச் சிந்திப்பதற்குப் படைப்புத் திறன் தேவை. படைப்புத் திறன் புதிதாகத் தோற்றுவிப்பவை பயன் தருமா என்பதை அறிவதற்குப் பகுப்பாய்வுத் திறன் தேவை. எண்ணத்தைச் செயலாக்குவதற்குச் செயல்பாட்டுத் திறன் தேவை. இப்படி இந்த மூன்று திறன்களும் சேர்ந்து செயல்பட்டால் எதிர்நோக்கும் புதிர்கள், சிக்கல்கள் இவற்றைத் தீர்க்கலாம் என்று ஸ்டெர்ன்பெர்க் கூறுகிறார். தவிரவும், இம்மூன்றும் இருந்தால் மட்டும் போதாது; அவற்றை எந்த சமயத்தில் எப்படிப்

*பயன்படுத்த வேண்டும் என்றும் தெரிய வேண்டும். அப்படிச் செய்பவர்களை ஸ்டெர்ன்பெர்க் "வெற்றி தரும் அறிவாற்றல்"* (Successful Intelligence) *உள்ளவர்கள் என்று ஸ்டெர்ன்பெர்க் கூறுகிறார்.*[81] *இதைப் பின்புலமாகக் கொண்டு ஆசார்யாளின் பதினாறாம் வயதில் நடந்த ஒரு நிகழ்வைப் பார்ப்போம்:*

"... ஒரு நாள் அவர் (ஆசார்யாள்) மாலையில் உலாவச் சென்றிருந்த போது, ஒரு குளவி தன் வாயில் சலனமற்ற வெட்டுக்கிளி ஒன்றை வைத்துக் கொண்டு கூட்டிற்குள் செல்வதைப் பார்த்தார். முதலில் குளவி கூட்டிற்குள் நுழைந்து பின்னர் வெட்டுக்கிளியைக் கூட்டிற்குள் இழுத்துக் கொண்டது. அதன் பின், குளவி கூட்டை மூடி விட்டுப் பறந்து சென்றது. குளவி தன் கூட்டில் முட்டையிடுமென்றும் அம்முட்டையிலிருந்து புழுக்கள் வெளியே வந்ததும் அவற்றிற்கு வெட்டுக்கிளி உணவாக இருக்கும் என்றும் ஆசார்யாள் கேள்விப்–பட்டிருந்தார். கூட்டினுள் என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க ஆர்வம் கொண்டார். ஆனால் மூடியிருந்த கூட்டைத் திறந்து அதைக் கலைக்க அவர் விரும்பவில்லை. இந்த விஷயத்தில் இயற்கை அவருக்குச் சாதகமாக இருந்தது. அடுத்த நாள் அவர் அப்பக்கம் வந்த பொழுது கூட்டின் மேல் மூடியிருந்த மண்ணில் ஒரு சிறிய இடைவெளி இருப்பதைக் கண்டார். தமது முகத்தை அந்த இடைவெளிக்கருகில் கொண்டு சென்று ஓட்டை வழியாகப் பார்க்க முயற்சித்தார். குளவியின் புழுக்கள் குளவியைப் போல் இல்லாமல் வேறு மாதிரியாகத் தோற்றமளித்தன. அவற்றையும் வெட்டுக்கிளியையும் இன்னும் நன்றாகப் பார்க்க வேண்டும் என்று தீர்மானம் செய்தார். இதற்கு அவருக்கு ஒரு பூதக் கண்ணாடி தேவைப்பட்டது; ஆனால் அவர் அது போல் எதையும் தம்முடன் கொண்டு வரவில்லை. தமது ஆராய்ச்சியை இன்னொரு நாள் தள்ளிப் போட ஆசார்யாள் விரும்பவில்லை. எனவே சற்று திறம்பட யோசித்தார்; காய்ந்த இலை ஒன்றை எடுத்து அதில் சிறிய துளை ஒன்றைச் செய்தார். அதில் ஒரு துளி மழை நீரை விட்டு நீர்த்திவலையை பூதக் கண்ணாடியாகப் பயன்படுத்தித் தமது ஆய்வைத் தொடர்ந்தார். ..."[82]

---

[81] மேலது ப. 126-127

[82] The Multifaceted Jivanmukta *என்ற நூலிலிருந்து தமிழாக்கப்பட்டது; ப.* 262

*இங்கே நாம் இரண்டு விஷயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். முதலாவது, ஆசார்யாள் எதிர்கொண்ட சூழ்நிலை அவருக்குப் புதிதானது. குளவிக் கூட்டை ஆராய வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு வந்ததால், அதை அவர் இதற்கு முன் செய்ததில்லை என்பதை ஊகிக்கலாம். குளவிகளைப் பற்றி (அவற்றின் புழுக்கள், இரை போன்றவை) அவர் முன்னர் அறிந்திருந்தாலும் கூட்டைக் கலைக்காமல் அதைப் பற்றி ஆராய அந்த அறிவு மட்டும் போதாது. தமது விருப்பதைச் செயல்படுத்த ஒரு வழியும் வேண்டியிருந்தது. இது இரண்டாவது விஷயம்; அதாவது, அந்த சமயத்தில் கிடைத்தவற்றை (இலை, நீர்) வைத்துக் கொண்டு தாம் வேண்டியதைச் செயல்படுத்த ஒரு புதிய செயல்முறை (இலையில் நீர்த்துளியை விட்டு அதைப் பூதக்கண்ணாடியாகப் பயன்படுத்துவது). பகுப்பாய்வு, படைப்பு, செயல்முறை ஆகிய மூன்றும் எப்படி ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்டு வெளிவந்தன என்பதை இதில் பார்க்கிறோம். இதே போல் இன்னொரு சம்பவத்தை நாம் ஆசார்யாளின் வரலாற்றில் காணலாம். ஒரு ஒலிப்பதிவுப் பெட்டியின் செயல்பாட்டில் இருந்த சிக்கலுக்கு இரண்டு ஒலிப்பதிவுப் பெட்டிகளை ஒன்றுடன் ஒன்று பொருத்தி தீர்வு கண்டார் என்பதை அங்கே பார்க்கிறோம்.[83] அந்த சம்பவத்திலும் நடைமுறையில் எதிர்கொண்ட பிரச்னை ஒன்றைத் தீர்ப்பதற்குப் பகுப்பாய்வு, படைப்பு, செயல்முறை என்ற மூன்று ஆற்றல்கள் இணைந்து வெளிப்படுவதைப் பார்க்கலாம்.*

*இளமையிலேயே ஆசார்யாளிடம் அமைந்திருந்த இம்மூன்று ஆற்றல்களே பிற்காலத்தில் அவருடைய தொழில்நுட்பத் திறனாக வெளிப்பட்டன என்பது நம் கருத்து. இதை விளக்கும் உதாரணங்கள் ஓரிரண்டு மட்டும் இங்கே கூறுவோம். இன்னும் பலவற்றை அவருடைய வரலாற்றில் காணலாம்.*

“**…** (சிருங்கேரியிலுள்ள நரஸிம்ம வனத்தில்) காலபைரவர் ஆலயத்திற்குச் செல்லும் வழியில் உள்ள ஒரு அழகிய இடத்தில் ஒரு கட்டிடம் எழுப்புவதற்கு ஆசார்யாள் திட்டமிட்டார்**.** ‘பைரவ க்ருபா’ என்ற பெயர் கொண்ட அந்தக் கட்டிடமும் எழுப்பப்பட்டது**. …** ஆனால் (ஒரு குன்றின் மீது இருப்பதால்) அந்தக் கட்டிடத்திற்குத் தண்ணீர் கொண்டு வருவதில் ஒரு சிக்கல் இருந்தது**.** நரஸிம்ஹவனத்தில் நிலத்தடி நீர் ஆற்றுப்படுக்கை ஆழத்தில் இருந்தாலும், இந்தக் கட்டிடத்தின்

[83] மேலது, ப. 253

உயரத்திற்கு நீரை எடுத்துச் செல்லும் பம்பு செட் எதுவும் மடத்தில் இல்லை. ஆசார்யாள் இந்தச் சிக்கலை நேர்த்தியாகவும் எளிதாகவும் தீர்த்தார். கட்டிடத்திற்குச் செல்லும் வழியில் பாதி தூரத்தில் உள்ள மாட்டுத் தொழுவம் அருகில் ஒரு நீர்த் தொட்டியைக் கட்டி (தரை மட்டத்தில் உள்ள) ஸச்சிதானந்த விலாஸத்திலிருந்து இந்த தொட்டிக்கு ஒரு பம்பு செட்டின் மூலம் தண்ணீர் கொணரச் செய்தார். இந்தத் தொட்டியிலிருந்து பைரவ க்ருபாவிற்கு தண்ணீர் ஏற்றுவதற்கு இன்னொரு பம்பு செட் வைக்கப்பட்டது. இந்த இரண்டு பம்பு செட் ஏற்பாட்டினால் பைரவ க்ருபாவிற்கு தண்ணீர் தாராளமாகக் கிடைத்தது. தவிரவும், (மாட்டுத் தொழுவத்தின் அருகில் கட்டப்பட்ட) நீர்த் தொட்டிக்குப் பக்கத்தில் மாடுகள் மேயும் சமயத்தில் தண்ணீர் குடிப்பதற்கு வசதியாக இன்னொரு தொட்டியும் கட்டப்பட்டது. இந்த ஏற்பாடு வேறு சில பயன்களையும் கொடுத்தது. ...''[84]

*ஆசார்யாள் தமது யாத்திரைகளின் போது பல்வேறு தொழில்நுட்பக் கழகங்கள், தொழிற்சாலைகள் போன்ற இடங்களுக்குச் செல்வதை வழக்கமாக வைத்திருந்தார். அந்த இடங்களில் பணிபுரிபவர்கள் தமக்குக் காட்டுவதைக் கூர்ந்து கவனிப்பார் என்றும், பார்ப்பவை சம்பந்தமான பல கேள்விகள் கேட்பார் என்றும் அவருடைய வரலாற்றில் படிக்கிறோம். புதிதாகப் பார்த்து நாம் தெரிந்து கொள்வதைச் செயல்முறையில் நம்முடைய தேவைகளுக்கு ஏற்ப மாற்றி வடிவமைப்பது குறித்து ஸ்டெர்ன்பெர்க் மூன்று அறிவாற்றல் மேற்கூறுகளை* (metacomponents of intelligence) *அடையாளம் காட்டுகிறார்.*[85] *அவற்றுள் முதலாவது ''தேர்ந்தெடுக்கப்பட்ட குறிமுறையேற்றம்''* (selective encoding) *– நாம் ஏதேனும் ஒன்றைப் பார்க்கும் போது நமக்குத் தேவைப்படுவது எது, தேவைப்படாதது எது என்பதைப் பிரித்தறியும் ஆற்றல். இரண்டாவது ''தேர்ந்தெடுக்கப்பட்ட சேர்க்கை''* (selective combination) *– சில சமயங்களில் எது நமக்குத் தேவைப்படுகிறது என்ற அறிவு மட்டும் போதுவதில்லை. தேவையானவை என்று நாம் தேர்ந்தெடுத்தவற்றைச் சரியாக வரிசைப்படுத்திச் சேர்த்தால் தான் வேண்டிய பலன் கிடைக்கிறது. மூன்றாவது*

---

[84] மேலது ப. 252

[85] "A Triarchic View of Giftedness: Theory and Practice" by Robert J. Sternberg in "Handbook of Gifted Education" Ed., p. 47

*“தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பீடு” (selective comparison) – சில சமயங்களில் நாம் முன்னர் பார்த்ததையோ செய்ததையோ வேறு வடிவில் பார்க்கிறோம். இந்த இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்து இப்பொழுது நமக்கு எது தேவை என்பதை அடையாளம் காணும் ஆற்றல். இந்த மூன்று மேற்கூறுகளும் சிறப்பாக அமையப் பெற்றவர், புதிதாக ஒன்றைப் பார்த்து அதில் உள்ளவற்றைத் தமது தேவைக்கேற்ப மாற்றிச் செயல்படுத்தும் திறமையுள்ளவராக இருப்பார் என்று ஸ்டெர்ன்பெர்க் வாதிடுகிறார். இதற்கு உதாரணமாக ஆசார்யாள் சிருங்கேரியில் சாண எரிவாயு தயாரிப்பைச் செயல்படுத்தியதையும், சிமெண்ட் அடுப்பு பயன்படுத்தியதையும் இங்கே கூறலாம்:*

“… ஆசார்யாள் தமது யாத்திரைகளின் போது பல இடங்களில் சாண எரிவாயு தயாரிக்கும் கூடங்களைப் பார்த்து அவற்றின் உபயோகத்தைப் புரிந்து கொண்டார். சிருங்கேரியிலும் ஒரு எரிவாயு நிலையத்தை அமைக்க வேண்டும் என்று தீர்மானித்தார். மடத்தில் சுமார் 50 மாடுகள் வசிக்கும் தொழுவம் ஒன்று இருந்தது. எரிவாயு உற்பத்தி நிலையத்தை இந்தத் தொழுவத்திற்கு அருகில் எழுப்பினார். எரிவாயு உற்பத்திக்குத் தேவைப்பட்ட சாணம் எளிதாகக் கிடைக்க இது வழிசெய்தது. சிருங்கேரி வட்டாரத்தில் இதுவே முதல் சாண எரிவாயு நிலையமாக இருந்தது. இதில் உற்பத்தியான எரிபொருள் நரஸிம்ஹவனத்தில் உள்ள சமையலறைக்கும் அங்கிருந்த வீடுகளுக்கும் பயன்பட்டது.

… ஆசார்யாள் (யாத்திரையின் போது) ஓரிடத்தில் சிமெண்ட் அடுப்பு ஒன்றைப் பார்த்தார்; விறகுக் கட்டைகளை எரிபொருளாகப் பயன்படுத்தி இந்த அடுப்பில் ஒரு புகைபோக்கியும் இணைக்கப்–பட்டிருந்தது. இந்த வடிவமைப்பு ஆசார்யாளின் கவனத்தை ஈர்த்தது. அதை நன்றாகப் புரிந்து கொண்டு அந்த வடிவமைப்பில் சில மாற்றங்களைச் செய்து சிருங்கேரியில் அதே போல் ஒரு அடுப்பை வடிவமைத்தார். நரஸிம்ஹவனத்தில் உள்ள கட்டிடங்கள் சிலவற்றில் குளிப்பதற்காக வெந்நீர் போடுவதற்கு இந்த அடுப்புகள் பயன்படுத்தப்–பட்டன. …” [86]

*மற்றவர்களைப் பார்த்தும், அவர்களைக் கேட்டும் பல விஷயங்களைத்*

[86] “The Multifaceted Jivanmukta” *என்ற நூலிலிருந்து தமிழாக்கப்பட்டது; ப. 250-251*

*தெரிந்து கொண்டதைப் பற்றி ஆசார்யாளே பேசியுள்ளார். அதை இங்கே நாம் கூறுவது பொருத்தமாக இருக்கும்:*

“**...** தொழில்நுட்பக் கல்வியை நான் முறையாகப் பயிலவில்லை**.** இருந்தாலும் பார்த்தும், கேள்வி கேட்டும், நடைமுறைப் படுத்தியும் கற்றுக் கொள்வதற்கு நான் எப்பொழுதும் தயார்**.** முதலில், நான் **(**கட்டிடங்கள் கட்டுவது, செப்பனிடுவது போன்றவற்றில்**)** சில சிறிய தவறுகளைச் செய்தேன்; அவற்றைச் சீர்ப்படுத்துவதற்குக் கட்டிடங்–களில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டியிருந்தது**.** இதனால் கொஞ்சம் செலவு ஆனது**.** ஆனால் அந்த தவறுகளிலிருந்து நான் கற்றுக் கொண்டதால் இப்பொழுது அந்த மாதிரியான தவறுகள் நேருவதில்லை**. ...**” [87]

*கட்டிடக் கலை மட்டுமன்றி வேளாண்மை, தோட்டக் கலை ஆகிய-வையும் ஆசார்யாள் பார்த்தும் கேட்டும் இவற்றில் தமக்கிருந்த அறிவையும் அனுபவத்தையும் பெருக்கிக் கொண்டார். இதன் அடிப்படையில் சிருங்கேரியில் அவர் சில முக்கியமான மாற்றங்களைச் செய்தார்:*

“**...** தீய எண்ணம் கொண்ட சிலர் அவருக்குத் தவறான அறிவுரை வழங்கியதால் சில தடங்கல்கள் ஏற்பட்டன**.** உதாரணமாகப் பயிர்ச் சுழற்சி (crop rotation) முறையைச் செய்யுமாறும், சிருங்கேரி தென்னை மரங்கள் வளர்வதற்கு உகந்த இடம் அல்ல என்றும் இவர்கள் ஆசார்யாளிடம் கூறினர்**.** ஆனால் ஆசார்யாள் தமது யாத்திரைகளின் போது வேளாண்மை, மற்றும் தோட்டக் கலை பற்றி நிறைய கற்றிருந்ததால் இவர்கள் சொல்வது முற்றிலும் தவறு என்பதை உணர்ந்தார்**.** ஒரு பயிரைச் சாகுபடி செய்து விட்டு, அடுத்த சாகுபடிக்கு வேறொன்று பயிரிட்டால் விளைச்சல் அதிகமாகும் என்ற எண்ணத்–துடன் அதை உடனே மாற்றுவது, இப்படி முறை இல்லாமல் செய்யப்படும் வேளாண்மை தான் எல்லா பிரச்னைகளுக்கும் காரணம் என்பதை ஆசார்யாள் முன்னமே அறிந்திருந்தார்**.** மண்ணின் தரத்தையும் அங்குள்ள பருவ நிலையையும் கணக்கில் எடுத்துக் கொண்டு எந்தப் பயிர்களை விளைச்சல் செய்யலாம் என்று முடிவெடுத்தார்**.** அச்சமயம்

[87] மேலது ப. 252

அவர் இயற்கை மற்றும் செயற்கை உரங்கள், பூச்சிக் கொல்லிகள் ஆகியவற்றைப் பற்றி நன்கு அறிந்திருந்தார்; பல விதங்களான பயிர்களையும் தோப்புகளையும் எப்படி வளர்க்க வேண்டும் என்ற அறிவை அவர் சேகரித்திருந்தார். மிகுந்த ஐயுறவிற்கிடையில் சிருங்கேரியில் தென்னம் பிள்ளைகளை நட்டார். பணியாளர்கள் அவர் கூறியதை அப்படியே நிறைவேற்றினர். மிக விரைவிலேயே, சிருங்கேரியில் முதல் முறையாக ஒரு தென்னந் தோப்பு தோன்றியது. அதன் பின், நரஸிம்ஹவனம், நரஸிம்ஹபுரம் ஆகிய இடங்களில் பல தோப்புகள் தோன்றி அந்த இடங்களுக்கு அழகு சேர்த்தன. ...'' [88]

*இந்த உதாரணத்திலும் ஆசார்யாளின் அறிவாற்றல் எப்படிச் செயல்பட்டது என்பது தெரிகிறது. அறிவாற்றல் என்பது பொதுவாக ஒரு சிக்கலுக்கோ பிரச்சினைக்கோ விடை காணுவது என்று நாம் கூறினால், அதன் முதற்படி ''இதில் ஒரு சிக்கல் உள்ளது'' என்பதை அடையாளம் காணுவது. இது அறிவியல் ஆராய்ச்சியிலிருந்து பயிர் சாகுபடி வரை எல்லாத் துறைகளுக்கும் பொதுவானது. இதன் காரணமாகவே ஸ்டெர்ன்பெர்க் இந்த ஆற்றலை அறிவாற்றலின் முதல் மேற்கூறாக ''சிக்கல் அடையாளம் காணுதல்''* (problem recognition) *என்று குறிப்பிடுகிறார். நாம் மேலே கூறிய நிகழ்வில் பயிர் விளைச்சல் சரியாக இல்லை என்று ஆசார்யாள் அடையாளம் கண்டது இதற்கு உதாரணம். மற்றவர்கள் சொல்வதைக் கேட்டு, ''ஓ, சிருங்கேரியின் மண் நலத்திற்கும் பருவ நிலைக்கும் இப்படித் தான் விளைச்சல் வரும் போலிருக்கிறது'' என்று ஆசார்யாள் தீர்மானிக்கவில்லை. பல இடங்களில் அவர் பார்த்ததையும் கேட்டதையும் அடிப்படையாகக் கொண்டு ''இங்கே ஒரு பிரச்னை இருக்கிறது'' என்ற முடிவிற்கு வந்தார். இந்த முடிவெடுப்பதில் (நாம் முன்னர் கூறிய) தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பீடு என்ற அறிவாற்றல் மேற்கூறும் வெளிப்படுவதைக் கவனிக்க வேண்டும். சிக்கலை அடையாளம் கண்ட பின் அதைச் சரியாக வரையறுக்க வேண்டும். இதை ஸ்டெர்ன்பெர்க் ''சிக்கல் வரையறுத்தல்''* (problem-definition) *என்ற மேற்கூறாகக் குறிப்பிடுகிறார். அதாவது நம்மை எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினை எத்தகையது என்பதைத் தீர்மானிக்க வேண்டும். ''முறைமை இல்லாத*

[88] மேலது ப. 241

பயிற்சுழற்சிக்கு மாற்று'' என்று ஆசார்யாள் எடுத்த முடிவு இதைச் சார்ந்தது. இதற்குப் பின் வருவது ''செயல்திட்டம் தேர்ந்தெடுத்தல்'' (strategy). ''தென்னம் பிள்ளைகளை நட வேண்டும்; அவற்றுக்கு இப்படி நீர் பாய்ச்ச வேண்டும்; உரம், மருந்து ஆகியவை இந்த சமயத்தில் இவ்வளவிற்குச் செய்ய வேண்டும்'' போன்றவை இந்த மேற்கூற்றைச் சார்ந்தவை. அடுத்து வருவது செயல்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதில் செய்ய வேண்டிய ''வளம் ஒதுக்கீடு'' (resource allocation). நம் எல்லோருக்குமே ஒவ்வொரு சமயத்திலும் செய்ய வேண்டியவையும் நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் பல உண்டு. ஆசார்யாளைப் போல் ஒரு பெரிய பொறுப்பை வகிப்பவருக்கு இது பன்மடங்காக இருக்கும் என்பது நிச்சயம். ''நாம் எடுத்த முடிவைச் செயல்படுத்த இன்னாரை நியமிக்க வேண்டும்; இவ்வளவு செலவழி-க்கலாம்'' என்ற தீர்மானம் வளம் ஒதுக்கீடு என்று குறிப்பிடப்படுகிறது. இறுதியாகத் ''தீர்வு மேற்பார்வை'' (solution-monitoring). ''நாம் தீர்மானம் செய்த செயல் திட்டம் எவ்வளவில் இருக்கிறது, புதிய இடர்ப்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றனவா'' போன்றவற்றைக் கண்கா-ணித்தல். மேலே நாம் கூறிய அறிவாற்றல் மேற்கூறுகள் எல்லாமே எல்லோரிடமும் அமைவதில்லை. அப்படி அமையப்பெற்றவர்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் வல்லவர்களாக இருக்கிறார்கள் என்பது ஸ்டெர்ன்பர்க்கின் வாதம். தொழில்நுட்பம் முதலிய பல துறைகளில் ஆசார்யாள் காட்டிய செயல்திறன் அறிவாற்றலும் வல்லமையும் இந்த வாதத்திற்கு உதாரணங்களாக விளங்குகின்றன.

இந்த இயலின் இப்பகுதியை நிறைவு செய்வதற்கு முன் ஆசார்யாள் எக்காலத்திலும் வெளிப்படுத்திய அறிவார்வம் (curiosity) பற்றிக் கூற வேண்டியுள்ளது. நாம் பார்த்த ஆய்வுக் கட்டுரைகளிலும் நூல்களிலும் அறிவார்வத்திற்கும் அறிவாற்றலுக்கும் உள்ள தொடர்பைப் பற்றி எவரும் பேசவில்லை. ஆனால், இவை இரண்டிற்கும் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது. இங்கே நாம் அறிவார்வம் என்று கூறுவது ''வீண் அறிவார்வம்'' (idle curiosity) பற்றியல்ல. ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதோடு நின்றுவிடாமல், அதற்கான முயற்சி செய்யத் தூண்டும் அறிவார்-வத்தையே குறிக்கிறோம். ஆசார்யாளின் சிறு வயதிலேயே இது

வெளிப்பட்டது என்பதை இரண்டு நிகழ்வுகளில் (கடிகாரத்தைப் பிரித்துப் பார்த்தல், குளவிக் கூட்டை ஆராய்தல்) பார்த்தோம். இத்தகைய அறிவார்வம் ஆசார்யாளுக்கு இயல்பாகவே இருந்ததால் தான் அவர் செல்லும் இடங்களில் பலரிடம் பலவற்றைத் தெரிந்து கொண்டார். ஆசார்யாள் ஒரு யாத்திரையின் போது பார்த்த சிமெண்ட் அடுப்பைப் போல் சிருங்கேரியில் ஒன்றைச் செய்தார் என்று சொன்னோம். யாத்திரையில் அடுப்பைப் பார்க்கும் முன்னரே "சிருங்கேரியில் சிமெண்ட் அடுப்பு செய்ய வேண்டும்" என்ற எண்ணம் அவருக்கு இருந்தது என்று சொல்ல முடியாது. அடுப்பைப் பார்த்தும், அது எப்படி வடிவமைக்கப்பட்டிருக்கிறது, எப்படிச் செயல்படுகிறது என்பதைத் தெரிந்து கொண்ட பின்னரே சிருங்கேரியிலும் அது போன்ற ஒன்றைச் செய்யும் எண்ணம் அவருக்கு ஏற்பட்டிருக்கும் என்று ஊகிக்கலாம். இதே போல் இந்தியத் தொழில்நுட்பக் கழகம், இந்திய அறிவியல் கழகம், இந்திய விமானப் படை நிலையம்(!), இப்படிப் பல இடங்களுக்குச் சென்றும், கேள்விகள் கேட்டும் நுட்பமான பல விஷயங்களை ஆசார்யாள் தெரிந்து கொண்டார் என்று அவருடைய வரலாற்றில் பார்க்கிறோம்.

பலரிடம் பலவற்றைக் கற்றல் பற்றித் "திருவிளையாடற் புராணம்" என்ற நூலில் பரஞ்சோதி முனிவர் ஒரு உதாரணம் கூறுகிறார். மதுரை நகரில் வீசும் தென்றல் அது வீசும் வழியிலிருக்கும் தோட்டங்களில் உள்ள மலர்களின் மணங்கள் எல்லாவற்றையும் தாங்கி வருகிறது. அந்தத் தென்றலின் இயக்கத்தை விவரிக்கும் போது பரஞ்சோதி முனிவர் "ஆங்காங்கே கலைகள் தேரும் அறிவன் போல் இயங்குமன்றே" என்று கூறுகிறார்.[89] அதாவது எப்படி நல்லறிவுள்ளவன் ஒருவன் பல இடங்கள் சென்று அங்கே கற்க வேண்டியவற்றைக் கற்றுத் தேர்கிறானோ, அது போல் தென்றலும் பல இடங்கள் சென்று ஆங்காங்கே உள்ள மணங்களைச் சேர்த்துக் கொள்கிறது என்று ஒரு அழகிய உதாரணம் கூறுகிறார். இங்கே "அறிவன்" என்ற சொல் இந்த இயலில் நாம் கூறியதற்கு மிகவும் பொருத்தமாக உள்ளது. இதுவரை நாம் "प्रज्ञा" என்ற சொல்லிற்கு "அறிவு" என்றே பொருள் கூறினோம். அறிவுள்ளவர் "அறிவன்" என்று கூறப்படுகிறார். எப்படித் தென்றல் பல

[89] திருவிளையாடற் புராணம் 3.52.2451

நறுமணங்களைத் தாங்கி வருகிறதோ, அதே போல் ஆசார்யாளின் விஷயத்திலும் பல விதமான அறிவாற்றல்கள் அவருடைய ஆளுமையில் பல விதங்களில் மிளிர்ந்தன என்பதைப் பார்த்தோம்.

## மஹாப்ரக்ஞை – பிறர்சார்ந்த அறிவாற்றல்

இறுதியாக, மீண்டும் கார்ட்னரின் பல அறிவாற்றல்கள் கோட்பாட்டிற்கு வருவோம். அதில் அவர் கடைசியாகக் கூறும் தனிநபர் சார்ந்த அறிவாற்றல்கள் (personal intelligences) – தன் சார்ந்த அறிவாற்றலையும் பிறர்சார்ந்த அறிவாற்றலையும் சுருக்கமாகப் பார்ப்போம்.[90] தன் சார்ந்த அறிவாற்றல் என்பது ஒரு மனிதன் தன்னுடைய உணர்வுகளைப் பிரித்துப் பார்த்தும், தன்னுடைய சமூக மற்றும் கலாசாரக் கூறுகளின் இடையீட்டுடன் அவற்றைப் புரிந்து கொண்டும், அதன் அடிப்படையில் தன்னுடைய நடத்தையை அமைத்துக் கொள்ளும் ஆற்றல். பிறர் சார்ந்த அறிவாற்றல் வெளியுலகத்தை, அதாவது, பிறரை நோக்குவது; பிறரைக் கவனித்து அவர்களுக்குள் வேறுபாடுகள் காண்பது. முக்கியமாக இன்னொருவருடைய மனநிலை, மனப்போக்கு, அவருடைய மனமும் செயலும் எதனால் உந்தப்படுகின்றன, அவருடைய நோக்கம் என்ன ஆகியவற்றை ஊகிக்கும் ஆற்றல். இந்த ஆற்றல் சமூகத் தலைவர்கள், சமயத் தலைவர்கள் போன்றவருக்கு மட்டுமல்லாமல் ஆசிரியர்கள், நல்ல மேலாளர்கள் ஆகியோருக்கும் மிகவும் முக்கியமானது என்பதை நாம் ஊகிக்கலாம்.

இந்த இரண்டு (தனி நபர் சார்ந்த) அறிவாற்றல்களுக்கும் பிற அறிவாற்றல்களுக்கும் இரு முக்கியமான வேறுபாடுகள் உள்ளன. முதலாவது, மற்ற அறிவாற்றல்களைப் போல் இல்லாமல், இவற்றின் கலாசார அடிப்படை மிக ஆழமானது. தன் சார்ந்த அறிவாற்றலை எடுத்துக் கொள்வோம். பெரும்பாலும், ஒருவருடைய உணர்வுகள் பண்பாட்டுக் குறியீடுகளுடன் பிணைந்தே இருக்கின்றன. எனவே "நான் இப்பேற்பட்டவன்" என்ற தீர்மானம் பொதுவாக (ஏதாவது ஒரு) பண்பாட்டின் இடையீட்டுடனே பிறக்கிறது. இரண்டாவது தன்னுடைய உணர்வுகளை ஆராயும் போது மற்றவர்கள் என்ன செய்கிறார்கள்,

[90] "Frames of Mind – The Theory of Multiple Intelligences" by Howard Gardner, p. 253

சொல்கிறார்கள், சமூகம் என்ன சொல்லும் போன்றவை முக்கிய பங்கு வகிக்கின்றன. மேலே நாம் கூறிய இரண்டு வேறுபாடுகளின் காரணமாக, இந்த இரண்டு அறிவாற்றல்களையும் முழுதுமாகப் பிரிக்க முடியாது என்று கார்ட்னர் வாதிடுகிறார். இருப்பினும் இவ்வறிவாற்ற-ல்களின் இருப்பு புலப்பாட்டியல், பரிணாம உளவியல் ஆகியவற்றின் மூலமாக அறியலாம் என்று கூறுகிறார்.

நம்மைப் பொறுத்த மட்டில் இதில் இன்னொரு சிக்கலும் இருக்கிறது. சாதாரணமான ஒரு மனிதனின் தனி நபர் அறிவாற்றல் என்று கார்ட்னர் எதை வரையறுக்கிறாரோ, அதை வேதாந்த தத்துவத்தை அறிந்த ஒரு ஜீவன்முக்தருக்கு நீட்டிக்க முடியாது. சொல்லப் போனால் மோக்ஷத்தை நாடும் சாதகனுக்கே இது பொருந்தாது. கார்ட்னரும் இதை உணர்ந்துள்ளார் என்றே தெரிகிறது; ஏனென்றால், தன் சார்ந்த அறிவாற்றலுக்கும் கலசாரத்திற்கும் உள்ள பிணைப்பைப் பற்றி அவர் பேசும் போது, ''... உதாரணமாக, 'நான்' என்ற உணர்விற்கு மிகவும் நுணுக்கமாகவும், ஐரோப்பிய கலாசாரத்திற்கு முற்றிலும் மாறுபட்டது-மான பொருள் கொள்ளும் இந்திய யோகிகளுக்கு (தன் சார்ந்த அறிவாற்றல்) வேறு மாதிரி இருக்கும். ...'' என்று கூறியுள்ளார்.[91] ஆகவே, ஆசார்யாளின் விஷயத்தில் தன் சார்ந்த அறிவாற்றலைப் பற்றிப் பேச வேண்டுமானால், இந்த அறிவாற்றலை வேதாந்த சாஸ்திரத்தின் பின்புலத்தைக் கொண்டு வரையறுக்க வேண்டும். தத்துவ ஞானம், ஜீவன்முக்த நிலை ஆகியவற்றைப் புலப்பாட்டியல், உளவியல் கோட்பாடுகள் வாயிலாக ஆராய முடியுமா போன்ற கேள்விகளை நன்கு விசாரிக்க வேண்டும். இவை இந்நூலின் வரையறைக்கு அப்பாற்பாட்ட விஷயங்கள். இவற்றை வேறு ஓரிடத்தில் கூறுவோம். இங்கே நாம் பிறர் சார்ந்த அறிவாற்றலைப் பற்றி மட்டும் பேசுவோம்.

நாம் மேலே கூறியது போல் பிறர் சார்ந்த அறிவாற்றல் என்பது, மற்றவர்களின் மன நிலை, மனப்போக்கு முதலியவற்றை அறிந்து அதற்கேற்பச் செயல்படும் திறன். இத்திறன் கொண்டவர்களுள் சிலர், மற்றவர்களின் விருப்பங்களும் நோக்கங்களும் மறைக்கப்

---

[91] மேலது ப. 288

பட்டிருந்தாலும், அவற்றை ஊகிக்கும் திறன் கொண்டவர்களாக இருக்கிறார்கள். ஒருமித்த கருத்து இல்லாத பலரை ஒன்று சேர்த்து அவர்களை ஒரு குறிப்பிட்ட செயலில் ஈடுபடுத்தும் ஆற்றல் இவர்களுக்கு இருக்கிறது. இதையே கார்ட்னர் பிறர் சார்ந்த அறிவாற்றலின் உயர் நிலையாகக் கூறுகிறார். மனித புத்தியின் இந்தச் செயல்பாடு, அறிவியல், கலை போன்ற துறைகளில் நாம் பார்க்கும் அறிவாற்றலைக் காட்டிலும் படைப்புத் திறன் கொண்டது என்ற (பிரபல உளவியலாளர் என். கே. ஹம்ப்ஃரேயின்) கருத்தை கார்ட்னர் இங்கே குறிப்பிடுகிறார்.

இனி, ஆசார்யாளைப் பொறுத்த வரையில் பிறர் சார்ந்த அறிவாற்றல் அவரது ஆளுமையில் இரண்டு கூறுகளில் முக்கியமாக வெளிப்பட்டது. முதலாவதாக ஒரு ஆசார்யராகத் தமது சிஷ்யர்களின் மனப்பாங்கிற்கேற்ப உபதேசம் செய்து அவர்களை நல்வழிபடுத்தல்; இரண்டாவது, ஒரு பெரிய நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பை வகிப்பவர் என்ற முறையில் தம்மை அணுகுபவர், மடத்தில் பணி புரிபவர் போன்றவர்களோடு நேரும் பரிமாற்றங்கள். இம்மாதிரியான பரிமாற்றங்களில் லாப நஷ்டங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டும், பின்விளைவுகளைப் பற்றிச் சிந்தித்தும் தம்மைச் சுற்றியுள்ளவர்களை - அவர்களுக்குள் ஒருமித்த கருத்தில்லாத போதும் - ஒரு குறிப்பிட்ட வழியில் செயல்படுத்தும் ஆற்றல் அமைந்திருத்தல் இன்றியமையாதது. இது ஆசார்யாளிடம் எவ்வாறு அமைந்திருந்தது என்பதை அவர் வாழ்க்கைக் குறிப்புகள் சிலவற்றின் வாயிலாகப் பார்ப்போம்:

“... ஒரு செயலை நிறைவேற்றுவதன் பொருட்டு, ஒருமித்த கருத்து இல்லாத பலரையும் மிகத் திறமையாக ஒரே மாதிரி செயலாற்ற வைக்கும் ஆற்றல் ஆசார்யாளிடம் இருந்தது. ஒரு சமயம், சில சிஷ்யர்கள், தங்களுடைய ஊரில் சிருங்கேரி மடத்தின் கிளை ஒன்றைக் கட்ட விருப்பம் கொண்டு, கட்டிட வரைபடம் ஒன்றைத் தயார் செய்து ஆசார்யாளிடம் காட்டி அவருடைய கருத்தைக் கேட்டனர். அதற்கு அவர், ‘நன்றாக இருக்கிறது’ என்றார். பின்னர், இவர்களுடன் கருத்து வேறுபாடு கொண்ட இன்னொரு சிஷ்யர் குழு வேறொரு வரைபடத்தை ஆசார்யாளிடம் காட்டி அவருடைய கருத்து என்ன என்று கேட்டனர். இவர்களுக்கும் ஆசார்யாள், ‘நன்றாக இருக்கிறது’ என்று கூறினார்.

முதலில் ஆசார்யாளைப் பார்த்தவர்கள் இதைக் கேள்வியுற்று, ஆசார்யாளைச் சந்தித்து, 'எங்களுடைய திட்டத்தை ஏற்ற பின்னர், ஆசார்யாள் அவர்களுடைய திட்டத்தையும் எப்படி ஒப்புக் கொண்டார்?' என்று கேட்டனர். அதற்கு அவர், 'நீங்கள் என்னிடம் ஒரு பசுவைக் காண்பித்து இது எப்படி இருக்கிறது என்று கேட்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். நான் பசு நன்றாக இருக்கிறது என்று சொல்வேன். வேறு சிலர் இன்னொரு பசுவைக் காண்பித்தால் அதுவும் நன்றாக இருக்கிறது என்று சொல்வேன். இரண்டையும் ஒன்றாகக் காண்பித்து எது நன்றாக இருக்கிறது என்று கேட்டால் அவற்றுள் ஒன்றை நான் தேர்ந்தெடுத்திருக்கலாம். அதே மாதிரி நீங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து என்னிடம் இரண்டு திட்டங்களையும் காண்பித்திருந்தால் நான் அதில் ஒன்றைத் தேர்ந்தெடுத்திருப்பேன்; கட்டுமானப் பணியும் அந்த திட்டத்தின் அடிப்படையில் இருந்திருக்கும்' என்று கூறினார். ...'' [92]

*ஆசார்யாள் இரு தரப்பினரையும் கோபித்துக் கொள்ளவில்லை என்பதை இங்கே கவனிக்க வேண்டும். ''ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு மாதிரி சொன்னால் காரியம் நடக்குமா'' என்று அவர் கோபம் கொண்டிருந்தால், அதில் நியாயமும் இருந்திருக்கும். ஆனால் அப்படிச் செய்தால் ஆக வேண்டிய காரியம் வெற்றிகரமாக முடிந்திருக்கும் என்று சொல்வதற்கில்லை. தவிரவும், கட்டிட வரைபடம் விஷயத்தில் கருத்து வேறுபாடு இருக்கக் கூடாது என்று ஆசார்யாள் கூறவில்லை. 'இரண்டையும் எடுத்துக் கொண்டு வாருங்கள், அதில் ஒன்றைத் தேர்ந்தெடுப்போம்' என்றே கூறினார். இரண்டு திட்டங்களையும் ஒன்றாகப் பார்த்திருந்தால் அவற்றுள் உள்ள சிறப்பு அம்சங்களைப் பொருத்தமான வகையில் சேர்த்திருக்கவும் முடியும். மாற்றுக் கருத்துக்கும் மனக் கசப்பிற்கும் உள்ள வேற்றுமை என்ன, மனக் கசப்பு இருந்தால் ஒரு செயலை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாது, கருத்து வேறுபாடுகள் இருக்கும் போது எப்படிச் செயலாற்ற வேண்டும் என்ற இம்மூன்றையும் ஆசார்யாள் தாம் அளித்த விடையில் சுட்டிக் காட்டியதை இங்கே பார்க்கிறோம்.*

[92] "The Multifaceted Jivanmukta" என்ற நூலிலிருந்து தமிழாக்கப்பட்டது; ப. 271

*மற்றவர்களின் மனப்போக்கு முதலியவற்றை ஆசார்யாள் அறிவது பற்றிச் சில குறிப்புகளைப் பார்ப்போம்:*

“**... (ஆசார்யாள்)** தூய்மையான உள்ளம் கொண்டவர்கள் பக்கம் எளிதாக, எந்தக் கேள்வியும் கேட்காமல் சாய்ந்துவிடுவார்; ஒருவருக்குச் செயல் திறன் இல்லாவிடிலும், சிரத்தை இருந்தால் அவரை உடனே ஏற்றுக் கொள்வார்**.** ஆனால், கபட வேஷம், சிரத்தையின்மை, செயல்பாட்டில் உள்ள குறைகளை மறைப்பதற்காகத் தரவுகளை ஆதாரங்களாகக் காட்டுதல் போன்வற்றை உடனே அடையாளம் கண்டு கொள்வார்**.** தனிப்பட்ட முறையில் தன்னிடம் கூறப்பட்டதின் பேரில் அவர் மேற்கொண்ட விசாரணைகளிலும், எடுக்கும் முடிவுகளிலும், தம்மிடம் விஷயத்தைக் கூறியவர் யார் என்பதை வெளிப்படுத்த மாட்டார்**.** இதனால் தம்மிடம் பேசியவருக்கு எந்த விதமான தொந்தரவோ நாணமோ ஏற்படாதவாறு பார்த்துக் கொள்வார்**.** ஆனால் இன்னொருவரை வீணாகக் குறை கூறுவது, பொறாமையினால் மற்றொருவரைத் தவறாகப் பேசுவது போன்றவற்றைச் சற்றும் அங்கீகரிக்க மாட்டார்**. ...**” [93]

*இதில் இறுதியாகக் கூறியதைச் சற்று கவனிக்க வேண்டும். பொதுவாகப் பலர் ஒருங்கிணைந்து செயலாற்றும் போது அஹங்காரம் தலை தூக்குவதற்குப் பல வாய்ப்புகள் உண்டு. இதனால், பொறாமை முதலிய குணங்கள் வளர்கின்றன. முடிவில், எது செய்யப்பட வேண்டுமோ அது சரியாகச் செயல்படுத்தப் படுவதில்லை. ஒரு நிறுவனத்தை எடுத்துக் கொள்வோம். அதில் பணி புரிபவர்களிடம் புறங்கூறுதல், பொறாமை போன்ற குணங்கள் இருப்பது அந்த நிறுவனத்தின் செயல்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் நல்லதல்ல என்பதை நல்ல மேலாளர்கள் அறிவர். அம்மாதிரியான சூழ்நிலையில் என்ன செய்வது என்பதற்கு என்ன வழிமுறைகள் உண்டோ அதைச் செய்கின்றனர். சிருங்கேரி மடம் என்பதும் ஒரு பெரிய நிறுவனம் தான். ஆனால் அதில் ஆசார்யராகப் பொறுப்பு வகிப்பவர் வெறும் நிர்வாகி மட்டுமல்ல; தர்மத்தைப் போதிப்பவர். ஆகவே, பொறாமை முதலியவற்றைத் தம் பொருட்டுப் பணி புரிபவர்களிடம் வளர விடாமல்*

[93] “The Multifaceted Jivanmukta” என்ற நூலிலிருந்து தமிழாக்கப்பட்டது; ப. 270

*தடுப்பது, ஒரு குரு என்கிற முறையில் அவருடைய கடமையாகிறது. ஏனென்றால், புறங்கூறுதல், பொறாமை போன்ற குணங்கள் ஒரு மனிதனின் ஆன்மிக வளர்ச்சிக்கு எதிரிகள். இவற்றை எவரும் மனதில் வளர விடக் கூடாது என்பதை ஆசார்யாள் பலவாறாக உபதேசித்-துள்ளார்:*

‘‘... இதை நன்றாகக் கவனித்துப் பார்த்தால், நமது குறைகளை மறைப்பதன் பொருட்டே மற்றவரிடத்தில் குற்றம் காண்கிறோம் என்பது தெளிவாகிறது. இது ஒரு கெட்ட குணம்; ஏனென்றால் நாம் மற்றவர்களின் நற்குணங்களைப் பாராட்ட வேண்டுமேயன்றி அவர்களுடைய நடத்தையில் குற்றம் காண்பதிலோ அவர்கள் எந்த விதத்திலாவது குறை உள்ளவரென்று தீர்மானிப்பதோ கூடாது. இதனாலேயே கீதையில் கிருஷ்ணர் ‘பிறரைக் குறை சொல்லாத’ அர்ஜுனனுக்குத் தத்துவத்தை உபதேசிக்க முன்வந்தார். சங்கர பகவத்பாதரும், ‘ப்ரபோத ஸுதாகரம்’ என்ற நூலில் பிறரைக் குறை சொல்வதைக் கேட்ட மாத்திரத்திலேயே ஒருவன் பாவம் செய்கிறான் என்கிறார். அப்படியுள்ள பொழுது நாமே மற்றவரைக் குறை சொல்வதில் ஈடுபடுவது பெரும்பாவம் என்று சொல்லவும் வேண்டுமோ? ...’’[94]

‘‘... யோகியாயிருப்பவனுக்கு டம்பம், தர்பம் (பொறாமை). அஹங்காரம் ஆகியவை இருக்கவே கூடாது. அஹங்காரம் முதலியவற்றைக் கொண்டிருப்பவனுக்குக் கல்வியே வருவதில்லை. ... ஒருவனிடம் கல்வியானது, ‘ஐயா! உன்னிடம் வந்திருக்கிறேன். என்னைக் காப்பாற்றுங்கள்’ என்று கேட்டுக் கொண்டதாம். எவ்வாறு கல்வியைக் காப்பாற்றுவது? ‘பொறாமையுள்ளவனுக்குக் கல்வி கற்றுக் கொடுக்–காமலிருப்பது தான் கல்வியைக் காப்பாற்றும் வழியாகும்’ என்று கூறியதாம். ...’’[95]

*இப்படி நிர்வாகியாக மட்டும் இல்லாமல் ஆசார்யராகவும் இருந்ததால், பிறர் சார்ந்த அறிவாற்றல் ஆசார்யாளிடம் வெளிப்படும் போது அவர் ஒரு ஆசார்யர் என்கிற சிறப்பு அம்சமும் அதனுடன் சேர்ந்து காணப்படுகிறது. அதை எடுத்துக்காட்டும் வகையில் இரண்டு*

---

[94] மெய்ஞான விளக்கவுரைகள் ப. 8-9

[95] *முத்தி நெறி ப.* 145

*நிகழ்வுகளைக் கூறி இந்த இயலின் இப்பகுதியை நிறைவு செய்வோம்:*

“... சில சிஷ்யர்கள் ஆசார்யாளைத் தரிசனம் செய்ய வந்தனர். அவர் அவர்களை அமருமாறு பணித்தார். அவர்களுள் ஒருவர் பேச முற்பட்ட போது, ஆசார்யாள் சற்றும் எதிர்பாராத விதமாகத் தமது கண்களை மூடிக் கொண்டு, ‘நீங்கள் (பேசத்) துவங்குமுன், ஒரு விஷயத்தைத் தெளிவாகச் சொல்கிறேன். இன்னொருவர் மனதைக் கஷ்டப்படுத்தும் வகையில் என்னால் எதையும் செய்ய முடியாது. அதனால் என்னை அந்த நிலைமையில் நிறுத்தாதீர்கள்’ என்று கூறித் தம் கண்களைத் திறந்து, ‘சரி, இப்பொழுது நீங்கள் சொல்ல வந்ததைச் சொல்லலாம்’ என்றார். வந்தவர்கள் இன்னொருவரைப் பற்றிக் குறை சொல்லவே வந்திருந்தார்கள். ஆனால் ஆசார்யாள் அதற்கு அப்பொழுது வழியில்லாமல் செய்து விட்டார். எனவே, வேறு விஷயங்களைப் பற்றிப் பேசிவிட்டுச் சென்றனர். ...”

“... (ஒரு செயல் நிறைவேறியது தொடர்பாக) அப்பணிக்குத் தலைமை வகித்தவர் பல விதமாகப் பாராட்டப்பட்டார். இதனால் அப்பணியில் ஈடுபட்ட மற்றவருக்குச் சிறிது மனக்கஷ்டம் உண்டாயிற்று. ஆசார்யாள் அவர்களைப் பார்த்து, அவர்களை சமாதானப்படுத்தும் வகையில், ‘ஒரு பெரிய மரக்கட்டையை அப்புறப்படுத்த வேண்டும் என்று வைத்துக் கொள்வோம். அதற்கு ஒரே சமயத்தில் பலருடைய முயற்சி தேவைப்படுகிறது. ஆனால் ஒரு ஊசியை எடுப்பதற்கு இந்த வழி சரி வராது. இதைச் செய்வதற்கு யாராவது ஒருவர் மட்டுமே முன்வர வேண்டும். இதே போல், சில சமயங்களில் ஒரு செயலை முடிப்பதற்கு பலர் அவர்களுக்குள் எந்த வித்தியாசமும் இல்லாமல் வேலை செய்ய வேண்டியிருக்கும்; ஆனால் சில காரியங்களுக்கு ஒருவர் முன்வந்து தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டும். இந்த விஷயம் இரண்டாவது வகையைச் சேர்ந்தது. தவிரவும், அவருடைய தலைமை நன்றாகவே இருந்திருக்கிறது. அப்படி இருக்கும் போது, அவரை ஏன் குறை கூற வேண்டும்?’ என்றார். ...”[96]

*இந்த இயலில் இதுவரை கூறியதைச் சுருக்கமாகக் கூறுவோம்.*

---

[96] “The Multifaceted Jivanmukta” *என்ற நூலிலிருந்து தமிழாக்கப்பட்டது; ப.* 270 - 272

“மஹாப்ரக்ஞை” என்ற சொற்றொடருக்குப் “பேரறிவு” என்று பொருள் கொண்டு, ஆசார்யாளிடத்தில் இப்பேரறிவு பல பரிமாணங்களாக வெளிப்பட்டது என்று கூறினோம். முதலாவதாக “அறிவு” என்பதைக் “கல்வியறிவு” என்று குறித்து ஆசார்யாளின் கல்வியறிவு, தாம் கற்றதைக் கற்றோர் அவையில் விரித்துக் கூறும் ஆற்றல், பிறருக்குக் கற்பித்தல் ஆகியவற்றைப் பற்றிக் கூறினோம். அதன் பின், அறிவாற்றல் என்பது கல்வியறிவு மட்டுமல்ல என்ற வாதத்தை முன்வைத்து ஹவர்ட் கார்ட்னரின் பல அறிவாற்றல்கள் கோட்பாட்டை ஒரு பட்டறிவு சார்ந்த சாதனமாகப் (heuristic device) பயன்படுத்தி ஆசார்யாளிடம் விளங்கிய பல விதமான ஆற்றல்களை விவரித்தோம். ஆசார்யாளிடம் அமைந்திருந்த தொழில்நுட்பத் திறனை ராபர்ட் ஸ்டெர்ன்பெர்க்கின் முப்படி நிலை அறிவுத்திறன் (பகுப்பாய்வு, படைப்பு, செயல்பாடு) கோட்பாட்டின் துணை கொண்டு விவரித்தோம். இந்த அறிவாற்றல்களுக்கும் ஆசார்யாளின் ஆளுமையில் இருந்த பன்முகத் தன்மைக்கும் உள்ள தொடர்பு நாம் அவருடைய வரலாற்றிலிருந்து எடுத்துக் கூறிய பல சம்பவங்களில் நன்றாகத் தெரிகிறது.

## வேதாந்த சாஸ்திரத்தின்படி ‘மஹாப்ரக்ஞை’

இனி, “ப்ரக்ஞை” என்பதற்கு வேதாந்த சாஸ்திரம் கூறும் குறிப்பான பொருளை அடிப்படையாகக் கொண்டு ஆசார்யாளிடத்தில் அத்தகைய ப்ரக்ஞை எப்படி அமைந்திருந்தது என்பதைக் கூறுவோம். சங்கர பகவத்பாதர் இயற்றிய விவேக சூடாமணி நூலின் துவக்கத்தில், மோக்ஷத்தை நாடுபவன் எத்தகைய குருவை நாட வேண்டும் என்பதைக் கூறும் பொழுது, குருவைப் “ப்ராக்ஞர்” என்று குறிப்பிடுகிறார். இதற்கு ஜகத்குரு ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் எழுதிய பாஷ்யத்தில் உள்ள விளக்கத்தைப் பார்ப்போம்:

(ப்ரக்ஞை) என்பது ஒப்பற்ற (ப்ர) ஞானம் (ஞா); (அதாவது) பரம்பொருளை நேரடியாக அறிதல். எவருக்கு இந்த ப்ரக்ஞை இருக்கிறதோ அவர் “ப்ராக்ஞர்” என்று கூறப்படுகிறார். பிரம்ம நிஷ்டர் (பரம்பொருளில் உறுதியாக நிலைபெற்றவர்) என்று பொருள். [97]

---

[97] விவேக சூடாமணி உரை சுலோகம் 33

எனவே ஆசார்யாள் "महाप्रज्ञः" என்று குறிப்படப்படும் போது அச்சொற்றொடர் "ஒப்பற்ற ஞானம் உள்ளவர்; பரம்பொருளில் உறுதியாக நிலைபெற்றவர்" என்று பொருள் தருகிறது. ஒப்பற்ற ஞானம் (ப்ரக்ஞை), உறுதியான ஞானம் (ஸ்திதப்ரக்ஞ) என்றால் என்ன என்பதும், அதைக் கொண்ட ஜீவன்முக்தர் எப்படி இருப்பார் என்பவையும் விவேக சூடாமணி நூலின் இறுதிப் பாகத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. அதிலிருந்து சில சுலோகங்களையும் அவற்றுக்கு ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் எழுதிய விளக்கத்தையும் இங்கே கூறுவோம்:[98]

स्थितप्रज्ञो यतिरयं यस्सदानन्दमश्नुते ।
ब्रह्मण्येव विलीनात्मा निर्विकारो विनिष्क्रियः ॥

(மாறுதலற்றும், செயலற்றும், மனம் பரம்பொருளில் மட்டுமே ஒன்றுபட்டு எவர் எப்பொழுதும் ஆனந்தம் நுகர்கிறாரோ, அந்த யதி உறுதியான ஞானம் கொண்டவர் ஆவார்.)

ब्रह्मात्मनो: शोधितयोरेकभावावगाहिनी ।
निर्विकल्पा च चिन्मात्रा वृत्तिः प्रज्ञेति कथ्यते ।
सा सर्वदा भवेद्यस्य स जीवन्मुक्त इष्यते ॥

(உபாதிகள் விலக்கப்பட்ட பரம்பொருளிற்கும் ஆத்மாவிற்கும் உள்ள ஐக்கியத்தை விஷயமாகக் கொண்டதும், வேறுபாடற்றதும், தூய அறிவின் வடிவுமான விருத்தி "ப்ரக்ஞை" என்று கூறப்படுகிறது. எவருக்கு இது எப்பொழுதும் உள்ளதோ அவர் ஜீவன்முக்தர் என்று அறியப்படுகிறார்.)

இந்த சுலோகங்களுக்கு ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் எழுதிய உரைவிளக்கத்தைப் பார்ப்போம். முதல் சுலோகத்தில், ஸ்திதப்ரக்ஞர் (உறுதியான ஞானம் கொண்டவர்) 'பிரம்மத்திலேயே (பரம்பொருளிலேயே) ஒன்றிவிட்ட மனமுள்ளவர்' (ब्रह्मण्येव विलीनात्मा) என்று குறிப்படப்படுகிறார். இவரது மனம் பிரம்மத்தில் ஒன்றிவிட்டதால் அதில் மகிழ்ச்சி, வருத்தம் முதலிய மாறுதல்கள் இல்லாத மனம் உடையவராக (निर्विकारः) இருக்கிறார். எப்படி மனம் அசையாது

---

[98] விவேக சூடாமணி சுலோகம் 427-428

இருக்கிறதோ, அதே போல் புறத்திலும், அதாவது உடலில் அசைவு முதலியன இல்லாதவர் (विनिष्क्रियः). இந்த மூன்று பதங்களையும் சேர்த்துப் பொருள் கொண்டால், இங்கே நிர்விகல்ப ஸமாதி குறிக்கப்படுகிறது என்பது புரிகிறது. அந்நிலையில் மனம் பிரம்மத்துடன் ஒன்றுபட்டு, யதி எப்பொழுதும் ஆனந்தம் எய்துகிறார் என்பது சுலோகத்தின் பொருள்.

இதன் தொடர்ச்சியாக அடுத்த சுலோகத்தில் "ப்ரக்ஞை" என்பதன் விளக்கமும் அமைகிறது. அதாவது, உபாதிகளற்ற பரம்பொருளுக்கும் உள்ளே இருக்கும் ஆத்மாவிற்கும் வேதாந்த சாஸ்திரத்தின் மஹாவாக்கியங்கள் கூறும் ஐக்கியத்தை (குருவிடம்) கேட்டும், சிந்தித்தும், பின்பு அதை உறுதியுடன் தியானம் செய்தால், அந்த ஐக்கியத்தையே விஷயமாகக் கொண்ட மனோவிருத்தி ஏற்படுகிறது. இதுவே இங்கே "ப்ரக்ஞை" என்று அறியப்படுகிறது.[99] இந்த விருத்தி மனதில் ஏற்படும் மற்ற விருத்திகளைப் போல் அல்லாதது; 'ஒரு பொருளைப் பற்றிய அறிவு' என்றவாறு இல்லாமலும், தொடர்பு சார்ந்த அறிவாக இல்லாமலும், வரையறுக்கப்படாத தூய அறிவின் வடிவாக உள்ளது. இதை சாஸ்திரம் 'அகண்டாகார விருத்தி' என்றும் குறிப்பிடுகிறது. எவருக்கு இந்த ப்ரக்ஞை எப்பொழுதும் உள்ளதோ, அவர் ஜீவன்முக்தர் என்று அறியப்படுகிறார்.

ஆனால் இந்த இரண்டு சுலோகங்களுக்கு இவ்வாறு மட்டுமே பொருள் கொண்டால், சில கேள்விகள் எழுகின்றன. "ப்ரக்ஞை" என்பது ஸமாதி நிலையில் தோன்றும் அகண்டாகார விருத்தி என்று கூறி, ஒரு ஜீவன்முக்தருக்கு இந்த விருத்தி எப்பொழுதும் உள்ளது என்றும் கூறினால், அவர் எப்பொழுதும் ஸமாதியில் இருக்கிறார் என்று முடிவு செய்யலாம். அப்படியானால் அவர் சிஷ்யனுக்கு எப்படி தத்துவத்தை உபதேசம் செய்வார்? நாம் இந்நூலின் முன்னுரையில் குறிப்பிட்டது போல், தத்துவத்தை அறிந்த ஞானியால் மட்டுமே இன்னொருவனுக்கு அந்த தத்துவத்தை உணர்த்த முடியும் என்று வேதம் கூறுகிறது. அவ்வாறிருக்கும் போது, தத்துவத்தைத் தெரிந்து கொண்டவர்

---

[99] முழுமையான விவேகம் பற்றி முந்தைய இயலில் நாம் கூறியதைப் பார்க்கவும்

ஸமாதியிலேயே அமர்ந்திருந்தால் உபதேசம் செய்வது எப்படி?

இனி, "ப்ரக்ஞை" ஸமாதி நிலையிலிருந்து வெளிவந்த பின்னும் இருக்கும் என்று கூறினால், இரண்டாவது சுலோகத்தில் "எவருக்கு இந்த விருத்தி எப்பொழுதும் உள்ளதோ" என்ற குறிப்பை எவ்வாறு புரிந்து கொள்வது என்ற கேள்வி எழுகிறது. அதற்கு விடை, உறுதியான ஞானம் கொண்டவர் ஸமாதியிலிருந்து கீழிறங்கி, உலக விவகாரங்களில் ஈடுபட்டுள்ள போதும் ஆத்மாவிற்கும் (தனக்கும்) பரம்பொருளுக்கும் உள்ள ஐக்கியத்தின் அறிவு அவரை விட்டு நீங்குவதில்லை. அதாவது, வரையறுக்கப்படாத தூய அறிவு வடிவான விருத்தி என்று எதைக் கூறினோமோ, அந்த விருத்தி அவருள் எப்பொழுதும் இருக்கிறது. இதனால் தான் அவர் 'உறுதியான ஞானம் கொண்டவர்' என்று கூறப்படுகிறார். பந்தத்தின் தளைகள் அந்த விருத்தியின் மூலம் அறுபட்டு விட்டதால், அவர் ஜீவன்முக்தர் என்று அறியப்படுகிறார். தான் ஆனந்த வடிவான பரம்பொருள் என்பதை எப்பொழுதும் உணர்வதால் அவர் எப்பொழுதும் ஆனந்தம் துய்க்கிறார். ஸமாதி நிலையில் இந்த விருத்தியின் தாக்கம் அதிகமாகவும், உலக விவகாரங்களில் ஈடுபடும் பொழுது குறைந்தும் இருப்பது இயல்பு. ஆனால் இந்த விருத்தி அவருள் எப்பொழுதும் இருக்கிறது.

இதன் காரணமாக, ஜீவன்முக்தர் ஸமாதி நிலையில் இல்லாத போது பிரபஞ்சத்தை வெறும் தோற்றமாகவே காண்கிறார். அதை (விவேக சூடாமணியில்) அடுத்துள்ள சுலோகம் கூறுகிறது:[100]

यस्य स्थिता भवेत्प्रज्ञा यस्यानन्दो निरन्तरः ।
प्रपञ्चो विस्मृतप्रायः स जीवन्मुक्त इष्यते ॥

(எவருக்கு ப்ரக்ஞை எப்பொழுதும் இருக்கிறதோ, எவருடைய ஆனந்தம் முடிவற்றதோ, எவருக்குப் பிரபஞ்சம் மறந்தாற் போல் இருக்கிறதோ, அவர் ஜீவன்முக்தர் என்று அறியப்படுகிறார்.)

இங்கே "எவருக்குப் பிரபஞ்சம் மறந்தாற் போல் தோன்றுகிறதோ ..." (**प्रपञ्चो विस्मृतप्रायः**) என்ற தொடருக்கு விளக்கமாக ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள், "... 'தத்துவத்தை அறிந்த ஞானிகள் உனக்கு

[100] விவேக சூடாமணி சுலோகம் 429

*ஞானத்தை உபதேசம் செய்வார்கள்' என்று பகவத் கீதையில் கூறியுள்ளவாறு, ஸமாதியிலிருந்து வெளி வரும் குரு உலகத்தை நினைவுபடுத்திக் கொண்டவர் போல், சிஷ்யனுடைய நற்பேற்றுப் பயனால், அவனுக்குத் தத்துவ உபதேசம் செய்கிறார்..." என்று கூறுகிறார்.*

*ஞானிகளின் ஸமாதி நிலையில் உள்ள வேறுபாடுகள் தொடர்பாக விவேக சூடாமணியில் உள்ள இன்னொரு சுலோகத்திற்கு ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அளிக்கும் விளக்கத்தை இங்கே கூறுவது பொருத்தமாக இருக்கும்:*

"**...** (பரம்பொருள் பற்றிய) ஞானம் ஒன்றாக இருப்பினும், ஸமாதியின் தாக்கத்தில் உள்ள வேறுபாட்டினால், பிரம்ம ஞானம் அடைந்தவர்கள் ப்ரஹ்மவித், ப்ரஹ்மவிதர, ப்ரஹ்மவித்வரீயான், பரஹ்மவித்வரிஷ்ட என்று நான்கு வகைகளாக **...** வேறுபடுத்தப் படுகிறார்கள். இவர்களுள் **...** ப்ரஹ்மவித்வரிஷ்டர் குணங்களற்ற பிரம்மத்தின் இயல்பாகவே இருக்கிறார். மற்றவர்கள் அவரை (ஸமாதியிலிருந்து) எழுப்ப முற்பட்டாலும், அவர் எழுவதில்லை. **...** ப்ரஹ்மவித்வரீயர் மற்றவர்கள் அவரை எழுப்பும் போது ஸமாதியிலிருந்து வெளிவருகிறார். **...** ப்ரஹ்மவித்வரர் என்ற ஸ்திதப்ரஞர் முன்வினையின் பலனாக ஸமாதியிலிருந்து தானாகவே வெளியே வருகிறார். **...** ப்ரஹ்மவித் என்று கூறப்படுபவர்கள் (யாக்ஞவல்க்யர் போன்றோர்) ஞானம் பக்குவம் அடைவதற்காக ஸந்யாஸம் மேற்கொண்டு மற்றவர்களுக்கு (ஜனகர் முதலியவர்களுக்கு) ஞானத்தை உபதேசித்து அவர்கள் பரம்பொருளை உணருமாறு செய்பவர்கள். **...**" [101]

*இதுவரை நாம் கூறியதைப் பின்புலமாகக் கொண்டு ஆசார்யாளிடம் அமைந்திருந்த 'மஹாப்ரக்ஞை' பற்றிச் சுருக்கமாகக் கூறுவோம். முதலில், தாம் நிர்விகல்ப ஸமாதி அடைந்தது பற்றி ஆசார்யாள் கூறுவதைப் பார்ப்போம்:*

"**...** (மாலையில் தியானத்தில் அமர்ந்த போது) காலையில் நான் ஸவிகல்ப ஸமாதியில் அமர்ந்ததாலும், அதன் பின்னர் பிற்பகலில்

---

[101] விவேக சூடாமணி உரை; சுலோகம் 454

சாஸ்திரத்தைப் படித்துச் சிந்தித்ததாலும் 'நான் இரண்டாவதற்றதான பிரம்மம்' என்று என் மனதில் முந்தைய நாள் மாலையிலிருந்து தீவிரமாகவும், இயல்பாகவே தொடர்ச்சியாகவும் இருந்த உணர்வு மேலும் வலிவுற்றது. எனவே அந்த எண்ணத்தை நான் வலிவுறச் செய்ய வேண்டிய அவசியம் இருக்கவில்லை. ... ஆகாசம் போல் விரிவடை– வதை உணர்ந்தேன்; 'நான்' என்கிற உணர்வு கிட்டத் தட்ட மறைந்து என் மனம் ஸவிகல்ப ஸமாதி அடைந்தது.

ஆனந்தம் மிக அதிகமாக இருந்தாலும், அதனால் ஆட்கொள்– ளப்படாமல் இருக்க முயன்று, 'நான் ஆனந்தத்தை அனுபவிப்பவன் அல்ல; நானே ஆனந்த வடிவானவன்' என்ற எண்ணத்தை வரவழைத்தேன். உடனே ஒரு பெரிய மாற்றம் நேர்ந்தது. தியானம் செய்பவர், தியானம், தியானிக்கப்படும் பொருள் ஆகிய மூன்றுக்கும் உள்ள வேறுபாடு முற்றிலும் மறைந்தது. 'நான்' என்கிற தனித்தன்மை, வெளி, காலம், பொருட்கள் என்ற எவையும் இருக்கவில்லை. எப்பொழுதும் இருப்பதும், தூய அறிவின் வடிவானதும், பரமானந்த வடிவும் ஆன பரம்பொருள் மட்டுமே, எந்த இரண்டாவது பொருளின் கலப்புமின்றி விளங்கியது. ...'' (அடிக்கோட்டுக் குறி நம்முடையது)[102]

*ஆசார்யாள் கூற்றில் நாம் அழுத்தக் குறியிட்ட வாக்கியத்திற்கும், விவேக சூடாமணியில் ''ப்ரக்ஞை'' என்பதைப் பற்றிய விளக்கத்திற்கும் உள்ள ஒற்றுமையைக் கவனிக்க வேண்டும். ''ப்ரக்ஞை'' என்பதை நாம் 'மேலான அறிவு' என்றும் 'பரம்பொருளைப் பற்றிய அறிவு' என்றும் கூறினாலும், அது இன்னொரு பொருளைச் சார்ந்த அறிவு* (relational knowledge) *அல்ல. மேலும் அந்த அறிவு இன்னொன்றால் வரையற்றுக்கப்பட்டதும் அல்ல. சாதாரணமாக நாம் ''அறிவு'' என்று குறிப்பது அறிபவர், அறியப்படுவது, அறிவு என்ற மூன்றின் தொடர்புடனேயே இருக்கும். ஆனால், இங்கே அவ்வாறன்றி அறிபவர், அறியப்படும் பொருள் ஆகியவையின்றித் தூய அறிவு மட்டுமே விளங்குகிறது. இந்த விருத்தியையே சாஸ்திரம் ''அகண்டாகார விருத்தி'' என்று குறிக்கிறது. அப்படியென்றால், பரம்பொருளை 'அறிய' வேண்டும் என்று சாஸ்திரங்கள் கூறுவதன் அர்த்தம் என்ன?*

---

102 Yoga, Enlightenment and Perfection என்ற நூலிலிருந்து தமிழாக்கப்பட்டது, ப. 173-174

*இதற்கு விடையை ஆசார்யாளின் வார்த்தைகளிலேயே கூறுவோம்.*

*(இங்கே நாம் கூறவிருப்பது, ஆசார்யாள் தீவிரமாக நிர்விகல்ப ஸமாதி அப்பியாசம் செய்த ஐந்து நாட்களில், பரம்பொருளைப் பற்றி அவர் செய்த விசாரம். இதை அவர் செய்யும் பொழுது அவருக்குப் பதினெட்டு வயது என்றும், அச்சமயம் அவர் வேதாந்த சாஸ்திரத்தை முறையாகப் பாடம் கேட்கத் துவங்கவில்லை என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.)*

"... பிரம்மத்தை அறிய வேண்டும் என்று சாஸ்திரம் கூறுவது, அறியப்படாத ஒன்றை அறிவது என்ற அர்த்தத்தில் அல்ல; மாறாக, அவித்யையை அடிப்படையாகக் கொண்டு கல்பிக்கப்பட்டதை நீக்குவது என்பதே அதன் நோக்கம். ஆத்மாவை நோக்கி ஒருமுகமாக இருந்தாலும், கலைந்து இருந்தாலும் மனம் ஆத்மாவினால் ஒளிரும் ஒரு ஜடப் பொருள் தான். ஆயினும், சாஸ்திரங்களில் வலியுறுத்தியவாறு, பிரம்மத்தின் வடிவான மனோ விருத்தி, பிரம்மத்தை நிலையிடமாகக் கொண்டு அதை மறைத்தும் தவறாகப் படிவம் செய்யும் அவித்யையை அழிக்கிறது. ..."[103]

*இரண்டாவதாக, ஆத்மாவில் நிலைபெறுதல் என்பது ஸமாதியில் மட்டுமா மற்ற சமயங்களில் இல்லையா என்ற கேள்வி. இதற்கான விடையையும் ஆசார்யாளின் சொற்களிலேயே கூறுவோம்:*

"... யோகத்தில் வல்லவரான ஒருவர், தாம் ஸமாதியில் இருக்கும் பொழுது ஆத்மாவில் நிலைபெற்றிருப்பதாகவும், ஸமாதியிலிருந்து வெளிவந்து செயல்களில் ஈடுபடும் பொழுது ஸத்யத்திலிருந்து (ஆத்மாவாகிய பரம்பொருளிலிருந்து) ஓரளவிற்கு வழுவியதாகவும் கருதுகிறார் என்று வைத்துக் கொள்வோம். அப்படிப்பட்டவர் அவித்யையிலிருந்து முழுவதும் விடுபட்டவர் ஆகமாட்டார்.

"... ஸமாதி நிலை, சிதைந்த நிலை, இவையிரண்டுமே மனதைச் சார்ந்தவையே அன்றி ஆத்மாவைச் சார்ந்தன அல்ல. ஆத்மா எப்பொழுதும் மாறுதலற்றது; தூய அறிவின் வடிவானது. மனம் ஸமாதியில் இருந்தாலும் கட்டுப்பாடற்று இருந்தாலும், அது ஆத்மாவை

[103] மேலது ப. 182

எந்த விதத்திலும் பாதிப்பதில்லை. மனதுடன் தன்னை அடையாளப் படுத்திக் கொள்ளும் யோகியே மனதின் நிலைப்பாட்டைப் பொறுத்துத் தான் மாறுவதாக எண்ணுகிறான். ஆனால், தன்னை மாற்றமில்லாத மெய்ம்மையாக முழுதாக உணர்ந்தவன் அம்மெய்ம்மையிலேயே நிலைபெறுகிறான். அவனுடைய மனம் ஒருமுகப்பட்டிருந்தாலும், கலைந்திருந்தாலும், மந்தமாக இருந்தாலும், அம்மனநிலை அவனைப் பாதிப்பதில்லை ... பரம்பொருளை அறியும் விஷயத்தில், வேற்றுமையில் உண்மையைக் காண்பவனுக்குத் தடுமாற்றம் ஏற்படலாம்; பெயரும் உருவமும் தோற்றமே என்பதை உறுதியாக அறிந்தவன் கானல் நீரின் தோற்றத்தினாலோ மறைவினாலோ பாதிக்கப் படுவதில்லை. அதே போல், பிரம்மத்திற்கு வேறானது எதுவும் இல்லை என்பதை நன்கு அறிந்தவன், பெயரும் உருவத்தினாலுமான கானல் நீர் போன்ற உலகத்தின் தோற்றத்தினாலோ, ஸமாதியில் அல்லது ஆழ்ந்த உறக்கத்தில் அதன் மறைவினாலோ பாதிக்கப் படுவதில்லை. ...”[104]

*ஸமாதி அப்பியாசத்தினால் அவித்யை எப்படி முற்றுமாக நீங்குகிறது என்பதையும் பரம்பொருளில் ஒருவர் எப்படி நிலைபெறுகிறார் என்பதையும் ஆசார்யாள் கூறுகிறார்:*

“... அன்றிரவு ஒரு மணி நேரம் மட்டுமே உறங்கினேன். மற்ற நேரம் முழுதும் ஸமாதியிலேயே கழித்தேன். அப்படித் தான் செய்ய வேண்டும் என்பது என் மனதில் குறிக்கோளாக இருக்கவில்லை; ஏனென்றால், பரம்பொருளில் நிலைபெற்றிருப்பதில், ஸமாதி நிலைக்கும் உலகத்தைப் பார்ப்பதற்கும் அடிப்படையான வேறுபாடு எதுவும் எனக்குத் தோன்றவில்லை. ... (இருப்பினும்) மனம் நிர்விகல்ப ஸமாதியில் மூழ்கியது. ... அன்று மாலை (தியானத்தின் பொழுது) ... மனம் சலனமற்று, ‘நான்’ என்கிற உணர்வும் நீங்கி எந்த முயற்சியுமின்றி நிர்விகல்ப ஸமாதியை அடைந்தது. (சுமார் ஒன்றரை மணி நேரம் கழித்து) கண்களைத் திறந்த போது சூரியன் அஸ்தமிக்கும் சமயம் ஆகியிருந்தது. என் தோள்களில் இரண்டு பறவைகள் அமர்ந்திருந்தன. பிரம்மமே எல்லாம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாகத் தெரிந்தது. ... ஆசார்யாளின் (ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ

[104] மேலது ப. 183

மஹாஸ்வாமிகளின்) அனுக்ரஹத்தினாலும் ஈச்வரனின் அனுக்ரஹத்–தினாலும் 'பரம்பொருளை நேரடியாக உணர்தலும், அதில் உறுதியாக நிலைபெறுதலும்' (விவேக சூடாமணி; சுலோகம் 2) அன்று மாலை ஒருங்கே நிகழ்ந்தன. இன்று வரை, அந்த தத்துவத்திலிருந்து வழுவுதலில்லை. ...'' (அடிக்கோட்டுக் குறி நம்முடையது)[105]

*பரம்பொருளில் நிலைபெற்ற பின் ஸமாதி அப்பியாசம் தேவையற்றது என்றாலும் அந்த அப்பியாசத்தின் தாக்கம் ஞானிகளின் விஷயத்தில் இருக்கும் என்பதைப் பற்றி ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் விவேக சூடாமணி உரையில் எழுதியதை மேலே கூறினோம். அது பற்றி ஆசார்யாள் கூறுவதை இப்பொழுது பார்ப்போம்:*

''... மீண்டும் மீண்டும் (நிர்விகல்ப) ஸமாதியில் இருந்ததால் நிரோத ஸம்ஸ்காரங்கள் (மனதின் செயல்பாடு தடுக்கப்படுவதால் உண்டாகும் உள்மனப் பதிவுகள்) மிகவும் தீவிரமாயின. மேலும் நாம ரூபங்களில் மனம் அக்கறையற்றிருந்ததால், அது தானாகவே ஸமாதி நிலையில் அடங்கியது. இதனால் மனம் வேறு எல்லாவற்றையும் புறந்தள்ளி ஸமாதியில் இருப்பதையே இயல்பாக நாடியது. ... மனதைப் புதிதாக ஏதாவது ஒன்றில் செலுத்த இயலவில்லை; நான் எப்பொழுதும் செய்யும் செயல்களை மட்டுமே செய்ய முடிந்தது. மேலும், ஸமாதியிலிருந்து வெளிவருவது மிகவும் கஷ்டமாகி விட்டது. ... காலை ஆஹ்னிகத்தை விடாமல் செய்தாலும், அது தூங்கி வழிபவன் செய்யும் பூஜை போல் தான் இருந்தது. ஆனால் பகல் ஆவதற்குள் ஸமாதியின் தாக்கம் மிகவும் தீவிரம் ஆகிவிட்டதால், ஆஹ்னிகத்தை ஓரளவிற்குத் தான் செய்ய முடிந்தது. பிக்ஷை எடுத்துக் கொண்டதையும் நான் சரிவர உணரவில்லை. பிக்ஷைக்குப் பின் என்னுடைய அறைக்குச் சென்று மீண்டும் நிர்விகல்ப ஸமாதியில் அமர்ந்தேன். மாலையில் நான் குளித்து முடிப்பதற்கு உதவி தேவைப்பட்டது. மனம் பேரானந்தத்தில் களித்திருந்ததால், ஆஹ்னிகத்தைக் காலையில் செய்த அளவிற்குக் கூடச் செய்ய முடியவில்லை. அன்றிரவு உணவு உட்கொள்ள விரும்பாததால், அறைக்குச் சென்று உடனே ஸமாதியில் அமர்ந்து விட்டேன்.

[105] மேலது ப. 186-187

ஆசார்யாளின் (ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்) குரலில் பிரணவம் ஒலிப்பதை ஒரு மாதிரி உணர்ந்து என் மனம் ஸமாதியிலிருந்து கீழிறங்கியது. கண்களைத் திறந்து பார்த்த போது ஆசார்யாள் என்னருகில் அமர்ந்து என் தலையைத் தம் கைகளால் வருடுவதைக் கண்டேன். 'மனம் மீண்டும் ஸமாதிக்குப் போகாதவாறு பார்த்துக் கொண்டு, ஸ்நானம் செய்து ஆஹ்னிகத்தை முடித்துவிட்டு என்னிடம் வாருங்கள்' என்று ஆசார்யாள் கூறி அங்கிருந்து நீங்கினார் ...[106]

*ஆசார்யாளும் அவ்வாறே செய்த பின், தம் குரு இருக்குமிடம் சென்றார். அப்பொழுது அவர் ஆசார்யாளிடம்,*

"... நீங்கள் ஆழ்ந்த ஸமாதியில் அசைவற்று அமர்ந்திருப்பதைப் பார்த்தேன். மிகவும் முயற்சி செய்து உங்களை அந்நிலையிலிருந்து எழுப்பினேன். உங்கள் ஸமாதியையும் மனம் உள்திரும்புவதையும் கட்டுப்படுத்துங்கள். இல்லையேல், இன்றைக்கே <u>நீங்கள் யாராலும் கலைக்கமுடியாத ஸமாதி நிலைக்குச் சென்றுவிடுவீர்கள்.</u> ..." (அடிக்கோட்டுக்குறி நம்முடையது)[107]

*மேலே குறியிட்ட பகுதியையும் (விவேக சூடாமணி உரையில் ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் கூறும்) ப்ரஹ்மவித்வரிஷ்டரின் லட்சணத்தையும் இங்கே ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.*

*'ப்ரக்ஞை' என்ற சொல்லிற்கு 'ஒப்பற்ற ஞானம்', 'பரம்பொருள் பற்றிய அறிவு' என்று பொருள் கூறினோம். பதினெட்டு வயது நிரம்பாத போதே ஆசார்யாளிடம் இந்த ப்ரக்ஞை அமைந்த விதத்தை வியக்கும் வகையில் ஸ்ரீமத் பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அதை 'மஹாப்ரக்ஞை' என்று இன்னமும் சிறப்பித்துக் கூறுகிறார் போலும். அதை மேலும் எடுத்துக்காட்டும் வகையில் அமைந்துள்ள இரண்டு நிகழ்வுகளைக் கீழே பதிவு செய்து இவ்வியலை நிறைவு செய்வோம்.*

*முதலாவதாக 1989ம் ஆண்டு (ஆசார்யாள் விதேஹ முக்தி அடைவதற்கு ஒரு மாதம் முன்) சிஷ்யர் ஒருவர் அவரைக் கேட்டதும்,*

---

[106] மேலது ப. 198

[107] மேலது ப. 198

*அதற்கு ஆசார்யாள் அளித்த பதிலையும் பார்ப்போம்:*[108]

“… நான் ஆசார்யாளை, ‘இவ்வளவு ஆண்டுகளில் ஆசார்யாளின் மனதில் மிகுந்த சினம், கவலை, வருத்தம் போன்றவை, ஏதேனும் ஒரு சமயத்திலாவது, அந்த உணர்வுகள் பொய் என்ற அறிவின்றி ஏற்பட்டதுண்டா?’ என்று கேட்டேன். அதற்கு அவர், ‘இல்லை, ஒருபொழுதும் இல்லை. (உடலில்) மிகுந்த வலியுள்ள சமயத்திலும் அந்த வலி மனம் என்கிற தோற்றத்துடனேயே சம்பந்தப்பட்டது என்றும் நான் மாறுதலற்ற சுத்த சைதன்ய வடிவான சாக்ஷி என்ற தெளிவான அறிவும் இருந்தது. இதற்கு என் குருவின் அருளும் ஈச்வரனின் அனுக்ரஹமுமே காரணம் …’ என்று கூறினார்.”

*1982ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22ம் நாள், ஆசார்யாளின் உடல் நலம் குன்றியிருந்த போது நடந்ததை சிஷ்யர் ஒருவர் பதிவு செய்துள்ளார்:*[109]

“… மார்பு வலியிலிருந்து ஆசார்யாளுக்கு நிவாரணம் அளிப்பதற்காக, அவருக்கு மார்ஃபைன் ஊசி கொடுக்கப் பட்டது. அதனால் அவருடைய மனம் மயக்க நிலைக்குச் செல்லத் துவங்கியது. அச்சமயத்தில் நானும் என் நெருங்கிய நண்பர் ஸ்ரீ கிரிதர சாஸ்திரியும் மட்டுமே ஆசார்யாளுடன் இருந்தோம். ஆசார்யாளுக்கு சுய நினைவு தப்பும் அவ்வேளையில், அவர் “मतिकृतगुणदोषा मां विभुं न स्पृशन्ति” (மனதால் செய்யப்படும் நற்செயலோ தீச்செயலோ எங்கும் நிறைந்துள்ள என்னைத் தீண்டுவதுமில்லை) என்று முடியும் சுலோகம் ஒன்றை நாக்குழறக் கூறினார். தாம் என்ன கூறுகிறோம் என்பதை உணரமுடியாத அந்த சமயத்திலும், இப்படிப்பட்ட ஒரு கருத்தை ஒரு சிறந்த ஜீவன்முக்தரைத் தவிர வேறு யாரால் கூற இயலும்?”

*இந்த இயலில் கூறியதைச் சுருக்கமாகச் சொல்வோம். “*महाप्रज्ञः*” என்ற சொற்றொடரில் “*प्रज्ञा*”எனும் சொல் சாதாரணமாக அறிவாற்றலைக் குறிக்கிறது. எனவே “*महाप्रज्ञः*” என்பதற்குப் “பேரறிவாற்றல் உள்ளவர்” (*महती प्रज्ञा यस्य सः*) என்று பொருள் கொள்ளலாம். நாம் இந்த இயலில் கூறியவாறு, அறிவாற்றல் என்பது பொதுவாகப் பகுப்பாய்வு சார்ந்த*

---

[108] மேலது ப. 207

[109] The Multifaceted Jivanmukta என்ற நூலிலிருந்து தமிழாக்கப்பட்டது, ப. 186-187

கல்வியாற்றலையே குறிக்கிறது. அதன்படி, ஆசார்யாளின் கல்விச் சிறப்பையும் அவர் மற்றவருக்குக் கற்பித்த விதத்தில் அவர் அறிவாற்றல் வெளிப்பட்ட விதத்தையும் கூறினோம். அதன் பின்னர், பல அறிவாற்றல்கள் கோட்பாடு, முப்படி நிலை அறிவுத்திறன் கோட்பாடு இவற்றின் வாயிலாக ஆசார்யாளிடம் அமைந்திருந்த மொழி சார்ந்த அறிவாற்றல், உடல் இயக்கம் சார்ந்த அறிவாற்றல், பிறர் சார்ந்த அறிவாற்றல், செயல்திறன் அறிவாற்றல் ஆகியவற்றைப் பல உதாரணங்களுடன் கூறினோம். இப்படிப் பல அறிவாற்றல்கள் இருந்ததால், ஆசார்யாளின் ஆளுமை பன்முகத் தன்மை கொண்டு விளங்கியது என்பதையும் கூறினோம். இவையனைத்தையும் ஒருங்கே பார்த்தால் "महाप्रज्ञः" என்ற சொற்றொடருக்குப் "பல பேரறிவாற்றல்கள் கொண்டவர்" (महत्यः प्रज्ञाः यस्य सः) என்ற பொருளும் தெரிகிறது.

இறுதியாக, "प्रज्ञा" எனும் சொல்லிற்கு வேதாந்த சாஸ்திரம் கூறும் "பரம்பொருள் பற்றிய மேலான அறிவு" என்ற பொருள் கொண்டு அந்த அறிவு ஆசார்யாளிடம் அமைந்திருந்ததையும் அவர் ஜீவன்முக்தராகத் திகழ்ந்த விதம் பற்றியும் கூறினோம். இவ்வாறாக, "महाप्रज्ञः" என்ற சொற்றொடர் ஆசார்யாளைப் "பன்முகத்தன்மை கொண்ட ஜீவன்-முக்தர்" என்பதையே குறிக்கிறது. பன்முகத் தன்மை கொண்ட ஆளுமை மற்றும் பிரம்ம ஞானத்தில் அவருக்கு இருந்த உறுதி - இவற்றில் ஆசார்யாள், சிருங்கேரி பரம்பரையில் பன்னிரண்டாவது ஆசார்யராக விளங்கிய ஸ்ரீமத் வித்யாரண்ய ஆசார்யரை ஒத்திருப்-பதைக் காணலாம். ஆசார்யாளின் அஷ்டோத்தர சத நாமாவளியில் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸந்நிதானம் ஆசார்யாளை "विद्यारण्यसमप्रज्ञः" (வித்யாரண்யருக்கு இணையான ப்ரக்ஞையை உடையவர்) என்று போற்றுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## 3. துணிவு, மனத்திட்பம் (தைர்யம்)

‘‘தைர்யம்’’ என்ற சொல் பொதுவாகத் ‘‘துணிச்சல்’’, ‘‘அச்சமின்மை’’ என்ற பொருள் தரும். ஒருவரைக் குறித்து, ‘‘அவருக்குச் சற்றும் அச்சமில்லை’’ என்று கூறினால், அதற்குப் பொதுவான காரணங்கள் சில உண்டு. அவற்றுள் இரண்டை முதலில் கூறிப் புறந்தள்ளுவோம். முதலாவதாக, தமது செயல்களின் விளைவு பற்றிச் சரியாக சிந்திக்க இயலா-வதருக்கும் தைர்யம் இருக்கலாம். உதாரணம்: குழந்தைகள் – ‘‘இளங்கன்று பயமறியாது’’ என்ற பழமொழியை இங்கே நினைவு கூர்வோம்; அதே போல் முட்டாள்களும் சில சமயங்களில் அச்சமின்றிச் செயல்படுவார்கள். ஆனால், ஆசார்யாளின் விஷயத்தில் இது சற்றும் பொருந்தாது. அல்லது ஒருவனின் துணிச்சலைப் பற்றி, ‘‘அவன் எதற்கும் துணிந்தவன்’’ என்றும் சில சமயங்களில் கூறுகிறோம். இப்படிக் குறிப்பிடப்பட்டவன் தவறான செயல்களையும் செய்யத் தயங்க மாட்டான் என்பது உணர்த்தப்படுகிறது. இதுவும் ஆசார்யாளின் விஷயத்தில் பொருந்தாது என்பதை நாம் அவருடைய விவேகத்தைப் (எது சரி, எது தவறு என்பதைப் பகுத்தறிவது) பற்றிக் கூறியதிலிருந்து தெளிவாகிறது.

மேலும் சிந்தித்தால், துணிச்சல் வலிமையிலிருந்தே பிறக்கிறது என்பதை அறிகிறோம். இவ்வலிமையைத் தன்வலிமை, பிறர்வலிமை என்று இரண்டாகப் பிரிக்கலாம். ‘‘எனக்குப் பின் பத்து பேர் நிற்பார்கள்’’, ‘‘எனக்குப் பெரிய இடத்துச் செல்வாக்கு உண்டு’’ என்று எண்ணித் துணிச்சலாகச் செயல்படுவது பிறர்வலிமையினால் வரும் துணிச்சல். இன்னொருவரின் ஆதரவிலிருந்து பிறப்பதால் தன்வலிமை-யிலிருந்து பிறக்கும் துணிவை விட இது தாழ்ந்தது என்று சொல்லலாம். தன்வலிமையை எடுத்துக் கொண்டோமானால், ‘‘நான் பெரிய பதவியில் இருக்கிறேன்’’, ‘‘எனக்கு குங்ஃபூ தெரியும்’’ போன்ற காரணங்களையும் மிக உயர்வாகக் கூற முடியாது. ஏனென்றால், பதவியும், உடல் வலிமையும் என்றும் இருக்கும் என்று கூறுவதற்கில்லை. தவிரவும் நம்மை விட உயர்ந்த பதவியில் இருப்போரும், நம்மை விட உடல்வலிமை கொண்டவர்களும் உலகில் எப்பொழுதும் இருப்பார்கள்.

*இதற்கு மாறாக, ‘‘இந்த விஷயத்தில் இப்படிச் செய்வதே சரி’’ என்ற மன உறுதியிலிருந்து பிறக்கும் துணிச்சல் தன் மனம் சார்ந்தது; எப்பொழுதும் உள்ளது. இதுவே உயர்ந்த அச்சமின்மை என்று சொல்லலாம்.*

## தைர்யம் - மனத்திட்பம்

*இந்த காரணங்களினால் தான், ‘‘தைர்யம்’’ என்ற சொல்லிற்கு ‘‘அச்சமின்மை’’ என்று பொதுவாகக் கூறப்படும் பொருளைத் தவிர ‘‘மனத்திட்பம்’’, ‘‘நிலையான மனம்’’ என்ற பொருள்களும் உண்டு. இந்த குணம் ஆசார்யாளின் ஆளுமையில் எப்படி வெளிப்பட்டது என்பதை அவருடைய வாழ்வில் நடந்த ஒரு சில நிகழ்வுகளின் வாயிலாகப் பார்ப்போம்.*

*ஆசார்யாள் சிறுவராக இருந்த போது நடந்ததாகக் கீழ்க்கண்ட நிகழ்வை ‘‘ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த விஜயம்’’ பதிவு செய்கிறது:*

‘‘... ஒரு நாள் மாலை (பெங்களூரு) முனிசிபல் பார்க்கிலிருந்து விளையாடிவிட்டுத் திரும்பும் போது பக்கத்தில் இருந்த ஏரிக்கரையில் எல்லோரும் (ஸ்ரீனிவாஸரும் அவருடைய நண்பர்களும்) உட்கார்ந்–தார்கள். அப்போது பக்கத்தில் இருந்த ‘கமலா சத்திரம்’ இவர்கள் கண்ணில் பட்டது. அந்த சத்திரத்துக்குப் பக்கத்தில் இருந்த ஒரு குளத்தைப் பற்றி, அங்கு பிசாசு இருக்கிறது என்ற விஷயம் அவர்கள் பேச்சில் அன்று சம்பந்தப்பட்டிருந்தது. ‘ஒரு இடத்தில் பிசாசு இருக்கிறது என்று சொல்வதெல்லாம் பொய்’ என்று ஸ்ரீனிவாஸன் சொன்னார். மற்றவர்கள் உடனே ஸ்ரீனிவாஸனைப் பரிசோதிக்க எண்ணினார்கள். ஒருவன், ‘அப்படியானால் உன்னால் அந்த குளத்தில் போய் தைரியமாக கை கால்களை சுத்தம் செய்துகொண்டு வர முடியுமா?’ என்றான். ஸ்ரீனிவாஸன் இதை ஒப்புக்கொண்டு ‘தாராளமாக முடியும்’ என்று சொல்லி சத்திரத்துக்கு ஓடிப்போய் அதன் பின்பக்கம் இருந்த குளத்தில் கைகால்களைக் கழுவிக்கொண்டு குளத்தின் ஜலத்தை வாயில் போட்டுக் கொப்பளித்துவிட்டு கரைக்கு வந்து மிகவும் ஆதங்கத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த மற்ற பையன்களுடன் சேர்ந்து கொண்டார். அவர் கைகால்களில் ஈரம் இருக்கக்கண்ட மற்ற பையன்கள் வியந்து அவரிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டார்கள். ‘உன்னை இந்த ஆபத்துக்கு உள்ளாக்கினதற்கு மன்னிக்க வேண்டும்’

என்றார்கள். ‘அப்படி ஒன்றுமில்லையே’ என்றார் ஸ்ரீநிவாஸன். ‘நீ எப்படி நிர்வகித்தாய்?’ என்று மற்றவர்கள் ஸ்ரீநிவாஸனைக் கேட்டார்கள். அதற்கு ஸ்ரீநிவாஸன் சொன்ன பதில் மற்றவர்களுக்கு விளக்கத்துடன் உபதேசமாகவும் அமைந்தது. ‘என்னுடைய நாக்கில் ராம நாமம் இருக்கும்போது எந்த கெட்ட பிசாசு என் பக்கம் வர முடியும்; அல்லது என் முன் நிற்க முடியும்?’ என்றார் ஸ்ரீநிவாஸன். பால்யத்திலேயே இந்த சக்தியும் தன்னம்பிக்கையும் இச்சிறுவனுக்கு இருந்தது ஆச்சர்யமானது ...”[110]

*சிறிய வயதிலேயே ஆசார்யாளிடம் அமைந்திருந்த இத்தகைய மனத்திட்பம் அவர் துறவியான பின் மேலும் உறுதி பெற்றது என்பதில் வியப்பேதும் இல்லை. ஆசார்யாள் சிருங்கேரி பீடத்தின் அதிபதியான சமயம், பீடத்தின் நிர்வாகமும் சொத்துகளும் அரசாங்கத்தின் வசமிருந்தன. ஆசார்யாளின் முயற்சியினால் 1959ம் ஆண்டு, இந்திய அரசாங்கம் சிருங்கேரி மடத்தின் சொத்துகளையும் அவற்றின் நிர்வாகத்-தையும் மீண்டும் சிருங்கேரி பீடாதிபதியிடமே (அதாவது ஆசார்-யாளிடமே) திருப்பித் தந்தது. ஆனால், அவ்வாறு செய்யும் போது அரசாங்கம் சிருங்கேரி மடத்துக்குச் சொந்தமாக இருந்த 45 கிராமங்களைத் திருப்பித் தரவில்லை.*

“... இதனால் சிருங்கேரி மடத்தின் வருமானம் மிகவும் நலிந்தது. பல கிராமங்களிலிருந்தும், சிருங்கேரியைச் சுற்றிச் சுமார் 6 மைல் பரப்பளவிலிருந்தும் கிட்டிய வருமானத்திற்கு மாறாக அரசாங்கம் ஆன்டு தோறும் அளித்த ஒரு சிறிய தொகையை வைத்தே மடம் செய்லபட வேண்டியிருந்தது. ஆனால் ஆசார்யாள் இதனால் சற்றும் கலங்கவில்லை. ‘வருமானம் குறைந்துவிட்டது’ என்று மடத்தின் அதிகாரிகள் அவரிடம் வருத்தத்துடன் தெரிவித்த போது ஆசார்யாள் அவர்களை உற்சாகப்படுத்தி, ‘இந்தச் சொத்துகள் தானமாக அளிக்கப்பட்டதற்கு முன்னரும் சிருங்கேரி மடம் நன்றாகவே செயல்பட்டது. எனவே கவலைப்பட வேண்டாம்’ என்று கூறினார். அவர் அவ்வாறு கூறியது பொய்க்கவும் இல்லை; முன்னாட்களில் மன்னர்கள் மடத்திற்கு அளித்த ஆதரவை இப்போது பக்தர்கள் அளிக்க

---

[110] இதுவுமது ப. 48-49

முன்வந்தனர். ஆசார்யாள், 'எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வதற்கு ஈச்வரன் இருக்கிறான். அவனுடைய முடிவே சிறந்தது' என்பதில் மிகவும் உறுதியாக இருந்தார் ..."[111]

## உடல் வலிமையும் மன வலிமையும்

*இத்தகைய மன உறுதியே "தைர்யம்" என்று அறியப்படுகிறது. ஆசார்யாளின் வாழ்வில் அது சில சமயங்களில் உடல் வலிமையாகவும் வெளிப்பட்டது. இது குறித்து அவர் சிறுவராக இருந்த போது நடந்த சுவையான நிகழ்வு ஒன்றைப் பார்ப்போம்:*

"... (பெங்களூரு) முனிசிபல் பார்க்கில் சிறு பிள்ளைகள் விளையாடுவது கோலிக்குண்டு, குண்டுபிள்ளை, பம்பரம், சடுகுடு ஆட்டம், நொண்டி அடித்தல் போன்றவை. ... எந்த விளையாட்டிலும் தப்பு ஆட்டம், ஏமாற்றி விளையாடுவது, இவைகளை ஸ்ரீனிவாஸர் அங்கீகரிக்க மாட்டார். ... ஸ்ரீனிவாஸர் எதிலும் நேர்மையையே கடைபிடித்தவர். எந்த இடத்திலும் சரீர பலத்தைக் கொண்டு ந்யாயத்துக்கு விரோதமாக நடப்பதை ஸ்ரீனிவாஸர் அங்கீகரிக்க மாட்டார். அந்த பையன்களில் குண்டு என்ற வயதான ஒரு போக்கிரி இருந்தான். அவனுடைய அயோக்யத்தனத்தை ஸஹிக்காமல் மற்ற சிறுவர்கள் அவனை விளையாட்டில் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள். ஒரு நாள் அவன் வேண்டுமென்றே சிறுவர்களின் விளையாட்டில் புகுந்து ரகளை செய்தான். 'இவன் பலசாலி, அயோக்யன்' என்று மற்றவர்கள் பயந்து நின்றார்கள். இவனுக்கு நல்ல புத்தி கற்பிக்கவேண்டும் என்று ஸ்ரீனிவாஸர் எண்ணம் கொண்டார். மற்ற நண்பர்கள், 'இவன் நம்மைவிட வயதானவன், அயோக்யன், குஸ்தி பழகியவன்' என்று தடுத்தும் ஸ்ரீனிவாஸன் கேட்கவில்லை ... குண்டுவின் மேல் பாய்ந்து படபடவென்று ஐந்தாறு குத்துகள் போட்டார். திடீரென்று தாக்கப்பட்டதால் குண்டுவுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. மறுபடி இருவரும் சண்டை போட நேர்ந்தது. முடிவில் எல்லோரும் ஆச்சர்யம் அடையும் வகையில் குண்டுவைக் கீழே தள்ளி ஸ்ரீனிவாஸன் அவன் மேல் ஏறி உட்கார்ந்தார். உடனே ஒரு காகிதம் கொண்டு வரும்படி சொல்லி, 'இனி எப்போதும் மற்ற கக்ஷி

---

[111] "The Multifaceted Jivanmukta" *என்ற நூலிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது*; ப. 269-270

விளையாட்டில் நான் தலையிடுவதில்லை' என்று எழுதி அதில் குண்டு கையெழுத்திடும்படி ஸ்ரீனிவாஸன் செய்துவிட்டார். 'இப்படிப்பட்ட–வர்களை அடக்காவிடில் சமூகத்திற்கே இவர்கள் கேடு' – என்று ஸ்ரீனிவாஸன் மற்றவர்களிடம் சொல்வதுண்டு. ந்யாயத்தைக் காப்பாற்றுவதில் … வயதுக்கு மீறின பலம் ஸ்ரீனிவாஸனுக்கு உண்டு. கோழைத்தனமே கிடையாது. …'' [112]

*இங்கே இரண்டு விஷயங்களை நாம் கூற வேண்டும். முதலாவது, வன்முறையை ஆசார்யாள் ஒரு கோட்பாடாக என்றும் ஏற்றதில்லை. மேலே கூறிய நிகழ்விலும், ஆசார்யாள் உடல் வலிமையைக் கொண்டு அறத்திற்குப் புறம்பாக நடப்பதை ஒப்புக் கொள்ள மாட்டார் என்பதை நூலாசிரியர் ஸ்ரீ சுப்பரத்னம் தெளிவாகக் கூறியுள்ளார். மேலும் தனக்கு எந்தத் துன்பம் ஏற்பட்டாலும் அதைப் பொறுத்துக் கொள்ளும் இயல்பு சிறு வயதிலேயே அவரிடம் அமைந்திருந்தது. ஆனால் மற்றவர்-களுக்குத் துன்பம் விளைவிக்கப் படும் பொழுது அவருடைய மனப்போக்கு வேறு மாதிரி இருந்தது என்று அவருடைய வரலாறு கூறுகிறது.[113] இரண்டாவது, 'எது நியாயம், எது அநியாயம்' என்கிற விவேகம் இருந்தால் தான் (''நியாயத்தை நிலைநாட்ட வேண்டும்'' என்கிற) மன உறுதி தைர்யமாக வெளிப்படும். விவேகத்திற்கும் தைர்யத்திற்கும் உள்ள தொடர்பு இதிலிருந்து தெரிகிறது. இதைப் பற்றிப் பின்னர் கூறுவோம்.*

*சிருங்கேரி பீடத்தின் அதிபதியான பின், மடத்து நிர்வாகம் ஆசார்யாளின் பொறுப்பில் இருந்தது. மடத்தின் ஒவ்வொரு பணிக்கும் தக்கவரை நியமித்தாலும், பீடத்தின் அதிபதியாக இறுதிப் பொறுப்பை ஆசார்யாளே ஏற்றார். நல்லது நடக்கும் போது தம்மைத் தலைவ-ராகவும், அல்லது நடந்த போது பணியாளரைக் குறை கூறுவதும் ஆசார்யாள் செய்ததில்லை. எந்த விதமான சந்தர்ப்பம் வந்தாலும், பொறுப்பு தம்முடையதே என்பதில் ஆசார்யாள் மிகவும் உறுதியாக இருந்தார். அந்த உறுதி தைர்யமாக வெளிப்பட்ட சம்பவம் ஒன்றை ஜகத்குரு ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் தம்முடைய அருளுரைகளில் அடிக்கடி கூறுவதுண்டு. இச்சம்பவம் ஆசார்யாளின்*

---

[112] "ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த விஜயம்" ப. 42-43

[113] "The Multifaceted Jivanmukta" ப. 26

*முதலாவது இந்திய யாத்திரையின் போது நடந்தது. இதில் ஆசார்யாளின் தைர்யம் மட்டுமின்றிச் சிக்கலான சூழ்நிலைகளில் அவர் காட்டிய சமயோசித புத்தியும் வெளிப்படுகிறது:*

"... ஒரு சிறு பெண் சாலையைக் கடக்க முயலும் போது மடத்துக்குச் சொந்தமான வண்டியின் முன் ஓடினாள். ஓட்டுநர் உடனே பிரேக் செய்தார். சிறுமி வழுக்கிச் சாலையில் விழுந்தாள். அதிர்ஷ்டவசமாக, வண்டியின் சக்கரங்களுக்கு நடுவில் விழுந்ததால், அவளுக்கு எதுவும் ஆகவில்லை; கிராமத்தில் உள்ளவர்கள் அச்சிறுமி இறந்துவிட்டாள் என்று எண்ணி ஓட்டுநரை நோக்கி மிகுந்த கோபத்துடன் விரைந்தனர். ஏற்கனவே அச்சமுற்றிருந்த ஓட்டுநர் இதைக் கண்டு நடுங்கினார். இதற்கிடையில் அப்பெண் வண்டிக்கு அடியில் தவழ்ந்து வண்டியின் பின்சக்கரங்களுக்கிடையிலிருந்து வெளிவந்து ஓடிவிட்டாள்; அதை யாரும் கவனிக்கவில்லை. வண்டிக்கு அடியில் பெண்ணைக் காணாத கிராமத்தார் தங்கள் ஆத்திரத்தை ஓட்டுநர் மீது காட்டினர்; அவருக்குச் சரமாரியாக அடி விழுந்தது. சில வினாடிகளில் இரத்தம் சிந்தத் துவங்கினார். இதைத் தடுக்க முற்பட்ட காவலாளிக்கும் அன்று நாள் நன்றாக இல்லை. தமது துப்பாக்கியைப் பிடுங்க முயற்சித்த கிராமவாசி ஒருவருடன் அவர் சண்டை செய்ய நேர்ந்தது; இருவரும் சாலையோரத்துச் சரிவில் உருண்டனர். கிராமவாசி துப்பாக்கியுடன் ஓடிவிட்டார்; அடிபட்ட காவலாளி உடலில் காயமுடனும், மனதில் சோர்வுடனும் நின்றிருந்தார்.

இதற்குள் ஆசார்யாளின் கார் அங்கே வந்தது. கூட்டத்தின் தலைவன் யார் என்று ஆசார்யாள் நொடிப்பொழுதில் கண்டு கொண்டு, அவனைத் தம்மருகில் கூப்பிட்டார். எல்லோரும் ஆசார்யாளின் காரை நோக்கி கோப வெறியுடன் ஓடிவந்தனர். ஆசார்யாள் அவர்களுடன் மென்மை–யாகப் பேசத் துவங்கியவுடன் அவர்களுடைய வெறி அடங்கி விட்டது. எவரையும் ஈர்க்கவல்ல அவருடைய ஆளுமையும், நயமான பேச்சும் தாக்க வந்தவர்களை உடனே தணியச் செய்தன. அது மட்டுமல்லாமல், அவர்கள் யாவரும் ஆசார்யாள் தங்கள் கிராமத்திற்கு வந்து எல்லோருக்கும் அருள் புரிய வேண்டும் என்று மிகுந்த பக்தியுடன் வேண்டிக் கொண்டனர். ஆசார்யாள் கூறியதை ஏற்று, கிராம வாசிகளின் தலைவன் துப்பாகியை எடுத்துச் சென்றோடியவரை

வரவழைத்தான். தமது துப்பாகியைப் பெற்றுக் கொண்ட காவலாளியும் நிம்மதிப் பெருமூச்சு விட்டார். ...'' [114]

## கல்வியறிவும் தைர்யமும்

*''எல்லாம் வல்ல இறைவன் இருக்கிறான்'' என்ற உறுதியினாலும் ''இந்த விஷயத்தில் இப்படிச் செய்வதே சரி'' என்ற உறுதியினாலும் பிறக்கும் அச்சமின்மை ஆசார்யாளின் ஆளுமையில் எப்படி வெளிப்பட்டது என்பதை ஓரிரு நிகழ்வுகள் வாயிலாகப் பார்த்தோம். இனி, கல்வியறிவு தரும் மனத்திட்பத்தையும் அச்சமின்மையையும் பற்றிப் பேசுவோம். கல்வி கற்குங் காலத்தே படித்தவற்றை நன்கு சிந்தித்தால் பாடப்பொருளைப் பற்றிய தெளிவும் ''இதுவே சரி'' என்கிற உறுதி பிறக்கிறது. இந்த உறுதி இருந்தால் தான் கற்றவர் கூடிய அவையில் தாம் கற்றவற்றை அச்சமின்றி விரித்துக் கூற இயலும். இதன் சிறப்பு கருதியே, திருவள்ளுவர் குறளில் ''அவை அஞ்சாமை'' என்று ஒரு முழு அதிகாரத்தை ஒதுக்கியிருக்கிறார். இந்த அதிகாரத்தில் அவர் அவைக்கு அஞ்சாதவரைச் சிறப்பித்து இவ்வாறு கூறியுள்ளார்:*[115]

கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்

*(பரிமேலழகர் உரை: <u>கற்றாருள் கற்றார் எனப்படுவர்</u>: கற்றார் எல்லாரினும் இவர் நன்கு கற்றார் என்று உலகத்தாரால் சொல்லப்படுவார், <u>கற்றார்முன் கற்ற செலச்சொல்லு வார்</u>: கற்றாரவைக்கண் அஞ்சாதே தாம் கற்றவற்றை அவர் மனம் கொள்ளும்வகை சொல்ல வல்லார். உலகம் அறிவது அவரையே ஆதலின், அதனாற் புகழப்படுவாரும் அவர் என்பதாம்.)*

பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சா தவர்

*(பரிமேலழகர் உரை: <u>பகையகத்துச் சாவார் எளியர்</u>: பகையிடை அஞ்சாது புக்குச் சாவ வல்லார் உலகத்துப் பலர். <u>அவையகத்து அஞ்சாதவர் அரியர்</u>: அவையிடை அஞ்சாது புக்குச் சொல்லவல்லார் சிலர்.)*

---

[114] "The Multifaceted Jivanmukta" என்ற நூலிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது; ப. 277-278
[115] குறள் 722, 723

**தாம்** *கற்றவற்றைச் சான்றோர் கூடியுள்ள அவையில் தெளிவாகக் கூறுவதை "அச்சமின்மை" (தைர்யம்) என்று வள்ளுவரும் பரிமேலழகரும் குறிப்பதை இங்கே கவனிக்க வேண்டும். ஆசார்யாளிடம் அத்தகைய தைர்யம் எப்படி வெளிப்பட்டது என்பதை ஒரு நிகழ்வின் வாயிலாகப் பார்ப்போம்.*

*சிருங்கேரியில் கூடிய வாக்யார்த்த சபையில் நடந்த இச்சம்பவம் பற்றி ஆசார்யாள் கூறுவதைப் பார்ப்போம்:*

"... எனது குருநாதர் ஆரம்ப காலத்தில் நான் சபையில் சாஸ்திர வாக்யார்த்தத்திற்குப் பேச வேண்டிய விஷயத்தை மனப்பாடம் செய்யுமாறு செய்தார். நான் எதைப் பேசப் பயிற்சி பெற்றிருந்தேனோ அதைப் பேசினால் கூட அவர் மிகுந்த மகிழ்ச்சி அடைவார். சதகோடியைப் பற்றிய ('சதகோடி' என்பது ஒரு தர்க்க சாஸ்திர நூலின் பெயர்) எனது பேச்சில் ஒரு சமயம் நான், 'அபாவம்' (இல்லாமை) சம்பந்தப்பட்ட பரிஷ்காரங்களைக் (குறைநீக்கம்) கூறி முடித்தேன். எனினும், அதில் ஒரு குறை ஏற்படுகிறது. ஆகவே, இந்த விஷயம் குறித்து ஆழமாகச் சிந்தித்து "பேதத்தை" ("பேதம்" என்ற கோட்பாட்டை) அந்த விளக்கத்திற்குள் சேர்த்தேன். நான் இவ்வாறு பேச ஆரம்பித்தபோது எனது குருவின் முகம் சிறியதாகப் போயிற்று. ஒரு வேளை, புதிதாக நான் பேச இருந்த விஷயம் என்னவாக இருக்குமோ என்று அவர் நினைத்திருக்கலாம். எனினும், நான் சரியாகத் தான் விளக்கிக் கொண்டிருந்தேன் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. நான் மேற்கொண்டு உரையாற்றிய போது, எனது குருவின் முகம் இன்பப் புன்னகை பூத்து பிறகு அவரது கண்கள் களிப்பினால் ஒளிர்ந்தன. அவர் மிகுந்த மகிழ்ச்சியுற்றார்.

சபை முடிந்து திரும்பும் போது அவர், 'இந்த புது தோஷ பரிகாரத்தை யார் சொன்னார்?' என்று கேட்டார். 'யாரும் சொல்லவில்லை. தாங்கள் (ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்) சொன்னதை மனதில் வைத்துக் கொண்டு, நானும் மேலும் கற்பனை செய்து பார்த்து "அபாவம்" மற்றும் "பேதம்" ஆகிய இரண்டையும் சேர்த்துக் கொண்டு விட்டேன்" என்று பதிலளித்தேன். ..."[116]

---

[116] எனது *குருநாதர், ப.* 105-106

## தீரன் யார்?

*அடுத்ததாக, சாஸ்திரத்தில், குறிப்பாக வேதாந்தம் மற்றும் யோக சாஸ்திரங்களில், ''தைர்யம்'' என்ற சொல் எப்படிக் கையாளப்படுகிறது என்பதையும் அக்குணம் ஆசார்யாளிடம் எப்படி வெளிப்பட்டது என்பதையும் பார்ப்போம். விவேகத்திற்கும் தைர்யத்திற்கும் உள்ள தொடர்பும் இதனால் விளங்கும். ஸம்ஸ்க்ருத மொழியில் ''தைர்யம்'' என்ற சொல்லிற்கு "தீர" என்கிற அடைமொழி வேர்ச்சொல்லாகக் கருதப்படுகிறது. சொற்பிறப்பியலின் படி "தீரத்தின்'' இருப்பைத் ''தைர்யம்'' என்ற சொல் குறிக்கிறது.[117] இந்த குணம் கொண்டவனே "தீரன்'' என்று அறியப்படுகிறான். யோகம் மற்றும் வேதாந்த சாஸ்திரங்களில் இச்சொல் புலனடக்கம் கொண்டவனைக் குறித்தும் பயன்படுத்தப்படுகிறது.*

*பொதுவாக மனிதர்கள் உள்ளிட்ட எல்லாவுயிர்களும் புலன்களைத் தம் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வதில்லை. ஒன்றைப் பார்த்தாலோ, கேட்டாலோ, முகர்ந்தாலோ, உடனே மனம் புலனால் நுகரப்படும் பொருள் பக்கம் திரும்புகிறது. இதைப் பற்றி ஆசார்யாள் தமது அருளுரை ஒன்றில்,*

''... நமது உடல் ஒரு படகு போன்றது. இதில் உட்கார்ந்திருக்கும் ஜீவன் என்ற சோம்பேறி, 'எவ்வளவு தண்ணீர் வந்தாலும் என்ன கவலை? நான் தான் படகினுள் அமர்ந்து கொண்டு இருக்கிறேனே' என்று நினைப்பான். ஆனால், पराञ्चि खानि व्यतृणत्स्वयम्भूस्तमात्पराङ्पश्यति नान्तरात्मन् (ஸ்வயம்புவான பரமேச்வரன் புலன்களை வெளியே செல்லும் குறையுடன் –அதாவது பொருட்களின் நுகர்ச்சியை நாடிச்செல்லும்படி – அளித்தான்.[118]) என்று கூறுவது போல் இந்திரியங்கள் எங்கெங்கு ஓடுகின்றனவோ அங்கு தான் நாமும் ஓடுகிறோம். இந்திரியங்கள் எல்லாம் நம் படகில் உள்ள ஓட்டைகள். அந்த ஓட்டைகளை நாம் ஏதாவது பசை மூலம் ஒட்டி அடைத்து வைத்தால் ஓடத்தில் நாம் உட்கார்ந்து கொண்டிருக்கலாம். அந்த ஓட்டைகளை நாம் அடைக்கா– விட்டால் சிறிது தூரம் சென்றவுடன் தண்ணீர் ஓட்டைக்குள் வந்து

---

[117] धैर्यः धीरस्य भावः (*சப்த கல்பத்ருமா*)

[118] கடோபநிஷத் 2.4.1

**கொண்டிருக்கும். நாமும் மூழ்கி விடுவோம். ஆதலால் நாம் ... மனித ஜன்மத்தை வீணாக்கக் கூடாது ...''**[119]

*என்று கூறுகிறார். அப்படியானால் ஒருவன் எப்படி இருக்க வேண்டும் என்ற கேள்விக்கு ஆசார்யாள் கூறும் உபநிஷத் வாக்கியமே விடையளிக்கிறது:*

**कश्चिद्धीरः प्रत्यगात्मानमैक्षदावृत्तचक्षुरमृतत्वमिच्छन्**

*(விவேகமுள்ள அரியவன் ஒருவன், தன் கண்களை உள்திருப்பியவன், இறவாமையை விரும்பி உள்ளே இருக்கும் ஆத்மாவைப் பார்க்கிறான்.[120]) ''கண்களை உள்திருப்பியவன்'' என்றால் ''புலன்களை அடக்கி அவற்றை வெளிப்பொருட்களின் நுகர்ச்சியிலிருந்து தடுப்பவன்'' என்று பொருள். அப்பேற்பட்டவனை இங்கே வேதம் ''தீரன்'' – அதாவது தைர்யம் உள்ளவன் - என்ற சொல்லைக் கையாள்வதைக் கவனிக்கவேண்டும். அவன் ஆற்றின் நீர்ப்போக்கிற்கு எதிராக நீச்சல் அடிப்பவன் போன்றவன்; விவேகம் உள்ளவன் என்று சங்கர பகவத்பாதர் தமது பாஷ்யத்தில் குறிப்பிடுகிறார். எதிர் நீச்சல் போடுபவனை ''தைர்யசாலி'' என்று உலகம் பாராட்டுவது போல் இயல்பாக வெளியே செல்லும் புலன்களுக்கு எதிராகச் செயல்படுபவனை வேதம் ''தைர்யம் உள்ளவன்'' என்று பாராட்டுகிறது.*

*விவேகத்திற்கும் புலனடக்கத்திற்கும் உள்ள தொடர்பைப் பற்றி முதல் இயலில் கூறியதை இங்கே நினைவு கூர்வோம். புலன் நுகர்ச்சியால் கிடைக்கும் இன்பம் நிலையானதல்ல; தவிரவும் ஒரே பொருள் சில சமயங்களில் ஒரு மனிதனின் இன்பத்திற்கும் வேறு சமயங்களில் அவனுடைய துன்பத்திற்கும் காரணமாக இருக்கிறது. எனவே இன்பம் என்பது நுகரப்படும் பொருளில் இல்லை என்று உறுதி செய்யலாம். இவ்வுறுதியின் காரணமாக அறிவுள்ளவன் தனது புலன்களை அடக்குகிறான். இப்படிப்பட்டவனின் பெருமையை வள்ளுவரும்*

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்

---

[119] முத்தி நெறி ப. 312-313

[120] கடோபநிஷத் 2.4.1

என்று கூறுகிறார்.[121] (பரிமேலழகர் உரை: செயற்கரிய செய்வார் பெரியர்: ஒத்த பிறப்பினராகிய மக்களுள் செய்தற்கு எளியவற்றைச் செய்யாது அரியவற்றைச் செய்வார் பெரியர்; செயற்கரிய செய்கலாதார் சிறியர்: அவ்வெளியவற்றைச் செய்து அரியவற்றைச் செய்யமாட்டார் சிறியர். செய்தற்கு எளிய ஆவன மனம் வேண்டியவாறே அதனைப் பொறிவழிகளால் புலன்களில் செலுத்தலும், வெஃகலும் வெகுளலும் முதலாயின. செயற்கு அரிய ஆவன இயமம் நியமம் முதலாய எண்வகை யோக உறுப்புகள்.)

புலப்படும் பொருட்கள் மட்டும் அல்லாமல் புலன்களுக்கு அப்பாற்பட்டவையும் (உ-ம். சுவர்க்கம் முதலிய உலகங்களில் கிட்டும் இன்பம்) இறுதியில் துன்பமே விளைவிக்கின்றன என்ற மன உறுதியினால் அவை தமது கண்களுக்கு எதிரே இருந்தாலும், அவற்றைப் பிறர் சொல்லக் கேட்டாலும், தீரனுக்கு அவற்றின் மீது பற்று ஏற்படுவதில்லை. இதுவே உண்மையான வைராக்யம். இதைப் பற்றி பதஞ்சலி மஹரிஷி யோக சூத்திரத்தில்

दृष्टानुश्रविकविषयवितृष्णस्य वशीकारसंज्ञा वैराग्यम् ॥

என்று கூறுகிறார்.[122] (கண்களுக்குப் புலப்படுபவையிலும் காதால் கேட்கப் படுபவையிலும் ஆசையற்றவனுடைய ஆளுதலின் தெரிநிலை வைராக்யம்) "ஆளுதல்" (சூத்திரத்தில் वशीकार என்ற சொல்) என்பது பொருட்களின் மேல் ஆசையற்று இருக்கும் நிலை (சூத்திரத்தில் वितृष्णा என்ற சொல்) … "தெரிநிலை" (சூத்திரத்தில் संज्ञा என்ற சொல்) என்பது ஆசையற்று இருக்கும் நிலையைத் தாம் அறிவது. நாம் அறிந்து செய்வது இங்கே குறிக்கப்படுவதன் காரணம், ஆசையற்று இருப்பது மட்டுமே வைராக்யம் ஆகாது. ஏனென்றால் நோய் போன்றவையினால் ஒருவன் ஆசையற்று இருக்கலாம்.

வைராக்யம் ஏற்படுவதற்கு முதலில் ஒருவன் பொருட்களில் உள்ள குறைகளை ஆராய வேண்டும்; புலன் நுகர்ச்சியில் கிட்டும் இன்பம் பொருட்களில் உள்ளதா? அவ்வின்பத்தின் உறைவிடம் எது? போன்ற கேள்விகளுக்கு விடை காண முயற்சிக்க வேண்டும். இவ்வாறு

---

[121] குறள் 26

[122] யோக சூத்திரம் 1.15

செய்தால் ஒருவன், "இவ்விந்தப் புலன்கள் என்னால் வெல்லப்பட்டன; மற்றவை இன்னும் என்னால் ஆளப்பட உள்ளன" என்று ஆராயும் தகுதியைப் பெறுகிறான். இந்நிலையையும் தாண்டினால், புலன்களால் நுகரப்படும் உருவம் முதலானவற்றில் இவனுடைய பற்று நலிவுறுகிறது. ஆனால் புகழ்ச்சி, இகழ்ச்சி முதலியவற்றில் உள்ள விருப்பு வெறுப்புகளை அவற்றை அறிவதன் மூலம் கட்டுப்படுத்து-கிறான். இம்மூன்று நிலைகளையும் கடந்தால், புலன்களால் நுகரப்படும் பொருட்கள் இருக்கும் போதும் அவற்றில் உள்ள குறைகளின் அறிதல் இவனை விட்டு நீங்குவதில்லை. இதையே (மேலே கூறிய) யோக சூத்திரம் "ஆளுதலின் அறிதல்" என்று குறிக்கிறது. இந்நிலையில் ஒருவனுக்குக் கண்களுக்குத் தெரியும் பெண், உணவு வகை, பான வகை, அதிகாரம் போன்றவற்றிலும், சுவர்க்கம், தேவர்களின் அந்தஸ்து போன்று சாஸ்திரத்தினால் கூறப்படுவையிலும் சிறிதேனும் ஆசை ஏற்படுவதில்லை. இப்பொருட்களின் முன்னிலையிலும் இவனுடைய மனம் இவற்றால் பாதிக்கப்படாமல் இருக்கிறது. இவ்விதமான வைராக்யமே முதலில் ஸம்ப்ரக்ஞாத (ஸவிகல்ப) ஸமாதிக்கும் பின்னர் அஸம்ப்ரக்ஞாத (நிர்விகல்ப) ஸமாதிக்கும் வழி வகுக்கிறது.[123] மாறாகப் பொருட்களின் மேல் ஆசையை வளர்த்தால், அது யோகத்திற்கு இடையூறாகிறது.[124]

ஆசார்யாளின் வாழ்க்கை வரலாற்றைப் படித்தால், அவர் சிறு வயது முதற்கொண்டே புலன்களைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டதாகத் தெரிகிறது. தவிரவும் அவர் துறவறம் மேற்கொண்ட பின், ஆசார்யா-ளிடம் வைராக்யம், பிரம்மசர்யம் இவற்றின் முக்கியத்துவம் பற்றியும், இவை ஒருவனிடத்தே உறுதியாக இருப்பதற்குப் புலனடக்கம் மிகவும் அவசியம் என்பது பற்றியும் அவரது குரு பலவாறு உபதேசித்தார் என்பதை அறிகிறோம்.[125] ஆசார்யாள் தமது இளம்வயதில் செய்த ஆன்மிகப் பயிற்சி பற்றிக் கூறியவற்றிலிருந்தே அவருடைய புலன்கள் எப்படிக் கட்டுப்பாட்டில் இருந்தன என்பதை அறியலாம். சாதாரணமாக ஒருவனுக்குப் பல ஆண்டுகள் முயற்சிக்குப் பின் கிட்டும் ஸமாதி

---

[123] Science of Mind Control, Sri Sharada Trust, Madras 1984; pp. 16-18

[124] யோக சூத்திரம் (1.30) இதை "अविरतिः" என்று குறிப்பிடுகிறது

[125] Yoga, Enlightenment and Perfection pp. 34-35

*நிலையை ஆசார்யாள் ஒரு சில மாதங்களில் அடைந்தார் என்று கூறுவதே இதற்குப் போதுமானது. இருப்பினும், நமது மனநிறை-விற்காக இங்கே ஓரிரு உதாரணங்களைக் கூறுவோம். ஆழ்நிலை தியானத்தை முதன் முறையாகச் செய்யும் போது ஆசார்யாள் அம்பாளின் உருவம் தமது உள்ளத் தாமரையில் வீற்றிருக்குமாறு தியானித்தார். அதை விவரிக்கும் போது அவர்,*

"**...** அம்பாளின் உருவத்தைத் தியானித்தேன். **...** சில கணங்களுக்குப் பிறகு கண்களைத் திறந்து பார்த்தால், உண்மையில் அரை மணி நேரம் கழிந்திருந்தது என்பதை அறிந்தேன். அந்த நேரத்தில் எனக்குச் சுற்றுப்புறத்தைப் பற்றியும் என்னுடைய உடல் பற்றியும் சற்றும் உணர்வு இருக்கவில்லை **...**"

*என்று கூறுகிறார்.*[126] *மேலும் அவர்,*

"**...** ஜபம் செய்யும் பொழுதோ அல்லது தியானம் செய்யும் பொழுதோ மனம் ஒருநிலைப்படுவதில்லை, ஓடுகிறது என்று சிலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். நான் தியானம் செய்யத் துவங்கிய நாள் முதல் எனக்கு அந்த இடர்ப்பாடு நேர்ந்ததில்லை **...**"

*என்றும்,*[127]

"**...** தியானம் செய்யத் துவங்கும் போது பற்றுக்கோடாக மனதில் ஒரு எண்ணம் தேவைப்பட்டது. ஆனால் எனக்கோ தியானம் செய்யும் போது மனம் சற்றும் அலைவதில்லை. எனவே, மனதில் வலுக்கட்டாயமாக ஒரு எண்ணத்தை வருவிப்பதற்கு மாறாக, தியானம் செய்ய வேண்டும் என்ற அவாவையே பற்றுக்கோடாகப் பயன்படுத்த முடிவு செய்தேன் **...**"

*என்றும் கூறுகிறார்.*[128] *இப்படி ஆசார்யாள் இளம் வயதிலேயே தமது புலன்களைக் கட்டுப்படுத்தி மனதை ஆத்மாவில் நிலைக்கச்செய்ததால், பிற்காலத்தில் ஒரு பெரிய பீடத்தின் அதிபதியான பின்னர் பல விவகாரங்களுக்கு இடையில், எந்த இடத்திலும் எந்த விதமான*

---

[126] Yoga, Enlightenment and Perfection என்ற நூலிலிருந்து தமிழாக்கப்பட்டது; ப. 109

[127] மேலது ப. 125

[128] மேலது ப. 159

*சூழ்நிலையிலும் அவருடைய மனம் ஒரு பொழுதும் கலங்காமலும் நிலையாகவும் இருந்தததது. மஹாகவி காளிதாஸர் சிவபெருமானைப் பற்றி*

विकारहेतौ सति विक्रियन्ते येषां न चेतांसि त एव धीराः

*(மாறுதல் அடையக் காரணங்கள் இருக்கும் போதும் எவருடைய மனம் மாறுவதில்லையோ, அவரே தீரர்[129]) என்று கூறுவது ஆசார்யாளுக்கு எல்லா வகையிலும் பொருந்துகிறது. இதைச் சித்தரிக்கும் சில நிகழ்வுகளை இப்பொழுது கூறுவோம்.*

*ஆசார்யாளின் மருத்துவர் டாக்டர். லக்ஷ்மிபதி ஆசார்யாளின் சமநிலை பற்றி இப்படிக் கூறுகிறார்:*

“... ஆசார்யாள் எப்பொழுதும் சமநிலையாகவும் சாந்தமாகவும் இருந்தார். கோவை நகரத்தில் உள்ள சாரதாம்பாள் ஆலயத்திற்கு ஆசார்யாள் ஒரு முறை விஜயம் செய்த பொழுது அவரைத் தரிசிக்கச் சென்றேன். அங்கே ஒரு நிகழ்ச்சி ஏற்பாடாகியிருந்தது. பலதரப்பட்ட மக்கள் கூடியிருந்தனர். எங்கும் ஒரே இரைச்சல்; நாகஸ்வர ஓசை விண்ணைத் தொட்டது. இதெல்லாம் போதாது என்று ஹோம குண்டத்திலிருந்து எழும் புகை வேறு. இந்த ஆரவாரத்திற்கும் கூட்டத்திற்கும், புகைக்கும், வியர்வைக்கும் இடையில் உட்கார்வதே எனக்குக் கஷ்டமாக இருந்தது. ஆனால் ஆசார்யாளோ மேடையின் மேல் கண்களைப் பாதி மூடியவாறு, ஒரு மென்னகையுடன் முற்றிலும் சாந்தமாக அமர்ந்திருந்தார். ...”[130]

*மைசூரைச் சார்ந்த அவிநாசியப்ப செட்டியார் என்பவர் ஒரு சக்தி உபாஸகர்; தவிர, சூரியனை வழிபடுபவர். தம் வாழ்கையில் பல நியமங்களைக் கடைபிடைத்தவர். அவர் முதன் முறையாக ஆசார்யாளைத் தரிசிக்கச் சென்ற பொழுது அவருக்கு ஆசார்யாள் விஷயத்தில் சிரத்தையோ பக்தியோ இருக்கவில்லை. மைசூரில் ஆசார்யாள் ஒரு முறை விஜயம் செய்த பொழுது, இவர் ஆசார்யாள்*

---

[129] குமார ஸம்பவம் 1.59

[130] The Multifaceted Jivanmukta என்ற நூலிலிருந்து தமிழாக்கப்பட்டது; ப.359

*செய்யும் சந்த்ரமௌலீச்வரர் பூஜைக்குச் சென்றார்.*

"... எனக்கு அப்பொழுது, 'ஒரு ஸந்யாஸிக்கு எதற்கு இவ்வளவு படாடோபம் தேவை? இவருடைய பூஜையை இவர் தனிமையில் செய்யக் கூடாதா? சாதாரணமான எண்ணை விளக்குகள் போதாதா? அலங்–கரிக்கப்பட்ட மின்சார விளக்குகள் தேவையா?' போன்ற எண்ணங்கள் மனதில் தோன்றின. அப்போது திடீரென மின்சாரம் துண்டிக்கப்பட்டது. எல்லா விளக்குகளும் அணைந்துவிட்டன. ஆனால் ஆசார்யாளிடம் எந்த மாற்றமும் இல்லை. மின்துண்டிப்பினால் பாதிக்கப்பட்டவர் மாதிரியே தோன்றவில்லை. எண்ணை விளக்கொளியில் தமது பூஜையைத் தொடர்ந்தார். ..."

*என்று ஆசார்யாளின் சமநிலையைப் பற்றிக் கூறியுள்ளார்.*[131]

*ஆசார்யாளின் சிஷ்யர்களில் ஒருவரான ஶ்ரீ ராஜகோபால சர்மா, மடத்தில் பலவிதமான பொருட்கள் இருந்த போதிலும் ஆசார்யாள் அவற்றால் எப்பொழுதும் பாதிக்கப் படவில்லை என்று கூறுகிறார்:*

"ஒரு பின்னிரவில் ஆசார்யாள் தூக்கத்திலிருந்து எழுந்து, அவர் அறையின் ஜன்னல் அருகில் இருந்த ஒரு சிறிய சுருங்கிய வாழைப்பழத்தை உண்டு, சிறிது நீர் பருகி மீண்டும் உறங்கச் சென்றார். இதை நான் சற்று தூரத்திலிருந்து பார்த்தேன்; அந்தப் பழத்தை விட்டெறிவதற்குப் பதில் அதைப் போய் சாப்பிடுகிறாரே என்று வருத்தம் அடைந்தேன். அடுத்த நாள் காலையில் ஆசார்யாளுடன் பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்த போது அவரிடம், "ஆசார்யாள் அந்தப் பழத்தைப் போய் ஏன் சாப்பிட வேண்டும்? இங்கே பெட்டி பெட்டியாய் ஆஸ்த்ரேலியாவிலிருந்து வந்த திராக்ஷைகள் இருக்கின்றனவே" என்று கேட்டேன். அதற்கு அவர், 'எனக்கு வயிற்றில் அல்சர் உண்டு. அதனால் வலி ஏற்படும் போது கொஞ்சம் ஏதாவது சாப்பிட வேண்டும். அதற்கு அந்த வாழைப்பழமே போதுமானது. இன்றைக்கு ஏதோ உயர்தரமான பழங்கள் இருக்கின்றன என்பதற்காக அவற்றை நான் சாப்பிட வேண்டுமா? 'விரக்தி' என்றால் என்ன? ஒரு பொருள் ஒருவனுக்கு முன்னால் இல்லாத போது அதன் மேல் பற்றில்லாமல்

[131] *ஶ்ரீ அவிநாசியப்ப செட்டியார் எழுதியது*

இருப்பது விரக்தி ஆகாது. ஆசைப்படும் பொருள் முன்னால் இருக்கும் போதும், அது ஒருவனுக்குச் சொந்தமாக இருந்தாலும், அதை அவன் அனுபவிக்கக் கூடாது. 'இது எனக்கு வேண்டும்' என்ற எண்ணம் கூட அவனுக்கு வரக் கூடாது. அது தான் உண்மையான விரக்தி'' என்று கூறினார். தொடர்ந்து அவர், 'ஒரு பொருளை அடைய நான் முயற்சி செய்யா விட்டாலும், அதன் மேல் எனக்கு ஆசை உண்டானால், அந்த ஏக்கமே ஒரு வாஸனையாக (ஸம்ஸ்காரமாக) என் மனதில் பதிவு ஆகிவிடும். வேறொரு சந்தர்ப்பத்தில், அந்த வாஸனை என்னை அறியாமல் வேறு விதமாகச் செயல்பட வைக்கும். எனக்குப் பசி இருக்கும் போது ஒருவர் எனக்கு முன்னால் ருசியான பழம் ஒன்றை எனக்கு சமர்ப்பிக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அதற்கு முன் அந்தப் பழத்தைச் சாப்பிட வேண்டும் என்ற ஆசையை நான் மனதில் வளர்த்திருந்தேன் என்றும் வைத்துக்கொள். அப்போது என்ன ஆகும்? கொஞ்சமும் யோசிக்காமல், நான் அந்தப் பழத்தைச் சாப்பிடுவேன், அல்லவா? அதனால், 'எனக்கு இது வேண்டும்' என்ற எண்ணமே இல்லாமல் இருப்பது தான் 'உண்மையான மனவடக்கம்' ...''[132]

*ஸ்ரீ ராஜகோபால சர்மா கூறும் இன்னொரு நிகழ்வைப் பதிவு செய்வோம்:*

''1966ம் ஆண்டு ஆசார்யாள் ஹைதராபாத் நகரத்தில் முகாமிட்ட போது, சில நாட்களுக்கு என்னை அவரது அறையில் உறங்க அனுமதித்தார். அச்சமயம் மைஸூர் மன்னரும் ராஜா வேங்கட ராவ் லிம்பேகரும் ஆசார்யாளின் உபயோகத்திற்காக உயர் தரமான படுக்கை விரிப்பு–களையும், போர்வைகளையும் ஸமர்ப்பித்தார்கள். இரவில் ஆசார்யாள் தமது அறையில் நுழைந்த பின், ஒரு பணியாளர் அவற்றை விரிப்பார். ஆசார்யாளோ, கதவை மூடிய பின் மான் தோல் ஒன்றைத் தரையில் விரித்து அதன் மேல் படுப்பார்; தமது மேல்வஸ்திரத்தை எடுத்துச் சுருட்டித் தலையணையாகவும், தம் இடுப்பில் உள்ள துணியைப் போர்வையாகவும் பயன்படுத்துவார். 'சம்போ மஹாதேவ' என்று மும்முறை கூறி உறங்கிவிடுவார். காலையில் விழித்தவுடன் பணியாளர் விரித்திருந்த உயர் ரகப் படுக்கையைச் சற்று கலைப்பார். இதை நான்

---

[132] Exalting Elucidations *என்ற நூலிலிருந்து தமிழாக்கப்பட்டது*, Sri Vidyatheertha Foundation, Chennai 2004; p. 128-129

சில நாட்கள் பார்த்த பின், ஆசார்யாளை, 'ஆசார்யாள் ஏன் இப்படிச் செய்கிறார்**?**' என்று கேட்டேன்**.** அதற்கு அவர், 'நான் ஒரு ஸந்யாஸி; எனக்கு இது போன்ற வசதிகள் எதுவும் வேண்டாம்**.** ஆனால், எனக்கு இம்மாதிரியான பொருட்களை ஸமர்ப்பிப்பவர்களுக்கு நான் அவற்றைப் பயன்படுத்துவேன் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது**.** பணியாளர்கள், நான் இவற்றைப் உபயோகப்படுத்துவதில்லை என்று கொடுத்தவர்களிடம் கூறினால், 'ஒரு வேளை நாம் ஸமர்ப்பித்தவை தரமாக இல்லை என்பதனால் ஆசார்யாள் அவற்றைப் பயன் படுத்தவில்லை போலும்' என்று யோசித்து மனம் வருந்தலாம்; அதனால், இதை விட விலை மதிப்புள்ள பொருட்களை எனக்கு ஸமர்ப்பிக்கலாம்**.** இதை ஏன் வளர விட வேண்டும்**?** படுக்கையைக் கலைத்துவிட்டால், பணியாளர்களும் நான் அதில் உறங்கினேன் என்று எண்ணுவார்கள்; நான் அப்படுக்கையைப் பயன்படுத்தவில்லை என்று கொடுத்தவர்களிடம் சொல்லவும் மாட்டார்கள்' என்று கூறினார்**. …**''[133]

*இங்கே இரண்டு விஷயங்களை நாம் மனதில் கொள்ள வேண்டும். முதலாவது, உயர் ரக விரிப்பும் போர்வையும் இருந்த போதிலும் அவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணம் ஆசார்யாளுக்கு எழவில்லை. இரண்டாவது, தாம் அவற்றைப் பயன்படுத்தினார் என்ற தவறான செய்தி வெளியில் தெரிய வருவதையும் அவர் ஒரு பொருட்டாக எண்ணவில்லை. இதுவும் அவருடைய நிலையான மனதையே (தைர்யத்தை) காட்டுகிறது. ஏனென்றால், புகழ், இகழ் இரண்டுமே அவர் மனதைப் பாதித்ததில்லை. இப்படிப் புகழாலும் இகழாலும் பாதிக்கப்படாதவரை பகவான் ஶ்ரீ கிருஷ்ணர் பகவத் கீதையில் ''தீரர்'' என்று கூறுகிறார்.[134]*

**समदुःखसुखः स्वस्थः समलोष्टाश्मकाञ्चनः ।
तुल्यप्रियाप्रियो धीरस्तुल्यनिन्दात्मसंस्तुतिः ॥**

*(இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகப் பார்ப்பவன்; ஆத்மாவில் நிலைபெற்றுள்ளவன்; மண், கல், பொன் இவற்றை சமமாகப்*

---

[133] The Multifaceted Jivanmukta என்ற *நூலிலிருந்து தமிழாக்கப்பட்டது;* ப.302

[134] *ஶ்ரீமத் பகவத் கீதை* 14.24

*பார்ப்பவன்; பிடித்ததையும், பிடிக்காததையும் சமமாகப் பார்ப்பவன்; தன்னைக் குறித்த இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் ஒன்றாகப் பார்ப்பவன், தீரன்.)*

*ஆத்ம ஸ்வரூபத்தை அறிந்து பரம்பொருளில் நிலை பெற்றவரின் மனம் கலையாமல் இருக்கிறது என்று இதுவரை பலவாறு கூறினோம். அதிலும் ஆசார்யாள் ஸமாதி யோக அப்பியாசம் செய்து தம் மனதைப் பரம்பொருளில் நிலைபெறச் செய்ததால், இத்தகைய மனவுறுதி (தைர்யம்) அவரிடம் தனிச்சிறப்புடன் விளங்கியது. ஸமாதி யோக அப்பியாசத்தின் விளைவாக ஆசார்யாளுடைய மனம் மீண்டும் மீண்டும் ஸமாதி நிலைக்குச் சென்றது என்பதையும், அதை அவரது குரு தடுத்தது பற்றியும் நாம் முன்னர் கூறினோம். அந்த சமயத்தில், ஆசார்யாளின் கலக்கமற்ற மனநிலை பற்றி அவர் குரு கூறியதை இங்கே நினைவு கூர்வது பொருத்தமாக இருக்கும்:*

"... வழக்கமாக நீங்கள் ஈடுபடும் செயல்களை உங்களால் இப்பொழுது செய்ய முடிந்தாலும், உங்கள் மனம் மிகவும் உள்திரும்பி இருப்பதால், தர்க்கம் முதலான சாஸ்திரங்களை உங்களால் கவனித்துப் படிக்க இயலாது. உங்கள் முகத்தைப் பார்த்தால் அதில் அமைதியும் மகிழ்ச்சியும் மட்டுமே தெரிகின்றன.

என் மேல் உங்களுக்கு மிகுந்த அன்பு இருந்தாலும், இப்பொழுது நான் என் உடலைத் தியாகம் செய்தால் கூட உங்கள் முகபாவம் சிறிதும் மாறாது. எந்த விதத்தில் தூண்டப்பட்டாலும் உங்களுக்கு எள்ளளவு சினமும் பிறக்காது. இவ்வுலகத்தில் உள்ள எதுவும் உங்கள் மனதைக் கவரவில்லை. உங்கள் மனம் ஒரு பாறையைப் போல் உறுதியாக இருப்பதும், எதிலும் பற்றில்லாமல் இருப்பதும் அப்பட்டமாகத் தெரிகிறது. ..."[135]

*இந்த மனத்திட்பம் பின்னாளில் ஆசார்யாள் பீடாதிபதியாக இருந்த போது பார்ப்பவர் எல்லோருக்கும் அப்பட்டமாகத் தெரியாவிடினும், பல சந்தர்ப்பங்களில் அது வெளிவந்ததை ஆசார்யாளின் சிஷ்யர்கள் கூறியுள்ளனர். கர்நாடக மாநிலத்தின் தலைமை நீதிபதியாகவும், பின்னர்*

[135] Yoga, Enlightenment and Perfection *என்ற நூலிலிருந்து தமிழாக்கப்பட்டது; ப. 201*

*ஆளுனராகவும் இருந்த ஸ்ரீ சோமநாத ஐயர் ஆசார்யாளுடன் நிகழ்ந்த உரையாடல் ஒன்றை சோமநாத ஐயரின் மகன் ஸ்ரீ சிவஸ்வாமி பதிவு செய்துள்ளார்:*

"... (என் தந்தை) ஒரு முறை ஆசார்யாளிடம், 'மடத்தில் எல்லா விதமான சௌகர்யங்களும் இருக்கின்றன. அதில் எதையும் அனுபவிக்காமல் ஆசார்யாள் தினமும் அதிகாலை முதல் பின்னிரவு வரை தம்மை வருத்திக் கொள்கிறார். இதனால் ஆசார்யாளுக்குக் கிடைப்பது என்ன?' என்று கேட்டார். ஆசார்யாள் அவரை ஒரு புன்னகையுடன் பார்த்து, 'யாராவது உங்களிடம் ஒரு வெல்லக் கட்டியையும் பாதாம் அல்வாவையும் கொடுத்து இதில் ஏதாவது ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னால் நீங்கள் என்ன செய்வீர்கள்?' என்று கேட்டார். என் தந்தை, 'இதில் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? பாதாம் அல்வாவையே விரும்புவேன்' என்றார். ஆசார்யாள், 'அதே தான் இங்கேயும். பரமானந்தத்தை ருசி கண்டவன் உலக சுகம் எதையும் விரும்ப மாட்டான்' என்று பதிலளித்தார். ..." [136]

## அத்வைதமே தைர்யம்

*ஆசார்யாளின் மனத்திட்பம் பற்றிய இன்னொரு நிகழ்வை ஸ்ரீ நரஸிம்ஹையா நினைவு கூர்கிறார்:*

"... வேங்கட ராவ் லிம்பேகர் ஹைதராபத் நகரத்தில் நல்லகுண்டா பகுதியில் தமக்குச் சொந்தமான நிலம் ஒன்றை ஆசார்யாளுக்குத் தக்ஷிணையாக அளிக்க விரும்பினார். அவர் ஆசார்யாளிடம், 'இந்த நிலத்தை நான் ஆசார்யாளுக்கு அளிக்க விரும்புகிறேன். என்றைக்—காவது சிருங்கேரி மடத்திற்கு கஷ்டம் ஏற்பட்டாலோ அல்லது ஆசார்யாளுக்கு சிருங்கேரியில் ஏதாவது தொல்லைகள் வந்தாலோ, ஆசார்யாள் கவலைப்பட வேண்டி இருக்காது. இந்த இடத்திற்கு வந்து விடலாம்' என்று கூறினார். ஆசார்யாள் அவரிடம், 'நான் ஒரு ஸந்யாஸி; எதுவும் சொந்தமாக வைத்துக் கொள்ளக் கூடாது என்பது மட்டுமல்ல, எனக்கு அவ்வாறு வைத்துக் கொள்வதற்குச் சிறிதும் இஷ்டம் இல்லை. சாஸ்திரங்கள் பரமஹம்ஸ ஸந்யாஸி எப்படி இருக்க

---

[136] The Multifaceted Jivanmukta *என்ற நூலிலிருந்து தமிழாக்கப்பட்டது; ப.* 302-303

வேண்டும் என்று கூறுகின்றனவோ, அப்படி இருப்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சி தரும். ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு நடந்து செல்வதும், எங்கேனும் ஒரு ஆற்றிலோ வேறு நீர் நிலையிலோ நீராடியும், பிச்சை எடுத்துக் கிடைத்த உணவை உண்டும், ஒரு மரத்தடியிலோ, குகையிலோ அல்லது ஒரு கோயிலிலோ உறங்குவதும், என்னுடைய நேரத்தின் பெரும் பங்கை தியானம் செய்வதில் கழித்து, உலகை மறந்து இரண்டற்ற பரம்பொருளில் மனதைச் செலுத்திக் காலம் கழிப்பதே என் விருப்பம். ஆனால், என் குரு சிருங்கேரி மடத்தை என் பொறுப்பில் விட்டிருக்கிறார். அந்த ஒரே காரணத்திற்காக நான் இந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிறேன். எல்லாமே பிரம்மம் என்றும் பிரம்மத்தைத் தவிர்த்து வேறு எதுவும் இல்லையென்றும் சாஸ்திரம் நமக்கு உபதேசிக்கிறது. என்னுடைய குருவின் அனுக்ரஹத்தினாலேயே நான் பிரம்மம் என்பதையும் அறிகிறேன். எனவே, இந்த மூன்று உலகத்திலும் எனக்கு இல்லாதது எது? அதே சமயத்தில், எதுவும் என்னுடையது இல்லை; ஏனெனின் நான் உடல்—மனம் ஆகிய தொகுப்பும் அல்ல; சுத்த சைதன்ய வடிவானவன். ஜனக மஹாராஜா, 'என்னுடைய செல்வத்திற்கு அளவே இல்லை; என்னுடையது எதுவும் இல்லை' என்று கூறியதாக மஹாபாரதத்தில் இருக்கிறது. அவரைப் போல், எனக்கும் எதுவும் இல்லை என்றாலும் என்னிடம் எல்லாம் இருக்கிறது. நீங்கள் என் மேல் வைத்திருக்கும் அன்பும், அக்கறையும் என்னை மகிழ்விக்கின்றன. ஆனால் எனக்கு நிலத்தை அன்பளிக்கும் எண்ணத்தைக் கைவிடுங்கள். அதற்குப் பதிலாக மடத்திற்குத் தானமாக அளியுங்கள்' என்று கூறினார் ...'' [137]

*பிரம்மத்தைக் காட்டிலும் வேறு எதுவும் இல்லை என்பதையும் அதிலிருந்து நாம் வேறுபட்டவர் இல்லை என்பதை உணர்வதே "தைர்யம்" ஆகும். இந்த உயர்ந்த பொருளை வேதம் கூறுகிறது. ஆசார்யாளின் அருளுரை ஒன்றில் இந்த விஷயத்தை அவர் பின்வருமாறு விளக்கியுள்ளார்:*

"... நாம் பகவானையே காண வேண்டும் என்று சொன்னால் 'அவனை நம்மைக் காட்டிலும் வேறாகக் காண வேண்டுமா' என்னும் கேள்வி

[137] மேலது ப. 304

நமக்கு எழும். இறைவனை நம்மைக் காட்டிலும் வேறாக நாம் கண்டோம் என்றால் எப்பொழுதும் அவன் விஷயத்தில் நமக்கு ஓரளவு பயம் இருந்து கொண்டு தான் இருக்கும். மேலும் அவன் உயர்ந்தவனாக இருப்பான். அவனது நோக்கில் நாம் ஓரளவிற்குத் தாழ்ந்தவர்களாகவே இருப்போம். இவ்வாறு இருந்தால் பரிபூரண (முழுமையான) நிலையை அடைய முடியாது. உதாரணத்திற்கு ஒருவன் அமைச்சராக விரும்பலாம். அவன் அமைச்சரானாலும் அவனுக்கு மேல் முதலமைச்சர் என்ற ஒருவர் இருக்கத் தான் செய்வார். ஆதலால் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்று எண்ணி ஒருவர் முதலமைச்சர் ஆவதற்கு முயற்சி செய்யலாம். அவனால் அவ்வாறு பதவி பெற முடியுமோ முடியாதோ என்கின்ற பிரச்சினைக்கு நாம் போகவில்லை. அப்படியே அவன் முதலமைச்சர் ஆனாலும் அவனுக்கு மேல் பிரதமர் என்று ஒருவர் இருக்கின்றார். ஆதலால் இவ்வாறு (மேலும் மேலும்) சென்றுகொண்டே–யிருந்தால் இதற்கு முடிவே இராது. ஆகையால் தான் சாஸ்திரங்களில் ‘இரண்டாவதாக ஒரு பேர்வழி இருந்தால் அப்போது பயம் ஓரளவிற்கு இருக்கத் தான் செய்யும். பரிபூரண நிலை இருக்காது’ என்று கூறப்பட்டுள்ளது. द्वितीयाद्वै भयं भवति (இரண்டாவது பொருள் இருந்தால் பயம் ஏற்படுகிறது) என்று (முன்னோர்கள் சொன்னார்கள்.[138]) எந்தப் பொருள் நமக்கு முன்னால் இருந்தாலும் அதன் மூலமாக ஓரளவிற்கு நமக்கு பயம் ஏற்படத் தான் செய்யும் ...’’ [139]

‘‘... இந்த ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்றாய்த் தான் இருக்க வேண்டும். यदा ह्येवैष एतस्मिन्नुदरमन्तरं कुरुते। अथ तस्य भयं भवति। என்று வேதம் உரைக்கிறது.[140] (அதில் சற்றே வேற்றுமை செய்தாலும் அதனால் பயம் ஏற்படுகிறது) சிலர் ‘நாம் ஸகுணமாக (குணங்களுடன் கூடிய) இருக்–கப்பட்ட ஈச்வரனை ஆராதித்து அவனுடைய லோகத்திற்குச் சென்றால் பயமே இல்லாமல் இருக்கலாமே’ என்று கூறுவர். ஆகவே அந்த லோகங்களில் (உலகங்களில்) இருந்தாலும் கூட ‘द्वितीयाद्वै भयमं भवति’ (இரண்டாவது பொருள் இருந்தால் பயம் ஏற்படுகிறது) என்று கூறப்பட்டிருக்கிறது. இரண்டாவது பொருள் என்று ஒன்று இருந்தால்

---

[138] *ப்ருஹதாரண்யக உபநிஷத்* 1.4.2

[139] *முத்தி நெறி ப.* 116-117

[140] *தைத்திரீய உபநிஷத்* 2.8.1

அப்போது அவனுக்கு பயம் தான் ஏற்படும். இவ்வாறில்லாமல் ஒருவன் ப்ரஹ்ம விசாரம் செய்து தன்னுடைய ஸ்வரூபத்தைத் தெரிந்து கொண்டால் அவன் ப்ரஹ்மமே ஆகிவிடுகிறான். ...''[141]

*மேலே ஆசார்யாள் கூறிய வேத வாக்கியங்களின் அடிப்படையிலேயே அவர் விசாரம் செய்து பரம்பொருளைத் தியானம் செய்தார் என்பதையும் அவர் வேறு ஓரிடத்தில் கூறி இருக்கிறார்:*

''... மாலை, கதிரவன் மறைவதற்குச் சுமார் ஒரு மணி நேரம் முன் குன்றுக்குச் சென்றேன். அங்கே அன்று வரை பரம்பொருளை உருவமுள்ளதாக – சிவன், விஷ்ணு, அம்பாள் போன்ற உருவங்களை – தியானம் செய்து வந்தேன். ஆனால் அன்று மாலை நான் பரம்–பொருளை உருவம், செயல் போன்ற கல்பிக்கப்பட்ட குணங்கள் இல்லாமல் தியானம் செய்யவேண்டும் என்று எண்ணினேன். மேற்கு நோக்கி ஸித்தாஸனத்தில் அமர்ந்து, சாஸ்திரம் கூறுவதை அடிப்படை–யாகவும் யுக்தியைத் துணைகொண்டும் பரம்பொருளைத் தியானம் செய்ய ஆயத்தம் செய்தேன். ...''

ब्रह्मविदाप्नोति परम् । (பிரம்மத்தை அறிந்தவர் உயர்ந்ததை அடைகிறார்)

आनन्दं ब्रह्मणो विद्वान् । न बिभेति कुतश्चनेति । (பிரம்மத்தின் ஆனந்தத்தை அறிந்தவர் எதற்கும் அஞ்சுவதில்லை)

यदा ह्येवैष एतस्मिन्नुदरमन्तरं कुरुते। अथ तस्य भयं भवति। (அதில் சற்றே வேற்றுமை செய்தாலும் அதனால் பயம் ஏற்படுகிறது)

என்கிற வேத வாக்கியங்களை நினைவு கூர்ந்து,[142] அவற்றின் பொருளைச் சிந்தித்தேன். ...'' [143]

*இந்த வாக்கியங்களின் அடிப்படையில் ஆசார்யாள் செய்த தியானமும் அவர் பிரம்மத்தில் நிலை பெற்றது பற்றியும் அவருடைய வரலாற்றில் விவரிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு பரம்பொருளைப் பற்றிச் சிந்தித்து தியானம் செய்து பிரம்ம ஞானம் அடைபவரே அச்சமற்றவர் / தைர்யம்*

---

[141] *முத்தி நெறி ப.* 264-265

[142] *தைத்திரீய உபநிஷத்* 2.1.1, 2.9.1, 2.8.1

[143] Yoga, Enlightenment and Perfection *என்ற நூலிலிருந்து தமிழாக்கப்பட்டது; ப.* 149-150

*உள்ளவர் என்று அறியப்படுகிறார் என்பதை வேதமே கூறுகிறது. ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் உள்ள* अभयं वै जनक प्राप्तोऽसि *(ஜனகனே! நீ (பிறப்பிறப்பு முதலிய) பயமற்றதை அடைந்துள்ளாய்*[144]*) முதலான வாக்கியங்களை இதற்குச் சான்றாகக் கூறலாம்.*

*இங்கே ஒரு கேள்வி எழலாம். இந்த இயலின் துவக்கத்தில் ''தைர்யம்'' என்பது வலிமையிலிருந்து பிறக்கிறது என்று சொன்னோம். ஆனால் இப்பொழுது பரம்பொருளை இரண்டற்றதாக அறிவதே ''தைர்யம்'' என்று சொல்கிறோம். இந்த இரண்டிற்கும் தொடர்பு உண்டா அல்லது வெவ்வேறா என்பதே கேள்வி. இதற்கான விடையையும் ஆசார்யாளே ஓரிடத்தில் கூறியிருக்கிறார். அதை இப்பொழுது பார்ப்போம்:* [145]

''... மனிதர்களின் வலிமை பொதுவாகச் செல்வம், மக்கட்பேறு முதலியவற்றில் இருக்கிறது; அவர்களுடைய வலிமை செயல்களின் வழிவகைகளிலிருந்தும் அவற்றின் விளைவுகளிலிருந்தும் பிறக்கிறது. ஆனால் பிரம்மத்தை அறிந்தவனோ வழிவகைகள், விளைவுகள் என்ற இவ்விரண்டையும் தவிர்க்கிறான். அவன் தன் அறிவிலிருந்து உண்டாகும் வலிமையைச் சார்ந்து இருக்கிறான். அறிவின் வலிமையைச் சார்ந்திருத்தல் என்பது ஆத்மாவைப் பற்றிய தவறான கருத்துகளை நீக்குதல். பிரம்மத்தை அறிந்தவன் இவ்வாறு செய்வதால் அவனது ஆசையின்மை மேலும் வலிமை அடைகிறது. அவனுடைய புலன்கள் புறப்பொருட்கள் பக்கம் அவனை இழுக்கும் ஆற்றலை இழக்கின்றன.

கேனோபநிஷத் 'ஆத்மாவின் மூலம் ஒருவன் வலிமை அடைகிறான்' என்று கூறுகிறது.[146] முண்டக உபநிஷத் 'வலிமையற்றோரால் இந்த ஆத்மா அடையப்படுவதில்லை' என்று கூறுகிறது.[147] சங்கரர் ப்ருஹதாரண்யக உபநிஷத் பாஷ்யத்தில் அறிவின் வலிமையைப் பற்றிப் பேசும் பொழுது இந்த உபதேசங்களை மேற்கோள்களாகக் காட்டுகிறார். அங்கே அவர் ஆத்மாவைப் பற்றிய அறிவின் காரணமாகப் புலன்களால்

---

[144] ப்ருஹதாரண்யக உபநிஷத் 4.2.4

[145] மெய்ஞான விளக்கவுரைகள் ப. 128-129

[146] கேனோபநிஷத் 2.4

[147] முண்டக உபநிஷத் 3.2.4

நுகரப்படும் பொருட்களைப் பொருட்படுத்தாமல் இருப்பதே வலிமை என்றும், ஆத்மாவை அறிந்தவன் இவ்வலிமையைச் சார்ந்தே இருக்க வேண்டும் என்பதையும் மிகத் தெளிவாகக் கூறுகிறார். ...''

*தைர்யம் என்கிற குணம் மனத்திட்பத்தினால் (மன உறுதியினால்) ஏற்படுகிறது என்பதைக் கூறி ஆசார்யாளின் ஆளுமையில் அக்குணம் எந்த விதங்களில் அமைந்தது என்பதை இந்த இயலில் பார்த்தோம். சாதாரணமாக, ''இது சரி, இப்படியே செய்ய வேண்டும்'' என்ற உறுதிப்பாட்டின் செயலாக்கமே தைர்யமாக வெளிப்படுகிறது. இதிலிருந்து விவேகத்திற்கும் தைர்யத்திற்கும் உள்ள தொடர்பு தெரிகிறது. யோகம் மற்றும் வேதாந்த சாஸ்திரங்களில் ''உலகத்தில் உள்ள தாற்காலிகமான இன்பங்களையும், உண்மையானதும் நித்யமானதுமான பரம்பொருளையும் பகுத்தறிவதே விவேகம்'' என்று கூறுகின்றன. இவ்வுறுதி புலனடக்கமாகவும், கலக்கமற்ற மனமாகவும் வெளிப்படுகிறது; இம்மாதிரியானவனை சாஸ்திரம் ''தீரன்''(தைர்யம் கொண்டவன்) என்றும் கூறுகிறதால் இங்கே தைர்யம் என்பது ஒரு குறிப்பிட்ட மனநிலையாக வெளிப்படுகிறது. அதாவது தீரன் எனப்படுபவன் உலகத்தில் செயல்படும் போதும் அவன் பற்றற்றும், நிலையான மனதுடனும் இருக்கிறான். இறுதியாகப் பரம்பொருளை இரண்டற்றதாக அறிவதும் அதிலிருந்து தான் வேறுபட்டவன் அல்லன் என்பதை உணர்வதே தைர்யம் என்று வேதாந்தம் கூறுகிறது. இந்நிலையில் முழுமையான விவேகமும் (அதாவது ஞானமும்) தைர்யமும் ஒன்றாகின்றன. தைர்யம் என்ற குணத்தின் இந்த வெளிப்பாடுகள் அனைத்தும் ஆசார்யாளின் ஆளுமையில் அமைந்திருந்தன.*

# 4. தாராள குணம், பெருந்தன்மை, பரந்த மனம் (ஔதார்யம்)

"औदार्यम्" (ஔதார்யம்) என்கிற சொல் "उदार" என்கிற அடைமொழியிலிருந்து பெறப்பட்ட பெயர்ச்சொல். இது "தாராளம்", "பெருந்தன்மை", "பரந்த மனம்" என்கிற பொருளில் வரும். ஆசார்யாளின் சிஷ்யர்கள் அனைவருமே அவரைப் பற்றிப் பேசும் போது ஆசார்யாளின் தாராள மனதைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். அதில் விசேஷம் என்னவென்றால் இக்குணம் ஆசார்யாளின் ஆளுமையில் உள்ள பன்முகத் தன்மைக்கு ஏற்றவாறு பல விதங்களில் வெளிப்படுகிறது. சிலர் ஆசார்யாள் தமக்குத் தாராளமாகப் பொருள் கொடுத்ததைக் கூறுகிறார்கள்; வேறு சிலர் சிஷ்யர்களின் ஆசைகளைத் தீர்ப்பதற்கு ஆசார்யாள் எடுத்துக் கொண்ட நேரத்தையோ சிரமத்தையோ நினைவு கூர்கிறார்கள். இன்னும் சிலர் ஆசார்யாள் ஒரு குருவாகத் தமது அனுக்ரஹத்தைத் தாராளமாக அளித்ததை எண்ணி நெகிழ்கிறார்கள். ஆசார்யாளின் தாராள குணம் ஒன்றே அவரது ஆளுமையின் பன்முகத் தன்மையை நன்கு சித்தரிக்கிறது என்று கூறலாம்.

### ஈகை

பொதுவாக "தாராளம்" என்ற சொல் குணத்தைக் குறிக்கும் போது ஈகையை (ஒன்றைக் கொடுப்பதை) நினைவுபடுத்துகிறது. "தாராளமாகக் கொடுத்தார்" என்று வழக்கில் சொல்கிறோம். அதே போல் "கொடுப்பது" என்பதும் பொதுவாக ஏதேனும் ஒரு பொருளையோ பல பொருட்களையோ கொடுப்பது என்றே அறியப்படும். ஆனால் சற்று சிந்தித்தால், கொடுக்கும் செயல் பல பரிமாணங்களைக் கொண்டது என்பது தெளிவாகிறது. அப்பரிமாணங்கள் தாராளத்திற்கும் பெருந்தன்மைக்கும் உள்ள தொடர்பை வெளிப்படுத்துகின்றன. அவற்றை ஒன்றன்பின் ஒன்றாகப் பார்ப்போம்.

முதலாவதாக, யாருக்குக் கொடுக்கவேண்டும் என்றால் பொருளில்லாதவருக்கே தக்க சமயத்தில் கொடுத்ததன் பயனை எதிர்நோக்காமல் கொடுக்க வேண்டும். இதை கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்,

दातव्यमिति यद्दानं दीयतेऽनुपकारिणे ।
देशे काले च पात्रे च तद्दानं सात्त्विकं स्मृतम् ॥

*என்று கூறுகிறார்.*[148] *(எந்த தானம் ''கொடுக்கப்பட வேண்டும்'' என்ற எண்ணத்துடன் பிரதிபலனை எதிர்நோக்காமல் சரியான இடத்தில் தக்கவருக்குத் தக்க சமயத்தில் கொடுக்கப்படுகிறதோ, அந்த தானம் ஸாத்விகமாகக் கருதப்படுகிறது.)* திருவள்ளுவர்

வறியார்க்குஒன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து

*என்று ஈகையின் இலக்கணத்தைக் கூறுகிறார்.*[149] (பரிமேலழகர் உரை: *வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை*: ஒருபொருளும் இல்லாதவர்க்கு அவர் வேண்டியது ஒன்றைக் கொடுப்பதே பிறர்க்குக் கொடுத்தலாவது; *மற்று எல்லாம் குறியெதிர்ப்பை நீரது உடைத்து*: அஃது ஒழிந்த எல்லாக் கொடையும் குறியெதிர்ப்பைக் கொடுக்கும் நீர்மை உடைத்து. ஒழிந்த கொடைகளாவன வறியவர் அல்லாதார்க்கு ஒரு பயன் நோக்கிக் கொடுப்பன. குறியெதிர்ப்பையாவது அளவு குறித்து வாங்கி அது வாங்கியவாறே எதிர்கொடுப்பது. ...)

*யாருக்குக் கொடுக்க வேண்டும் என்பதை ஆசார்யாள் தமது அருளுரை ஒன்றில் நகைச்சுவை ததும்பக் கூறியுள்ளார்:*

''... கடவுள் நமக்குச் செல்வத்தை அருளியிருந்தால், நமக்குக் கிடைத்ததைக் குதிரைப் பந்தயத்திலும் செலவிடலாம் அல்லது ஆகாசத்தில் பலமுறை உல்லாசப் பயணம் சென்று செல்வத்தைத் தீர்த்துவிடலாம். ... பணமானது என்றாவது ஒரு நாள் நம்மைவிட்டு நிச்சயமாகப் போய்விடும். யாராவது நம்மிடம் இருந்து அதைப் பறித்துக் கொண்டு போனால் நாம், 'ஐயையோ பணம் போய் விட்டது' என்று புலம்புகிறோம். அதே சமயம் ஏழை மாணவன் ஒருவன் நம்மிடம் பண உதவி கேட்டு வந்து நாமும் அவனுக்குக் கொஞ்சம் பணம் கொடுக்க நேர்ந்தால் நாம் வருத்தமுறுவதில்லை. பணமானது தானம் செய்யப்பட்டு, இந்த வழியில் தான் செலவழிகிறது என்றால் நாம் மகிழ்ச்சியடைகிறோம். தானம் பெறுபவன் தனது காரியத்தை

---

[148] *பகவத் கீதை* 17.20

[149] *குறள்* 221

ஸாதித்துக் கொள்கிறான். மேலும் நமக்குப் புண்யம் கிடைக்கிறது. பணம் எப்படியாவது செலவழிந்து தான் ஆகவேண்டும் என்றாலும் தானம் செய்கையில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். மற்றவர்களுக்கும் நன்மை செய்கிறோம். ...''[150]

*இரண்டாவதாக, கொடுப்பதையும் தாராளமாகக் கொடுப்பது மிகவும் நல்லது. இதை விளக்கும் ஒரு சிறுகதையை ஆசார்யாள் கூறுவது உண்டு:*

''... எப்படிக் கொடுக்க வேண்டுமென்றால் அது விஷயமாக ஒரு கதை சொல்வதுண்டு. சாமியார் ஒருவர் ஒரு ஏழை மனிதனிடம், 'நீ தினமும் யாருக்காவது ஒரு காயைத் தானமாகக் கொடு. அதனால் உனக்குப் பெரும்புண்ணியம் உண்டாகும்' என்றாராம். அந்த ஏழையும் அவர் சொல்லியவாறே செய்து வந்தான். அவன் இறந்த பிறகு, அவன் செய்த புண்ணியத்தின் பயனாக அரச வம்சத்தில் பிறந்து காலப்போக்கில் அரசனும் ஆனான். முன்ஜன்மத்தில் செய்த தானம் அவனுக்கு எப்படியோ நினைவு இருந்ததால், அவன் தினமும் ஒரு காயைத் தானமாக அளித்து வந்தான். அரசனின் ஆயுட்காலம் முடிந்தவுடன் அவன் ஒரு பிச்சைக்காரனாகப் பிறந்தான். தன் நிலைமையை நொந்து இருந்தவன் முன்னர் அவனுக்கு உபதேசம் செய்த அதே சாமியாரைப் ஒரு நாள் பார்த்தான். அவரைப் பார்த்து, 'எனக்கு ஏன் இந்த கதி ஏற்பட்டது?' என்று கேட்டான். அதற்கு அவர், 'நீ அரசனாகப் பிறப்பதற்கு முன் ஒரு ஏழையாக இருந்தாய். அப்போது நீ தினமும் ஒரு காயைத் தானமாக அளித்துப் பெரும் புண்ணியம் சம்பாதித்தாய். அரசனாகவும் பிறந்தாய். ஆனால் அரசனான பின்னும், ஒரு காயை மட்டுமே தானமாக அளித்ததால், நீ அவ்வளவு புண்ணியம் சம்பாதிக்கவில்லை. அதனால் தான் இப்போது பிச்சைக்காரனாகப் பிறந்திருக்கிறாய்' என்றார். தன் தகுதிக்கேற்ற தானம் செய்தால் தான் புண்ணியம் உண்டாகும் என்ற உண்மை அவனுக்கு அவர் சொன்னதைக் கேட்ட பின் புரிந்தது. ...''[151]

*இல்லை என்று சொல்பவர் முகம் மலருமாறு கொடுக்க வேண்டும்;*

---

[150] எனது குருநாதர் ப.86

[151] மெய்ஞான விளக்கவுரைகள் ப. 12

*கொடுப்பவர் மனமும் அப்பொழுது தான் மகிழ்வுறும் என்று குறளும் கூறுகிறது:*[152]

இன்னாது இரக்கப் படுதல் இரத்தவர்
இன்முகம் காணும் அளவு

*(பரிமேலழகர் உரை: இரக்கப்படுதல் இன்னாது: இரத்தலேயன்றி இரக்கப்படுதலும் இனிதன்று; இரந்தவர் இன்முகம் காணும் அளவு: ஒரு பொருளை இரந்தவர் அது பெற்றதனால் இனிதாகிய அவர் முகம் காணும் அளவும்.)*

*பொருள் கொடுப்பதில் ஆசார்யாளின் தாராள மனம் பற்றி பலர் கூறியுள்ளனர். விரிவஞ்சி இங்கே ஒரு சிலவற்றை மட்டும் பதிவு செய்வோம். ஆசார்யாளின் ஔதார்யத்தைப் பற்றி ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் 2017-ம் ஆண்டில் செய்த அருளுரையில் கூறுவதைப் பார்ப்போம்:*

“... யாருக்காவது ஏதாவது உதவி பண்ணவேண்டும் என்றால் எதையும் யோசிக்காமல், ‘கொடுத்து விடு, கொடுத்து விடு’ என்று சொல்வார். ‘இல்லை, இவனுக்கு இப்போது கொடுத்தால் ...’ (என்று யாராவது நீட்டி முழக்கினால்), ‘கொடுத்துவிடு அப்பா. கஷ்டத்தில் இருக்கிறான். இப்போது அவனுக்கு ஸஹாயம் பண்ணாமல் வேறு எப்பொழுது பண்ணுவது? கஷ்டத்தில் இருக்கிறவனுக்கு ஸஹாயம் பண்ணுவது தான் உதவி. பசியுள்ளவனுக்கு சாப்பாடு போட்டால், அது பயன் அளிக்கும். வயிறு நிறைந்தவனுக்குச் சாப்பாடு எதற்கு? கஷ்டத்தில் இருப்பவனுக்கு நாம் யோசிக்காமல் உதவி பண்ணவேண்டும் என்கிற ஔதார்யம் அந்த மஹானிடம் இருந்தது. ...”

*வறியவர்க்குக் கொடுக்க வேண்டும் என்பதையும் தாராளமாகக் கொடுக்க வேண்டும் என்பதையும் கூறினோம். மூன்றாவதாக, கொடுப்பவரது மனப்பான்மை எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பார்ப்போம். “இல்லை” என்ற சொல்லைக் கூறுபவர் மிகவும் துயரத்துடனேயே கூறுவார்கள். பொருள் இல்லாததால் ஏற்படும் துயரம், “இல்லை” என்று இன்னொருவரிடம் கூறுவதனால் மிகைப்படுகிறது.*

[152] குறள் 224

*அப்படித் துயரப்படுபவர்கள் உள்ளம் குறுகாதவாறு தருவதே ஈகை:*

**இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்**
**குலனுடையான் கண்ணே உள**

*என்று குறள் கூறுகிறது.*[153] *(பரிமேலழகர் உரை: இலன் என்னும் எவ்வம் உரையாமை: யான் வறியன் என்று இரப்பான் சொல்லும் இளிவரவைத் தான் பிறர்கண் சொல்லாமையும் ஈதல்: அதனைத் தன்கண் சொன்னார்க்கு மாற்றாது ஈதலும் உள குலன் உடையான் கண்ணே: இவை இரண்டும் உளவாவன குடிப்பிறந்தான் கண்ணே. ... எவ்வம், இளிவரவு – துயரச்சொல்)*

*அதாவது இல்லாதவன் கூறும் துயரச் சொற்களைப் பொருள் கொடுப்பவன் இன்னொருவரிடம் கூறாமல் தானம் செய்ய வேண்டும் என்று பொருள். "வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியக் கூடாது" என்று வழக்கிலும் உண்டு. மேலும் இக்குறளின் முதல் அடிக்குத் "தான் பொருள் இல்லாதவன் என்ற துயரச் சொல்லை (இல்லாதவன்) சொல்வதற்கு முன்னரே கொடுப்பது தான் ஈகை" என்றும் பொருள் கூறலாம்.*

*தானத்தின் இம்மூன்று பரிணாமங்கள் – அதாவது, தக்கவருக்குக் கொடுக்க வேண்டும், தாராளமாகக் கொடுக்க வேண்டும், வாங்குபவர் மனம் குன்றாதவாறு கொடுக்க வேண்டும் என்ற மூன்றும் - ஈகைக்கும் பெருந்தன்மைக்கும் உள்ள தொடர்பை விளக்குகின்றன. ஒரு பொருளைத் தானம் செய்பவனுள் "இப்பொருள் என்னுடையது" என்ற எண்ணம் வலுவாக இருந்தால் பொதுவாக அவன் தாராளமாகக் கொடுக்க மாட்டான்; காரணமில்லாமல் தன்னுடைய பொருளை இன்னொருவனுக்குக் கொடுக்கிறோமே என்ற எண்ணம் அவனுள் ஓங்கி நிற்கும். அதே போல், "நான் கொடுக்கிறேன்" என்ற எண்ணமுள்ளவன் வாங்குபவனின் மனநிலை பற்றிச் சற்றும் சிந்திக்க மாட்டான். அவனைப் பொறுத்த மட்டில் தானம் செய்வது என்பது முழுவதும் அவனைப் பற்றிய செயலே. "இது என்னுடையது", "நான் கொடுக்கிறேன்" என்ற எண்ணங்களைத் தவிர்த்துக் கொடுப்பதே சிறந்த தானம். அதாவது, "நான் (அஹங்காரம்)", "எனது (மமகாரம்)" என்ற இரண்டும்*

[153] குறள் 223

*இல்லாதவர் கொடுப்பதே சிறந்த தானமாகும். அப்பேற்பட்டவர் ஒரு பொருளைக் கொடுக்கும் போது தன்னை முன்னிறுத்திக் கொடுப்பதில்லை. அவருடைய செயல் தானத்தின் பெருமையை மட்டுமே முன்னிறுத்துகிறது. இதுவே தானத்திற்கும் பெருந்தன்மைக்கும் உள்ள தொடர்பு. ஆசார்யாளின் ஔதார்யத்தைப் பற்றிப் படிக்கும் பொழுது தானம், பெருந்தன்மை, மேன்மை ஆகிய மூன்று குணங்களுக்கும் உள்ள தொடர்பு நன்கு விளங்கும். அவர் என்றும் எந்தப் பொருளையும் தன்னுடையதாகக் கருதியதில்லை. மேலும் பிறருக்கு உதவுகின்ற மனப்பான்மை அவருக்குச் சிறு வயதிலேயே அமைந்திருந்தது என்பதையும் அறிகிறோம். அதனால் கொடுக்கும் போது "இவன் நம்மைச் சார்ந்தவன்", "அவன் வேறு" என்ற வேறுபாடின்றி அவரவருடைய தேவைகளுக்கு ஏற்றவாறு தக்க சமயத்தில் உதவி செய்தார். "சிறிய மனம் கொண்டவர்கள், 'இவன் நம்மவன்', 'அவன் நம்மவன் அல்ல' என்று எண்ணுகிறார்கள். ஆனால் பெரிய மனம் படைத்தவர்களுக்கு இவ்வுலகமே ஒரு பெரிய குடும்பம்" என்ற பிரபலமான சுலோகத்தை ஆசார்யாள் தமது உபன்யாஸங்களில் கூறுவதுண்டு.[154] ஆசார்யாளின் ஔதார்யமே இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவதை அவருடைய வாழ்வில் நடந்த சில நிகழ்வுகளின் வாயிலாகப் பார்ப்போம்.*

## ஔதார்யம் - பிறருக்கு உதவி

*ஆசார்யாளின் ஔதார்யம் அவர் பொருளைத் தானமாகக் கொடுப்பதுடன் நிற்கவில்லை. அவருடைய நேரம், அவர் கற்ற கல்வி, தம்முடைய உடலால் செய்த உதவி என்று பல விதங்களில் அவருடைய தாராள மனப்பான்மை வெளிவந்தது. இவை யாவையும் அவர் தம்மையோ அல்லது தாம் வகித்த (பீடாதிபத்யம் என்கிற) பொறுப்பையோ முன்னிறுத்தாமல் செய்தது அவருடைய பெருந்தன்மைக்கும் மேன்மைக்கும் அடையாளம்.*

*இனி, நாம் மேலே கூறியவற்றை எடுத்துக்காட்டும் வகையில் ஆசார்யாளின் வாழ்வில் நடந்த சில சம்பவங்களைக் கூறுவோம். ஆசார்யாளின் வரலாற்றை எழுதிய ஸ்ரீ சுப்பரத்னம் கீழ்க்காணும் நிகழ்வைப் பதிவு செய்துள்ளார்:*

---

[154] மெய்ஞான விளக்கவுரைகள் ப. 9

“... ஆந்திர தேசத்தில் ஜகத்குரு (ஆசார்யாள்) யாத்திரை செய்து கொண்டிருந்த சமயம் ஓர் ஊரில் ஒரு ஏழை மனிதர் பாதபூஜை செய்ய ஆசையுடன் வந்தார். கையில் பணம் இல்லை. புஷ்பங்கள் மட்டும் எடுத்துக் கொண்டு வந்தார். ரூ.130 பாதபூஜைக்கு கட்டணம் கட்ட வேண்டும் என்று மடத்தில் சொன்னவுடன் வருத்தத்துடன் வீடு திரும்பிவிட்டார். அடுத்த முகாமின்போது வந்து ஆசார்யாள் தன் வீட்டுக்கு வர வேண்டும், ரூ.130 தயாராக இருக்கிறது என்றார். வீட்டுக்கு வருவதானால் ரூ.250 கட்ட வேண்டியதுண்டு என்று மடத்தார் அவரிடம் சொல்லிவிட்டார்கள். அந்த மனிதர் அவருடைய அடுத்த வீட்டில் ஆசார்யாள் வந்து பாதபூஜை நடக்கும் போது மனவருத்தத்துடன் அந்த வீட்டில் நின்று கொண்டிருந்தார். இவரைப் பார்த்து ஆசார்யாள் பக்கத்தில் வரும்படி அழைத்து முகத்தில் இருக்கும் வருத்தக் குறியின் காரணத்தைக் கேட்டார். ... (நடந்ததை அறிந்த பின்) ஆசார்யாள் உடனே தன் அந்தரங்க காரியதரிசியை அழைத்து ரு.250 மடத்தின் பணத்திலிருந்து கொண்டு வரும்படி சொன்னார். ரூபாய் கொண்டு வரப்பட்டது. ... ரூ.250ஐ (பாதபூஜை நடத்தி வைக்கும்) அவதானிகள் கைப்பையில் வைத்துக் கொள்ளச் சொன்னார். அம்மனிதரின் வீட்டுக்கு பாதபூஜைக்காக உடனே ஆசார்யாள் புறப்பட்டுப் போனார். ஆசார்யாளைத் திடீரென தன் வீட்டில் கண்ட அம்மனிதருக்கு ஆச்சர்யம் தாங்கவில்லை. பாதபூஜைக்கு ஏற்பாடாகி ஆசார்யாளும் ஆஸனத்தில் அமர்ந்தார். அந்த ஏழை மனிதரைப் பாத பூஜைக்கு உட்காரும்படி ஆசார்யாள் சொன்னார். அவர் உட்கார்ந்ததும் அவதானிகள் ரு.250ஐ எடுத்து தட்டில் வைத்தார். அவரும் மனதிற்குத் திருப்தியாக பாதபூஜை நடத்தினார். தீபாராதனை முடிந்து ஆசார்யாளை நமஸ்கரித்து எழுந்தார். உடனே ஆசார்யாள் தட்டில் பூஜையின் போது வைக்கப்பட்டிருந்த ரூ.250ஐ எடுத்து அம்மனிதரிடம் கொடுத்து ‘சௌக்கியமாக இருங்கள்’ என்று ஆசீர்வதித்து வெளியே புறப்பட்டார்.... இது போல் பாதபூஜை செய்ய வசதி இல்லாதவர்களுக்கு அவர்கள் சொல்லாமலே அவர்கள் மனதில் தோன்றும் நல்ல எண்ணங்களை உணர்ந்து அனுக்கிரஹம் செய்து இருக்கிறார்கள். ...”[155]

---

[155] *ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த விஜயம்* ப. 167-169

*ஆசார்யாளின் சிஷ்யர் ஸ்ரீ வேங்கடப்பா யக்ஞநாராயணா (பிற்காலத்தில் ஸந்யாஸம் பெற்று ஸ்ரீ ஞானானந்த தீர்த்தர் என்ற பெயரை ஏற்றவர்) அவர் பார்த்த சம்பவம் ஒன்றைக் கூறுகிறார்:*

"... ஆசார்யாள் தெனாலிக்கு விஜயம் செய்த சமயம், ஒருவர் மிகுந்த சிரத்தையுடன் அக்னிஹோத்ரம் செய்வதாகக் கேள்விப்பட்டு, அந்த வீட்டிற்குச் செல்ல முடிவெடுத்தார். ... அந்த வீடும் அக்னிஹோத்ரம் நடக்கும் இடமும் மிகவும் சிதிலடைந்த நிலைமையில் இருந்தன. அந்த வறுமையிலும் இவர் தமது தர்மத்தை விடாது கடைபிடிப்பதை ஆசார்யாள் மிகவும் பாராட்டினார். பின்னர், அந்த அக்னிஹோத்ரிக்கு ஒரு வீட்டை மடத்தின் செலவில் கட்டித் தருமாறு மடத்து அலுவலர்களுக்குக் கட்டளையிட்டார். ... ஒரு சில மாதங்களில் அந்த அக்னிஹோத்ரியும் அவ்வீட்டில் குடிபுகுந்தார். ..."[156]

*பிறருக்கு உதவி என்ற விஷயத்தில் ஆசார்யாள் எந்தப் பாகுபாடும் பார்க்கவில்லை என்று கூறினோம். அதை விளக்கும் சம்பவம் ஒன்றை இப்பொழுது கூறுவோம்:*

"... ஒரு சமயம் ஆசார்யாள் காரில் செல்லும் பொழுது, அந்நகரச் சாலை ஒன்றில் பிச்சைக்காரன் ஒருவன் சாலையில் படுத்திருப்பதைப் பார்த்தார். அவனுடைய உடல் வலிப்பு வந்தாற் போல் அவ்வப்பொழுது அசைந்தது. ஆசார்யாள் கார் ஓட்டுனரிடம் வண்டியை நிறுத்துமாறு பணித்தார். அதற்கு ஓட்டுனர், 'இப்படி நடிப்பது சில பிச்சைக்—காரர்களின் வழக்கம். அதைப் பார்த்து யாரேனும் இரக்கப்பட்டு ஏதாவது தருவார்கள்' என்றார். ஆனால் ஆசார்யாள் அதற்குச் சற்றும் மசியவில்லை. 'அவன் நடிக்கிறானோ இல்லையோ, அவனுக்கு உதவி செய்ய வேண்டும்' என்றார். ஓட்டுனரும் காரை நிறுத்தினார். அச்சமயம் பிச்சைக்காரனின் வலிப்பும் நின்றது. ஆசார்யாள் சற்றும் யோசிக்காமல் தன்னுடைய தண்ணீர்ச் சொம்பை எடுத்து அதை அந்தப் பிச்சைக்—காரனிடம் கொடுக்குமாறு கூறினார். ஆனால் அதற்குள் வேறு ஒரு காரில் வந்தவர் பிச்சைக்காரனுக்குத் தண்ணீர் கொடுத்து உதவியதால், ஆசார்யாள் கொடுத்த நீருக்குத் தேவையில்லாமல் போயிற்று. கார்

---

[156] The Multifaceted Jivanmukta *என்ற நூலிலிருந்து தமிழாக்கப்பட்டது; ப.* 374

மீண்டும் கிளம்பியவுடன் ஆசார்யாள், 'அந்த (இரண்டாவது) காரை ஓட்டியவன் மிக்க புண்ணியம் செய்தவன். உதவி செய்யும் வாய்ப்பு அவனுக்குக் கிடைத்தது; எனக்குக் கிடைக்கவில்லை' என்று கூறினார். ..."[157]

*சிருங்கேரி மடத்தில் பணியாற்றிய பலரும் ஆசார்யாள் அவர்களது நன்மையில் எடுத்துக் கொண்ட அக்கறையையும் அவர் காட்டிய அன்பையும் இன்றும் நினைவு கூர்கிறார்கள். அவர்களுள் ஒருவர் ஸீதாராம பட்டர் என்பவர்; இவர் மடத்தில் "கிலேதார்" வேலை பார்த்தவர்:*

"... ஒரு சமயம் ஆசார்யாள் ஸீதாராம பட்டரின் உடல் நலம் விசாரித்தார். அதற்கு பட்டர் தமக்கு அடி வயிற்றில் வலி ஏற்படுவதாகவும், சில சமயங்களில் அஜீரணமும் இருப்பதாகவும் கூறினார். ஆசார்யாள் அவரிடம் மேலும் சில கேள்விகள் கேட்டு அவருடைய நலமின்மைக்குக் காரணம் வயிற்றுப் புண்ணாக (gastric-ulcer) இருக்கலாம் என்று ஊகித்தார். பின்னர் ஒரு மருத்துவப் பரிசோதனைக்கும் ஏற்பாடு செய்தார். மருத்துவரும் பட்டருக்கு வயிற்றில் புண் இருப்பதை உறுதி செய்து மருந்துகள் மற்றும் உணவில் சில கட்டுப்பாடுகள் ஆகியவற்றைப் பரிந்துரைத்தார். ஆசார்யாள் எல்லா ஏற்பாடுகளையும் செய்து பட்டருக்குத் தினமும் மடத்திலிருந்து காலை ஒரு கோப்பை பால் தரப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டார். இந்த ஏற்பாடு ஸீதாராம பட்டரின் வயிற்றுப் புண் ஆறும் வரை இருந்தது. இது நடந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு நான் ஸீதாராம பட்டரைப் பேட்டி கண்ட பொழுது, அவர் ஆசார்யாளின் கருணையினால் தமது உடல் நிலை சரியானதை நன்றிப் பெருக்குடன் நினைவு கூர்ந்தார். ..."[158]

*ஆசார்யாள் மேற்கொண்ட இரண்டாவது அகில இந்திய யாத்திரையின் போது நடந்த சம்பவம் இது. அப்பொழுது அவர் ஹிமாலய மலைப் பிரதேசங்களில் சஞ்சாரம் செய்து கொண்டிருந்தார். 1982ம் ஆண்டு ஜூன் மாதம் 19ம் நாள் அவர் (காரில்) யமுனோத்ரி என்ற*

---

[157] மேலது ப. 327

[158] மேலது ப. 291-292

*இடத்திலிருந்து தேஹ்ரி நகரம் செல்லும் வழியில் நடந்த சம்பவம்:*

‘‘… அப்பொழுது அவர் சாலையோரத்தில் ஒரு கார் நிறுத்தியிருப்பதைக் கண்டார். அந்த வண்டிக்கு ஏதாவது பழுது உண்டாகியிருக்கும் என்று ஊகித்துத் தமது வண்டியை நிறுத்தச் சொன்னார். அந்த காரில் இருந்த தம்பதியினரிடம் என்ன ஆயிற்று என்று கேட்டார். கணவர் ஆசார்யாளிடம் கார் நின்று விட்டது என்றும் ஆசார்யாள் இதற்காகத் தமது பயணத்தை நிறுத்த வேண்டாம் என்றும் கூறினார். ஆனால் ஆசார்யாள் அதற்கு ஒப்பவில்லை. வண்டியைப் பரிசோதித்துப் பார்த்ததில் ஒரு பாகம் பழுதடைந்து விட்டது தெரிய வந்தது. அதிர்ஷ்டவசமாக, ஆசார்யாளுடன் பயணம் செய்யும் வாகனத் தொடரில் (convoy) உள்ள ஒரு வண்டியில் பழுதடைந்த காருக்கு வேண்டிய உறுப்பு ஒன்று உபரியாக இருந்தது. உடனே ஆசார்யாள் அதை அந்த காரில் பொருத்தும்படிச் செய்து அவ்விருவரின் சிக்கலைத் தீர்த்து வைத்தார். இருள் சூழும் நேரத்தில் ஜன நடமாட்டம் இல்லாத அவ்விடத்தில் ஆசார்யாள் அவ்வாறு உதவியிராவிடில், காரில் இருந்தவர்கள் மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாகியிருப்பார்கள். …’’[159]

*சிருங்கேரி மடத்தின் சிஷ்யர்கள் பலரும் பலவிதமான பொருட்களை ஆசார்யாளிடம் தமது காணிக்கையாகச் செலுத்துவது வழக்கம். அப்படிக் கொடுப்பவர்களில் செல்வந்தர்களும் உண்டு, சாமானியர்களும் உண்டு. ஔதார்யம் என்பது கொடுப்பதில் மட்டும் அல்ல, பொருட்களைப் பெறுவதிலும் உண்டு என்பதை விளக்கும் ஒரு சம்பவத்தைக் கீழே தருகிறோம்:*

‘‘… 1977ம் ஆண்டு ஆசார்யாள் சென்னைக்கு விஜயம் செய்த போது டிசம்பர் மாதம் 12ம் தேதியன்று கே.கே. நகரிலுள்ள வினாயகர் கோயிலுக்கு வந்தார். கோயில் இருந்த தெருவின் முனையில் அவருக்குப் பூரண கும்ப மரியாதை அளிக்கப்பட்டது. ஆசார்யாளிடம் மிகுந்த பக்தியும், மடத்துடன் நெடுநாளையத் தொடர்பும் கொண்ட ஒரு பெண்மணி அங்கே காத்திருந்தார். அவருடைய வீடும் அத்தெருவில் இருந்தது. அந்த அம்மாளுக்கு ஆசார்யாள் தம் வீட்டிற்கு வரவேண்டும் என்ற ஆசை இருந்தது. அதே சமயம், கோயிலுக்குச் செல்லும் வழியில்

[159] மேலது ப. 327-328

ஆசார்யாள் அவருடைய நிகழ்ச்சி நிரலில் இல்லாத ஒன்றைச் செய்வதற்கான வாய்ப்பும் மிகச் சிறியதே என்பதையும் அந்த அம்மாள் அறிந்திருந்தார். இருப்பினும், ஆசார்யாளிடம் தமது உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தினார். ஆசார்யாளும் அந்த அம்மாளின் வீட்டினுள் சென்று அக்குடும்பத்தினரை ஆசீர்வதித்துவிட்டு அங்கி–ருந்து வினாயகர் கோயிலுக்குச் சென்றார். பின்னர், அந்த அம்மாள் சென்னையில் ஆசார்யாள் தங்கி இருந்த இடம் சென்று அவரிடம் ஒரு சிறிய வெள்ளிக் கோப்பையில் சர்க்கரையை நிரப்பி அதைத் தமது காணிக்கையாகச் செலுத்தினார். அந்த அம்மாளின் குடும்பம் செல்வம் மிக்கதல்ல என்பது ஆசார்யாளுக்கு நன்றாகத் தெரியும். எனவே, அவர் அந்த அம்மாளிடம் வெள்ளிக் கோப்பையைக் கொடுத்ததன் காரணம் என்ன என்று கேட்டார். அதற்கு அப்பெண்மணி ஆசார்யாள் மிகுந்த கருணையுடன் தம் வீடு வந்த போது அவருக்கு எந்த காணிக்கையும் அளிக்கவில்லை; அதனால் இப்போது இந்தக் கோப்பையைத் தம் காணிக்கையாகத் தருவதாகக் கூறினார்.

ஒரு சில மாதங்களுக்குப் பின் அந்த அம்மாள் ஆசார்யாளைத் தரிசனம் செய்வதற்காக சிருங்கேரி சென்றார். அப்போது ஆசார்யாள் அங்கிருந்த பக்தர்களிடம், ‘நான் சில மாதங்களுக்கு முன் மதராஸில் உள்ள இந்த அம்மாளின் வீட்டிற்குச் சென்றேன். அப்போது இவர் ஒரு பெரிய வெள்ளி பாத்திரத்தை மடத்திற்குக் காணிக்கையாகக் கொடுத்தார்’ என்று கூறினார். தாம் கொடுத்த ஒரு சிறிய கோப்பையைப் பற்றி ஆசார்யாள் இப்படிக் கூறுவதைக் கேட்ட அப்பெண்மணி மிகவும் வியப்படைந்தார். ஒரு சில மாதங்களுக்குப் பின் அந்த அம்மாள் மீண்டும் சிருங்கேரி சென்ற போது ஆசார்யாள் அங்கிருந்த பக்தர்களிடம், ‘நான் இந்த அம்மாளின் வீட்டுக்குப் போனேன் என்பதற்காக இவர் மடத்துக்கு ஒரு பெரிய வெள்ளிப் பாத்திரம் கொடுத்தார்’ என்று தமது கைகளை அகல விரித்துக் காட்டினார். தான் பக்தியுடன் கொடுத்த சிறு காணிக்கையை ஆசார்யாள் அவ்வளவு பெரிதுபடுத்திக் கூறியதற்குக் காரணம் அவருடைய பெருந்தன்மையும் கருணையுமே என்பதை அந்த அம்மாள் உணர்ந்தார். …”[160]

---

[160] மேலது ப. 289-290

உதவி வேண்டுபவருக்குத் தக்க சமயத்தில் தகுந்த பொருளைக் கொடுப்பதில் ஆசார்யாள் காட்டிய ஔதார்யத்தை விளக்கும் சில நிகழ்வுகளைப் பார்த்தோம். பல சமயங்களில் அவர் கஷ்டத்தில் உள்ளவர்களுக்குத் தமது உடலினாலும் உதவி புரிந்திருக்கிறார். அதை எடுத்துக் காட்டும் சம்பவங்கள் சிலவற்றை இப்பொழுது கூறுவோம். இதில் ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். இந்த சம்பவங்கள் ஆசார்யாள் சிருங்கேரி மடத்தின் பீடாதிபதியான பிறகு நடந்தவை. பல சந்தர்ப்பங்களில் அவர் ஒரு ஜகத்குருவாகவும் பீடாதிபதியாகவும் யாத்திரை செய்யும் பொழுதோ வேறு ஒரு இடம் செல்லும் பொழுதோ நிகழ்ந்தவை. அம்மாதிரியான சூழ்நிலையில் ஆசார்யாள் இன்னொருவரை விட்டு உதவி செய்யுமாறு பணித்திருக்கலாம். உயர் பதவியில் உள்ளவர்கள் தமது கைப்பையைக்கூட இன்னொருவரை விட்டுத் தூக்கச் சொல்வதையும், உத்தரவிட்டவர்கள் அப்படிப் பணிவதையும் நமது நாட்டில் நாம் தினமும் பார்க்கிறோம். அதனால் ஆசார்யாள் இன்னொருவரை ஏவியிருந்தாலும் கூட அது நமது மனதில் பதிந்திருக்காது. ஆனால் ஆசார்யாள் அவ்வாறு செய்யாது தாமே உதவி செய்தது அவருடைய மேன்மையைக் காட்டுகிறது. ஏனென்றால், அவருக்கு "நான் ஒரு பெரிய பதவியை வகிக்கிறேன்" என்றோ "என் போன்றோருக்கு இச்செயல் மிகவும் கீழானது" என்ற மாதிரியான எண்ணங்களோ தோன்றியதில்லை.

"... பொதுவாக ஒருவரின் அந்தஸ்து உயரும் போது வேண்டாத பக்கவிளைவுகளும் ஏற்படுகின்றன. இதைப் பற்றி நீலகண்ட தீக்ஷிதர்,

प्रामाण्यबुद्धिः स्तोत्रेषु देवताबुद्धिरात्मनि ।
कीटबुद्धिर्मनुष्येषु नूतनायाः श्रियः फलम् ॥[161]

என்று கூறுகிறார். (தம்மைப் பற்றிய புகழ்ச்சியில் 'அது முற்றிலும் உண்மையே' என்று கருதுதல், தானே இறைவன் என்ற புத்தி, மற்ற மனிதர்களைப் புழுக்களாக நினைத்தல், இவை புதிதாக வந்த செல்வத்தின் பலன்கள்) ஆசார்யாளின் விஷயத்திலோ, அவர் வியாக்யான ஸிம்ஹாஸனத்தை அலங்கரித்த பின்பும் அவருள் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. உதாரணமாக, ஆசார்யாள் சிருங்கேரியில்

[161] கலிவிடம்பனம் 60

பிரம்மசாரியாக இருந்த காலத்தில் அவரது தோழராக இருந்த ஸ்ரீ ராமஸ்வாமி அவதானிகள், 'ஸந்யாஸம் வாங்கிய பின்பும் சரி, பீடாதிபதியான பின்பும் சரி, ஆசார்யாள் என்னுடன் எப்பொழுதும் போல் மிக சகஜமாக இருக்கிறார். சில சமயங்களில் விளையாட்டாகவும் இருப்பது உண்டு. ஒரு சமயம் யாத்திரையின் போது ஆசார்யாள் கடலில் நீராடினார். ஆசார்யாள் என்னையும் உடன்வரச் சொன்னார். எனக்குப் பயமாக இருக்கிறது, நீச்சல் தெரியாது என்று கூறி மறுத்தேன். ஆசார்யாள் நான் சொல்வதைக் கேட்காமல் என் கையைப் பிடித்துக் கடலுள் இழுத்துச் சென்றார். 'வா, நீந்தலாம்' என்று கூறி அவர் தண்ணிரில் மிதந்தார். எனக்கு உயிர் போகிற பயம். ஆனால் அவர் என் கையைப் பிடித்துக் கரையேற்றினார். ...''[162]

*1960ம் ஆண்டு ஆசார்யாள் ஆந்திர மாநிலத்தில் யாத்திரை செய்த போது நடந்த சம்பவம் இது. ஒரு நாள் அவர் காரில் பயணம் செய்யும் சமயம் சாலையில் சற்று தூரத்தில் இன்னொரு கார் பாதி கவிழ்ந்திருப்பதைக் கண்டார்:*

''... சாலையில் சென்று கொண்டிருந்த கார்கள் எதுவும் நிற்கவில்லை; அவ்வளவு ஏன், மெதுவாகக் கூடச் செல்லவில்லை. ஆசார்யாள் தமது காரை விபத்து நடந்த இடத்தின் அருகில் நிறுத்தச் சொல்லி விரைந்து விபத்து நடந்த இடத்திற்குச் சென்றார். காரினுள் இரத்தக் காயங்–களுடன் ஒருவர் அசைவற்று இருப்பதைப் பார்த்தார். விபத்து நடந்து சற்று நேரமே ஆகியிருக்கும் என்றும் உள்ளே அடிபட்டவர் மயக்கத்தில் இருக்கிறார், உயிர் பிரியவில்லை என்பதையும் ஆசார்யாள் உடனே ஊகித்தார். மடத்து சிப்பந்திகளுள் பொறுப்பான ஒருவரை மடத்தின் வாகனத் தொடரில் உள்ள வேறொரு வண்டியில் அனுப்பி உடனே ஒரு மருத்துவ ஊர்தியை (ambulance) அழைத்துவருமாறு பணித்தார். அக்காலத்தில் கைப்பேசிகள் இல்லை என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

இதற்கிடையில், விபத்தில் கவிழ்ந்திருந்த வண்டியை நிமிர்த்தினால் தான் அடிபட்டவரை வண்டியிலிருந்து விடுவிக்க முடியும் என்பதை

---

[162] The Multifaceted Jivanmukta *என்ற நூலிலிருந்து தமிழாக்கப்பட்டது; ப.* 333-334

ஆசார்யாள் உறுதி செய்து, அங்கிருந்த மற்றவர்களுடன் காரை நிமிர்த்துவதில் முனைந்தார். அப்பொழுது அவருக்கு வயது நாற்பது–களைத் தாண்டியிருக்கவில்லை. நன்றாக உடற்பயிற்சி செய்தி–ருந்ததால் அவருடைய தசைகள் திண்மையாகவும் வலிமையாகவும் இருந்தன. இருப்பினும் வண்டி கனமாக இருந்ததால் கடும் முயற்சிக்குப் பின்னரே வண்டியை நிமிர்த்த முடிந்தது. பின், ஆசார்யாள் அடிபட்டவரைக் கவனத்துடன் பரிசோதனை செய்து, மருத்துவ ஊர்தி வருமுன் அவரை வண்டியிலிருந்து விடுவிப்பதால் எந்தத் தீங்கும் நேராது என்பதை உறுதி செய்து கொண்டார். அங்கே கைக்ககப்பட்ட பொருட்களை வைத்து தூக்குப் படுக்கை போன்ற ஒன்றைச் செய்து அடிபட்டவரை மடத்து வாகனத் தொடரில் இருந்த ஒரு வசதியான வண்டியில் ஏற்றினார். அதன் பின்னர், அவ்வண்டியை மருத்துவ ஊர்தி வரவிருக்கும் திசையை நோக்கிச் செலுத்தச் சொன்னார்.

ஆசார்யாள் இப்படிச் செய்ததால் அம்மனிதருக்கு விரைவில் மருத்துவ சிகிச்சை கிடைத்தது. அம்மனிதரும் உயிர் தப்பி சிறிது காலத்தில் குணமடைந்தார். ...''[163]

*இங்கே நாம் கவனிக்க வேண்டிய விஷயங்கள் பல. முதலாவதாக, விபத்து நடந்திருக்கிறது என்பதைப் பார்த்த ஆசார்யாள் எல்லோரைப் போலவும் "யாராவது போலீசுக்குத் தகவல் சொல்வார்கள்" என்ற எண்ணத்துடன் நிற்காமல் சென்றிருக்கலாம். நம்முள் பலரும் இதைத் தான் செய்திருப்போம். வண்டியை நிறுத்திய பின், கவிழ்ந்த காரை நிமிர்த்த வேண்டும் என்று தெரிந்தவுடன் மற்றவர்களுக்கு அந்த வேலையைக் கொடுத்துத் தான் தமது வண்டியில் ஏறி "போகிற வழியில் ஒரு மருத்துவ மனை கண்ணில் பட்டால் நான் ஒரு மருத்துவ ஊர்தியை இங்கே அனுப்பச் சொல்கிறேன். நீங்கள் போலீஸ் வரும் வரையில் இங்கே காத்திருங்கள்" என்று கூறியிருக்கலாம். பொதுவாக யாத்திரை சமயத்தில் ஆசார்யாளின் நிகழ்ச்சி நிரல் கால நஷ்டத்திற்கு இடம் கொடுக்காது. எனவே அவர் அப்படி கூறியிருந்தாலும் யாரும் அவரைத் தவறாக எண்ணியிருக்க மாட்டார்கள். அவரே அந்த இடத்தில் நிற்பது என்று தீர்மானம் செய்தாலும் தமது மேற்பார்வையில் மற்றவரை*

[163] The Multifaceted Jivanmukta என்ற நூலிலிருந்து தமிழாக்கப்பட்டது; ப. 330-331

*வண்டியை நிமிர்த்தும் பணியில் ஈடுபடுத்தியிருக்கலாம்; "இரத்தமாக இருக்கிறது, மடி கலைந்து விடும்" என்று கூறியிருக்கலாம். ஆனால் இவை எதையும் செய்யாமல் தமது பதவி (பழைமையில் ஊறிய ஒரு மேன்மையான பீடத்தின் அதிபதி), தகுதி (பண்டிதர்கள் போற்றும் கல்வியறிவு பெற்றவர், எல்லோராலும் வணங்கப் படுபவர்) முதலிய எவற்றையும் கருதாமல் தானே முனைந்து இச்செயலில் ஈடுபட்டது ஆசார்யாளின் தாராள குணத்தையும் பெருந்தன்மையையும் காட்டு-கிறது.*

*மேலும் எந்த ஒரு மனிதனும் எந்த விதமான கஷ்டத்தில் இருந்தாலும் தமது உடலால் இயன்ற உதவியைச் செய்வதில் ஆசார்யாள் எவ்விதத் தயக்கமும் காட்டியதில்லை. இதைக் கீழே நாம் கூறும் நிகழ்விலிருந்து தெரிந்து கொள்ளலாம்:*

"**...** மலநாடு வேங்கடேசர் என்பவர் ஆசார்யாளின் அந்தரங்கப் பணியாளர். ஒரு நாள் இரவு நேரத்தில் கொசுத் தொல்லையினால் துன்புற்ற வேங்கடேசருக்கு உறக்கம் வரவில்லை; கடைசியில் களைப்புற்று உறக்கத்தில் ஆழ்ந்தார். ஆசார்யாள் அதிகாலையிலேயே எழும் பழக்கம் உடையவராதலால், பணியாளர் எழும் முன் தான் துயிலெழுந்தார். வேங்கடேசரைச் சுற்றிக் கொசுக்கள் படையெடுத்–திருப்பதைக் கண்டார். உடனே அவர் அருகில் சென்று தமது கைக்குட்டையால் மெதுவாக விசிறிக் கொசுக்களை அப்புறப் படுத்தினார். அதனால் அங்கு வீசிய மென்காற்றினால் வேங்கடேசரின் உறக்கம் கலைந்தது. அவருடைய உறக்கம் கலைவதைக் கண்ட ஆசார்யாள் மெதுவாக அவ்விடத்தை விட்டு நீங்கினார். அவர் நடந்து செல்வதைக் கண்ட வேங்கடேசர் ஆசார்யாளே தமக்கு விசிறினார் என்பதை ஒரு சில கணங்களுக்குப் பிறகு புரிந்து கொண்டார். **...**"[164]

*இதில் நாம் கருத்தில் கொள்ள வேண்டிய விஷயம் ஒன்று உள்ளது. நம்மிடம் பணி செய்பவர்களுக்கு உதவி செய்வது என்பது நம்முள் பலரும் செய்யும் ஒன்று தான். ஆனால் பொதுவாக, அவ்வாறு செய்யப்படும் உதவியிலும் நமக்கும் நாம் பணியில் அமர்த்திய-வருக்கும் உள்ள உறவு முறையைப் பற்றி யோசித்தே நாம் உதவி*

---

[164] மேலது ப. 292-293

செய்ய முற்படுவோம். ‘‘இப்படிச் செய்தால் இவன் நம் தலையில் ஏறி உட்கார்ந்து விடுவான்’’ என்று சில சமயங்களில் நாம் உதவி செய்வதைத் தவிர்க்கிறோம். அதாவது, செய்யப்படும் உதவி எத்தகையது என்பதைத் தீர்மானிப்பது நாம் வகிக்கும் பதவிக்கும் நம் பணியாளரின் அந்தஸ்துக்கும் உள்ள இடைவெளி. ஆனால் ஆசார்யாள் இந்த விஷயத்தைக் கருத்தில் கொண்டதாகத் தெரியவில்லை. ஒருவருக்கு உதவி தேவைப்படும் போது அது யாராக இருந்தாலும், எத்தகைய உதவியாக இருந்தாலும் தம்மால் இயன்றதை அந்த சமயத்தில் செய்வதில் அவர் தயங்கவில்லை. அவருடைய பதவி முதலியவை அந்த சமயத்தில் எந்தப் பங்கும் வகிக்கவில்லை என்பதை நாம் மேலே கூறிய இரண்டு நிகழ்வுகளிலிருந்து அறியலாம். இது போல் பல நிகழ்வுகள் ஆசார்யாளின் வரலாற்றில் பதிவு செய்யப்பட்-டுள்ளன. விரிவஞ்சி அவை எல்லாவற்றையும் இங்கே கூற முற்படவில்லை.

பொருளுதவி மற்றும் பிறர்க்குத் தம் உடலினால் உதவி ஆகிய இரண்டிலும் ஆசார்யாள் காட்டிய தாராள மனப்பான்மையை இதுவரை பார்த்தோம். இந்த இரண்டைப் பற்றிப் பேசும் பொழுது ‘‘பீடாதிபதி’’ என்கிற ஆளுமையே நம் கண்ணோட்டத்தில் முக்கியமாக இருந்தது. இனி ‘‘ஆன்மிக குரு’’ என்ற ஆளுமையில் ஆசார்யாள் வெளிப்படுத்திய ஔதார்யத்தைப் பற்றிப் பேசுவோம். இதற்குப் பின்புலமாக ஓரிரண்டு விஷயங்களைக் கூற வேண்டும். சிருங்கேரியைப் போன்ற பெரிய பீடத்தின் தலைமையில் இருப்பவருக்குப் பல கட்டாயங்கள் உண்டு. அதனால் தம்மைத் தரிசிக்க வருபவர்களுக்காக நேரம் ஒதுக்குவது என்பது சில சமயங்களில் கடினமாக இருக்கும். இதனால் அவரது செயல்வரிசை தவறி நேரம் கழித்து உறங்குதல், உண்ணுதல் போன்றவை நேரும் பொழுது அதை ஆசார்யாள் பொருட்படுத்த-வில்லை என்று அவருடைய சிஷ்யர்களும் ஆசார்யாளின் அந்தரங்கப் பணியாளர்களும் கூறுகின்றனர். அம்மாதிரியான சம்பவங்கள் சிலவற்றை இப்பொழுது பார்ப்போம்:

‘‘**...** இன்னொரு சமயத்தில், வட இந்தியாவிலிருந்து மூன்று பிரம்மசாரிகள் சிருங்கேரி வந்தனர்**.** அவர்கள் ஆசார்யாளைத் தரிசித்து தங்களது ஆன்மிக நெறியில் அவரது வழிகாட்டுதலையும் ஆன்மிக

வளர்ச்சிக்கு அவருடைய ஆசிர்வாதத்தையும் நாடினர். அவர்கள் நரஸிம்ஹவனம் வந்து சேரும் போது மாலை 6:40 மணி ஆகியிருந்தது. மாலையில் ஆசார்யாள் பக்தர்களுக்குத் தரிசனம் கொடுக்கும் நேரம் முடிந்து விட்டது. அவர் நீராடுவதற்குச் செல்ல ஒரு சில நிமிஷங்களே இருந்தன. எனவே அவரது அந்தரங்கப் பணியாளர் இந்த மூன்று பிரம்மசாரிகள் வந்ததை ஆசார்யாளிடம் தெரிவிக்க விரும்பவில்லை. ஆனால் ஆசார்யாள் பணியாளரை, 'தரிசனத்திற்காக இப்பொழுது யாரேனும் வந்திருக்கிறார்களா?' என்று மிகக் குறிப்பாகக் கேட்டார். வேறு வழியின்றிப் பணியாளாரும் 'ஆம்' என்று கூறவே, 'அவர்களை உள்ளே வரச் சொல்' என்று ஆசார்யாள் கட்டளையிட்டார். அதன்படி, அம்மூன்று பிரம்மசாரிகளும் மாடியேறி ஆசார்யாள் இருக்குமிடம் வந்து அவரை நமஸ்கரித்தனர். அவர் அவர்களை அமருமாறு செய்கை செய்தார். ஆசார்யாள் அவர்களிடம் ஹிந்தியில் அவர்கள் எங்கிருந்து வருகிறார்கள், வந்ததன் நோக்கம் என்ன என்று கேட்டார். அதற்கு அவர்கள் தாம் ஆன்மிகப் பாதையில் முன்னேற விரும்புவதாகக் கூறித் தமது கேள்விகளை விநயத்துடன் தெரிவித்தனர். அவர்களுடைய கேள்விகளுக்கு ஆசார்யாள் மிக ஊக்கமாகப் பதில் சொல்லத் துவங்கினார். ஆசார்யாள் விரிவாக விடையளிக்க முற்பட்டதால், முதல் முக்கியமான கேள்விக்கு விடை வரும் பொழுது மணி 7:15 ஆகியிருந்தது. இரவில் சாதாரணமாக ஆசார்யாள் நீராடித் தமது ஆஹ்னிகத்தை முடித்து 8 மணி அளவில் சந்திரமௌலீச்வரர் பூஜையைத் துவங்குவது வழக்கம். எனவே, ஆசார்யாளின் பணியாளர் அறைக்குள் வந்து மணி என்ன ஆகிறது என்பதைத் தெரிவித்தார். ஆனால் அவர் வந்து குறுக்கிட்டதை ஆசார்யாள் கவனித்ததாகவே தெரியவில்லை. ஆசார்யாளும் வந்திருந்த மூவரும் அந்த ஆன்மிக வினா—விடை அமர்வில் முழு கவனத்துடன் இருந்தனர். 8 மணியளவில் பணியாளர் மீண்டும் வந்தார். அவருக்குப் பதிலாகக் கிடைத்தது ஆசார்யாளின் கையசைவே! எல்லா வினாக்களுக்கும் விடை கூறி முடிப்பதற்குள் இரவு மணி 9 ஆகிவிட்டது. அதன் பின் ஆசார்யாள் அவர்களுக்குத் தமது முழுமையான ஆசிகளைக் கூறி பிரசாதமும் கொடுத்தார். வந்த மூவரின் மகிழ்ச்சி அவர்களுடைய

முகங்களில் பிரதிபலித்தது.[165] ஆசார்யாளிடம் தங்களது நன்றிகளையும் வந்தனங்களையும் தெரிவித்து நிறைந்த உள்ளங்களில் பிரகாசிக்கும் ஆன்மிகச் சுடருடனும் இனிய நினைவுகளுடனும் திரும்பினர்.

இந்தக் கலந்துரையாடல் நடக்கும் போது நானும் உடனிருந்தேன். நடுவில் என் பக்கம் திரும்பி ஆசார்யாள், ‘இவர்களுக்கு என்ன சிரத்தை! நான் ஸ்நானம் செய்வதற்கு எவ்வளவு கால தாமதம் ஆனாலும் பரவாயில்லை. இவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பது தான் சரி’ என்று கூறினார். ...

ஒரு நாள், ஆசார்யாளின் உடல் நலம் சரியாக இல்லை. அதனால் எல்லோருக்கும் தரிசனம் செய்யும் வாய்ப்பு கிடைக்கவில்லை. சுமார் இருபது வயதுள்ள ஆன்மிக சாதகர் ஒருவர் ஆசார்யாளைத் தரிசிப்பதற்கு நீண்ட தூரத்திலிருந்து வந்திருந்தார். அவர் அடுத்த நாள் சிருங்கேரியிலிருந்து கிளம்புவதாக இருந்தது. இதை நான் ஆசார்யாளிடம் தெரிவித்த போது, அவரை உள்ளே கூப்பிடுமாறு என்னிடம் சொன்னார். ஆசார்யாள் தமது உடல் நலமின்மையைப் பொருட்படுத்தாது அந்த இளைஞர் கூறியதைப் பொறுமையாகக் கேட்ட பின், ஆன்மிக நெறியில் பயனுள்ளதான சில அரியவற்றைக் கூறினார். ...’’[166]

*சிருங்கேரியில் விசேஷ தினங்களில் நடத்தப்பட வேண்டிய - ஆன்மிக நெறியில் செல்ல விழைகிறவர்களுக்கு ஆசார்யாள் எப்படியாவது நேரத்தை ஒதுக்கி அவர்களுக்கு உதவுவார் என்பதைக் காட்டும் ஒரு நிகழ்வு இது:*

“... 1974ம் ஆண்டு நவம்பர் மாதம் 11ம் நாள் நடக்கவிருந்த சிஷ்ய ஸ்வீகாரம் நிகழ்ச்சிகளினால் அம்மாதம், ஆசார்யாளின் வேலைப் பளு மிகவும் அதிகமாக இருந்தது. அச்சமயம் இத்தாலி நாட்டிலிருந்து ஒருவர் ஆசார்யாளைத் தரிசிக்க வந்தார். கௌடபாத ஆசார்யர் இயற்றிய மாண்டுக்ய காரிகையில் தமக்கிருந்த ஐயங்களை ஆசார்யா–ளிடம் கூறி அவற்றைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற

[165] குறள் 224 இப்புத்தகத்தின் 134வது பக்கத்தைப் பார்க்கவும்
[166] The Multifaceted Jivanmukta என்ற நூலிலிருந்து தமிழாக்கப்பட்டது ப. 308-309

நோக்கத்துடன் சிருங்கேரி வந்திருந்தார். அந்தச் சூழ்நிலையில் இவருக்காக ஆசார்யாள் பிரத்யேகமாக நேரம் ஒதுக்க முடியாது என்று எல்லோரும் நினைத்தனர். எனினும் இவர் ஆசார்யாளிடம் தமது விருப்பத்தைத் தெரிவித்தவுடன் ஆசார்யாள் உடனே ‘சரி’ என்று கூறினார். ஸ்ரீ ஸுப்பராமையா அவர்களை அந்த உரையாடலை மொழிபெயர்க்குமாறு கூறி வந்தவருடைய ஐயங்களைத் தீர்த்து வைத்தார். பின்னர் அதைப் பற்றி ஒருவர் ஆசார்யாளிடம் கேட்ட போது, ‘அவருக்கு சிரத்தை இருந்தது. கற்க வேண்டும் என்பதற்காக வெளி நாட்டிலிருந்து வந்துள்ளார். அவருக்காக நேரம் ஒதுக்குவதும் அவருடைய ஐயங்களைத் தீர்ப்பதும் என்னுடைய கடமை’ என்று கூறினார். …”[167]

*தம்மிடம் வைத்துள்ள அன்பினால் தம்மைத் தரிசிக்க வருபவருக்கு நேரம் ஒதுக்குவதிலும் அவர்களுக்குப் பல விதங்களில் அருள் புரிவதிலும் ஆசார்யாளுடைய ஔதார்யத்தைக் காணலாம். கீழே நாம் பதிவு செய்யும் இரு நிகழ்வுகளில் முதலாவது வட இந்தியாவிலிருந்து வந்த ஒரு பெண்மணி பற்றியது:*

“… ஒரு சமயம், வட இந்தியாவிலிருந்து ஓர் ஏழைப் பெண்மணி ஆசார்யாளைத் தரிசனம் செய்யும் நோக்கத்துடன் சிருங்கேரி வந்திருந்தார். சிருங்கேரி பயணத்திற்காக அவர் பல காலம் பணம் சேமித்து வைத்திருந்தார். அதனால் அவர் சிருங்கேரியில் சில நாட்களே தங்க முடிந்தது; தவிரவும் மீண்டும் எப்பொழுது சிருங்கேரி வரமுடியும் என்று சொல்வதற்கும் இல்லை. இதை அறிந்த ஆசார்யாள் அப்பெண்மணி சிருங்கேரியில் இருந்த வரை தாம் மாலையில் தரிசனம் கொடுக்கும் நேரத்தை நீட்டித்தார். ஸச்சிதானந்த விலாஸத்தில் உள்ள முன்னறையில் தரையில் அமர்ந்திருப்பார். அதனால் பக்தர்கள் அவரை மிக அருகில் பார்க்க முடிந்தது. அந்தப் பெண்மணி சிருங்கேரியில் இருந்த எல்லா நாட்களும் மாலை தரிசனத்திற்கு ஆசார்யாள் வரும் சமயத்திலிருந்து அவர் எழுந்து உள்ளே செல்லும் வரையில் அங்கேயே இருந்து கைகளைக் கூப்பியவாறு ஆசார்யாளைப் பார்த்து அமர்ந்–திருப்பார்; அவ்வப்பொழுது கண்களிலிருந்து வழியும் ஆனந்தக்

---

[167] மேலது ப. 307-308

கண்ணீரைத் துடைப்பார். இரண்டு நாட்கள் மட்டுமே அவர் ஆசார்யாளிடம் சென்று பேசினார்; அதுவும் சில கணங்களுக்கே. மற்ற நேரம் முழுவதும் ஆசார்யாளைப் பார்ப்பதிலேயே திருப்தி கொண்டார். தரிசனம் கொடுக்கும் நேரத்தின் கால அளவை எதற்காக நீட்டித்தோம், ஏன் மிகவும் சகஜமாக முன்னறையில் அமர்ந்திருக்கிறோம் என்று ஆசார்யாள் வேறு யாருக்கும் கூறாததால் அப்பெண்மணி இது தான் எப்பொழுதும் இருக்கும் நடைமுறை என்று எண்ணியிருக்கலாம். அப்பெண்மணி சிருங்கேரி வந்ததால் பல பக்தர்கள் ஆசார்யாளை விசேஷமாக தரிசிக்க முடிந்தது. ...''[168]

*இரண்டாவது நிகழ்வு பரம்பரையாக சிருங்கேரி ஆசார்யர்களின் சிஷ்யர்களாக இருக்கும் குடும்பத்தைச் சேர்ந்த ஸ்ரீ முத்துசுந்தரம் கூறியது:*

''... 1963ம் ஆண்டு பரமாசார்யாள் ஜகத்குரு ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளின் அதிஷ்டானத்தின் கும்பாபிஷேகம் நடைபெற்ற சமயம் நான் சிருங்கேரி சென்றிருந்தேன். ஒரு வெள்ளிகிழமை, ஆசார்யாள் சாரதாம்பாளைத் தரிசனம் செய்வதற்காகக் கிளம்பினார். அவருடைய அந்தரங்கப் பணியாளர் ஒரு அழகான வெண்குடையை ஆசார்யாளுக்காகப் பிடித்து உடன் நடந்தார். அதைப் பார்த்து எனக்குள், 'அரசர்களும் வணங்கும் ஆசார்யாளுக்கு என் போன்ற சிறியவர்கள் என்ன செய்ய முடியும்?' என்ற எண்ணம் எழுந்தது. ... என் மனதில் அழகான தாமரைகளைக் கல்பித்து ஆசார்யாளின் மலரடிகளில் அவற்றை சமர்ப்பிப்பதாக மனதால் பூஜை செய்யத் துவங்கினேன். ஆசார்யாள் நரஸிம்ஹவனத்திலிருந்து கிளம்பும் பொழுது இந்த மானஸ பூஜையைத் துவங்கி அவர் எல்லா ஆலயங்–களும் சென்று மீண்டும் ஸச்சிதானந்த விலாஸம் வரும் வரையில் செய்தேன். அப்பொழுது ஆசார்யாள் என் பக்கம் திரும்பிப் புன்னகை செய்து உள்ளே நுழைந்தார்.

மாலையில் நான் ஸந்த்யாவந்தனம் செய்த பின் ஆசார்யாளது தரிசனத்திற்காகச் சென்றேன். ஆசார்யாள் என்னை தமது அறைக்குக் கூப்பிடுவதாகத் தகவல் வந்தது. நானும் உள்ளே சென்று அவரருகில்

---

[168] மேலது ப. 324-325

பணிவுடன் அமர்ந்தேன். அவர் கைகளில் சாரதாம்பாளின் உருவம் பதித்த ஒரு வெள்ளி நாணயம் இருந்தது. அவர் தம் கண்களை மூடிச் சற்று நேரம் தியானத்தில் உள்ளவர் போல் தோன்றினார். எப்பொழுதும் ஒளி வீசும் அவர் முகம் அச்சமயம் இன்னும் பன்மடங்கு ஒளி வீசியது. அதைக் கண்டு என்னுள் எழுந்த ஆனந்தத்தைச் சொற்களால் கூற இயலாது; அனுபவித்தே புரிந்து கொள்ள வேண்டும். அந்த நாண–யத்தையும் மந்த்ராக்ஷதையையும் ஆசார்யாள் எனக்குக் கொடுத்தார்.

நான் ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளின் அதிஷ்டானம் வந்து ஆசார்யாள் கொடுத்த நாணயத்தை என் பூணூலில் கோர்த்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது அங்கு இருந்த ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயர் (பிற்காலத்தில் ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள்) நான் என்ன செய்கிறேன் என்று கேட்டார். நான் விவரமாக ஏதும் கூறுவதற்கு முன் அவர், 'நீ பாத பூஜை செய்தாயா? பாத பூஜை செய்தவர்களுக்குக் கொடுக்கப்படும் நாணயம் இது' என்று கூறினார். அப்பொழுது நான் அவரிடம் நான் காலையில் செய்த மானஸ பூஜை பற்றிக் கூறினேன். அவர், 'ஆமாம், அந்த பூஜையின் பலன் தான் இது. ஆசார்யாள் ஈச்வரனுக்குச் சமானமானவர். ஆயிரக் கணக்கான மைல்கள் தொலைவில் உள்ளவர்களின் பிரார்த்தனைகளுக்குப் பலன் தருபவர் அவருடைய சமீபத்தில் செய்யப்பட்ட பூஜைக்குப் பலன் கொடுக்க மாட்டாரா? அதைத் தான் செய்திருக்கிறார்' என்றார். ...''[169]

## ஔதார்யம் - மேன்மை

*இதுவரை, ஔதார்யம் என்ற சொல் தானம், பெருந்தன்மை, மேன்மை என்ற பொருளில் வரும் என்று கூறினோம். ஆசார்யாள் செய்த பொருளுதவி, தம் உடலால் மற்றவர்க்கு உதவி, தமது சிரமத்தைப் பாராமல் சிஷ்யர்களுக்கு நேரம் ஒதுக்குதல் முதலியன தானத்திற்கும் பெருந்தன்மைக்கும் உள்ள தொடர்பை விளக்குகிறது என்பதையும் பார்த்தோம். தம்மை முன்னிறுத்தாமல் செய்யும் தானம் பெருந்-தன்மையாக மிளிர்கிறது என்பதை ஆசார்யாளின் வாழ்வில் நடந்த சில நிகழ்வுகள் வாயிலாகக் கூறினோம். இனி, எதையும் கொடுக்காமலேயே பெருந்தன்மையும் மேன்மையும் எப்படி வெளிப்படுகின்றன என்பதைப்*

---

[169] மேலது ப. 344

*பார்ப்போம். பொதுவாக மனிதர்களுக்கு இடையே நடக்கும் சமூகப் பரிமாற்றங்கள் "நான்", "பிறர்" என்கிற இரண்டின் அடிப்படையிலேயே நடக்கின்றன. இந்த இரண்டு இயல்புணர்வுகளும் பரிமாற்றங்களை இயக்குகின்றன; அதே சமயத்தில் பரிமாற்றங்களினால் இவை வலுப்பெறுகின்றன. "நான்" என்கிற இயல்பிலிருந்து விலகிப் "பிறர்" தன்மையை முக்கியமாகவோ முழுதுமாகவோ கருதிச் செயல்படுவது பெருந்தன்மை என்று கூறப்படுகிறது. உதாரணமாக, ஒருவருக்கும் இன்னொருவருக்கும் இடையே நேரும் பரிமாற்றங்களில் சில சமயங்களில் "என்னுடைய நிலைமையைக் கொஞ்சம் யோசித்துப் பார்", "என்னுடைய நிலைமையில் நீ இருந்தால் என்ன செய்வாய்?" போன்ற முறையீடுகள் செய்யபடும். அம்மாதிரியான முறையீடுகள் நேராதவாறு, தமக்கு எந்த விதமான குறைவு ஏற்பட்டாலும் பிறருடைய நிலைமையை முன்னிறுத்திச் செயல்படுவது பெருந்தன்மை என்று கூறப்படுகிறது. இதற்கு விளக்கமாக ஆசார்யாளின் யாத்திரை ஒன்றில் நடந்த இச்சம்பவத்தை முதலில் கூறுவோம்:*

"**...** (யாத்திரையின் போது) மடத்தின் கார் வண்டி ஒன்று வாகனத் தொடரிலிருந்து விலகிப் பின்தங்கிவிட்டது**.** அந்த வண்டிக்கு என்ன ஆயிற்று என்று தெரியவில்லை**.** அதே சாலையில் வரும் பிறரை விசாரித்தும் தகவல் எதுவும் கிடைக்கவில்லை**.** எனவே, ஆசார்யாள் தமது வண்டியைத் திருப்பி வந்த வழியில் செல்லுமாறு பணித்தார்**.** சிறிது நேரத்திற்குப் பிறகு அந்த வண்டி தென்பட்டது; வண்டியில் பழுது ஏற்பட்டதால் அது வழியில் நின்றுவிட்டது**.** அந்த வண்டியில் ஸ்ரீ கிரிதர சாஸ்திரி (மடத்தின் தலைமை நிர்வாகி) இருந்தார்**.** அவர் ஆசார்யாளிடம், 'நாங்கள் இந்த வண்டியைப் பழுது பார்த்த பின் வருகிறோம்**.** ஆசார்யாள் காத்திருக்க வேண்டாம்' என்றார்**.** அதற்கு ஆசார்யாள் கண்டிப்புடன் அப்படிச் செய்ய முடியாது, வண்டி பழுது பார்க்கப்படும் வரை அங்கு தான் இருப்பேன் என்றும் கூறினார்**.** வண்டி பழுது பார்க்கப் பட்ட பின், வாகனத் தொடர் அடுத்த முகாம் அடைந்தது**.** அங்கே ஆசார்யாள் கிரிதர சாஸ்திரியை அழைத்து, 'உங்கள் எல்லோரையும் விட்டு விட்டு நான் மட்டும் எப்படிச் சென்றிருக்க முடியும்**?** உங்களுக்கு என்ன ஆயிற்று என்பதையல்லவா நான் சிந்திக்க வேண்டியுருக்கும்**?**' என்று கூறினார்**. ...**[170]

[170] மேலது ப. 294

*'திருப்புகழ் அன்பர்கள்' என்ற அமைப்பை நிறுவி உலகெங்கிலும் அருணகிரிநாதர் இயற்றிய திருப்புழை இன்னிசையுடன் பரப்பிய ஸ்ரீ ராகவன் தமது நினைவு ஒன்றைப் பகிர்ந்து கொள்கிறார்:*

"... 1967ம் ஆண்டு ஆசார்யாள் கொல்கத்தா நகரம் (அந்நாளில் கல்கத்தா) விஜயம் செய்தார். ஆசார்யாள் விஜயத்தை ஏற்பாடு செய்த செயற்குழு உறுப்பினர்கள் முகாமில் காலை நேரத்தில் இசை வழிபாடு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தீர்மானித்து யாரைக் கூப்பிடலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தனர். அப்போது ஆசார்யாள் செயற்குழுத் தலைவர் ஸ்ரீ ஸுப்ரமணியம் அவர்களைக் கூப்பிட்டு, 'புது தில்லியிலிருந்து ராகவனை வரவழைத்துத் திருப்புகழ் பாட ஏற்பாடு செய்யுங்கள்' என்று கூறினார். எங்கள் குழு உறுப்பினர்கள் எல்லோ–ருக்கும் ஒரே சமயத்தில் விடுப்பு கிடைத்ததும் வியப்பாக இருந்தது. குறிப்பிட்ட நாளன்று நான் மேடையேறிப் பாடத் துவங்கினேன். ஆனால் அச்சமயம் ஆசார்யாள் அங்கில்லை; பக்தர்கள் வீடுகளில் நடக்கும் பாத பூஜைகளை ஏற்றுக் கொள்ள வெளியில் சென்றுவிட்டார் என்பதைக் கேட்டு ஏமாற்றம் அடைந்தேன். அந்த வருத்தத்துடன் பாடத் துவக்கினேன். சுமார் இரண்டு மணி நேரம் பாடினேன். கடைசித் திருப்புகழைப் பாடி முடிக்கும் சமயத்தில் ஆசார்யாள் பந்தலுள் நுழைந்தார். தமது இருக்கை சென்று அமர்ந்து பக்தர்களுக்குத் தீர்த்தப் பிரசாதம் வழங்கத் துவங்கினார். ஆசார்யாள் சொல்லி கொல்கத்தா வந்தும் அவருக்கு முன் பாடக் கொடுத்து வைக்கவில்லேயே என்ற வருத்தத்துடன் நானும் வரிசையில் நின்றேன்.

தீர்த்தம் வாங்குவதற்கு என் முறை வந்ததும், ஆசார்யாள் என்னைப் பார்த்து, 'நீ மிக நன்றாகப் பாடினாய். திருப்புகழ் கேட்க நன்றாக இருந்தது' என்றார். என்னுடைய ஏமாற்றத்தை அடக்க முடியாமல் நான் பட்டென்று, 'நான் பாடும் போது ஆசார்யாள் இங்கே இல்லையே' என்று கூறினேன். ஆசார்யாள் புன்னகைத்து, 'ஓ! நீ பாடியதை நான் கேட்கவில்லை என்று நினைக்கிறாயா?' என்றார். நான் தலை–யாட்டினேன். அவர் தொடர்ந்தார், 'திருப்புகழ் பஜனை பாதி முடிவதற்கு முன்னாலேயே நான் இங்கே வந்துவிட்டேன். நான் இந்த இடத்திற்கு உள்ளே வந்தால் உன்னுடைய பாட்டிற்கு இடைஞ்சலாக இருக்கும். ஜனங்கள் எழுந்திருப்பார்கள்; சிலர் உடனே தீர்த்தப் பிரசாதம்

வாங்குவதற்கு வரிசையாக நிற்பார்கள். அந்த அமளியில் நீ உன் பாட்டை நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கும். அதனால் தான் வாசலுக்கு வெளியே உட்கார்ந்து விட்டேன். நான் வந்துவிட்டேன் என்று யாரிடமும் சொல்ல வேண்டம் என்றும் மடத்து சிப்பந்திகளிடம் சொன்னேன். உன்னுடைய பாட்டை நான் மிகவும் ரசித்தேன். நீ பாடி முடித்தவுடன் உள்ளே நுழைந்தேன்' என்று கூறினார். அவருடைய பெருந்தன்மையையும் 'நான்' என்ற எண்ணம் கொஞ்சமும் அவரிடம் இல்லாததையும் கண்டு நான் மிகவும் வியப்படைந்தேன். ...''[171]

*மேலே நாம் குறித்த இரு நிகழ்வுகளிலும் ஆசார்யாள் (சம்பந்தப்பட்ட) மற்றவரின் நிலைமையை முன்னிறுத்தியே செயல்பட்டார் என்றும் ''நான்'' என்ற உணர்வு அவருள் ஒடுங்கியிருந்தது என்பதையும் பார்க்கிறோம். இவ்விரண்டிற்கும் உள்ள தொடர்பு என்ன என்பதைச் சற்று சிந்திக்க வேண்டும். அதாவது, ஒருவர் மற்றவரின் நலன் அல்லது மற்றவரின் நிலைமையைக் கருதியே செயல்படுகிறார் என்று வைத்துக்-கொள்வோம். அப்பேற்பட்டவருக்கு ''நான்'' என்கிற உணர்வு நலியும் என்று நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. உதாரணமாக, அரசியல்/ இயக்கத் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள் போன்றவர்கள் ''மற்றவர் நலனுக்காகவே நாங்கள் செயல்படுகிறோம்'' என்று கூறுகின்றனர். சில சமயங்களில் அது உண்மையாகவும் இருக்கிறது! இதனால், அவர்களுள் ''நான்'' என்ற இயல்புணர்வு ஒடுங்குகிறது என்று கூறமுடியாது. சொல்லப் போனால் இவர்களின் விஷயத்தில் இந்த உணர்வு அதிகமாகிறது என்பதையே நாம் உலகில் பார்க்கிறோம். இதற்கு மாறாக கர்மயோகம், பக்தி இவற்றினால் பக்குவப்பட்ட மனம் உள்ளவர் எந்தச் செயலையும் சமர்ப்பண புத்தியுடன் செய்வதால் ''நான்'' என்ற உணர்வு தானாகவே ஒடுங்குகிறது. ஆசார்யாள் போன்ற ஞானிகளின் மனதில் இந்த உணர்வு இதற்கும் மேலாக ஆத்ம ஞானத்தால் பண்படுத்தப்படுகிறது. எனவே இப்பேற்பட்டவர்கள் மற்றவர் நிலைமை கருதிச் செயல்படுவதிலும் பண்படுத்தப்பட்ட மனம் இல்லாதவர்கள் அவ்வாறு செயல்படுவதிலும் வேறுபாடுகள் உள்ளன. முக்கியமாகப் பண்படுத்தப்பட்ட மனம் உள்ளவர்களின் பெருந்தன்மை இன்னொருவரைக் கருதிச் செய்வதன் வாயிலாக மட்டும் தான் வெளிப்-*

---

[171] மேலது ப. 299

*படும் என்பது இல்லை. ‘‘நான்’’ என்ற உணர்வு இவர்களுக்குள் மிகவும் ஒடுங்கியுள்ளதால் தனிப்பட்ட முறையில் இவர்கள் செய்வதிலும் பெருந்தன்மை வெளிப்படும். இதையே உலகம் மேன்மையாகக் கருதுகிறது.*

*இதை விளக்கும் நிகழ்வு ஒன்றைக் கீழே காணலாம்:*

‘‘**...** ஒரு முறை ஆசார்யாள் பெங்களூரு நகரில் முகாமிட்டிருந்த போது, அதிகாலை வேளையில் செல்லா அன்னபூரண பிரஸாத் (ஆசார்யாளின் அந்தரங்கப் பணியாளர்களில் ஒருவர்) தான் வைத்திருந்த ஒரு சிறிய கணபதி விக்ரஹத்திற்கு தனுர் மாத பூஜை (மார்கழி மாதப் பூஜை) செய்து கொண்டிருந்தார். ஆசார்யாள் அப்பூஜை நடந்து கொண்டிருந்த அறையைத் தாண்டிச் செல்ல வேண்டியிருந்தது. பூஜை மணியின் மென்மையான ஒலியைக் கேட்டு அறைக்குள் நுழைந்தார். செல்லா பக்தியுடன் இறைவனுக்கு கற்பூர தீபம் காட்டுவதைப் பார்த்து மகிழ்ந்து அங்கேயே நின்றார். தீபாராதனை முடிந்ததும் திரும்பிப் பார்த்த செல்லா ஆசார்யாளைக் கண்டு திடுக்கிட்டார். தனது சிறிய பூஜையைக் கூட ஆசார்யாள் பார்க்கிறாரே என்று எண்ணி ஆச்சர்யப்பட்டார். **...**’’[172]

*இதில் கவனிக்க வேண்டிய விஷயங்கள் இரண்டு உள்ளன. முதலாவது, ஆசார்யாள் செல்லாவின் பூஜையைப் பார்த்தது முன்ன-வரின் சிரத்தையை மேம்படுத்துவதற்கே என்று கூற முடியாது. அப்படியாக இருந்தால் ஆசார்யாள் செல்லாவிடம், ‘‘நீ சிரத்தையாக பூஜை செய்கிறாய்; நல்லது’’ என்றவாறு ஏதாவது கூறியிருக்கலாம். ஆனால் அப்படி ஆசார்யாள் எதுவும் கூறியதாகத் தெரியவில்லை. இரண்டாவது, பூஜை நடப்பது அறிந்து ஆசார்யாள் ‘‘யாரோ செய்கிறார்கள்; நான் செய்யாத பூஜையா?’’ என்று எண்ணவில்லை. அறைக்குள் நுழைந்து கணபதியைத் தரிசித்துச் சென்றார் என்று அறிகிறோம். அப்படியாயின், ஆசார்யாள் இதைப் பக்தியினால்தானே செய்தார், பெருந்தன்மைக்கும் இதற்கும் என்ன தொடர்பு என்ற கேள்வி எழும். தொடர்பு என்னவென்றால் உண்மையான பக்தர் ‘‘நான்’’ என்ற எண்ணத்தைப் பரம்பொருளினிடத்தில் கரைத்து விடுகிறார். இதையே நாம் முன்னர் ‘‘பண்படுத்தப்பட்ட மனம்’’ என்று குறித்தோம். அப்படி*

---

[172] மேலது ப. 291

*இல்லையே, நம்முள் பலரும் சாலையில் செல்லும் வழியில் உள்ள பிள்ளையாரைப் பார்த்துக் கன்னத்தில் போட்டுக் கொள்கிறோமே என்று கேட்கலாம். அதற்கு விடை, அவ்வாறு நாம் செய்வதே நமது மனதைப் பண்படுத்துவதற்காகத் தான் என்பதாகும். அதாவது, "நான்" என்ற உணர்வு சற்றும் பண்படாத மனமுள்ளவர்கள், மனம் பண்பட முயற்சிப்பவர்கள் (ஆன்மிக நெறியில் பயணம் செய்பவர்கள்), பண்பட்ட மனம் உள்ளவர்கள் (ஜீவன்முக்தர்கள்) என்ற இம்மூன்று வகையான மனிதர்களுள் முறையே அதிகமாகவும், கொஞ்சமாகவும், மிகவும் நுண்ணியதாகவும் ஒலிக்கும். ஜீவன்முக்தர்களின் விஷயத்தில் இவர்களுடைய மனம் பண்படுத்தப்பட்டதால், அவர்களுடைய மனநிலை (மற்றவர்களுடன் பரிமாற்றங்கள் நிகழும் போது) பெருந்தன்மையாகவும், மேன்மையாகவும் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தவாறு வெளிப்படுகிறது.*

*மேலே நாம் கூறிய சம்பவத்தைப் போன்ற ஒன்றை ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் வரலாற்றிலும் காணலாம். 1927ம் ஆண்டு நடந்த ஒரு சம்பவத்தை அவருடைய பக்தரும் பின்னாளிள் ஆசார்யாளின் சிஷ்யர்களுள் ஒருவருமான களக்காடு ஸ்ரீ ராமநாராயண ஐயர் கூறுகிறார். அதைக் கீழே பதிவு செய்து இயலின் இப்பகுதியை நிறைவு செய்வோம்:*

"... திருப்புடைமருதூர் என்ற சிவ க்ஷேத்திரத்திற்கு ஸ்ரீ ஆசார்யாள் (ஜகத்குரு ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்) வந்திருப்பதாகக் கேள்விப்பட்டு அந்த ஊருக்குப் போனேன். ... அன்று கோயிலில் திருக்கல்யாண வைபவம், ஸாயரக்ஷை வீதி புறப்பாட்டிற்கு பெரிய வெள்ளி வ்ருஷபத்தில் ஸ்வாமியை வைத்து குருக்கள் அலங்காரம் பன்ணிக் கொண்டிருந்தார். ஸ்ரீ ஆசார்யாள் வ்ருஷப வாஹனத்திற்கு எதிரில் போய் நின்ற ஸமயம் குருக்கள் பகவானுக்கு ருத்ராக்ஷ மாலை அணிவித்துக் கொண்டிருந்தார். ஆகையால் ஸ்ரீ ஆசார்யாளை குருக்கள் கவனிக்கவில்லை. ஸ்ரீ ஆசார்யாள் அப்படியே நின்று கொண்டு பகவானுக்கு அலங்காரம் பண்ணுவதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

தற்செயலாகத் திரும்பின குருக்கள் தூக்கி வாரிப்போட்டு வாஹனத்திற்குப் பக்கத்தில் வந்து நின்று கொண்டார். பிறகு ஸ்ரீ ஆசார்யாள் குருக்களிடம் அன்று நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகளைக்

கேட்டார்கள். குருக்களும் பயபக்தியுடன் தெரிவித்தார். ஸ்ரீ ஆசார்யாள் சுமார் முக்கால் மணி நேரம் அலங்காரத்தைப் பார்த்துக் கொண்டி– ருந்தார்கள். பிறகு குருக்கள் கற்பூரஹாரத்தி பண்ணி ஆசார்யாளிடம் காண்பித்தார், ஸ்ரீ ஆசார்யாள் கற்பூர ஹாரத்தியைக் கண்களில் ஒற்றிக் கொண்டு விபூதியைச் சிறிதளவு தன்னுடைய நெற்றியில் தரித்துக் கொண்டார்கள். ...''[173]

## ஔதார்யம் - பரந்த மனப்பான்மை

*இறுதியாக, தர்ம சாஸ்திரங்களின் உட்பொருளை விளக்குவதிலும் தமது சிஷ்யர்களை அறநெறியில் வழிப்படுத்துவதிலும் ஆசார்யாள் காட்டிய ஔதார்யம் பற்றிப் பேசுவோம்; முக்கியமாக தர்ம சாஸ்திரங்களுக்குப் பொருள் கொள்வதில் ஆசார்யாள் காட்டிய பரந்த மனப்பான்மையையும், அதில் அவர் வெளிப்படுத்திய மதிநுட்பத்தைச் சுட்டிக்காட்டுவதும் நம் நோக்கம். மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் இது முரணுடையதாகத் தோன்றும். சாஸ்திரம் என்று ஒன்று இருக்கிறது. இதைச் செய்யலாம், அதைத் தவிர்க்க வேண்டும் என்று கூறுகிறது. இதை விளக்குவதில் மதி நுட்பத்திற்கும் ஔதார்யத்திற்கும் என்ன பங்கு என்ற கேள்வி எழுவது இயல்பு. இது சற்று நுண்ணிய விஷயமாதலால் இதற்கு முன்னுரையாகச் சில கூற வேண்டும்.*

*இன்றைக்கு தர்ம சாஸ்திரங்களைப் பற்றி நம்மிடையே பரவலாக உள்ள கருத்துகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். ஒரு சாரார், சாஸ்திரம் கூறுவதை "அப்படியே" ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறுகின்றனர்; இவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் ஆஸ்திகர்களாகிய இவர்களுடைய கருத்தை நாம் புறந்தள்ள முடியாது. இரண்டாவது சாரார், இதற்கு நேரெதிராக வாதிடுபவர்கள்; தர்ம சாஸ்திரங்கள் எல்லாமே தனி மனிதனின் சுதந்திரத்திற்கும், சமத்துவத்திற்கும் எதிரானவை என்று குரல் கொடுப்பவர்கள். இக்காலத்தில் தம்மை "உதாரவாதிகள்"* (liberals) *என்று தாமே கூறுபவர் இந்த கோஷ்டியைச் சேர்ந்தவர்கள். ஊடகங்களிலும், சமூக அரசியல் இயக்கங்களிலும் இவர்கள் குரல் ஓங்கியிருப்பதால் இவர்களுடைய கருத்தையும் புறந்தள்ள முடியாது. மூன்றாவது சாரார், இக்காலத்திற்கு ஏற்றவாறு புதிய தர்ம சாஸ்திரங்கள் இயற்றப்பட வேண்டும் என்று*

---

[173] ஸ்ரீ குருகிருபா விலாஸம், மூன்றாம் பாகம் 3; ப. 152-153

வாதிடுபவர். உதாரவாதிகளின் கருத்துக்கு இது ஒரு எதிர்வினை என்று கூறலாம். இவர்களுள் பலரும் தம்மை ஆஸ்திகர்களாகவே அடையாளப் படுத்திக் கொள்வதால், இவர்களுடைய கருத்தையும் நாம் மனதில் கொள்ள வேண்டியிருக்கிறது.

முதல் சாராரை எடுத்துக்கொள்வோம். சாஸ்திரம் கூறுவதை "அப்படியே" எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதிலேயே கொள்கை-யளவில் சிக்கல் உள்ளது. அதைப் புறக்கணித்தாலும், செயலளவில் இன்னும் பல சிக்கல்கள் உள்ளன. உதாரணமாக, இரண்டு ஆண்டு-களுக்கு முன் யஜுர் உபாகர்மா (ஆவணி அவிட்டம்) எப்பொழுது அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்பதில் கருத்து வேற்றுமை உண்டா-யிற்று. சாஸ்திரங்களை நன்கு படித்தவர்கள் இரண்டு கட்சிகளாகப் பிரிந்துத் தத்தம் கருத்தை சாஸ்திரத்தின் துணை கொண்டே நிலை-நிறுத்த முயன்றனர். இறுதியில் இரண்டு கட்சிகளும் வெவ்வேறு தினங்-களில் உபாகர்மா செய்த்தனர். அப்படியானால், சாஸ்திரம் வெவ்வேறு விதங்களாகப் பொருள் கூறுகிறதா என்ற கேள்வி எழுகிறது. ஒரு சில ஆயிரம் நபர்களுக்கு மட்டுமே இயைபு உடைய இந்த (உபாகர்மா) விஷயத்திலேயே இப்படி ஒரு சர்ச்சை எழும் போது, பல லட்சம் பேர்களைப் பாதிக்கும் விஷயங்களைப் பற்றிக் கூற வேண்டியதில்லை.

இரண்டாவது, உதாரவாதம் (liberalism). தர்ம சாஸ்திரங்களின் விஷயத்தில், உதாரவாதிகளின் நிலைப்பாட்டில் உள்ள தவறைச் சொல்வோம். உதாரவாதிகள் சாஸ்திரங்களை ஒரு முன்செய்யப்பட்ட கூண்டாகவும் அதைப் பின்பற்றுபவர்களை மரபு என்ற சங்கிலியால் அக்கூண்டில் பிணைக்கப்பட்ட கைதிகளாகவும் பார்க்கின்றனர். ஆனால் சாஸ்திரங்களின் விஷயத்தில் சாஸ்திரங்களுக்கும் மரபிற்கும் உட்பட்டு மனித முகவாண்மை (human agency) செயல்படுகிறது என்பதை மேலே கூறவுள்ளோம். தர்ம சாஸ்திரங்கள் காலம், தேசம், அரசாட்சி ஆகியவற்றுக்கு உட்பட்டன என்பதை அந்த சாஸ்திரங்களே தெளி-வாகக் கூறுகின்றன. பல தர்ம சாஸ்திரங்கள் இருப்பதும், அவை சில சமயங்களில் மாறுபட்ட கருத்துகளைக் கூறுவதுமே இதற்குப் போதுமான சான்றுகள்.[174]

---

[174] மேலும் விவரங்களை இந்த ஆய்வுக் கட்டுரையில் பார்க்கலாம்: Madhu Kishwar, "Codified Hindu Law: Myth and Reality", Economic and Political Weekly v. 29, No. 33 (Aug 19954) pp. 2145-2161

மூன்றாவது, காலத்திற்கு ஏற்றவாறு புதிய சாஸ்திரங்கள் இயற்றப்பட வேண்டும் என்ற கருத்து. இதில் ஆரம்பமே சிக்கல். இந்தப் புது சாஸ்திரங்களை எழுதுபவர்கள் யார், இவர்களுக்கு இந்த அதிகாரம் எப்படி வந்தது; மிக முக்கியமாக, ஆஸ்திகர்கள் எல்லோரும் இதை ஏற்றுக் கொள்வார்களா போன்ற கேள்விகள் எழுகின்றன.

இந்த சர்ச்சையில் ஒரு முக்கியமான கூறு சரியாகப் புரிந்து கொள்ளப்படுவதில்லை. அது சாஸ்திரத்திற்கும் சம்பிரதாயத்திற்கும் (அதாவது மரபிற்கும்) உள்ள மிகவும் நெருங்கிய தொடர்பு. பொதுவாக "மரபு" என்று கூறினாலே, நாம் "மாறாமல் இருப்பது" என்று புரிந்து கொள்கிறோம். ஆனால், வைதிக தர்மம் போன்ற மூச்சுள்ள மரபுகள் அப்படி இயங்குவதில்லை. மரபு என்பது இயக்கமற்றதல்ல; மாறாக, சாஸ்திரத்திற்கும், மரபின் வழிவந்தவர்கள் என்று தம்மை அடையாளப்படுத்திக் கொள்பவர்களின் செயலுக்கும் இடையே எப்பொழுதும் நிகழும் மீட்புனைவு. தேசம், காலம், வரலாற்றுக் கட்டாயம், சூழ்நிலை இவற்றுடன் தொடர்பு கொண்ட இந்த மீட்புனைவு, கட்டுப்பாடு அற்றதும் அல்ல. ஏனெனில் அந்த மரபே ஒரு சிலருக்கு மட்டுமே மீட்புனைவு செய்யும் அதிகாரத்தைத் தருகிறது. இது எப்படி நிகழ்கிறது, இதில் முக்கியமான பங்கு வகிப்பவர் யார் போன்றவற்றை நாம் ஆசார்யாளின் சொற்களைக் கொண்டே விளக்குவோம்.

"ஜகத்குரு பதிலளிக்கிறார்" என்ற நூலில் ஆசார்யாள் தர்மம் பற்றியும் தர்மத்தைக் கடைபிடிப்பது பற்றியும் பல நுணுக்கமான விஷயங்களைக் கூறியுள்ளார். அதில் சிலவற்றைப் பார்போம்:

**சிஷ்யர்:** எது தர்மம் எது அதர்மம் என்று எவ்வாறு தீர்மானம் செய்வது**?**

**ஆசார்யாள்:** சாஸ்திரங்களில் "இதைச் செய்" என்று சொன்னால் அது தர்மம் ஆகும். "இதைச் செய்ய வேண்டாம்" என்று சொன்னால் அது அதர்மமாகும். தர்மத்தை எவ்வாறு தீர்மானம் செய்ய வேண்டும் என்பதற்கு மனு,

वेदः स्मृतिः सदाचारः स्वस्य च प्रियमात्मनः ।
एतच्चतुर्विधं प्राहुः साक्षाद्धर्मस्य लक्षणम् ॥

என்று கூறுகிறார் (மனு ஸ்ம்ருதி 2.12) அனைத்து தர்மத்திற்கும் மூலம் வேதமாகும். வேதத்தை ஆதாரமாகக் கொண்டு ஸ்ம்ருதி இருப்பதால்

அதுவும் பிரமாணமாகும். இதை அனுஸரித்து வந்திருக்கும் பரம்பரை ஆசாரமும் பிரமாணமாகும். இது எல்லாவற்றையும் தவிர நம் ஆத்ம திருப்தியும் பிரமாணமாகும். இவையே எது தர்மம் எது அதர்மம் என்று தீர்மானம் செய்ய நமக்கு உதவும் பிரமாணங்கள்.[175]

*இதில் இரண்டு விஷயங்கள் கவனிக்கத் தக்கன. முதலாவது, தர்மத்தின் லக்ஷணமாக மனு சான்றோர்களின் நடத்தையைக் கூறியிருப்பது. இதற்கு ஒரு காரணம், எல்லோரும் சாஸ்திரங்களை நன்கு கற்றறிந்தவர்கள் அல்லர். எனவே, பெரும்பாலான மக்களுக்குச் சான்றோர் சென்ற வழியே லக்ஷணமாகிறது. இன்னொரு காரணமும் உண்டு; வெவ்வேறு சாஸ்திரங்கள் ஒரே விஷயத்தில் பல்வேறு விதமாக உரைக்கின்றன. மேலும், சில சமயங்களில் தர்மமாகத் தோன்றும் செயல் இன்னொரு சமயத்தில் அதர்மமாக இருக்கிறது. அதனால் சாமான்ய மனிதர்களால் தர்மத்தின் நிலைப்பாட்டை எளிதில் அறிய-முடிவதில்லை. இதை மஹாபாரதத்தில் (யக்ஷ ப்ரச்னம் சுலோகம் 98) யுதிஷ்டிரர் அழகாகக் கூறுகிறார்:*

तर्कोऽप्रतिष्ठः श्रुतयो विभिन्ना नैको ऋषिर्यस्य मतं प्रमाणम् ।
धर्मस्य तत्त्वं निहितं गुहायां महाजनो येन गतः स पन्था: ॥

*((தர்மத்தின் வழி எது என்பதில்) தர்க்கம் அறுதியில்லாதது; வேதமோ பலவாறாகக் கூறுகிறது; எந்த ஒரு ரிஷியின் கருத்தும் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை; தர்மத்தின் தத்துவம் ஒரு குகையில் பொதிந்தாற் போலுள்ளது. (எனவே) சான்றோர்கள் எவ்வழியில் சென்றனரோ, அதுவே தர்மத்தின் வழி.)*

*இரண்டாவதாக ''தன் மனதிற்குப் பிரியமானது'' என்பதையும் தர்மத்தின் லக்ஷணமாகக் கூறப்படுவதைப் பார்ப்போம். இதனால் ஒவ்வொருவரும் தம் இஷ்டம் போல் நடந்து கொள்ளலாம் என்று பொருளல்ல. அப்படியானால், வேதம், ஸ்ம்ருதி, சான்றோர்களின் நடத்தை ஆகியவற்றை லக்ஷணங்களாகக் கூற வேண்டியதில்லையே! இதற்கு முன் தனது நூலில் மனு ''மனத் திருப்தி'' என்ற சொற்றொடரை வேறு ஒரு சுலோகத்தில் (சுலோகம் 2.6) பயன்படுத்தியுள்ளார். அதற்கு*

---

[175] "ஜகத்குரு பதிலளிக்கிறார்", ப. 34-35;

*உரையாசிரியர்கள் "சான்றோர்களின் மனத் திருப்தி" என்றே பொருள் கூறுகின்றனர். தமிழ்நாட்டைச் சேர்ந்த வைத்யநாத தீக்ஷிதர் என்கிற பண்டிதர் "ஸ்ம்ருதிமுக்தாபலம்" என்ற நூலில் இதை விளக்கியி-ருக்கிறார். அதாவது, சில சமயங்களில் சான்றோருக்கும் எது தர்மத்தின் வழி என்பதில் ஐயம் ஏற்படுகிறது (இது தர்மத்தின் நுண்ணிய தன்மையைக் காட்டுகிறது); வேதம், ஸ்ம்ருதி, சான்றோரின் வழி இம்மூன்றை ஆராய்ந்து சரியான வழி தோன்றுவதில்லை. அம்மாதிரியான சூழ்நிலையில் அவர்கள் தங்கள் மனத் திருப்தியை பிரமாணமாக வைத்து எடுக்கும் முடிவு தர்மம் தான். இக்கருத்து குமாரில பட்டர் "தந்த்ர வார்த்திகம்" என்ற நூலில் எழுதியதை ஒட்டி அமைகிறது. குமாரில பட்டர், வேதங்களை நன்கு கற்றறிந்து அதில் உள்ளதே தர்மம் என்ற உறுதியும் கொண்ட சான்றோர்களின் எண்ணங்கள் ஒரு காலும் தர்மத்திற்குப் புறம்பாகச் செல்லாததால் அவர்களுடைய மனத் திருப்தி தர்ம லக்ஷணத்திற்குப் பிரமாணமாகிறது என்று கூறுகிறார். இக்கருத்தை காளிதாசர் தாம் இயற்றிய "அபிஞான சாகுந்தலம்" என்ற நாடகத்தில் (சுலோகம் 1.23) கையாண்டிருக்கிறார் என்பது குறிப்படத் தக்கது. எனவே "தன் மனதிற்குப் பிரியமானது" என்று மனு சொல்லும் போது ஒருவன் இவ்வளவையும் யோசித்தே தனக்குப் பிரியமானது தர்மமா இல்லையா என்று முடிவெடுக்கலாம்.*

*இவ்வாறு, தர்மத்தின் வழி எது என்று தீர்மானம் செய்வதில் மனித முகவாண்மையின் பங்கு சான்றோர்களின் நடத்தையின் வடிவாகவும், அவர்களுடைய மனத் திருப்தியின் வடிவாகவும் இருக்கிறது. இதைப் பற்றி ஆசார்யாள் கூறுவதைப் பார்ப்போம்:*

"**சிஷ்யர்:** பல சமயங்களில் என்ன செய்ய வேண்டும் என்பது நமக்கு நிச்சயமாகத் தெரிவதில்லை. எது சரி, எது சரியில்லை என்கிற குழப்பமும் சில தடவை ஏற்படுகிறது. இம்மாதிரிச் சூழ்நிலைகளில் என்ன செய்ய வேண்டும்?

**ஆசார்யாள்:** சில சமயங்களில் எது சரி, எது தவறு என்று தெரிந்தும் மனதில் குழப்பமாக இருக்கும். இது ஏனென்றால் கெட்ட வழி எளிதாக இருக்கும், நல்ல வழி கடினமாக இருக்கும். அதனாலேயே அவ்வித குழப்பமேற்படும். ஆனால் அச்சமயத்திலும் சரியான வழியைத் தான் கடைப்பிடிக்க வேண்டும். ... வேறு சில சமயங்களில் ஒரு வழியில்

செய்தாலும், அதற்கு மாறாகச் செய்தாலும் சாஸ்திரத்திற்கும் சம்பிரதா–யத்திற்கும் எதிராக இருக்காது. இம்மாதிரிச் சூழ்நிலைகளில் எப்படிச் செய்தாலும் தவறில்லை. (அடிக்கோட்டுக் குறி நம்முடையது) ... சாஸ்திரங்களின் விஷயத்தில் நமக்கு அறிவு இல்லாவிட்டாலும் மஹான்கள் இதுபோன்ற சூழ்நிலையில் எப்படி நடந்தார்கள் என்று கவனித்து நாமும் அது போல் நடந்து கொள்ள வேண்டும். (அடிக்கோட்டுக் குறி நம்முடையது) यथा ते तत्र वर्तेरन् । तथा तत्र वर्तेथाः என்று உபநிஷத் (தைத்திரீய உபநிஷத் 1.11.3) கூறுகிறது (சான்றோர்கள் இது போன்ற சூழ்நிலையில் எவ்வாறு நடந்து கொண்டார்களோ, அதே போல் நடந்து கொள்)''[176]

*ஆசார்யாள் மேற்கோள் காட்டும் உபநிஷத் வாக்கியம், குறிப்பாக தர்ம ஆசரணத்தில் வரும் ஐயப்பாடுகளைத் தீர்ப்பது பற்றியது. ஒரு செயலை எப்படிச் செய்ய வேண்டும் என்பது சரியாகத் தெரியவில்லை-யென்றால், சான்றோர்கள் செய்த வழியிலேயே அதை நாமும் செய்ய வேண்டும் என்று உபநிஷத் இங்கே உபதேசிக்கிறது. இதற்கு விளக்க-மாக ஸாயணர் தமது பாஷ்யத்தில் சில உதாரணங்களைக் கூறுகிறார்:*

''கர்மா இரண்டு வகைப்படும்: வேதத்தில் விதிக்கப்பட்ட அக்னி–ஹோத்ரம் போன்றவை, மற்றும் ஸ்ம்ருதியில் விதிக்கப்பட்ட ஸந்த்யா–வந்தனம் போன்றவை ... ச்ருதியில் விதிக்கப்பட்ட கர்மாவை உதார–ணமாக எடுத்துக் கொண்டால், ஓரிடத்தில் வேதம் ''சூர்யோதயத்திற்குப் பிறகு ஆஹுதி அளிக்கப்பட வேண்டும்'' என்றும் வேறொரு இடத்தில், ''சூர்யோதயத்திற்கு முன்னர் ஆஹுதி அளிக்கப்பட வேண்டும்'' என்றும் கூறுகிறது. இங்கே ஐயத்திற்கு இடம் எழலாம். ஸ்ம்ருதியில் விதிக்கப்பட்ட கர்மாவை உதாரணமாக எடுத்துக் கொண்டால், ... உபாஸிக்கப்படும் ஸந்த்யா–தேவதை ஆணா, பெண்ணா என்ற ஐயம் வருகிறது. இதைப் பற்றி சாஸ்திரங்கள் இரண்டு விதமாகவும் பேசுகின்றன. அல்லது உலக வழக்கத்தில், குடும்பத்தில் பரம்பரையாக இருக்கும் வழக்கங்களை உதாரணமாக எடுத்துக் கொண்டாலும் – மாமன் மகளைத் திருமணம் செய்து கொள்ளலாமா ... போன்ற விஷயங்களில் உள்ள முரண்பாடுகளால் சந்தேகம் வருகிறது; ...

[176] மேலது ப. 19-20

அவ்வாறு சந்தேகம் ஏற்படும் விஷயங்களில் ஒருவன் அவன் எந்தப் பிரந்தியத்தில், எந்தக் காலகட்டத்தில், எந்தக் குலத்தில் வசிக்கிறானோ அந்தந்த தேசம், காலம் மற்றும் குலம் முதலியவைகளில் இருக்கக்கூடிய அந்தணர்கள் – எவர் விருப்பு, வெறுப்பு மற்றும் கவலை முதலியவற்றி–லிருந்து விடுபட்டவர்களோ, சாஸ்திரங்களின் சரியான அர்த்தத்தைத் தீர்மானிக்கும் திறமையுள்ளவர்களோ, நித்ய மற்றும் நைமித்திக கர்மக்களைக் குறையின்றி, தீவிரமாக அனுஷ்டிப்பவர்களோ, கோபம், துரோகம், முதலியவற்றிலிருந்து விடுபட்டவர்களோ, சுயலாபத்திற்கா–கவோ புகழுக்காகவோ அல்லாமல், தர்மத்திற்காக மட்டும் செயல்–களைச் செய்கிறவர்களோ – அவர்கள் எந்த வழியில் நடக்கிறார்களோ அவன் அந்த வழியைப் பின்பற்றவேண்டும்.”[177]

*இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் எது தர்மம் என்று ஐயுறுபவன் தான் இருக்கும் தேசத்தில் உள்ள சான்றோர் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதைப் பார்த்தோ அல்லது அவர்களுடைய உபதேசத்தின்படி நடக்க வேண்டும் என்றோ வேதம் விதிக்கிறது. இந்த சான்றோர்கள் எப்படிப் பட்டவர்கள்? இவர்கள் தர்ம விசாரம் செய்வதில் சமர்த்தர்கள், பாரபட்சம் அற்றவர்கள், பரிவுடையவர்கள், தர்மத்தில் பற்று உள்ளவர்கள் என்றும் உபநிஷத் கூறுகிறது. இப்படிப்பட்டவர்களுக்கு மட்டுமே சாஸ்திரத்திற்கும் செயல்பாட்டிற்கும் இடையே நிகழும் மீட்புனைவைச் செய்யும் அதிகாரம் இருக்கிறது. இவர்கள் செய்யும் மீட்புனைவினால், சாஸ்திரத்தில் உள்ள சில விதிகளுக்குக் காலத்திற்கும் தேசத்திற்கும் ஏற்றவாறு பொருள் கொள்ளப்படுகிறது. ஒரே விஷயத்தில் பல விதமாக இருக்கும் விதிகளுள் ஒரு சில மட்டுமே நிலைக்கின்றன. அல்லது ஐயமிருக்கும் விஷயத்திற்குத் தொடர்பாக உள்ளவற்றையும் கருத்தில் கொண்டு பழைய விதிமுறைகள் வேறு தோற்றத்துடன் உருவாகின்றன. இன்னும் சில சமயங்களில் சான்றோர்களுடைய செயல்கள் மட்டுமே பிரமாணம் ஆகிறது. இதனாலேயே சாஸ்திரம், பரந்த நுண்ணிய அறிவும், தர்மத்தில் உறுதியும் உள்ளவர்களுக்கு மட்டுமே மீட்புனைவு செய்யும் அதிகாரத்தைக் கொடுக்கிறது. மேலும், இவர்கள் மரபிற்குள் இருப்பவர்கள்; எனவே இவர்கள் செய்யும் மீட்புனைவினால் மரபுச் சிதைவு ஏற்படுவதில்லை; கலாசாரத்*

[177] *தைத்திரீய ஆரண்யகம்* 7.7.11.4 *ஸாயண பாஷ்யம்*

*தொடர்ச்சியும் இருக்கிறது. தவிரவும் இவர்கள் "பரிவுடையவர்கள்" என்று குறிப்பிடப் படுகிறார்கள். இவர்களுடைய பரிவிற்குக் காரணம், தர்மம் தழைக்க வேண்டும், எல்லோரும் தர்ம வழியில் நடக்க வேண்டும் என்ற ஆசையே. கஷ்டமான சூழ்நிலையிலும் ஒருவன் தர்மத்தை கூடிய வரையில் கடைபிடிக்க வேண்டும் என்ற பரந்த மனதுடன் சாஸ்திரத்திற்குப் பொருள் கொள்கிறார்கள்.*

*ஆசார்யாளுக்கு இருந்த பரந்த சாஸ்திர அறிவையும் அவருடைய பரந்த மனப்பான்மையையும் இந்நூலில் பலவாறாகக் கூறினோம். இனி, தர்மத்தைக் கடைபிடிப்பது பற்றி அவருடைய சிஷ்யர்கள் அவ்வப்-பொழுது எழுப்பிய ஐயங்களை அவர் தீர்த்த விதத்தில் காணப்படும் அவருடைய மதி நுட்பம், ஔதார்யம், கலாசார மரபுகள் சிதையக் கூடாது என்ற விஷயத்தில் அவருக்கு இருந்த ஊக்கம் ஆகியவற்றைப் பார்ப்போம். ஆசார்யாள் இவ்வாறு செய்த தீர்வுகளை வெறும் "விதி விலக்குகள்" என்று கூறுவது அவ்வளவு பொருத்தமில்லை. தனிப்பட்ட சிலர் விஷயத்திலும், இக்காலத்திற்கே உரித்தான சில சிக்கல்களுக்கு விடை காண்பதிலும் விதிகளின் வரையறைக்கு அவர் வேறு வடிவம் கொடுத்தார் என்று கூறுவதே பொருத்தமாக இருக்கும்.*

*இக்காலத்திற்கு ஏற்றவாறு புதிய சாஸ்திரங்களை இயற்ற வேண்டுமா என்ற கேள்விக்கு ஆசார்யாள் அளிக்கும் விடையில் மேலே நாம் சொன்ன கூறுபாடுகளைக் காணலாம்:*

"**...** சாஸ்திரங்களின் விஷயத்திலும் மாறுதல் வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கக் கூடாது**.** <u>சாஸ்திரங்கள் காலத்தின் தன்மையைப் பொறுத்தே இருக்கின்றன.</u> ஆதலால் தான் அவைகளிலேயே 'எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்குச் செய்' என்று இருக்கிறது**.** <u>ஆதலால் நாமும் இப்போதிருக்கும் சூழ்நிலையில் நமக்கு எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு மேற்கொள்ள வேண்டும்.</u> **....** சாஸ்திரங்களை மாற்ற வேண்டுமென்றால் நடந்தது, நடப்பது, நடக்கப் போவது இவை மூன்றைப் பற்றியும் ஒருவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும்**. ...** நமக்கு அது போல் அறிவு இல்லாததால் சாஸ்திரங்களை மாற்றுவதற்கு நமக்குத் தகுதியில்லை**. ...**"[178] (அடிக்கோட்டுக் குறி

[178] மேலது ப. 24

நம்முடையது)

*அதாவது, தர்ம ஆசரணத்தில் சாஸ்திரங்களின் பன்மையைக் கருத்தில் கொண்டால் இன்றைய சூழ்நிலையிலும் நம்மை எதிர்நோக்கும் சிக்கல்களுக்குத் தீர்வு காண முடியும் என்பது ஆசார்யாளின் நிலைப்பாடு. இதற்காகப் புதிய சாஸ்திரங்களை இயற்ற வேண்டிய அவசியமில்லை என்று அவர் கருதினார். ஆசார்யாள் அளித்த தீர்வுகளிலும் இந்த நிலைப்பாடே அடிப்படையாக இருப்பதைப் பார்க்கலாம். மேலும், இன்றைக்கு உள்ள சமூக சூழ்நிலையில் ஆஸ்திகர்கள் முடிந்த அளவிற்கு தர்மத்தைக் கடைபிடிக்க வேண்டும் என்ற பரிவு அவருடைய தீர்வுகளில் பிரதிபலிப்பதைப் பார்க்கலாம். இதையே நாம் ஔதார்யம் என்று கூறுகிறோம்.*

*இனி, பல சாஸ்திரங்களின் துணை கொண்டும், அவற்றின் உட்-பொருளை கருத்தில் எடுத்துக் கொண்டும், தமது இயல்பான ஔதார்யத்துடன் ஆசார்யாள் பல தீர்வுகள் கண்டிருக்கிறார். இங்கே நாம் அவற்றுள் சிலவற்றை உதாரணமாகக் கூறுவோம். முதலாவதாக ஸ்ம்ருதியிலும், வேதத்திலும் விதிக்கப்பட்ட கர்மாக்களைச் செய்வது குறித்து எழுந்த சில ஐயப்பாடுகளும் அவற்றுக்கு ஆசார்யாள் அளித்த தீர்வுகளையும் பார்ப்போம். இவற்றுக்கு ஆசார்யாள் கொடுக்கும் விடைகளில் இயலுமைக்கு* (practicality) *அவர் கொடுக்கும் முக்கியத்-துவமும் வெளிப்படையாகத் தெரிகிறது. முதலில் உபநயனம், ஸந்த்யாவந்தனம் குறித்துச் சில கேள்விகள்:*

**சிஷ்யர்:** எப்போது உபநயனம் செய்ய வேண்டும்**?**

**ஆசார்யாள்: ...** பிராஹ்மணனிற்கு கர்ப்ப காலத்திலிருந்து எண்ணினால் எட்டாவது வயதில் உபநயனம் செய்ய வேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது**. ...**காலத்தைத் தள்ளிப் போடுவது உபநயன விஷயத்தில் நல்லதே இல்லை**.** ஆனால் இந்த காரணத்தினால், 'ஒருவனுக்கு அதிக வயதாகி விட்டது**.** இதுவரை பூணூல் போடவில்லை**.** அதனால் இனிமேலும் செய்ய வேண்டாம்' என்று எவரும் கருத வேண்டாம்**.**

**சிஷ்யர்:** கல்லூரி, அலுவலகம், பள்ளி முதலியவற்றிற்குப் போக வேண்டியிருப்பதால் மாத்யாஹ்னிகத்தைச் சரியான காலத்தில் செய்ய முடிவதில்லை**.** ஆசார்யாள் இதை எப்படிச் செய்ய வேண்டுமென்று

கருதுகிறார்கள்?

**ஆசார்யாள்:** காலை ஸந்த்யாவந்தனத்துடனே, மாத்யாஹ்னிகத்தையும் செய்து விடலாம். வேறு வழியில்லையென்றால் இவ்வாறு செய்யலாம்.

**சிஷ்யர்:** தொலைதூரம் ரயிலில் பயணம் செய்கையில் எப்படி ஸந்த்யாவந்தனம் செய்வது? ஸந்த்யாவந்தனம் செய்யும் பொழுது நாம் ஒரே திசையில் போய்க் கொண்டிருக்க மாட்டோமே?

**ஆசார்யாள்:** வண்டி நடுவில் நிற்குமல்லவா?

**சிஷ்யர்:** ஆம், நிற்கும்.

**ஆசார்யாள்:** நீண்ட காலம் ஒரு ரயில் நிலையத்தில் வண்டி நின்றால் அங்கு ஸந்த்யாவந்தனம் செய்யலாமே?

**சிஷ்யர்:** இம்மாதிரிப் பொருத்தமாக நிற்குமிடங்கள் இல்லாவிடில் என்ன செய்வது?

**ஆசார்யாள்:** வேறு வழி இல்லாவிட்டால் மனதாலேயே செய்து கொள்ளலாம்.

**சிஷ்யர்:** பூஜைக்கும் இதே நியமத்தை வைத்துக்கொள்ளலாமா?

**ஆசார்யாள்:** ஆம். [179]

*உபநயனம், ஸந்த்யாவந்தனம் ஆகியவை கட்டாயம் செய்யப்பட வேண்டியவை என்பதில் சாஸ்திரங்களுக்குள் வேறுபாடு இல்லை. எனவே, செய்யப்படும் நேரமும் விதமும் சாஸ்திரத்தில் சிறப்பாகக் கூறியவாறு அமையவில்லையென்றாலும், அவற்றை செய்யாமல் விடக் கூடாது என்பதில் ஆசார்யாளுக்கு இருந்த உறுதியை அறிந்து கொள்ளலாம். மேலும், சாஸ்திரங்களே நித்ய மற்றும் நைமித்திக கர்மாவின் விஷயத்தில் (அது கட்டாயம் செய்யப்பட வேண்டியது என்ற காரணத்தினால்) செய்பவருக்கு இளக்கம் அளிக்கிறது.*

*பொதுவாகக் கர்மாக்களில் அவ்வவற்றிற்குப் பிரதானமாகச் செய்ய வேண்டியது, அங்கமாகச் செய்ய வேண்டியது என்று இரு பிரிவுகள் உள்ளன. காம்ய கர்மாக்களில் பலன் ஏற்படுவதற்குப் பிரதானம்*

[179] மேலது ப. 28-30

*மட்டுமின்றி அங்கமாக உள்ளவையும் கட்டாயம் செய்யப்பட வேண்டும். நித்ய நைமித்திக கர்மாக்களில் அத்தகைய கட்டாயம் இல்லை.*[180] *இவ்விஷயத்தை ஆசார்யாள் தமது அருளுரைகளில் விளக்கியுள்ளார்:*

“**...** நித்ய கர்மாவைப் பொறுத்த வரையில், அங்கங்கள் கட்டாயமல்ல**.** அதனால் அவை புறக்கணிக்கப்படலாம் என்று பொருளல்ல**.** ஸந்த்யா–வந்தனம் நித்ய கர்மாவாதலால் அதைச் செய்ய வேண்டும்**.** ஏதோ ஒரு நாள் இந்த கர்மாவைச் சரியான நேரத்தில் செய்ய முடியவில்லை என்று வைத்துக் கொள்வோம்**.** அன்றைக்கு இரவு பத்து மணியானாலும் அதைச் செய்து தான் ஆகவேண்டும்**.** அதே போல், ஒரு பையனுக்குப் பதினாறு வயது நிரம்பும் முன், உபநயனம் செய்ய வேண்டும் என்ற விதி இருக்கிறது**.** பதினாறு வயது தாண்டினாலும் (அது வரை உபநயனம் ஆகாது இருந்தால்), அதைச் செய்து தான் ஆக வேண்டும்**.** ஆனால், காம்ய கர்மாவின் விஷயத்தில் (ஒரு குறிப்பிட்ட ஆசையைப் பூர்த்தி செய்வதற்காகச் செய்யப்படும் கர்மா) அங்கங்களும் கட்டாயம் அனுஷ்–டிக்கப்பட வேண்டும் என்று மீமாம்ஸா சாஸ்திரம் சொல்கிறது**. ...**”[181]

“**...** நம்பிக்கையை வைத்து, உனக்கு எவ்வளவு செய்வதற்கு சக்தியி–ருக்கிறதோ, அவ்வளவு செய்**.** பொதுவான விதி என்னவென்றால் ஒருவன் குளித்த பிறகு தான் ஸந்த்யா வந்தனமும், பூஜையும் செய்ய வேண்டும்**.** உனக்குக் காய்ச்சல் இருக்கிறது என்றும், குளித்தால் காய்ச்சல் அதிகமாகி ஆபத்தாகி விடும் என்று டாக்டர் சொல்கிறார் என்றும் வைத்துக் கொள்வோம்**.** அப்பொழுதும் நீ குளித்து விட்டுத் தான் ஸந்த்யாவந்தனம் செய்வாயா**?** கூடாது**.** விபூதியையோ, கோபி சந்தனத்தையோ அல்லது உன்னுடைய குல வழக்கத்தின் படி வேறு என்ன சொல்லியிருக்கிறதோ அதை இட்டுக் கொண்டால் போதும்**.** அதற்குப் பிறகு ஸந்த்யாவந்தனத்தைச் செய்யலாம்; குளிக்க வேண்டிய தேவையில்லை**. ...**”[182]

*இரண்டாவது உதாரணமாக உலக வாழ்க்கையில் பற்றின்றி, ஆன்மிக*

---

[180] *மீமாம்ஸா சூத்திரம்* 6.3.1 – 6.3.5

[181] Divine Discourses *என்ற நூலிலிருந்து தமிழாக்கப்பட்டது*; Sri Vidyatheertha Foundation, Chennai 1994;2007 p. 128

[182] *முத்தி நெறி, ப.* 71-72

*வாழ்க்கையில் தீவிரமாக ஈடுபட விரும்பும் பெண்பாலர் பற்றி ஆசார்யாளின் கருத்துகளை எடுத்துக் கொள்வோம். தர்ம சாஸ்திரங்களின்படி பெண்கள் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றும், கணவரின் தர்ம ஆசரணத்திற்கு உறுதுணையாக இருப்பதே இவர்களது முக்கிய தர்மம் என்றும் பரவலாகக் கருதப்படுகிறது. இதற்குப் பிரமாணமாக சாஸ்திர வசனங்களும் உள்ளன (உ-ம்: மனு ஸ்ம்ருதி 9.33). இனி, ஆசார்யாள் இந்த விஷயத்தைப் பற்றித் தெரிவிக்கும் கருத்தையும், அவருடைய நிலைப்பாட்டிற்கு சாஸ்திரங்களைப் பிரமாணமாகக் கூறலாம் என்பதையும் பார்ப்போம். முதலில் ஆசார்யாள் கூறுவதைக் கீழே தருகிறோம்:*

**சிஷ்யர்:** மோக்ஷத்தை மட்டுமே விருப்பமாகக் கொண்டிருந்தால், பெண்களும் திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பதை ஆசார்யாள் தவறென்று கருதுகிறார்களா?

**ஆசார்யாள்:** தீவிரமான வைராக்யமிருந்தால் பெண்களும் திருமணம் செய்து கொள்ளாமலிருந்து விடலாம். இங்கு இரண்டு விஷயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். 1. அவர்களின் மனவடக்கம், 2. சூழ்நிலை சரியாக இருக்கிறதா என்று கவனித்துக் கொள்ளுதல்.[183]

*ஆத்ம ஞானம் ஒன்றே மோக்ஷ ஸாதனம் என்பது அத்வைத மத ஸித்தாந்தம். சாஸ்திரத்தை, முக்கியமாக உபநிஷத்துகளை, முறையாக குருவிடம் கேட்டுச், சிந்தித்து அதில் கூறப்பட்ட தத்துவத்தை உறுதியாக தியானம் செய்து ஞானம் அடைய வேண்டும் என்று வேதமே கூறுகிறது. இது எவ்வாறு பெண்பாலருக்கு (அவர்களுக்கு உபநயனம் செய்யப் படாததால்) சாத்தியமாகும் என்ற கேள்வி எழுகிறது. இதற்கு ஆசார்யாள் கூறும் விடையைப் பார்ப்போம்:*

**சிஷ்யர்:** எவர்களுக்கு உபநயனம் ஆகவில்லையோ அவர்கள் உபநிஷத்துகளின் மொழி பெயர்ப்புகளையாவது படிக்கலாமா?

**ஆசார்யாள்:** ஆம், அதிலொன்றும் தவறிருப்பதாகத் தெரியவில்லை. ... (மேலும்) வேத அத்யயனம் செய்யக் கூடாதென்பதற்காக மோக்ஷ வழியில் செல்லக் கூடாது என்று பொருளில்லை. உபநிஷத்துகளில்

---

[183] ஜகத்குரு பதிலளிக்கிறார், ப. 87

உள்ள கருத்தை நாம் யோக வாசிஷ்டம், விசார ஸாகரம் போன்ற புத்தகங்களில் காணலாம். எல்லோரும் இம்மாதிரிப் புத்தகங்களைப் படித்து ஞானத்தை அவசியம் பெறலாம். எல்லோருக்கும் ஞானம் பெறத் தகுதியுண்டு. சங்கர பகவத்பாதாள் இவ்விஷயத்தைத் தீர்மானமாகக் கூறியிருக்கிறார்.[184]

*உலக வாழ்க்கையில் பற்றின்றி, ஆன்மிக வாழ்க்கையில் தீவிரமாக ஈடுபட விரும்பும் பெண்களுக்குத் திருமணம் கட்டாயமல்ல என்ற தீர்வை அளித்தாலும், ஆசார்யாள் அவர்கள் வேத அத்யயனம் செய்ய-லாம் என்று கூறவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். உபநயனம் ஆனவர்கள் மட்டுமே அத்யயனம் செய்யலாம் என்பதில் சாஸ்திரங்கள் மாற்றுக் கருத்தைக் கூறவில்லை. ஆனால் அனைவருக்கும் மோக்ஷ-மடையத் தகுதியுண்டு என்பதால், ஆசார்யாள் பெண்பாலருக்கு ஆன்மிகப் பாதையில் செல்வதற்கு உதவியாக யோக வாசிஷ்டம், விசார ஸாகரம் போன்ற புத்தகங்களை படிக்கலாம் என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார். (ஆசார்யாள் கூறியது உபநயனமாகாத பிறருக்கும் பொருந்தும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.) மரபிற்கு உள்ளிருந்து செய்யப்படும் மீட்புனைவிற்கும் வெளியிலிருந்து செய்யப்படும் மரபுச் சிதைவிற்கும் இது தான் வேறுபாடு. இனி, உலக வாழ்க்கையில் பற்றின்றி, ஆன்மிக வாழ்க்கையில் தீவிரமாக ஈடுபட விரும்பும் பெண்கள் திருமணம் செய்து கொள்ளாமல் இருக்கலாமா என்ற விஷயத்தில் சாஸ்திர அடிப்படையை ஆச்சர்யாள் வேறு ஓரிடத்தில் கூறியுள்ளார்:*

**ஆசார்யாள்:** வேதங்களில் உபநயனத்திற்கும், ஸந்யாஸம் பெறுவதற்கும் தெளிவாகக் கட்டளைகள் இருக்கின்றன. ஆனால் (யாரும்) திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற தெளிவான கட்டளையே இல்லையே! திருமணம் சம்பந்தப்பட்ட வேத மந்திரங்களைப் பார்த்த பிறகும், ஸ்ம்ருதி புத்தகங்களைப் பார்த்த பிறகும் அனுமானம் செய்து, 'வேதங்களில் திருமணம் செய்து கொள்வதற்கு அனுமதி இருக்கிறது' என்று தெரிந்து கொள்ள முடிகிறது. ... [185]

---

[184] மேலது ப. 72-73

[185] மேலது ப. 72

*வேதங்களே திருமணம் அவசியம் என்ற கட்டளை இடாத போது, இந்த விஷயத்தில் ஸ்ம்ருதி வாக்கியங்களை மட்டுமே கருத்தில் கொள்ள வேண்டியதில்லை. எனவே, வைராக்யமுள்ள பெண்பாலர் திருமணம் ஆகாமல் பற்றற்ற வாழ்வு வாழலாம் என்ற நிலைப்பாட்டிற்கு சாஸ்திரங்களின் ஆதரவும் உண்டு. ''ஜீவன்முக்தி விவேகம்'' என்ற நூலில் வித்யாரண்ய ஆசார்யர் கூறுகிறார்:*

''**...** 'ஞானத்திற்காகப் பற்றற்ற வாழ்க்கை மேற்கொள்வது' என்பது இருவகைப்படும்**.** ஒன்று மறுபிறவிக்குக் கொண்டு செல்லும் காம்ய கர்மங்கள் முதலியவற்றை மட்டும் தியாகம் செய்வது (அதாவது அப்படிப்பட்ட கர்மாக்களை மட்டும் விலக்கி வாழ்வது) இரண்டாவது ப்ரைஷமந்திரத்தை உச்சாரணம் செய்து தண்டம் முதலிய ஸந்யாஸ ஆச்ரமத்திற்கே உரித்தான சின்னங்களை தரித்துக் கொண்டு துறவற வாழ்க்கை மேற்கொள்வது என்பதாகும்**.** (இதில் முதல் வகையான) தியாகத்தைப் பற்றி தைத்திரியம் முதலிய ச்ருதிகள் இப்படிக் கூறுகின்றன: 'கர்மத்தினால் அல்ல, மக்கட் பேறால் அல்ல, செல்வத்தால் அல்ல, தியாகத்தினால் மட்டுமே சிலர் இறப்பற்ற தன்மையை அடைந்தனர்'**.** இவ்வகையான தியாகத்தில் (காம்ய கர்மங்கள் முதலியவற்றை மட்டும் தியாகம் செய்து வாழும் பற்றற்ற வாழ்க்கை முறையில்) பெண்பாலருக்கும் உரிமையுண்டு**...** ஆனால் எது தண்டம் முதலியவற்றை தரித்துக்கொள்வது முதலியவை உள்ளடங்கிய பரமஹம்ஸ ஸந்யாஸமோ**...** (இந்த ஸந்யாஸத்தில் பெண்பாலருக்கு உரிமை இல்லை**.**)[186]

*இதிலிருந்து, ஆன்மிக வாழ்க்கையில் தீவிரமாக ஈடுபட விரும்பும் பெண்கள் திருமணம் செய்து கொள்ளாமல் பற்றில்லாத வாழ்க்கையில் ஈடுபடலாம் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.*

*ஆசார்யாள் செய்த இம்மீட்புனைவுகள் (வைதிக) மரபிற்கு உள்ளிருந்து செய்யப்பட்டவை. ஆசார்யாளைப் பொறுத்த வரையில், அவர் வைதிக மரபு மட்டுமல்லாமல் அம்மரபிற்கு உட்பட்ட இன்னொரு மரபை, அதாவது சிருங்கேரி ஆசார்ய பரம்பரையைப் பற்றியும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. எந்த விஷயத்திலும் ஆசார்யாளின் தீர்வு-*

---

[186] *ஜீவன்முக்த-விவேகம், பிரமாண-பிரகரணம்*

களில் பூர்வாசார்யர்களின் கருத்துகளின் தாக்கம் கண்டிப்பாக இருக்கிறது. அதே சமயத்தில், சாஸ்திரங்களில் காணப்படும் பன்மை, பரந்த பொருள் கூறுதல் போன்ற உக்திகளினால் குறிப்பிட்ட சிலரின் நன்மைக்காகவும் அவர்களுடைய சூழ்நிலைக்குத் தகுந்தவாறும் விதிகளின் வரையறைகளுக்கு வேறு வடிவம் கொடுத்தார். இதையே நாம் மீட்புனைவு என்று கூறுகிறோம். இந்த விஷயத்தில் ஆசார்யாள் தமது பொறுப்பைப் பற்றிக் கூறுவதை மனதில் கொள்ள வேண்டும்:

"**...** நான் இந்தப் பீடத்தில் இருப்பதால் கிட்டத்தட்ட ஒரு நீதிபதியின் நிலையில் உள்ளேன். நீதிபதி, உலகிலிருக்கும் சட்டங்களின்படி தான் தீர்ப்பு கூற முடியும். அவன் தானாகவே சட்டங்களை உண்டாக்க முடியாது. அதே போல் நான் புதிதாக சாஸ்திரக் கட்டளைகளை உண்டாக்கவில்லை. ஆனால் அங்கு கூறப்பட்டு இருப்பவற்றின் அர்த்தம் தான் கூற முடியும். **...**" [187]

ஒரு நீதிபதி சட்டங்களை உண்டாக்க முடியாது என்றாலும், ஒரு தீர்ப்பு அளிக்கும் முன் அவர் பல நூறு சட்டங்களையும், முன்னோடிகளையும் கலந்தாலோசிக்கிறார். அதிலிருந்து சிலவற்றை வழக்கிற்கு ஏற்றவாறு தேர்ந்தெடுத்தும், முன்னால் கூறப்பட்ட தீர்ப்புகளின் உட்பொருள் இதுவென்று தீர்மானித்தும் தமது தீர்ப்பை அளிக்கிறார். இதில் அவருடைய முகவாண்மை நிச்சயமாக இருப்பதாலேயே இன்றும் நாம் சில நீதிபதிகளை "மாற்றம் விரும்பாதவர்கள்" என்றும் "மாற்றம் விரும்புவர்கள்" என்றும் பாகுபடுத்திக் கூறுகிறோம். ஆனால் இரண்டு வகையைச் சார்ந்தவர்களும் அந்த மரபிற்கு உட்பட்டவர்களே. அவர்களது தீர்ப்புகள் முன்னோடிகளைக் கலந்தாலோசித்தே வழங்கப்படுவதால், அவையும் மரபின் கூறுகள் ஆகின்றன; காலப் போக்கில் அவை வரவிருக்கும் தீர்ப்புகளுக்கு முன்னோடிகள் ஆகின்றன. தர்ம சாஸ்திரங்களுக்குப் பொருள் கூறுவதும் இவ்வகையைச் சார்ந்ததே. இங்கேயும், ஒரு தீர்ப்பு அளிப்பதற்குப் பரந்து விரிந்திருக்கும் சாஸ்திரங்களிலிருந்து சில சாஸ்திர விதிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன; அவற்றின் உட்பொருள் ஆராயப்படுகிறது; பூர்வாசார்யர்கள் மற்றும் சாஸ்திரங்களுக்கு உரை எழுதியவர்கள் என்ன செய்தார்கள்,

[187] ஜகத்குரு பதிலளிக்கிறார், ப. 72

கூறினார்கள் என்பது கருத்தில் கொள்ளப்படுகிறது. இறுதியாக வழங்கப்படும் தீர்ப்பு சில சமயங்களில் மரபின் கட்டமைப்பில் சில மாற்றங்களைச் செய்து புதிய முன்னோடிகளை உருவாக்குகிறது. நாம் முன்னர் கூறியவாறு, தர்ம சாஸ்திரமே ஆசார்யாள் போன்ற சிலருக்கு மட்டுமே இதைச் செய்யும் தகுதியை அளித்துள்ளது. மரபிலிருந்து வழுவாமல் மரபிற்கு மீட்புனைவு செய்வதில் ஆசார்யாள் கொண்டிருந்த நுணுக்கமான நிலைப்பாடுகள், சாஸ்திரங்களில் அவருக்கு இருந்த பரந்த அறிவையும் அவற்றின் உட்பொருளைத் தீர்மானிப்பதில் அவர் வெளிப்படுத்திய உதார குணத்தையும் காட்டுகிறது.

## வாழ்க்கையே ஔதார்யம்

ஆசார்யாளின் வாழ்க்கையே ஔதார்யத்தை அடிப்படையாகக் கொண்டது என்று கூறலாம். தமது இளம் வயதில் ஆசார்யாள் செய்த ஸமாதி யோக அப்பியாசம் பற்றியும் அதில் அவருக்கு இருந்த தேர்ச்சியைப் பற்றியும் இந்நூலில் ஆங்காங்கே கூறினோம். அவர் நினைத்திருந்தால் தமது வாழ்வில் பெரும் பங்கைத் தனிமையில் கழித்தும், ஸமாதியில் உட்கார்ந்தும் செலவிட்டிருக்கலாம். ஆனால் தம் குருவின் கட்டளைக்குப் பணிந்து பீடாதிபத்யம் என்ற பொறுப்பை வகித்தார். முப்பதைந்து ஆண்டு காலத்தின் பெரும் பங்கை சிஷ்யர்களின் நலனுக்காகவும், சாரதா பீடத்தின் வளர்ச்சிக்காகவும் கழித்தார் என்று அவர் வரலாறு கூறுகிறது. இதில் பாதி, அதாவது சுமார் பதினேழு ஆண்டுகள், அவர் யாத்திரையிலேயே கழித்தார். மொத்தம் முப்பதைந்து யாத்திரைகள் செய்தார். இதனால் அவர் பல லட்சக் கணக்கான மக்களின் உள்ளங்களைப் பல்வேறு விதங்களில் தொட்டார் என்பதே உண்மை. ஜாதி, மதம், குலம் போன்ற வேறுபாடு-களைப் பாராது தமது உடல் சோர்வுறும் வரை மக்களை அறநெறியிலும் முக்தி நெறியிலும் வழிப்படுத்துவதையே முக்கியமாகக் கருதினார். இதை எடுத்துக்காட்டும் சம்பவங்கள் சிலவற்றை இங்கே கூறுவோம்:

“**...** 1981ம் ஆண்டு ஆசார்யாள் தென்கரைக்கு விஜயம் செய்தார்**.** இரவு சந்த்ரமௌலீச்வர பூஜைக்குப் பின், முதலாவது மாடியில் உள்ள தமது அறைக்குச் செல்லப் படிக்கட்டுகள் மீது ஏறவேண்டியிருந்தது**.** சில படிகள் ஏறிய பின், மூச்சு வாங்கியதால், ஒரு படியின் மேல் சிறிது

நேரம் அமர்ந்தார். அப்பொழுது ஒரு பக்தர், ‘படிகள் ரொம்ப உயரமாக இருக்கின்றன’ என்று கூறினார். அதற்கு ஆசார்யாள் சிரித்து, ‘இந்தப் படிகள் 1958ம் ஆண்டு நான் இங்கே வந்த போது எப்படி இருந்தனவோ, அதே மாதிரி தான் இப்பொழுதும் இருக்கின்றன. எனக்குத் தான் வயதாகி விட்டது’ என்றார். அதைக் கேட்ட எல்லோரும் சிரிப்பில் ஆழ்ந்தனர். …”[188]

“… சிருங்கேரியில் நான் ஆசார்யாளைத் தரிசிக்கச் சென்ற போது அவருக்கு வேலைப் பளு அதிகமாக இருந்தது. அப்பொழுது அவருக்கு உடல் நலமும் சரியாக இல்லை. நான் அவரிடம், ‘குருநாதா, நீங்கள் உங்கள் உடலை மிகவும் வருத்திக் கொள்கிறீர்கள் என்று நினைக்–கிறேன். கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்’ என்று கூறினேன். அதற்கு அவர், ‘என்ன செய்வது? விட்டால் இப்படி உட்காரத் தான் எனக்கு ஆசை’ என்று கூறித் தியானத்தில் ஆழ்ந்து விட்டார். …”[189]

*1989ம் ஆண்டு செப்டம்பர் 21ம் தேதியன்று ஆசார்யாள் தமது உடலைத் தியாகம் செய்தார். அவர் நம்மிடையே வாழ்ந்த கடைசி சில நாட்களிலும் பிறரைக் கருதி அவர் செய்தவை பல. அதில் சிலவற்றை இங்கே கூறுவோம்.[190] 17ம் செப்டம்பர் அன்று மடத்தின் நிலங்களை மேற்பார்வை செய்பவர் வீட்டிற்குச் சென்றார். இது நரஸிம்ஹபுரத்தில் உள்ளது. இருவருமாக பம்பு செட் இருக்கும் அறைக்குச் சென்றனர். இங்கே செல்வதற்கு இரண்டு செங்குத்தான படிகளைக் கடக்க வேண்டியிருந்தது. அங்கே சென்று, பம்பு சாதனங்கள் சரியாக வேலை செய்கின்றனவா என்று சோதித்துப் பார்த்தார். அடுத்த நாள் மலஹானிகரேச்வரர் ஆலயம் சென்று இறைவனை வழிபட்ட பின், கோயிலின் தெற்குச் சுவரின் அருகே நின்று அப்பிரதேசத்திலுள்ள மரங்களைப் பாதுகாக்க என்ன செய்ய வேண்டும் என்பதைப் பணியாளர்களிடம் கூறினார். அதன் பின், கோயிலுக்கு அருகில் உள்ள இரண்டு வீடுகளில் கழிவுநீர் வெளியேற்றம் சம்பந்தமான வேலைகள்*

---

[188] The Multifaceted Jivanmukta என்ற நூலிலிருந்து தமிழாக்கப்பட்டது; ப. 368-369

[189] மேலது ப. 359

[190] மேலும் விவரங்களை The Multifaceted Jivanmukta என்ற நூலில் காணலாம். ப. 675-684

சிலவற்றை எப்படிச் செய்ய வேண்டும் என்று கூறினார். பின்னர், காரில் ஏறி இரண்டு மாதங்களுக்கு முன் தாம் கட்டுவித்த சாலை எப்படி இருக்கிறது என்பதைப் பார்வையிட்டார். அந்த வேலையைச் செய்து முடித்த மேஸ்திரி கணபதி என்பவரைப் பாராட்டினார்.

செப்டம்பர் 20ம் தேதி இரவு ஸ்ரீ கிரிதர சாஸ்திரி (மடத்தின் அந்நாளைய தலைமை நிர்வாக அதிகாரி) ஆசார்யாளின் அறையின் வாசலில் படுத்திருந்தார். அதற்குச் சில நாட்களுக்கு முன் இவர் ஆசார்யாள் எப்படி இருக்கிறார் என்று பார்க்கச் சென்றிருந்த போது ஆசார்யாள் அவரிடம், “நான் ‘நாராயணா’ என்று உரக்க உச்சரித்துக்கொண்டிருந்ததால் இரவில் உனது தூக்கம் தடைப்பட்டதா?” என்று கேட்டிருந்தார். வலி அதிகமாக இருக்கும் போது ஆசார்யாள் இவ்வாறு இறைவனின் பெயரை (பலன் ஏதும் எதிர்பாராது) சொல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

2012ம் ஆண்டு ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் ராஜபாளையம் நகரத்திற்கு விஜயம் செய்த போது செய்த உபந்யாஸம் ஒன்றில் ஆசார்யாளின் வாழ்க்கையைப் பற்றிப் பேசினார். அதில் அவர் ஆசார்யாளைக் குறித்துச் சொன்ன சுலோகம் (விவேக சூடாமணி சுலோகம் 39) ஒன்றைக் கூறி இந்த இயலை நிறைவு செய்வோம்:

**शान्तो महान्तो निवसन्ति सन्तो वसन्तवल्लोकहितं चरन्तः ।**
**तीर्णास्स्वयं भीमभवार्णवं जनानहेतुनान्यानपि तारयन्तः ॥**

(பரம்பொருளை அறிந்த அடங்கிய மனமுள்ள மஹான்கள் இளவேனிற் காலம் போல் உலகில் உள்ளவர்களுக்கு நன்மை புரிந்து கொண்டு (உலகில்) வசிக்கின்றனர். அச்சுறுத்தும் பிறவிப் பெருங்கடலைத் தாம் கடந்து, எக்காரணமும் இன்றிப் பிறரையும் கடக்கச் செய்கின்றனர்.)

# 5. பொறுமை, சகிப்புத்தன்மை, மன்னிக்கும் தன்மை (க்ஷமை)

"क्षमा" என்கிற சொல்லிற்குப் பொறுமை, சகிப்புத் தன்மை, மன்னிக்கும் தன்மை என்ற பொருள்கள் உண்டு. ஸம்ஸ்க்ருதத்தில் இச்சொல் பூமியையும் குறிக்கும். ஒருவனுக்கு பூமியைப் போல் பொறுமை இருக்க வேண்டும் என்பதைக் குறளும் கூறுகிறது:[191]

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை

*(பரிமேலழகர் உரை: அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல: தன்னை அகழ்வாரை விழாமல் தாங்கும் நிலம் போல தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை: தம்மை அவமதிப்பாரைப் பொறுத்தல் தலையாய அறம். இகழ்தல் – மிகையாயின செய்தலும் சொல்லுதலும்) இக்குறளைத் திருவள்ளுவர் (அறத்துப்பாலில்) இல்லற இயலில் வைத்தார் என்பது குறிப்பிடத் தக்கது. பொறுமை என்ற குணத்தை எல்லா மனிதர்களும் தம்முள் வளர்க்கவேண்டும் என்பது இதிலிருந்து தெளிவாகிறது. கௌதம தர்ம சூத்திரத்தில் ஒவ்வொரு மனிதனும் பயில வேண்டிய எட்டு குணங்களுள் பொறுமையும் ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது. இதைப் பற்றி ஆசார்யாள் ஓரிடத்தில் பின்வருமாறு விளக்கி இருக்கிறார்:*

"... தனக்குப் பிடிக்காததைக் கேட்பதனாலோ வேறொருவனின் செயலால் தனக்கு நேர்ந்த இடரினாலோ, மனிதன் பொதுவாகக் கோபம் கொள்கிறான். அப்பொழுது மற்றவரிடத்தில் சினமும், பழி வாங்கும் உணர்வும் அவனுள் தலைதூக்குகின்றன. இல்லையென்றால், மறைமுகமாகப் பழி வாங்க முயல்கிறான். இரண்டுமே சான்றோர்க்கு அழகல்ல. துன்புறுத்தியவனுக்கு எதிராகச் செயல்படும் நிலைமை இவனுக்கு வாய்த்தாலும், தவறு செய்தவனை மன்னிக்க வேண்டும். மனதில் வஞ்சம் வைத்துக் கொள்ளக் கூடாது. 'தன் மனவடக்கத்தால் ராமன் மற்றொருவன் தனக்கு இழைத்த பலநூறு தவறுகளையும்

[191] குறள் 151

மறக்கிறான். ஆனால் ஒருவன் தனக்கு ஒரு உதவி செய்தாலே மனநிறைவு அடைகிறான்' என்று ராமாயணத்தில் கூறப்பட்டி–ருக்கிறது.[192]

பொறுமையின்மை, சினம் இவற்றால் ஒருவனுக்கு எந்தப் பயனும் இல்லை. அதற்கு மாறாக இவைகளால் மனிதன் தன் மனவமைதி–யையே இழக்கிறான். ஒரு உதாரணம் பார்ப்போம். ஒருவன் மற்றொரு–வனால் பழிக்கப்படுகிறான், அல்லது இழிக்கப் படுகிறான். இதனால் இவனுக்குக் கோபம் உண்டாகலாம். அதனால் யாருக்குத் தோல்வி ஏற்படுகிறது? சினம் ஒரு நன்றியற்ற பிராணி போன்றது. எப்படி–யென்றால் கோபத்திற்கு இடம் கொடுப்பவனை அக்கோபம் முற்றிலும் அழித்துவிடுகிறது. எனவே கோபத்திற்கு இடம் கொடுக்காமல் தன்னால் ஏதாவது தவறு நேர்ந்திருக்குமோ என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படித் தவறு நேர்ந்திருந்தால், தன்னைத் திருத்திக் கொள்ளலாம். சில சமயங்களில் தான் ஒரு தவறு செய்யாத பொழுதும் இழிச்சொல்லிற்கு ஆளாகலாம். அவ்வாறு நடக்கும் பொழுது, 'மற்றவ–ருக்கு மகிழ்ச்சி உண்டாக்குதலும் இறைவனை வழிபடும் முறைகளில் ஒன்று என்று கூறுவர். அதனால் இவன் என்னைப் பழித்து மகிழ்வதும் என் நல்வினையே. நான் ஒன்றும் செய்யாமலேயே இவனை மகிழ்வித்து இறைவனை வழிபடுகிறேனே. இவன் எனக்குப் பேருதவி செய்திருக்கிறான்' என்று எண்ண வேண்டும். ...''[193]

*தம்மைச் செயலாலும் சொல்லாலும் வருத்துபவரை இல்லறம் நடத்துபவனே பொறுத்துக் கொள்ள வேண்டும் என்றால், ஒரு ஸந்யாஸிக்கு இந்த குணம் எவ்வளவு முக்கியம் என்பதை நாம் ஊகிக்கலாம். ஏனென்றால், செயலும் சொல்லும் ஒருவனின் சரீரத்தையோ அல்லது மனம் சார்ந்த அஹங்காரத்தையோ தாக்குகிறது. அவ்வாறு தாக்கப்பட்டவன் அதைப் பொறுக்கவில்லை என்றால், அம்மனிதனுக்கு தன் உடலிலும், மனதிலும் ''நான்'' என்கிற தவறான எண்ணம் விலகவில்லை என்று தெரிகிறது. அப்பேற்பட்டவன் மனதில் ஆத்ம தத்துவம் விளங்காது. எனவே தான், தர்ம சாஸ்திரம் ஸந்யாஸ தர்மத்தைக் கூறும் போது பொறுமையையும் சகிப்புத்*

---

[192] *வால்மீகி ராமாயணம்* 2.1.11

[193] மெய்ஞான விளக்கவுரைகள் ப. 7-8

*தன்மையையும் விதிக்கிறது:*[194]

अतिवादांस्तितिक्षेत नावमन्येत कञ्चन ।
न चेमं देहमाश्रित्य वैरं कुर्वीत केनचित् ॥

*(பழிச்சொற்களைச் சகிக்க வேண்டும்; ஒருவனையும் அவமதிக்கக் கூடாது. தம் உடலின் பொருட்டு இன்னொருவனைப் பகைக்கக் கூடாது.)*

*ஆத்ம ஞானம் அடைய விழைகிறவன் உடல், மனம், புத்தி ஆகியவை "நான் அல்ல" என்பதைப் பயில்கிறான். ஞானம் அடைந்தவனுக்கு இவற்றின் விஷயத்தில் (உடல் முதலியவற்றில்) "நான்" என்கிற தவறான எண்ணம் இல்லை. ஆக இவ்விருபாலாருக்கும் தமது உடல், மனம் ஆகியவை அல்லது அவற்றைச் சார்ந்தவை தாக்கப்படும் போது கோபம், மன வருத்தம் போன்ற உணர்ச்சிகள் தோன்றக் கூடாதல்லவா? எனவே தான், ஆசார்யர் ஸுரேச்வரர்,*

वर्चस्के संपरित्यक्ते दोषतश्चावधारिते ।
यदि दोषं वदेत्तस्मै किं तत्रोच्चरितुर्भवेत् ॥

*என்று கூறுகிறார்.*[195] *(உடலிலிருந்து வெளியேறியதை அசுத்தம் என்று தீர்மானித்தவனுக்கு மற்றவர் அதில் குறை காணும் பொழுது என்ன நேரப் போகிறது?)*

*உலக விவகாரங்களுக்கு இடையில் துன்பம், அவமானம் போன்றவை நேரும் பொழுது எப்படி இருக்க வேண்டும் என்ற கேள்வி எழுவது இயல்பே. இதற்கு விடையாகக் குறளில் பொறையுடைமை அதிகா-ரத்தில் கூறியிருப்பதைப் பார்ப்போம். அதில் திருவள்ளுவர்,*

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்

*(பரிமேலழகர் உரை: <u>மிகுதியான் மிக்கவை செய்தாரை</u>: மனச்-செருக்கால் தங்கண் தீயவற்றைச் செய்தாரை; <u>தாம்தம் தகுதியான் வென்றுவிடல்</u>: தாம் தம்முடைய பொறையான் வென்றுவிடுக. தாமும்*

---

[194] மனு ஸ்ம்ருதி 6.47
[195] நைஷ்கர்ம்யஸித்தி 2.16

*அவர்கண் தீயவற்றைச் செய்து தோலாது பொறையான் அவரின் மேம்பட்டு வெல்க என்பதாம்.)* என்றும்,[196]

பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று

*கூறியுள்ளார்.*[197] *(பரிமேலழகர் உரை: என்றும் இறப்பினைப் பொறுத்தல்: பொறை நன்றாதலான் தாம் ஒறுத்தற்கு இயன்ற காலத்தும் பிறர் செய்த மிகையைப் பொறுக்க; அதனை மறத்தல் அதனினும் நன்று: அதனை உட்கொளாது அப்பொழுதே மறத்தல் பெறின், அப்பொறையிலும் நன்று)* அதாவது, தமக்குப் பிறர் தந்த தீமையைப் பொறுத்துக் கொள்வது நல்லது. ஆனால், அப்படி நேர்ந்தது என்பதையே மறப்பது என்பது பொறுமையை விடச் சிறந்தது. மேலே கூறிய இரு குறட்பாக்கள் இல்லற இயலில் உள்ளன. இதை மேலும் சிறப்பித்துத் திருவள்ளுவர் துறவற இயலில்,

இன்னாசெய் தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்

*என்று கூறுகிறார்.*[198] *(பரிமேலழகர் உரை: இன்னா செய்தாரை ஒறுத்தல்: தமக்கு இன்னாதவற்றைச் செய்தாரைத் துறந்தார் ஒறுத்தலாவது, அவர் நாண நல் நயம் செய்து விடல்: அவர் தாமே நாணுமாறு அவர்க்கு இனிய உவகைகளைச் செய்து அவ்விரண்டனையும் மறத்தல்) ஆகவே, தமக்கு இன்னொருவரால் தீமை நேரும் பொழுது அதைப் பொறுத்தல், மறத்தல், அப்படிச் செய்தவருக்கு (அவர் செய்கைக்கு மாறாக) நன்மை செய்தல் என்று சாஸ்திரங்கள் எல்லா மனிதர்களுக்குப் பொதுவாகவும், ஸந்யாஸிகளுக்கு விசேஷமாகவும் உபதேசிக்கின்றன.*

## பொறுமை

*இந்தப் பின்புலத்துடன், பொறுமை என்கிற குணம் ஆசார்யாளின் ஆளுமையில் எப்படி விளங்கியது என்பதைப் பார்ப்போம்.*

“... 1954ம் ஆண்டில் பீடாதிபத்யத்தை மேற்கொண்ட பின், ஆசார்யாள்

[196] குறள் 158
[197] குறள் 152
[198] குறள் 314

ராமநாத சாஸ்திரியிடம் தாம் சென்னகேசவா என்பவரைப் (இவர் மடத்தில் பணியாளராக இருந்தவர்) பார்க்க விரும்புவதாகக் கூறினார். இவர், ஆசார்யாள் சிருங்கேரியில் பிரம்மசாரியாக இருந்த காலத்திலும் ஸந்யாஸம் வாங்கிய பின் சிறிது காலத்திற்கும் ஆசார்யாளுக்கு உணவு சமைத்துப் பரிமாறும் பணியைச் செய்து வந்தார். பின்னர் பணியிலிருந்து ஓய்வு பெற்று, தக்ஷிண கன்னட தேசத்தில் உள்ள கோடா என்ற சிற்றூருக்கு இடம் பெயர்ந்தார். இவரைத் தேடி சிருங்கேரிக்குக் கூட்டிக் கொண்டு வருமாறு ஆசார்யாள் ராமநாத சாஸ்திரியைப் பணித்தார். அவரும் கோடா சென்று அவ்வூரில் உள்ளவர்களை விசாரித்து சென்னகேசவா இருக்கும் வீட்டைக் கண்டுபிடித்தார். அவரைப் பார்த்த சென்னகேசவா, தாம் அக்காலத்தில் ஆசார்யாள் உண்பதற்காகக் கொடுக்கப்பட்ட பால், தயிர் போன்றவற்றின் பெரும் பகுதியைத் தம் குடும்பத்திற்காக எடுத்துச் சென்றதாகவும், தற்போது ஒரு அரிய நோயினால் பாதிக்கப் பட்டு சரியாக நடமாட முடியாமல் இருப்பதாகவும், அதற்குக் காரணம் தாம் அக்காலத்தில் செய்த தவறே என்றும் மிகுந்த வருத்தத்துடன் கூறினார். ஆசார்யாள் தம்மிடம் மிகவும் கோபம் கொண்டிருப்பார் என்றும் தம்மை மன்னிக்க மாட்டார் என்பதனால் தாம் இனி சிருங்கேரி மண்ணை மிதிக்க முடியாது என்று கூறினார். சாஸ்திரி அவருக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லித் தாம் அங்கு வந்திருப்பதே அவரை சிருங்கேரிக்கு அழைத்துச் செல்வதற்காகத் தான் என்று தெரியப்படுத்தினார். இதைக் கேட்ட பின், சென்னகேசவருக்கு அச்சம் இன்னும் மேலிட்டதால், தம்மால் சிருங்கேரிக்கு வர இயலாது என்று திட்டவட்டமாகக் கூறி விட்டார். வேறு வழியில்லாமல் சாஸ்திரியும் சிருங்கேரி திரும்பி நடந்தவற்றை ஆசார்யாளிடம் தெரிவித்தார்.

இதைக் கேட்ட ஆசார்யாள் சாஸ்திரியிடம் மடத்து வண்டி ஒன்றில் மீண்டும் கோடா செல்லுமாறும் அதே வண்டியில் சென்னகேசவரை அழைத்து வருமாறும் கூறினார். மேலும், சென்னகேசவா அப்படி சிருங்கேரி வரவில்லையென்றால் தாமே கோடா வர நேரிடும் என்றும் கூறினார். இதை சாஸ்திரியிடமிருந்து அறிந்த சென்னகேசவா வேறு வழியின்றி அவருடன் சிருங்கேரி வந்தார்.

சிருங்கேரியில் ஆசார்யாளைப் பார்த்தவுடன் சென்னகேசவா, கண்ணீர் மல்க ஆசார்யாளின் கால்களில் வீழ்ந்து தான் செய்த தவற்றை

ஒப்புக்கொண்டு ஆசார்யாளிடம் மன்னிப்பு கோரினார். ஆசார்யாள் அவரைச் சமாதானம் செய்து சிருங்கேரியில் தான் சிறுவனாக இருந்த காலத்திலிருந்து சென்னகேசவா தமக்கு உணவு அளித்ததால் அவர் தமது தந்தைக்குச் சமானம் என்று அன்புடன் கூறினார். அத்துடன் நில்லாமல், சென்னகேசவா ஆற்றிய பணிக்காக ஒரு (1950களில்) கணிசமான தொகையைச் சன்மானமாகச் சென்னகேசவருக்கு அளித்தார். இதைச் சற்றும் எதிர்பாராத சென்னகேசவா தாம் ஆசார்–யாளுக்காக கொடுக்கபட்ட பொருட்களைத் திருடியதை மீண்டும் கூறி ஆசார்யாள் அளிக்கும் சன்மானத்திற்குத் தான் சற்றும் தகுதியற்றவன் என்றும் வருந்தினார். ஆசார்யாள் அவருக்குப் பலவாறாக ஆறுதல் சொன்ன பின், சென்னகேசவா ஆசார்யாள் அளித்த சன்மானத்தையும் ஆசார்யாளின் ஆசிகளையும் பெற்றார். பின்னர், மனச் சுமையும் பணக் கஷ்டமும் தீர்ந்தவராய் கோடா திரும்பி அங்கே மகிழ்ச்சியாக வாழ்ந்தார். (இந்த சம்பவத்தைக் கூறியவர் ராமநாத சாஸ்திரி).

இங்கே ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். 1930களில் ஆசார்யாளின் உடல் பலவீனம் காரணமாக அவருக்காகக் கொடுக்கப்–பட்டவற்றை சென்னகேசவா தம் குடும்பத்திற்கு எடுத்துச் சென்றதை ஆசார்யாள் அறிந்திருந்தார். ஆனாலும் அது தொடர்பாக அவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதைப் பற்றி ஒருவரிடமும் சூசகமா–கவும் தெரிவிக்கவில்லை. இருபது ஆண்டுகளுக்குப் பின் ராமநாத சாஸ்திரியை கோடாவிற்கு அனுப்பும் பொழுது கூட எந்த காரணத்–தையும் கூறவில்லை. சென்னகேசவா தாமாகவே சாஸ்திரியிடம் தான் செய்த தவற்றை ஒப்புக்கொண்டார். தம் விஷயத்தில் நேர்ந்த தவற்றை ஆசார்யாள் சற்றும் பொருட்படுத்தாமலே இருந்தார். ...(அது மட்டுமின்றி) சென்னகேசவா தமக்குச் சிறு வயதிலிருந்து உணவளித்ததால் ஆசார்யாள் மனநிறைவுடன் ‘நீங்கள் என் தந்தைக்குச் சமானம்’ என்று கூறியதையும் கருத்தில் கொள்ள வேண்டும். ...” [199]

*எல்லோரும் வளர்க்க வேண்டிய பொறுமை என்ற குணம் ஒரு பீடாதி-பதிக்கு, அதுவும் ஆயிரக்கணக்கான சிஷ்யர்கள் கொண்ட சிருங்கேரி போன்ற பீடத்தில் அமர்பவருக்கு, மிகவும் அவசியமாகிறது. பல*

---

[199] The Multifaceted Jivanmukta *என்ற நூலிலிருந்து தமிழாக்கப்பட்டது*; *ப*. 289-290

*தரப்பட்ட சிஷ்யர்கள், ஆசார்யாளிடம் கூறினால் நன்மை கிட்டும் என்ற நம்பிக்கையில் அவர்கள் கொண்டு வரும் பல விதமான பிரச்னைகள், ஆசார்யாளிடம் தம் புலமையைக் காட்ட விழையும் பண்டிதர்கள், நூற்றுக்கணக்கான ஊழியர்களும் அவர்களுக்குள் நடக்கும் அரசியல் விளையாட்டுகள், மடத்து மரபை ஒட்டி நடக்கும் பல பூஜைகள், எல்லாவற்றுக்கு இடையிலும் தமது சொந்த அனுஷ்டானங்கள் இவை அனைத்தும் ஒவ்வொரு நாளும் விடாமல் செய்ய வேண்டும் என்றால் சிருங்கேரி ஆசார்யர்களுக்கு எவ்வளவு பொறுமை வேண்டியிருக்கும் என்பதை ஊகிக்கலாம். இந்த குணம் ஆசார்யாளிடம் எப்படி விளங்கியது என்பதை இந்நிகழ்வு காட்டுகிறது:*

“... ஒரு சமயம் ஆசார்யாளுக்குக் கடுமையான மாரடைப்பு ஏற்பட்டதால் உடல்நிலை மிகவும் குன்றி மருத்துவர்களின் மேற்பாற்வையில் இருந்தார். நடந்தோ பேசியோ உடம்பை வருத்திக் கொள்ளக் கூடாது என்றும் ஓய்வில் இருக்க வேண்டும் என்றும் மருத்துவர்கள் கூறியிருந்தார்கள். அதனால் அமைதியான ஓரிடத்தில் ஆசார்யாள் அமர்ந்திருந்தார். அப்பொழுது அங்கே ஒரு வயதான தம்பதியர் வந்தனர். அந்த வயதான மனிதர் நோயினால் பீடிக்கப்பட்டு, உட்கார்ந்து கொண்டிருக்கும் போதே முதுகு வளைந்தும் காணப்பட்டார். அவரது மனைவி ஆசார்யாளிடம் வந்து தனது கணவரின் உடல்நிலை பற்றியும், அவர் எப்படிக் கஷ்டப்படுகிறார் என்றும், அந்த வயதான காலத்தில் அவரைக் கவனித்துக் கொள்வது எவ்வளவு சிரமமாக உள்ளது என்றும் கூறி ஆசார்யாள் தங்களை அனுக்ரஹித்து இந்தக் கஷ்டங்களிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டாள்.

ஆசார்யாள் உடனே, ‘ஓ! இவ்வளவு கஷ்டங்களா இவருக்கு? உண்மையில் இந்த கஷ்டங்களைத் தாங்குவது சிரமம் தான். கவலைப்பட வேண்டாம். எல்லாம் நல்லதாகவே நடக்கும்’ என்று கூறி அவர்களுக்குப் பிரசாதம் வழங்கினார். ஆனால் சிறிது நேரத்திற்கெல்லாம் மீண்டும் ஆசார்யாளிடம் வந்த அப்பெண் தனது துயரங்களை மறுபடியும் தெரிவித்துக் கொண்டாள். ஆசார்யாள் முதல் தடவை எப்படிக் கேட்டாரோ அதே ஆவலோடு கேட்டுவிட்டு அதே வார்த்தைகளை மீண்டும் கூறி அவர்களை ஆசீர்வதித்து மந்திராக்ஷதை கொடுத்தார்.

இதே போல் குறைந்தது ஐந்து முறையாவது ஆசார்யாளிடம் சென்று வந்துகொண்டிருந்த அப்பெண்ணிடம் ஆசார்யாள் ஒவ்வொரு முறையும் சிறிதும் எரிச்சலடையாமல், சளைக்காமல், தமது முகத்தில் காட்டிய பச்சாதாபத்தைச் சிறிதும் குறைக்காமல் அவர்களுக்கு ஆசி வழங்கியது ஆசார்யளின் சகிப்புத் திறனை மட்டுமின்றி அவரின் கருணை உள்ளத்தையும் ஒருங்கே பறைசாற்றியது. …'' [200]

*சிருங்கேரியில் ஆசார்யாளின் நூறாவது ஜயந்தி விழாவை ஒட்டி நடந்த நிகழ்ச்சியில் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் ஒரு அருளுரை ஆற்றினார். அதில் அவர், ஆசார்யாள் காட்டிய சகிப்புத்தன்மை மற்றும் பொறுமை பற்றிப் பேசியதன் சுருக்கத்தைக் கீழே தருகிறோம்:*

``… நம் ஆசார்யாளிடம் இருந்த பொறுமையை நான் வேறு எவரிடமும் கண்டதில்லை. … ஒரு முறை மடத்தில் வேலை செய்யும் பையன் ஒருவன் தமது வேலையில் ஒரு தவறு செய்துவிட்டான். அதனால் ஆசார்யாள் அவனிடம், 'உன்னை நான் இனிமேல் இங்கே பார்க்க விரும்பவில்லை' என்று கூறிவிட்டார். ஆனால் ஓரிரண்டு நாட்களுக்குப் பின் அந்தப் பையனை மீண்டும் கூப்பிடும்படி பணித்தார். 'அவன் வரவேண்டாம்' என்று ஆசார்யாள் கட்டளையிட்டதை நினைவுபடுத்தி–யதற்கு அவர், 'அது முடிந்து போன விஷயம். அவனைக் கூப்பிடு' என்றார். அப்பேற்பட்ட பொறுமை, க்ஷமை அந்த மஹானிடம் மட்டுமே நான் பார்த்தேன் …''

*மஹாஸந்நிதானம் விவரித்த நிகழ்வில் முக்கியமான விஷயம் ஒன்று அடங்கியுள்ளது. ஆசார்யாளிடம் பொறுமை இருந்தது; ஆனால் கோபத்தையும் அவர் சில சமயங்களில் வெளிக்காட்டியதை எப்படிப் புரிந்து கொள்வது? பொறுமை, சகிப்புத் தன்மை ஆகியவை ஒரு ஸந்யாஸிக்கு மிகவும் முக்கியம் என்பதில் ஐயமில்லை. அதே சமயத்தில், ஆசார்யாள் ஒரு ஸந்யாஸியாக மட்டும் இல்லாமல் ஒரு பெரிய நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பையும் வகித்தார். எந்த ஒரு நிறுவனத்தின் தலைவரும் ஏதாவது ஒரு சமயத்தில் அந்நிறுவனத்தில் பணியாற்றுபவரின் விஷயத்தில் கோபமும் கண்டிப்பும் காட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்படும். நிர்வாகத் தலைவர் எந்த சூழ்நிலை-*

---

[200] முத்தி நெறி ப. 16-17

*யிலும் தமக்கு இயல்பான பொறுமையையும் சகிப்புத் தன்மையை மட்டுமே காட்டினால் அந்த நிறுவனத்தின் நிர்வாகம் சரியாக நடக்காது. "இங்கே நாம் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்" என்ற எண்ணம் பணியார்களுள் உறுதியாகி விடும். இறுதியில் இது நிறுவனத்தின் வீழ்ச்சியை விளைவிக்கும். இவற்றையெல்லாம் மனதில் கொண்டே ஒரு பீடாதிபதியாக இருப்பவர் எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றி ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் ஆசார்யாளுக்கு முக்கியமான உபதேசம் ஒன்றைச் செய்தார். அதை இப்பொழுது சுருக்கமாகப் பார்ப்போம். ஸமாதி யோகத்தை ஆசார்யாள் அப்பியாசம் செய்தார் என்றும் அதனால் அவரது மனம் எதற்கும் கலங்காமல் இருந்தது என்றும் நாம் முன்னர் ("தைர்யம்" என்ற குணத்தைப் பற்றிப் பேசும் பொழுது) கூறினோம். அந்த சமயத்தில் செய்யப்பட்ட உபதேசம் இது:*[201]

"**...** இந்த குணங்கள் (பாராட்டு போன்றவற்றால் கலங்காத மனம் முதலியன) ஒரு ஸந்யாஸிக்கு மிகப் பொருத்தமானவையே**.** ஆனால் ஒரு பீடத்தின் எதிர்காலம் உங்கள் கையில் இருக்கிறது **...** நீங்கள் பரம்பொருளில் உறுதியாக நிலைபெற்றிருந்தாலும், சாஸ்திரங்களை ஊக்கமாகப் பயில வேண்டும்**.** மேலும் பக்தர்கள், மடத்தில் பணியாற்றுபவர்கள் முதலியவரிடம் பழகும் நேரத்தில் சமயத்திற்கு ஏற்றவாறு ஆர்வம், பாராட்டு, அக்கறை, கோபம், அறிவார்வம் போன்ற குணங்களை வெளிப்படுத்துவதைப் பயில வேண்டும்**. ...**"
*(அடிக்கோட்டுக் குறி நம்முடையது)*

*மேலும், விச்வாமித்திரர் ராமருக்கு உபதேசம் செய்ததாக யோக வாஸிஷ்டம் கூறும் சுலோகங்களையும் ஆசார்யாளுக்கு அவருடைய குரு அச்சமயத்தில் எடுத்துரைத்தார்:*[202]

**बहिः कृत्रिमसंरम्भो हृदि संरम्भवर्जितः ।**
**कर्ता बहिरकर्तान्तर्लोके विहर राघव ॥**

*(ராகவனே! பற்று, சினம் முதலியவை இருப்பன போல் வெளிக்காட்டி*

---

[201] Yoga, Enlightenment and Perfection என்ற நூலிலிருந்து தமிழாக்கப்பட்டது; ப. 202

[202] லகு யோக வாஸிஷ்டம் V. 2.57; V. 2.60

*மனதில் கலக்கமில்லாமலும், வெளியில் செயலாற்றுபவனாகவும் உள்ளே செயலற்றவனாகவும் உலகத்தில் விளையாடுவாய்.)*

बहिस्तप्तोन्तरा शीतो लोके विहर राघव ॥

*(ராகவனே! உள்ளே குளிர்ச்சியாகவும் வெளியே வெப்பத்துடனும் உலகத்தில் விளையாடுவாய்.)*

*இந்த உபதேசத்திற்குப் பின், ஆசார்யாள் சமயத்திற்குத் தகுந்தவாறு உணர்ச்சிகளை எப்படி வரவழைப்பது, அதை எப்படி வெளிப்படுத்துவது என்பதைப் பற்றி நன்கு யோசித்து அதை நடைமுறைக்கும் கொண்டு வந்தார். இதைப் பற்றி அவரே கூறியுள்ளார்:*

‘‘… மகிழ்ச்சியடைவது, கவலை தெரிவிப்பது போன்ற உணர்ச்சிகளை மனதில் எழவிடாமல் அவை இருப்பது போல் நடிக்க வேண்டும் என்று ஆசார்யாள் (ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்) கூறவில்லை என்பது எனக்குத் தெளிவாகப் புரிந்தது. … மற்றவர்களுடன் விவகாரங்கள் செய்யும் பொழுது, அவர்களிடம் நடித்து ஏமாற்றுவதற்கு மாறாக, எழுந்து வீழும் உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்க மனதைப் பயில்விக்கலாம். அடிப்படையாகச் சலனமற்று இருக்கும் நிலையில், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு மட்டுமே எண்ணங்களும் உணர்வுகளும் தோன்றுவது மனம் நன்றாகவும் போலித்தனம் இல்லாமலும் செயல்படுவதற்கு வழிவகுக்கும். மேலும், மனதின் இம்மாதிரியான செயல்பாடு பந்தத்தை உண்டாக்குவதில் வலிமையற்றது. ஏனென்றால், மனமே ஆத்மா என்ற தவறான கற்பனை முழுவதுமாக நீங்கிவிட்டது; தவிரவும் மனம் பொய்யானது என்பதில் மறதியும் இல்லை …’’ [203]

*கோபத்தை வரவழைப்பதிலும் அதனால் பாதிக்கப் படாமல் இருப்பதும் எப்படி என்பதை ஆசார்யாள் செய்து காட்டியதை அவருடைய சிஷ்யர் ஓரிடத்தில் கூறியிருக்கிறார். அதை இங்கே உதாரணமாகத் தருவோம். அவர் ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் மேலாளராகப் பணி புரிந்தார். அச்சமயம் தம்மை விட வயதில் பெரியவர் ஒருவர் இவருக்குக் கீழ்நிலையில் வேலை பார்த்து வந்தார். அப்பெரியவருடைய பணி அவ்வளவு திருப்திகரமாக இல்லை. ஒரு சமயம் இவர் தம்*

---

[203] Yoga Enlightenment and Perfection என்ற நூலிலிருந்து *தமிழாக்கப்பட்டது ப. 204*

*பொறுமையை இழந்தவராய், அம்முதியவரைக் கடுமையாகத் திட்டி-னார். திட்டிய சில நேரத்துக்குப் பின், வயதில் தம் தந்தையை ஒத்த ஒருவரைத் தாம் அவ்வாறு திட்டியது சரி தானா என்ற மன உளைச்சல் ஏற்பட்டது. சில நாட்களுக்குப் பின், சிருங்கேரி சென்று நடந்ததை ஆசார்யாளிடம் விவரித்தார்.*

“... அனைத்தையும் கேட்ட ஆசார்யாள் பதிலேதும் கூறவில்லை. நான் அவரை நமஸ்கரித்து அவ்விடத்திலிருந்து நீங்கினேன். அன்று பிற்பகல், நான் ஆசார்யாளைத் தரிசிப்பதற்காக நரஸிம்ஹவனம் சென்று அவருடைய சமீபத்தில் அமர்ந்திருந்தேன். ஆசார்யாள் திடீரென எழுந்து நதிக்குக் குறுக்கே உள்ள சிறிய பாலத்தை நோக்கி மிக விரைவாக நடந்தார். நான் செய்வதறியாது நின்றேன். அப்பொழுது ஆசார்யாள் என்னைப் பார்த்துத் தன்னுடன் வருமாறு தம் கையை அசைத்தார். திரும்பிப் பார்க்காமல் மிக விரைவாக நடந்தார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. அவருக்குப் பின்னால் நடந்து சென்றேன். ஆசார்யாள் திடீரென இப்படிச் செய்ததனாலும் அவர் மிக விரைவாக நடந்ததாலும் அவருடன் வழக்கமாகச் செல்லும் பணியாளர்களும் உடன்வரவில்லை. இருவருமாய் நதியைக் கடந்து சாரதாம்பாள் ஆலயத்திற்குச் சென்றோம். கோயில் கோபுரத்திற்குக் கூரை வேயும் பணி நடந்த சமயம் அது. நாங்கள் சென்ற பொழுது அங்கே கட்டுமான வேலைக்காக வந்தவர்கள் சிலர் வேலை செய்யாமல் வெட்டிப் பேச்சு பேசிக் கொண்டிருந்தனர். ஆசார்யாள் ஆலய கோபுரத்துடன் இணைத்துக் கட்டியிருந்த சாரத்தின் மீது வெகு லாவகமாக ஏறினார். மேலே இருந்தவர்கள் ஆசார்யாள் அச்சமயத்தில் வருவார் என்று சற்றும் எதிர்பார்க்காததால் சரியாக மாட்டிக் கொண்டனர். அவர்களை நோக்கி ஆசார்யாள் சினத்தால் சிவந்த முகத்துடன் கண்டிப்போடு பேசினார். பிறகு மீண்டும் கிழே இறங்கிப் பாலத்தை நோக்கி விரைந்தார். பாலத்தின் முனையில் என்னைப் பார்த்துப் புன்னகை புரிந்து, ‘போ’ என்று என்னை அவ்விடத்திலிருந்து நீங்குமாறு சைகை செய்தார். ஒரு சில நிமிடங்களுக்கு முன்னால் முகம் சிவக்கக் கோபம் வந்தாற்போல் பேசியவர் எப்படி அவ்வளவு விரைவில் அமைதியாகவும் மகிழ்ச்சி பொங்கவும் இருக்க முடியும் என்று மிகவும் வியப்படைந்தேன்.

இது நடந்த சில நாட்களுக்குப் பின்னரே ஆசார்யாள் செய்ததன்

தாக்கத்தை உணரத் தொடங்கினேன். நயமாகப் பேசி வேலை வாங்குவது என்பது ஒரு புறம் இருப்பினும், சில சமயங்களில் சிலரிடம் கண்டிப்புடன் நடந்து கொள்வது அவசியம் என்பதை ஆசார்யாள் சொற்களைத் தவிர்த்துத் தமது செயலால் எனக்கு அன்று கற்பித்தார். அதைவிட முக்கியமாக அவர் கற்பித்தது, நாம் காட்டும் உணர்ச்சி–களுடன் நம்மைச் சம்பந்தப் படுத்திக் கொள்ளாமல் இருக்க வேண்டும் என்பது தான். நாடகம் நடக்கும் பொழுது ஒரு நடிகன் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பல உணர்ச்சிகளை வெளிப்படுத்துகிறான். ஆனால் நாடகம் முடிந்தவுடன் அவன் தம்மை அவ்வுணர்ச்சிகளுடன் சம்பந்தப்படுத்திக் கொள்வதில்லை. தன் கோபத்தை வெளிப்படுத்திய ஒரு சில கணங்களுக்குப் பின்னர் ஆசார்யாள் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் காட்சியளித்ததிலிருந்தும், அவர் முகத்தில் கோபம், எரிச்சல் இவற்றின் சுவடுகள் கொஞ்சமும் இல்லாததலிருந்தும், ஆசார்யாள் கோபுரத்தின் மீது வெளிப்படுத்திய உணர்ச்சிகளுக்கு அவர் கட்டுப்படவில்லை என்பதை ஐயமறப் புரிந்து கொண்டேன். பிற்காலத்தில் நான் வணிகத்துறையிலும் அரசாங்கத்திலும் பணி புரிந்த போது ஆசார்யாள் அன்று நடத்திக் காட்டிய பாடம் எனக்கு மிகவும் துணை புரிந்தது.''

## மன்னிக்கும் தன்மை

*ஆசார்யாளுடைய பொறுமை, சகிப்புத் தன்மை முதலியன எந்த சமயத்தில் எப்படி வெளிப்பட்டன என்பது ஆசார்யாளின் சிஷ்யர்கள், சிருங்கேரி மடத்தில் பணியாற்றியவர்கள் ஆகியோர் பதிவு செய்த நிகழ்வுகளையும் படிக்கும் பொழுது தெரிகிறது. அதில் முக்கியமான கூறுபாடு என்ன என்பதைச் சொல்வோம். ஆசார்யாள் என்கிற தனி மனிதருக்கு எதிராகச் செயல்பட்டவரையும் அவர்கள் செய்தவற்றையும் ஆசார்யாள் பொருட்படுத்தவில்லை என்பதையும், பல சமயங்களில் அவ்வாறு செயல்பட்டவர்களுக்கு ஆசார்யாள் நல்லதையே செய்தார் என்பதையும் இதுவரை பார்த்தோம். ஆனால் மடத்தின் நிர்வாகம், பணி முதலியனவற்றின் விஷயத்தில் தவறு செய்தவர்களை ஆசார்யாள் ஒரு தலைமை நிர்வாகியாகக் கண்டிப்பதில் தயக்கம் காட்டவில்லை. ஆனால் அப்படிச் செய்த பொழுதும் ஆசார்யாளின் கண்டிப்பு அவரது இயல்பான கருணையுடன் கூடிப் பக்குவப்பட்டிருந்தது. இதைச் சித்தரிக்கும் சில நிகழ்வுகளை இப்பொழுது பார்ப்போம்:*

"... தவறு செய்த பணியாளரைத் தண்டிக்கும் போதும் ஆசார்யாள் தமது இயல்பான கருணையை வெளிக்காட்டினார். ஒரு முறை, மடத்து அலுவலர் ஒருவரின் கவனக் குறைவினால் மடத்திற்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டது. அச்சமயம் மடத்தின் நிர்வாக அதிகாரியாய் இருந்த கிரிதர சாஸ்திரி, அந்தத் தொகையை சம்பந்தப்பட்ட அலுவலரின் மாதாந்திர ஊதியத்திலிருந்து திரும்பிப் பெறத் தீர்மானித்தார். ஒவ்வொரு மாதமும் எவ்வளவு பணம் (ஊதியத்திலிருந்து) கழிக்கப்பட வேண்டும் என்பதையும் தீர்மானம் செய்தார். இது ஆசார்யாளுக்குத் தெரிந்த பொழுது அவர், 'தண்டனை கொடுக்கப் பட வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் நீ தீர்மானம் செய்த தொகை மிக்க அதிகம். கொடுக்கப்படும் தண்டனையால் அவனும் அவனுடைய குடும்பமும் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும். இதுவரை நீ எவ்வளவு பணத்தை ஊதியத்திலிருந்து கழித்திருக்கிறாயோ அதுவே போதுமானது. இனி–மேல் அவனுடைய முழு ஊதியத்தையும் தரலாம்' என்று கூறினார். ..."

"... மடத்தில் பணியாளர் ஒருவர் பெரிய தவறு ஒன்று செய்துவிட்டார். அவரை வேலையிலிருந்து நீக்க வேண்டும் என்று சிலர் ஆசார்யா–ளுக்குப் பரிந்துரைத்தனர். ஆனால் ஆசார்யாள் அவ்வளவு தீவிர நடவடிக்கை எடுக்க விரும்பவில்லை. 'இவனை வேலையிலிருந்து நீக்கி வீட்டிற்கு அனுப்புவது பெரிய விஷயம் இல்லை. ஆனால் இவனை நம்பி வீட்டில் மனைவியும் குழந்தைகளும் இருக்கிறார்கள் என்பதை நாம் நினைத்துப்பார்க்க வேண்டும். நாம் இவனுக்குக் கொடுக்கும் தண்டனையினால் இவனுடைய குடும்பம் நடுத் தெருவிற்கு வந்துவிடக் கூடாது. அதனால், இவனை வேலையிலிருந்து நீக்குவது சரியல்ல. அதே சமயத்தில், இவன் செய்த தவறுக்கு இவனை ஒன்றும் செய்யாமல் விட்டு விடவும் முடியாது; ஏதாவது தண்டனை கொடுக்க வேண்டும். அதனால் மடத்தில் இவனுக்கு ஏற்ற இன்னொரு பணிக்கு இவனை மாற்றம் செய்யலாம்' என்று ஆசார்யாள் கருதினார். தான் செய்த தவறுக்காக வருந்திய அப்பணியாளன் வேறு வேலைக்கு மாற்றப்–பட்டான். பின்னர் ஆசார்யாளின் சொல்லின் பேரில் ஒரு சிஷ்யர் இப்பணியாளனை வேறு ஒரு இடத்தில் ஊதிய உயர்வுடன் ஒரு பணியில் அமர்த்தினார். இவ்வாறு தவறு செய்தவனுக்குத் தற்காலிக தண்டனை கொடுத்தாலும் ஆசார்யாள் அவனுக்குத் தீங்கு ஏதும் நினைக்கவில்லை; மாறாக அவனுக்கு வேறொரிடத்தில் நல்ல வேலை

கிடைக்க உதவியும் புரிந்தார். …"

"… ஒரு முறை, மடத்தில் கணக்கு வேலை பார்ப்பவர் ஒருவர் தனக்குத் தெரிந்தவன் ஒருவனுக்கு (மடத்துக்குச் சொந்தமான) பணத்தைக் கொடுத்துவிட்டார். அந்தப் பணம் திரும்பி வரவில்லை. காலப் போக்கில் அலுவலர் ஓய்வு பெறும் தருணம் வந்தது. அவர் இந்த விஷயத்தை மூடி மறைக்க எண்ணினார். ஆனால் ஆசார்யாளுக்கு விஷயம் புரிந்து விட்டதால் அலுவலரிடம் கணக்கையும் கையிருப்பில் உள்ள பணத்தையும் சரிபார்க்கச் சொன்னார். இந்த நெருக்கடியினால் அலுவலருக்குக் கவலை மிகுந்தது. ஆசார்யாள் அந்த அலுவலரை வீட்டிற்குச் சென்று ஓய்வு எடுத்துக் கொண்டு அடுத்த நாள் வருமாறு கூறினார். அவரும் தம் வீடு சென்றார். இரவு முழுதும் அவருக்கு உறக்கம் வராதே என்று ஆசார்யாள் அந்த அலுவலர் மீது பரிதாபம் கொண்டார். மடத்திலிருந்து ஒருவரை அலுவலரின் வீட்டிற்கு அனுப்பி எதற்கும் கவலைப்பட வேண்டாம் என்று தான் (ஆசார்யாள்) சொன்னதாகச் செய்தி அனுப்பினார். தவறு செய்த அலுவலர் ஆசார்யாளின் கருணையால் நாணமுற்று, மடத்திற்கு விரைந்து வந்தார். தாம் செய்த தவற்றை ஆசார்யாளிடம் வெட்கத்துடன் கூறினார். மடத்துக்குச் சொந்தமான பணத்தைத் தமக்குத் தெரிந்தவர் ஒருவருக்கு முறையற்ற வகையில் கடனாகக் கொடுத்ததாகவும், பணத்தை வாங்கியவர் அதைத் திருப்பித் தருவதற்குக் காலம் கடத்துகிறார் என்றும் ஆசார்யாளிடம் கூறி வருத்தப்பட்டார். ஆசார்–யாள் அவருக்குத் தகுந்த ஆறுதல் கூறிக் கொடுத்த பணத்தை மடத்து கணக்கில் கடனாகக் குறித்து, பணத்தைத் தவணை முறையில் திரும்பப் பெறலாம் என்றும் யோசனை கூறினார். இப்படி ஆசார்யாள் பிரச்னைக்குத் தீர்வு காண்பதோடு நில்லாமல் அந்த அலுவலரின் தர்ம சங்கடத்தையும் போக்கினார். தம் தவற்றை உணர்ந்த மடத்துப் பணியாளரை மன்னித்தும் அவருக்கு உதவி செய்யவும் ஆசார்யாள் தயங்கவில்லை. …" [204]

## திதிக்ஷை

*வேதாந்த சாஸ்திரம் க்ஷமை என்கிற குணத்திற்கு மிகவும் முக்கியமான இடத்தைக் கொடுக்கிறது. சாஸ்திரத்தில் இந்த குணம்* "तितिक्षा"

---

[204] The Multifaceted Jivanmukta *என்ற நூலிலிருந்து தமிழாக்கப்பட்டது; ப.* 287-291

*("திதிக்ஷா" அல்லது "திதிக்ஷ") என்றும் "क्षान्तिः" ("க்ஷாந்தி") என்றும் அறியப்படுகிறது. வேதாந்த விசாரம் செய்வதற்கான அடிப்படைத் தகுதிகளில் இக்குணமும் ஒன்று. பொறுமையின்மையும் சகிப்பின்மையும் ஒருவன் தன் உடல் அல்லது மனம் விஷயத்திலோ "நான்" என்ற எண்ணம் வைத்திருப்பதையே காட்டுகிறது என்பதை முன்னர் கூறினோம். இந்த எண்ணம் இருக்கும் வரை ஆத்ம தத்துவத்தை உணர இயலாது. இதை விளக்கும் வகையில் அமைந்துள்ள ஒரு சிறுகதையை ஆசார்யாள் தமது அருளுரை ஒன்றில் கூறியுள்ளார்:*

"... பரம்பொருளைப் பற்றிக் கற்றுக் கொள்ள வரும் சீடனுக்கு ஒரு பெரிய எதிரி உண்டு. 'அகந்தை' என்பது தான் அப்பேற்பட்ட எதிரி. அதற்கு ஒரு கதை சொல்லப்படுவதுண்டு.

ஒருவன் ஒரு குருவினிடத்தில் சென்று, 'பரமாத்மாவைப் பற்றிய அறிவைக் கற்றுத் தாருங்கள்' என்று கேட்டுக் கொண்டான். அவர் அவனை நோக்கி 'நீ ஆறு மாத காலம் பிரஹ்மச்சரியத்தோடு இருந்து வா' என்று கூறிவிட்டார். அவன் அவ்வாறே இருந்தான். பிறகு ஆறு மாதங்கள் கழிந்த பின் குருவைத் தரிசனம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு வந்தான். குரு, அவன் வந்து கொண்டிருக்கையில், துப்புரவுப் பணியாளன் ஒருவனிடம் குப்பைக் கூடையை எடுத்து அந்தச் சீடனின் தலையில் கவிழ்க்குமாறு கூறிவிட்டார். அவனும் அவ்வாறு செய்ய சீடனுக்கு மிகுந்த கோபம் ஏற்பட்டு அந்தத் துப்புரவுப் பணியாளனை நன்கு அடித்துவிட்டான். பிறகு குருவினிடத்தில் தான் வந்திருப்பதைக் கூறி உபதேசம் செய்யுமாறு வேண்டிக் கொண்டான். அதற்கு அவர், 'நீ என்ன செய்தாய்' என்று கேட்டார். அவன், 'இவ்வளவு நாள் சரியாக இருந்தேன். எனக்கு இன்று மிகுந்த கோபம் வந்தது. நான் ஒருவனை நன்றாக அடித்து விட்டேன்' என்றான். குருவானவர், 'சரி. அப்படியென்றால் உபதேசம் இன்று வேண்டாம். இன்னும் நீ மூன்று மாதம் இருந்து விட்டு வா' என்றார். மூன்று மாதம் கழிந்து சீடனானவன் மீண்டும் குருவினிடத்தே வந்தான். மீண்டும் அதே போல் அவன் தலையில் குப்பைக் கூடையைப் போட்டுவிடுமாறு பணியாளுக்கு உத்தரவு ஆகியிருந்தது. அதே போல் அவனும் செய்ய சீடன் இச்சமயம் அவனிடம் சண்டை போட்டு வாய்க்கு வந்தபடி எல்லாம் திட்டி விட்டான். பிறகு குருவினிடம் நடந்த கதையைச்

சொல்லித் தான் ஒருவனை வாய்க்கு வந்தபடி திட்டியதையும் கூறினான். அப்பொழுது குருவானவர், ‘நீ இன்னும் மூன்று மாதம் இருந்து விட்டுப் பிறகு வா’ என்று கூறிவிட்டார். இவ்வாறு மூன்று மாதங்கள் கழிந்தன. மீண்டும் சீடன் வந்த போதும் முன்பு போலவே அவன் மீது குப்பைக் கூடை போடப்பட்டது. ஆனால் இம்முறை சீடன் அந்தப் பணியாளை நமஸ்கரித்து, ‘ஐயா, எனக்கு இருக்கப்பட்ட காமம், கோபம் முதலியவை நீங்குவதற்காக நீங்கள் இறைவனுடைய வடிவத்தில் வந்து பரீட்சை செய்தீர்கள். நான் அதைக் கண்டு கொள்ளாமல் இருந்து விட்டேன். ஆனால் நான் இன்று காம க்ரோதங்—களை விட்டு விட்டேன். முன்பு எனக்குப் பாவ கர்மா இருந்தது. அதனால் தான் என் மீது அசுத்தம் (குப்பை) விழ வேண்டியிருந்தது. நான் போய் குளித்து விட்டு வருகிறேன்’ என்று கூறி மன்னிப்பும் கேட்டுக் கொண்டான். பிறகு குரு அவனுக்கு உபதேசித்தார் என்று கூறிக் கதை முடிகிறது.

ஆகவே சீடனுக்கு அகந்தை என்பது இருந்துவிட்டால் அவனால் தத்துவத்தை அறிவதற்கு தகுதி உள்ளவனாக ஆக முடியாது. ...’’ [205]

*இது தொடர்பாக ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் சிருங்கேரியில் பிரம்மசாரியாக இருந்த காலத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்று நினைக்கற்பாலது. கீழே பதிவு செய்யப்பட்ட நிகழ்வில் வரும் ‘‘ஸ்ரீ ஆஞ்ஜனேயுலு’’ என்பது ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் பூர்வாசிரமப் பெயர். இது நடந்த சமயம் அவர் ஆசார்யாளிடம் பாடம் பயின்று வந்தார்:*

‘‘... ஒரு நாள், ஸ்ரீ ஆஞ்ஜனேயுலு காலையில் குழாயடிக்கு நீராடும் பொருட்டுச் சென்றார். அங்கே இன்னொருவர் குளிப்பதைக் கண்டு, குழாயருகில் தமது முறை வருவதற்குக் காத்திருந்தார். அப்பொழுது இன்னொருவரும் நீராடுவதற்கு வந்தார். ஸ்ரீ ஆஞ்சனேயுலு தமக்கு முன் வந்து காத்திருப்பதை அறிந்தும் அவரிடம் அனுமதி கேட்காமல் இவர் அடுத்ததாகக் குளிக்கச் சென்றார். இன்னொருவராக இருந்தால் இந்த முறையற்ற செயலால் கோபம் அடைந்திருப்பார். ஆனால் ஸ்ரீ ஆஞ்சனேயுலு இவர் குளித்து முடிக்கும் வரையில் பொறுமையுடன்

---

[205] *முத்தி நெறி* ப. 165-167

காத்திருந்தார். அப்பொழுது மூன்றாவதாக வந்த ஒருவர் அதே செயலைச் செய்தார். அப்பொழுதும் ஸ்ரீ ஆஞ்சனேயுலு தம் பொறு–மையை இழக்கவில்லை. மூன்றாவதாக வந்தவர் குளித்து முடிக்கும் வரை காத்திருந்த பின்னரே தாம் நீராடுவதற்குச் சென்றார். நடந்தவை அனைத்தையும் ஆசார்யாள் தொலைவிலிருந்து பார்த்துக் கொண்–டிருந்தார். தமது சிஷ்யரின் பொறுமை அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியை விளைவித்தது. ...''[206]

*இனி, திதிக்ஷா என்ற சொல்லிற்கு ஆசார்யாள் தரும் விளக்கத்தைப் பார்ப்போம்:*

''... திதிக்ஷா என்றால் என்ன?

सहनं सर्वदुःखानामप्रतीकारपूर्वकम् ।
चिन्ताविलापरहितं सा तितिक्षा निगद्यते ॥

என்று திதிக்ஷை விளக்கப்பட்டிருக்கிறது.[207] (பரிஹாரம் செய்ய வேண்டும் என்ற முயற்சி இல்லாமலும், கவலையோ புலம்பலோ இல்லாமலும் எல்லாவிதமான துக்கங்களையும் பொறுத்துக் கொள்வது திதிக்ஷை என்று கூறப்படுகிறது.) பிராரப்த கர்மாவினால் ஒருவனுக்கு ஏதாவது துன்பங்கள் வரலாம். அந்த துன்பங்களை வைத்துக் கொண்டு, 'ஐயோ, இந்த துன்பம் வந்து விட்டதே' என்று கதறினால், அப்பொழுது ஒருவன் சாஸ்திரம் வாசிப்பதற்கு அதிகாரம் உள்ளவன் ஆகமாட்டான். எது வந்தாலும் கூட, இந்த ஸச்சிதானந்த ஸ்வரூபியாக இருக்கப்பட்ட ஆத்மாவிற்கு சம்பந்தம் இல்லை என்று கருத வேண்டும். அந்த திதிக்ஷை தான் 'चिन्ताविलापरहितं' என்று கூறப்பட்டுள்ளது. துன்பம் வந்தால் சிந்திப்பதோ கதறுவதோ கூடாது. இவ்வாறு பொறுத்துக் கொள்ளும் சக்தி இருந்தால் அதற்கு 'திதிக்ஷா' என்று பெயர். ...'' [208]

*துன்பம் வரும் பொழுது அதைப் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று இருப்பதும், அத்துன்பம் உடல், மனம் போன்றவற்றையே பாதிக்கிறது என்று அதைக் கருத்தில் கொள்ளாமல் இருப்பதும்*

---

[206] Inspiring Saint என்ற *நூலிலிருந்து தமிழாக்கப்பட்டது*; Sri Vidyatheerta Foundation, Chennai 1995; ப. 29-30

[207] விவேக சூடாமணி சுலோகம் 25

[208] *முத்தி நெறி* ப. 229

*சாஸ்திரங்களை நன்கு கற்று நடைமுறையில் வேதாந்தத்தைப் பயில்பவருக்கு இயல்பு. ஆனால் பள்ளிச் சிறுவராக இருக்கும் காலத்திலேயே ஆசார்யாளுக்கு இந்த குணம் அமைந்தது மிகவும் வியப்பூட்டும் ஒன்று. இது தொடர்பாக இரு நிகழ்வுகளை ஸ்ரீ. கே. வீ. சுப்பரத்னம் பதிவு செய்துள்ளார்:*

“… ஒரு சமயம் அண்டை வீட்டில் வந்திருந்தவர்களுக்கு காரம் அதிகமிருந்த ஒரு தின்பண்டம் வழங்கப்பட்டது. அதைச் சாப்பிட்ட சில பையன்கள் ஜலம் வேண்டும் என்றனர். சிலர் வெல்லம், சர்க்கரை கேட்டார்கள். இப்படிக் கேட்பது தவறு என்று ஸ்ரீனிவாஸன் ஆக்ஷேபித்தார். பேச்சு வளர்ந்தது. அதில் ஒரு பையன் ஸ்ரீனிவாஸனைப் பார்த்து, ‘அவ்வளவு அடக்கும் சக்தி உனக்கு இருந்தால் ஒரு பிடி பச்சை மிளகாயை உன்னிடம் கொடுத்து உன்னைச் சாப்பிடச் சொன்னால் நீ சாப்பிட்டுவிட்டு சும்மா இருப்பாயா?’ என்றான். ஸ்ரீனிவாஸன் இதற்கு அஞ்சவில்லை. ‘யாரும் அப்படி என்னை ஒரு பிடி பச்சை மிளகாய் தின்னச் சொல்ல மாட்டார்கள். அப்படிச் செய்தால் அதற்கும் நான் தயங்க மாட்டேன்’ என்றார். அந்தப் பையன்களில் ஒருவன் ஸ்ரீனிவாஸனைப் பரீக்ஷை செய்ய எண்ணி, உடனே போய் ஒரு கை நிறைய பச்சை மிளகாயைக் கொண்டு வந்து ஸ்ரீனிவாஸனிடம் கொடுத்தான். அங்கிருந்த பெரியோர்கள், ‘இது விளையாட்டுத் தனமானது என்று விட்டு விடுங்கள்’ என்றார்கள். ஸ்ரீனிவாஸனுக்குத் தான் சொன்ன வார்த்தைக்குப் பிற்போக்காக நடக்க இஷ்டமில்லை. கொண்டுவந்து கொடுக்கப்பட்ட ஒரு கை அளவு பச்சை மிளகாயையும் தின்றுவிட்டார். என்ன ஆபத்து விளையுமோ என்று எல்லோரும் பயந்தார்கள். ஒன்றும் ஏற்படாதது கண்டு எல்லோரும் ஸ்ரீனிவாஸனின் ஸஹிப்புத் தன்மையைப் புகழ்ந்தார்கள். …

… பல நாட்களில் ஸாயங்காலப் பேச்சுகளில் ஸ்ரீனிவாஸனுக்கு ‘அஹிம்ஸை’ என்ற தத்துவமே தலையங்கமாக இருக்கும். இதைக் கேட்ட மற்ற பையன்கள், ‘இது பேச்சளவிலே சொல்லலாமே தவிர செய்கையில் அனுஷ்டிக்க முடியாது’ என்பார்கள். ஸ்ரீனிவாஸன் மட்டும் ‘இது செய்கையிலும் முடியும்’ என்பார். ‘இதை நீ ருஜுப்படுத்த முடியுமா’ என்று சிலர் ஸ்ரீனிவாஸனைக் கேட்க, ‘நீங்கள் வேணுமானாலும் பரீக்ஷை செய்து பாருங்கள்’ என்றார் ஸ்ரீனிவாஸன். உடனே

ஒரு பையன் சமையலறைக்குச் சென்று ஒரு பனை ஓலை விசிறியைக் கொண்டு வந்து அதன் மடல்களை (இலை பாகத்தை) களைந்துவிட்டு குச்சியாக இருக்கும் பாகத்தைக் கொண்டு ஸ்ரீனிவாஸனுக்கு ஒவ்–வொருவராக அடி கொடுத்தார்கள். அவ்வளவு அடியையும் பொறுத்துக் கொண்டு இருந்தாரேயன்றி ஒரு ஆக்ஷேபணையும் செய்யவில்லை ஸ்ரீனிவாஸன். உடல் முழுவதும் அடியினால் கன்னிப் போயிற்று. அப்போதும் அதைப் பொறுத்துக் கொண்டிருந்தார். அடித்த பையன்கள் வெட்கிப் போய் தங்கள் கொடுமையை நிறுத்திக் கொண்டார்கள். முடிவில் அவர்களுக்கு ஸ்ரீனிவாஸன் ஒரு புத்திமதிக் கதை சொன்னார்: 'ஒரு புத்த ஸந்யாஸியை ஓர் அரசன் கொடுமையான தண்டனைக்கு உட்படுத்தினான். ஸந்யாஸி ஏதும் சொல்லாமல் பொறு–மையுடன் இருந்தார். கடைசியில் அரசன் வெட்கமடைந்து ஸந்யாஸி–யிடம் மன்னிப்புக் கேட்டதுமல்லாமல், அவருக்கு வேண்டிய சௌகரியங்களையும் செய்து கொடுத்தான்'. இது தான் ஸஹிப்புத் தன்மையின் பலன்' என்றார். தனக்கு ஏற்படும் ஸுகதுக்கங்களை சமமாக ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பது ஞானியின் நிலை. இது சாஸ்த்ரம் படித்த பின்பு ஏற்படக்கூடிய மனோ நிலை. இது பால்யத்திலேயே தோன்றுமாகில், அது பூர்வஜன்ம ஸம்ஸ்காரத்தின் காரணமேயாகும். ...''[209]

*ஆசார்யாள் துறவறம் மேற்கொண்ட போது அவருக்குப் பதின்மூன்று வயதே நிரம்பியிருந்தது. அதாவது மேலே கூறிய சம்பவங்கள் நிகழ்ந்த சில ஆண்டுகளிலேயே அவர் துறவறம் மேற்கொண்டார். ஒரு ஸந்யாஸிக்குத் தன்னுடைய உடலின் சுகம் முக்கியமாக இருக்கக் கூடாது என்ற உறுதியும் அதன் விளைவான சகிப்புத் தன்மையும் அவரிடம் அச்சிறுவயதிலேயே இருந்தது. இதை எடுத்துக்காட்டும் இரண்டு நிகழ்வுகளைக் கீழே தருகிறோம்:*

''... ஸந்யாஸம் மேற்கொண்ட பின் ஆசார்யாள், உடலின் சுகத்திற்கேற்ப மனம் இயங்கக் கூடாது; மாறாக உடல் தமது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்றும் வெப்ப தட்பங்களைத் தாம் சமமாக பாவிக்க வேண்டும் என்றும் முடிவு செய்தார். இதில் தமது தேர்ச்சியைப்

---

[209] *ஸ்ரீ மத் அபிநவவித்யாதீர்த்த விஜயம் ப.* 51-53

பரிசோதிக்க எண்ணி 1931ம் ஆண்டு (இது அவர் துறவறம் மேற்கொண்ட ஆண்டு) சிருங்கேரியில் குளிர் உச்ச கட்டத்தில் இருந்த போது தரையில் ஒரு ஈரத்துண்டை விரித்து, கௌபீனம் மட்டுமே உடுத்தி உறங்கினார். தமது அந்தரங்க உதவியாளரும் இதை அறியாதவாறு ஆசார்யாள் இப்பரிசோதனையைச் சில நாட்களுக்குத் தொடர்ந்து செய்தார். அதன் பின் நான்கு ஆண்டுகளுக்கு சிருங்கேரியில் இதே போல் ஒவ்வொரு ஆண்டும் உச்சி குளிர் காலத்தில் சில நாட்களுக்கு இப்பழக்கத்தை மேற்கொண்டர். பின், பெங்களூரில் ஒரு ஆண்டும் 1940களில் சில ஆண்டுகளும் இதை வழக்கமாக வைத்துக் கொண்டார்.

சிருங்கேரியில் ஆசார்யாள் வசிப்பதற்கு நரஸிம்ஹவனத்தில் ஒரு தனி இடம் சில காலத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த இடத்தில் எறும்புப் புற்றுகள் பல இருந்தன. ஒரு நாள், அவை ஆசார்யாளின் கால்களை நன்றாகக் கடித்துவிட்டன. அவர் அதைப் பொறுமையுடன் சகித்துக் கொண்டார். இது சில நாட்களுக்குத் தொடர்ந்தது. ஆசார்யாள் இதைப் பற்றி யாரிடமும் கூறவில்லை; நிவாரணமும் நாடவில்லை. கடிபட்ட இடங்கள் (ஆசார்யாளின் கால்கள்) அவருடைய உடையினால் மறைக்கப்பட்டதால் ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹா–ஸ்வாமிகள் இதைக் கவனிக்கவில்லை. ஒரு நாள் எறும்புகள் ஆசார்யாளின் முதுகைப் பதம் பார்த்தன. அன்று காலை ஆசார்யாள் தினமும் செய்வது போல் தமது குருவைத் தரிசனம் செய்யச் சென்றார். குருவிற்கு நமஸ்காரம் செய்யும் பொழுது தமது மேல் வஸ்திரத்தைத் தரையில் விரித்து அதன் மேல் தமது தண்டத்தை வைத்து வணங்க வேண்டும் என்று தாம் கற்றிருந்தபடி, ஆசார்யாள் தம் மேல் வஸ்திரத்தைத் தரையில் வைத்து பரமசார்யாளை நமஸ்கரித்தார். அப்பொழுது அவரது குரு, ஆசார்யாளின் முதுகில் இருந்த தடிப்புகளைக் கண்டு நடந்ததைக் கேட்டறிந்தார். ‘உடலைச் சரியாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்’’ என்று ஆசார்யாளுக்குக் கட்டளை–யிட்டு, ஆசார்யாள் மீண்டும் ஸச்சிதானந்த விலாஸத்தில் தங்குவ–தற்கும் ஏற்பாடு செய்தார். ...’’ [210]

---

[210] The Multifaceted Jivanmukta *என்ற நூலிலிருந்து தமிழாக்கப்பட்டது; ப.* 182-183

*உண்மையான க்ஷமை அல்லது திதிக்ஷையின் அடையாளம் என்ன என்பதை ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வமிகள் ஓரிடத்தில் விளக்கியுள்ளார். ஆசார்யாளிடம் இருந்த இக்குணம் அந்த விளக்கத்திற்கு முற்றிலும் ஒத்ததாக இருந்தது என்பதை இதிலிருந்து தெரிந்துகொள்ளலாம்:*

“**…** வேறு ஒரு சமயத்தில் ஒரு வித்யார்த்தியிடம், ‘வேதாந்தம் படிக்கிற நமக்கு சமதமாதிகள் அவசியம் வேண்டும்**.** அது போகட்டும்**.** சமம், தமம், திதிக்ஷா என்ற பதங்களுக்காவது பொருள் தெரியுமா**?** அதைத் தெரிந்துகொண்டால் தானே அனுஷ்டிக்க முடியும்’ என்றார்கள்**.** வித்யார்த்தி, ‘சமம் என்றால் மனதை அடக்குவது; தமம் என்றால் மற்ற இந்திரியங்களை அடக்குவது; குளிர், வெயில் முதலியவற்றைப் பொறுத்துக் கொள்வது திதிக்ஷை’ என்று கூறினான்**.** உடனே ஸ்ரீ ஸ்வாமிகள், ‘அப்படியானால் நல்ல தூக்கத்தில் தூங்குகிறவனுக்கு சமதமாதிகள் இருப்பதாகக் கூறலாமா**?**’ என்றார்கள்**.** வித்யார்த்தி பதில் கூறத் தெரியாமல் தயங்கவே, ‘அதனால் நிர்விஷயமான மனமே சமம்; நிர்விஷயமான இந்திரியமே தமம் என்று சொல்**.** ஸுஷுப்தியில் அப்படியில்லையல்லவா**?** இது போலவே நான் குளிரினால் கஷ்டப் படுகிறேன்**.** எனக்குக் கம்பளி வாங்கித் தருபவர் ஒருவருமில்லை என்று கவலையுடன் புலம்பிக்கொண்டே சீதோஷ்ணாதிகளை ஸஹித்துக் கொள்வது திதிக்ஷை ஆகாது**.** அதைப் பற்றின எண்ணமோ பேச்சோ ஒன்றுமில்லாமல் பொறுத்துக் கொள்வது தான் திதிக்ஷை’ என்று போதித்தார்கள்**. …**” [211]

## திதிக்ஷையும் யோகமும்

*க்ஷமை அல்லது திதிக்ஷை பற்றி வேதாந்த சாஸ்திரம் கூறுவது என்ன என்பதையும் ஆசார்யாளின் வாழ்கையில் அதை அவர் எப்படி வெளிப்படுத்தினார் என்பதையும் பார்த்தோம். இனி, இந்த விஷயத்தில் யோக சாஸ்திரத்தில் கூறப்படும் வழிமுறைகளுக்கும் வேதாந்தத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பை ஆசார்யாள் எவ்வாறு வெளிப்படுத்தினார் என்பதை விவரித்து இவ்வியலை நிறைவு செய்வோம். வேதாந்த விசாரம் செய்வதற்கான அடிப்படைத் தகுதிகளுள் திதிக்ஷை*

---

[211] *ஸ்ரீ குரு கிருபா விலாஸம் மூன்றாம் பாகம்*, ப. 146-147

*ஒன்று என்பதை முன்னர் கூறினோம். அதே போல், "உபரதி" என்ற குணமும் இன்னொரு அடிப்படைத் தகுதியாகும். இதற்கு ஆசார்யாள் தரும் விளக்கம் பின்வருமாறு:* [212]

''... (உபரதி என்பது) புலனடக்கத்தினால் வரும் விலகிக்கொள்ளல். இங்கே ''விலகிக்கொள்ளல்'' என்பது பொருட்களை நுகர்வதால் வரும் இன்பத்திலிருந்தும், பந்தத்தை விளைவிக்கும் கர்மாக்களிலிருந்தும் விலகுவதைக் குறிக்கும். ... உபரதியின் முதிர்ச்சியே யோகத்தின் சிகரமான நிர்விகல்ப ஸமாதி. இந்த ஸமாதியில் மனம் புறவுலகம், உடல் எல்லாவற்றிலிருந்தும் விலகிய நிலையில் இருக்கிறது. ... (திதிக்ஷை என்பது) பொறுமை அல்லது சகிப்புத் தன்மை. உண்மையான சகிப்புத் தன்மை என்பது எந்தத் துன்பம் வந்தாலும் அதைப் பொறுத்துக் கொண்டும் துன்பத்தைப் போக்கும் வழிகளில் இறங்காதிருத்தல். ... உபரதி (உள்வாங்குதல்) முதிரும் பொழுது மனம் வெப்பம், தட்பம் ஆகியவற்றை அறிவதில்லை. ...''

*நுகர்ச்சிக்கு விஷயமாகும் பொருட்களிலிருந்து புலன்கள் விலகும் பொழுது உடலுணர்வு மறைகிறது. இதனால் மனம் வெப்பம் முதலியவற்றை அறிவதில்லை. இம்மாதிரியான நிலையில் திதிக்ஷை என்பது ஒருவரின் சகிப்புத்தன்மை என்று கூறுவதை விட வெப்ப தட்பங்கள், வலி போன்றவற்றை உணராத நிலை என்றே கூற வேண்டும். ஆசார்யாள் சிறந்த யோகியாதலால் நினைத்த சமயத்தில் புலன்களை வெளியுலகிலிருந்து விலக்கும் திறன் அவரிடத்தில் இருந்தது. அத்தருணங்களில் அவர் சிறிதும் உடலுணர்வற்று இருந்தார் என்று அறிகிறோம்:*

''... ஒரு நாள் ஆசார்யாள் சிருங்கேரியில் இருக்கும் தென்னந் தோப்புக்குள் சென்று அங்கே சிறிது நேரம் அமர்ந்தார். அச்சமயம் அவர் என்னை 'விதுர நீதி' யின் முதல் 50 சுலோகங்களையும் பகவத்பாதர் இயற்றிய சில சுலோகங்களையும் உரக்கப் படிக்குமாறு கூறினார். நான் விதுர நீதியிலுள்ள சுலோகங்களைப் படிக்கத் துவங்கினேன். ஆசார்–யாளின் கண்கள் லேசாக மூடியிருந்தன. 22வது சுலோகத்தைப் படிக்கும் போது சலசல என்று ஒரு சத்தம் கேட்டது. என்ன ஆயிற்று

[212] மெய்ஞான விளக்கவுரைகள் ப. 41

என்று நான் தலைதூக்கிப் பார்ப்பதற்குள் ஓலை ஒன்றும் ஒரு தேங்காயும் அருகில் இருந்த மரத்திலிருந்து ஆசார்யாளுக்கு அருகில் (சுமார் 1 மீட்டர் தூரத்தில்) ‘தொப்’ பென்று விழுந்தன. படிக்கப்படும் சுலோகத்தில் தன் மனதை முழுமையாகச் செலுத்தியதால், ஆசார்யாள் இதைச் சற்றும் அறியவில்லை.

விதுர நீதியைப் படித்த பின், பகவத்பாதர் இயற்றிய ‘மனீஷா பஞ்சகம்’, ‘ப்ரஹ்மானுசிந்தனம்’ இவற்றைப் படித்தேன். அது சமயம் ஆசார்யாள் சற்றும் சலனமின்றி அமர்ந்திருந்தார்; முகத்தில் மென்னகை அரும்பி–யிருந்தது. நான் படித்து முடித்த சில கணங்களுள் தமது கண்களைத் திறந்தார். அப்படித் திறந்தவுடன் அவர் முகபாவம் மாறியது; வலியினால் அவதியுறுகிறார் என்று தெரிந்தது. அவருடைய கைகளிலும், கால்களிலும் ஒரு எறும்புக் கூட்டம் நன்றாகக் கடித்திருந்தது. அதனால் கைகால்கள் சிவந்து வீங்கியிருந்தன. எறும்புகள் அவர் மீது ஊர்வதையோ கடிப்பதையோ ஆசார்யாள் சற்றும் உணரவில்லை. நானும் அதைக் கவனிக்கவில்லை.

ஆசார்யாள் என்னைப் படிக்குமாறு பணித்த சுலோகங்கள் அவர் மனப்பாடமாக அறிந்தவையே. அந்த சுலோகங்களைத் தாமே பல நூறு தடவைகள் படித்தும் இருக்கிறார். ஆனாலும், அவருடைய மனம் அப்போது படிக்கப்பட்ட சுலோகங்களில் எவ்வளவு தூரம் ஆழ்ந்தி–ருந்தது என்றால், அச்சமயம் உண்டான பெரிய சத்தத்தையோ உடலுக்கு ஏற்பட்ட காயங்களையோ அவர் உணரவில்லை.. .’’ [213]

*இந்த இயலின் துவக்கத்தில் பொறுமையின்மைக்கும் அஹங்கா-ரத்திற்கும் உள்ள தொடர்பைக் கூறினோம். உடல், மனம் ஆகியவற்றில் ‘‘நான்’’, ‘‘எனது’’ போன்ற தவறான எண்ணங்கள் இருக்கும் வரையில் உண்மையான பொறுமை தோன்றாது என்று கூறினோம். மோக்ஷத்தை விரும்புவன் இந்த எண்ணங்களைப் போக்க விழைகிறான். எனவே ஆத்ம ஞானம் அடைந்தவரின் விஷயத்தில் க்ஷமை (பொறுமை, சகிப்புத்தன்மை) என்கிற குணம் முழுமையடைகிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம். இதன் பொருட்டே பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ஜீவன்-*

[213] The Multifaceted Jivanmukta என்ற நூலிலிருந்து தமிழாக்கப்பட்டது; ப. 336-337

*முக்தனின் லக்ஷணங்களைக் கூறும் போது "*क्षमी*" "க்ஷமை உடையவன்" என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.*[214] *அதே போல் சகிப்புத்-தன்மை என்ற குணம், புலன்களை உள்ளிழுத்து உடலுணர்விற்கு அப்பால் செல்லும் ஒரு சிறந்த யோகியிடமே முழுமையடைகிறது. தலைசிறந்த ஜீவன்முக்தரும், யோகியுமான ஆசார்யாளிடம் க்ஷமை என்ற இக்குணம் எப்படி முழுமை பெற்றது என்பதை அவருடைய வாழ்க்கையில் நிகழ்ந்த பல சம்பவங்கள் மூலம் அறிந்தோம். ஆசார்யாள் தமது அருளுரை ஒன்றில், ஜீவன்முக்தனைப் பற்றி விவரிக்கும் போது கீழ்க்கண்ட சுலோகத்தை மேற்கோளாகக் காட்டியுள்ளார்:*[215]

शान्तो दान्तः परमुपरतः क्षान्तियुक्तः समाधिं
कुर्वन्नित्यं कलयति यतिः स्वस्य सर्वात्मभावम् ।
तेनाविद्यातिमिरजनितान्साधु दग्ध्वा विकल्पान्
ब्रह्माकृत्या निवसति सुखं निष्क्रियो निर्विकल्पः ॥

*(மனதையும் புலன்களையும் அடக்கிப் புறச்செயல்கள் எல்லாவற்றி-லிருந்தும் விலக்கி (வெப்பம், குளிர்) போன்ற இரட்டை எதிர்மறை-களைப் பொறுமையுடன் சகித்து எப்பொழுதும் நிர்விகல்ப ஸமாதியில் அமர்ந்து கொண்டிருக்கும் துறவி ஸர்வாத்ம பாவத்தை அனுபவிக்-கிறான். அவித்யை என்ற இருட்டினால் உண்டான தவறான கல்பனை-கள் எல்லாவற்றையும் நிர்விகல்ப ஸமாதியினால் முழுதுமாக எரித்துச் செயலற்றவனாய் எவ்வித வேற்றுமையும் காணாது ஆனந்தம் நிறைந்து பிரம்மமாகவே இருக்கிறான்.*[216]*)*

*விவேக சூடாமணியில் உள்ள இந்த சுலோகம் ஆசார்யாளுக்கு முற்றிலும் பொருந்தும்.*

[214] பகவத் கீதை 12.13

[215] பக்தி – ஞானம் – முக்தி, வித்யாதீர்த்த ஃபவுண்டேஷன், சென்னை 2014; ப. 88-89

[216] விவேக சூடாமணி சுலோகம் 356

# 6. என்றும் புதியவர்

ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளைத் துதித்து ஸ்ரீமத் பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் எழுதிய சுலோகத்தில் குறிக்கப்பட்ட விவேகம், மஹாப்ரக்ஞை, தைர்யம், ஔதார்யம், மற்றும் க்ஷமை ஆகிய குணங்கள் ஆகியவை எப்படி ஆசார்யாளின் ஆளுமையில் வெளிப்பட்டன என்பதை இதுவரை கூறினோம். நூலின் இந்த இயலில் அச்சுலோகத்தின் இரண்டாவது வரியை நாம் கருத்தில் எடுத்துக் கொள்வோம்.

सदाऽभिनवपूर्वं तं विद्यातीर्थगुरुं भजे ।

என்ற இவ்வரிக்கு """அபிநவ" என்ற சொல்லை முன்னால் கொண்ட அந்த வித்யாதீர்த்த குருவை எப்பொழுதும் வழிபடுகிறேன்" என்று பொருள் கூறலாம். ஜகத்குரு ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் ஆசார்யாளுக்கு அளித்த பெயர் "அபிநவ வித்யாதீர்த்தர்" என்பது. "அபிநவ" என்ற சொல் இங்கே "புதிய" என்ற பொருளில் வருகிறது; வரலாற்றில் ஆசார்யாள் புதிய வித்யாதீர்த்தராக அறியப்படுவார் என்பதை ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் இப்பெயரைத் தேர்ந்தெடுத்த போதே அறிந்திருந்தார் போலும்.

சிருங்கேரி மடத்தின் வரலாற்றிலும், தென்னிந்திய வரலாற்றிலும் ஸ்ரீமத் வித்யாதீர்த்த ஆசார்யர் மிகவும் முக்கியமான பங்கை வகிக்கிறார். இவர் சிருங்கேரி மடத்தின் பத்தாவது ஆசார்யராகத் திகழ்ந்தவர். ஸ்ரீமத் வித்யாதீர்த்தர் ஒரு சிறந்த வேதாந்தியாகவும் யோகியாகவும் விளங்கினார் என்பது அவரைப் போற்றி எழுதப்பட்ட ஸ்துதிகளிலிருந்து தெரிகிறது. "வித்யாதீர்த்தரின் வடிவத்தில் இருக்கும் பரம்பொருளை வணங்கி ...", "... வேதங்கள், ஸ்ம்ருதிகள், இதிஹாஸங்கள் ஆகியவற்றின் உட்பொருளை அறிந்தவரும், மாற்றமற்றவரும், பரமேச்வரருமான வித்யாதீர்த்தர் அகமகிழட்டும்...", "... வேதம் எவரது மூச்சுக் காற்றாக இருக்கிறதோ, அந்த வித்யாதீர்த்த மஹேச்வரரை வணங்குகிறேன்...", "எவர் லம்பிகா யோகத்தில் மகிழ்ச்சியுடன் திளைக்கிறாரோ, சிவபெருமான் எவர் வடிவத்தில் இருக்கிறாரோ ...", "... எவருடைய கருணை தாம் ஏற்றுக்கொண்டவர்களின் விஷயத்தில் எப்பொழுதும்

குறையாமல் உள்ளதோ ...'', ''துறவிகளில் சிறந்தவரான வித்யாதீர்த்தர் (உலகின் இருளை அகற்றும்) சூரியனைக் காட்டிலும் சிறந்தவர்; (ஏனென்றால்) இவர் (மக்களின் மனதில் இருக்கும் அவித்யை என்ற) உள்ளிருளையும், (அவித்யையினால் கல்பிக்கப்பட்ட புறப் பொருட்கள் என்ற) புறவிருளையும் அகற்றுபவர்'' போன்ற ஸ்துதிகளிலிருந்து இவருடைய மேன்மை தெரிகிறது.[217]

ஸ்ரீமத் வித்யாதீர்த்தரின் காலத்தில் தான் சமயம் சார்ந்த நிறுவனமாகவும் சிருங்கேரி மடம் மாறியது என்பதை வரலாற்றாசிரியர்கள் கூறுகின்-றனர்.[218] இவர் தென்னிந்தியாவைப் பல முறை யாத்திரை செய்தார் என்றும் ஆங்காங்கே பல மடங்களை நிறுவினார் என்றும் அறிகிறோம். மோக்ஷத்தை நாடுபவர்கள் மட்டுமல்லாது அரசர்கள், பண்டிதர்கள் போன்ற பலதரப்பட்டவரும் இவருடைய ஆசிகளை நாடினர். வேதாந்த சாஸ்திரத்தில் பெரும் புலமை வாய்ந்த ஸ்ரீமத் பாரதீ தீர்த்த ஆசார்யரும், பல முக்கியமான நூல்களை இயற்றியவரும், எல்லா வேதாந்தப் பரம்பரைகளும் போற்றும் ஸ்ரீமத் வித்யாரண்ய ஆசார்யரும் இவருடைய சிஷ்யர்கள். நான்கு வேதங்களுக்கும் உரை எழுதிய ஸாயனர் என்பவரும் இவருடைய சிஷ்யரே. ஹோய்ஸல மன்னன் (மூன்றாம்) பல்லாலா அரசாட்சி ஏற்றவுடன் இவரைத் தரிசித்து ஆசி பெற்றான். அதே போல், விஜயநகர சாம்ராஜ்யத்தை நிறுவிய ஹரிஹரனும் புக்கனும் வித்யாரண்ய ஆசார்யரின் கட்டளைப்படி சிருங்கேரி சென்று ஸ்ரீமத் வித்யாதீர்த்தரை வழிபட்டு அவருடைய ஆசிகளைப் பெற்றனர்.

மேலே ஸ்ரீமத் வித்யாதீர்த்தரின் சிறப்புகளாகக் கூறப்பட்ட பல அம்சங்-களை நாம் ஆசார்யாளின் வரலாற்றிலும் பார்க்கிறோம். எனவே ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வமிகள் ஆசார்யாளுக்கு அளித்த ''அபிநவ வித்யாதீர்த்தர்'' என்கிற பெயர் மிகவும் பொருத்தமானதே.

''அபிநவ'' என்ற சொல்லிற்கு இங்கே இன்னொரு விளக்கமும் தரலாம். இந்நூலில் விவேகம், மஹாப்ரக்ஞை, தைர்யம், ஔதார்யம், க்ஷமை ஆகிய குணங்கள் ஆசார்யாளிடம் எப்படி அமைந்திருந்தன என்பதைப்

[217] The Multifaceted Jivanmukta p. 66

[218] K. R. Venkataraman, M. K. Venkatarama Iyer and K. R. Srinivasan, "The Age of Vidyaranya", Kalpa Printers and Publishers Pvt. Ltd. Calcutta 1976

பற்றிப் பேசினோம். குறிப்பாக, இப்பண்புக் கூறுகள் சந்தர்ப்ப சூழ்நிலைக்குத் தக்கவாறும், ஆசார்யாள் வகித்த பல பொறுப்புகளுடன் தொடர்பு கொண்டும் பல ஆளுமைக் கூறுகளாக வெளிவந்தன என்றும் இதனால் ஆசார்யாள் என்றும் புதியவராகத் தோன்றுகிறார் என்பதையும் கூறினோம். இந்தக் கண்ணோட்டத்துடன் பார்த்தால்,

सदाऽभिनवपूर्वं तं विद्यातीर्थगुरुं भजे ।

என்ற வரிக்கு “எப்பொழுதும் புதிதாக உள்ள அந்த வித்யாதீர்த்த குருவை வழிபடுகிறேன்” என்று நேரடியாகப் பொருள் கொள்ளலாம். இந்நூலில் “புதுமை” என்பதை ஆசார்யாளின் ஆளுமைக் கூறுகளுக்கும் பண்புகளுக்கும் நாம் தொடர்புப்படுத்திக் கூறினாலும் ஆசார்யாளின் புதுமைக்கு ஒரு ஆழ்ந்த காரணம் உண்டு. அதை இப்பொழுது கூறுவோம்.

தம்மை வணங்கும் அடியவர்களுக்கு இறைவன் என்றும் புதியவராகவே இருக்கிறார். எங்கும் நிறைந்தும், எல்லாவற்றினுள்ளும் இருக்கும் இறைவனுடைய மேன்மை வரம்பற்றது. ஆனால் மனதின் செயல்பாட்டிற்கு வரம்பு உண்டு. ஆகவே ஒவ்வொரு முறையும் நாம் இறைவனைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கும் பொழுது அவருடைய மேன்மையில் புதுமையைக் காண்கிறோம். இறைவனான ஆசார்யாள் என்றும் புதியவராகத் தோன்றுவதற்கும் இதுவே காரணம். “சிவானந்தலஹரீ” என்ற நூலின் முதல் சுலோகத்தில் நூலாசிரியர் சிவபிரானுக்கும் பார்வதி அம்மைக்கும் தமது வணக்கங்களைக் கூறும் போது, “पुनर्भवाभ्याम् ... नतिरियम् ... भवतु मे” என்று கூறுகிறார். “எனது இந்த நமஸ்காரம் எப்பொழுதும் புதிதாய்த் தோன்றும் அவ்விருவருக்கும் (சிவன்-பார்வதி) உரித்தாகட்டும்” என்பது இதன் பொருள். पुनर्भवाभ्याम् என்ற சொற்றொடருக்கு இந்நூலின் உரையாசிரியர், “மீண்டும் மீண்டும் நினைக்குந்தோறும், எவ்வெப்-பொழுது நினைத்தாலும் அவ்வப்பொழுது புதிது புதிதான மலர்ச்சியுடன் தோன்றுபவர்கள்” என்று பொருள் கூறுகிறார்.[219] இக்கருத்தை இந்நூல் முகப்பில் கொடுக்கப்பட்டுள்ள “அபிநவ பத்ம பாதமு மறவேனே” (என்றும் புதிய தாமரை மலரன்ன

---

[219] சிவானந்தலஹரீ பாஷ்யம், ஸ்ரீ ராமகிருஷ்ணா மடம் வெளியீடு 1975, ப. 2

*உன் பாதத்தையும் மறக்க மாட்டேன்) என்ற அடியிலும் காணலாம்.*[220]

*இறுதியாக, "எப்பொழுதும் புதிதாக உள்ள அந்த வித்யாதீர்த்த குருவை வழிபடுகிறேன்" என்று சுலோகம் கூறுகிறது. குருவை எப்படி வழிபடுவது என்ற கேள்வி எழலாம். அதற்கும் ஆசார்யாள் தமது அருளுரை ஒன்றில் விடை கூறியுள்ளார். அதை இங்கே மீண்டும் பதிவு செய்து இந்நூலை நிறைவு செய்வோம்:*

"**...** இத்தகைய குருவின் ஸந்நிதியில் எந்தப் பிரார்த்தனையைச் செய்ய வேண்டும்**?** பகவத்பாதாள், "**योगक्षेमधुरंधरस्य सकलःश्रेयः प्रदोद्योगिनो दृष्टादृष्टोपदेशकृतिनो बाह्यान्तरव्यापिनः । सर्वज्ञस्य दयाकरस्य भवतः किं वेदितव्यं मया शंभो त्वं परमान्तरंग इति मे चित्ते स्मराम्यन्वहम् ॥**" என்று கூறுகிறார்.[221] (சம்புவே**!** ஒருவனுக்கு இல்லாததைக் கொடுப்பவனும் இருப்பதைக் காப்பவனும், சிரேயஸ்ஸை அளிப்பதில் ஈடுபட்டிருப்பவனும், பார்க்கப்படும் மற்றும் பார்க்கப்படாதவை பற்றிய உபதேசம் கொடுப்பவனும், எல்லாப் பொருளிலும் உள்ளிலும் வெளியிலும் வியாபித்திருப்பவனும், ஸர்வக்ஞனாக இருப்பவனும், கருணாசாலியாக இருப்பவனுமான உனக்கு நான் எதைத் தெரியப்படுத்த வேண்டியிருக்கிறது**?** நான் எப்போதும் எனது மனதில் "நீ எனது உள்ளிருக்கும் ஆத்மா" என்று சிந்திக்கிறேன்**.)** இதே ரீதியில் நாம் ஒரு குருவிடம் சென்று அவரிடம் 'இது நடக்க வேண்டும்', 'அது நடக்க வேண்டும்' என்று கேட்காமல், 'நான் இருக்கிறேன் என்ற சிந்தனை உங்களது மனதிற்கு வந்தாலேயே போதும்**.** வேறேதும் தேவையில்லை' **...** (என்று கேட்க வேண்டும்) **...** குருவிடம் ஏதாவது கேட்க வேண்டும் என்று தேவையில்லை**.** அவருடைய கடாக்ஷம் நம் மீது விழுந்தால் போதும்**.** 'இம்மனிதன் நல்லவனாகட்டும்' என்று அவர் நம்மை ஆசீர்வாதித்தால் அது போதும்**.** நமக்கு நற்பலன்கள் கிட்டும்**. ...**"[222]

---

[220] "*கதியை விலக்கு ...*" *என்று தொடங்கும் பழநித் திருப்புகழ் (அருணகிரிநாதர் அருளியது)*

[221] *சிவானந்தலஹரீ சுலோகம்* 35

[222] எனது குருநாதர் ப. 116-118

தமது 13வது வயதில் உபநயனம்
செய்விக்கப்பட்டு, 14வது வயதில் துறவறம் பெற்று,
கடும் தவநெறி மூலம் யோகத்தின் மிக உயர்ந்த நிலையான நிர்விகல்ப
ஸமாதியில் நிலைத்து, 20 வயதிற்குள் தலைசிறந்த ஜீவன்முக்தராக விளங்கிய
ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள், தக்ஷிணாம்னாய சிருங்கேரி
ஸ்ரீ சாரதா பீடத்தை அதன் 35வது பீடாதிபதியாக 35 ஆண்டுகள் (1954 - 1989)
அலங்கரித்துத் தம்மை நாடி வந்த எண்ணற்ற சிஷ்யர்களைப்
பல்வேறு வழிகளில் அனுக்கிரஹித்தார்.

தற்போது சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தை 36வது ஜகத்குருவாக
அலங்கரித்துவரும் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் தமது குருவான
ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளைக் குறித்துக் கீழ்க்காணும்
தியான சுலோகத்தை இயற்றியுள்ளார்.

"விவேகினம் மஹாப்ரக்ஞம் தைர்யௌதார்யக்ஷமாநிதிம்
ஸதாபிநவபூர்வம் தம் வித்யாதீர்த்தகுரும் பஜே"

இந்தச் சுலோகத்தில் கூறப்பட்டுள்ள விவேகம், பேரறிவு, தைர்யம்,
பெருந்தன்மை, பொறுமை ஆகிய குணநலன்கள் யாவும்
பன்முகத்தன்மை வாய்ந்த ஜீவன்முக்தரான
ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளைப்
பல கோணங்களில் எவ்வாறு அழகாகச் சித்தரிக்கின்றன என்பதை
இந்நூலாசிரியர் Dr. வா. ந. முத்துக்குமார் அவர்கள் விளக்கியுள்ளார்.
விளக்கங்களுக்கு அடிப்படையாக ஜகத்குருவின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து
பல சுவையான சம்பவங்களும் அவரது அரிய உபதேசங்களும்
இப்புத்தகத்தில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.